பௌலோ கொய்லோ

ரஸவாதி

பௌலோ கொய்லோ

ரஸவாதி

ஆங்கிலத்தில்

ஆலன் ஆர். கிளார்க்

தமிழில்

பொன். சின்னத்தம்பி முருகேசன்

காலச்சுவடு பதிப்பகம்

O Alquimista, Copyright ©1988 by Paulo Coelho.

This edition was published by arrangement with Sant Jordi Asociados, Barcelona, Spain. All Rights Reserved.

The Alchemist by Paulo Coelho.

ரஸவாதி • நாவல் • ஆசிரியர் : பௌலோ கொய்லோ • தமிழில் : பொன். சின்னத்தம்பி முருகேசன் • முதல் பதிப்பு : டிசம்பர் 2006, இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2008 • வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம், 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001 • தொலைபேசி : 91–4652–278525 • தொலைநகல் : 91 – 4652 – 402888 • மின்னஞ்சல் : kalachuvadu @sancharnet.in • அச்சுக்கோப்பு : சுதர்சன் புக் புராசசர்ஸ் அண்ட் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் • அட்டை அச்சாக்கம் : பிரிண்ட் ஸ்பெஷாலிட்டீஸ், சென்னை 600 014 • அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005.

rasavaati • A Novel by pavloo koyloo • Translated by pon. cinnattampi murukeesan • Language: Tamil • First Edition: December 2006, Second Edition: December 2008 • Size: Demy 1 x 8 • Paper: 18.6 kg maplitho • Pages: 160 • Copies: 750 + 50 • Published by Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001, India • Phone: 91-4652 -278525 • Fax: 91-4652 -402888 • e-mail: kalachuvadu@sancharnet.in • Typesetting: Sudarsan Book Processors and Distributors • Wrapper Printed at Print Specialities, Chennai 600 014 • Printed at Mani Offset, Chennai 600 005.

ISBN 978-81 - 89359 - 43 - 0

12/2008/S.No.181, kcp 487, 18.6 (2) 800

ரஸவாதி

பௌலோ கொய்லோ (1947)

ரியோடிஜெனிரோவில் பிறந்தார். நாடகமேடை இயக்குநர், நடிகர், இசையமைப்பாளர் போன்ற துறைகளில் பணியாற்றியபின் முழு நேர எழுத்தாளரானார். உலகம் முழுதும் சுற்றி பல மதத் தலைவர் களையும் சந்தித்த பின் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டார்.

இவரது முதல் புத்தகம் *Hell Archieves* 1982இல் வெளிவந்தது. தொடர்ந்து சில புத்தகங்கள் வெளிவந்தன. *The Alchemist* (ரஸவாதி) 1987இல் வெளிவந்தபோது முதலில் அது அவ்வளவாகக் கவனம் பெற வில்லை. புத்தகத்தை வாபஸ் பெற்றுவிடலாமா என்றுகூட பதிப்பாளர் நினைத்தார். பின்னர் விற்பனை மளமளவென்று ஏறத் தொடங்கியது. உலகில் அதிக எண்ணிக்கையில் விற்பனையான நாவல்களில் ரஸவாதி நான்காவது இடத்தைப் பெற்றது. 18 நாடுகளில் விற்பனையில் அது முதல் இடத்தில் இருந்தது. இதுவரை 30 மில்லியன் பிரதிகள் விற்றிருக்கின்றன. 62 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, போர்த்துக்கல், பிரேஸில், ஸ்பெயின் போன்ற நாடுகளில் பள்ளிகளில் பாடபுத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

உலகில் பல பகுதிகளிலிருந்தும் பௌலோ கொய்லோ முப்பதுக்கும் மேற்பட்ட விருதுகள் பெற்றிருக்கிறார்.

முக்கிய நூற்கள் - *The Bride, The Valkyries, By the River Piedra I sat down and wept, The Fifth Mountain, Manual of a Warrior of Light, The Devil and Miss Prym, Stories for Parents, Children and Grandchildren, Eleven Minutes, The Zahir.*



சி. முருகேசன்

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டிக்கு அருகில் மேலக்கோட்டை எனப்படும் அம்பாத்துரையில் சின்னத்தம்பி - மாரியம்மாள் பத்திரப் படுத்தியுள்ள பதிவின்படி 02.07.1949இல் ஜனனம். 31.05.2006இல் ஓய்வு பெற்றுவிட்டார்.

முதல் மொழிபெயர்ப்பு நூலான 'இயற்பியலின் தாவோ' (*Tao of Physics* - Fritz of Capra) திருப்பூர் தமிழ்ச்சங்கத்தின் இலக்கிய விருதினையும் தமிழ் நாடு அரசின் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான பரிசையும் பெற்றது.

தொடர்புக்கு: பொன். சின்னத்தம்பியார் இல்லம், 3C2 திருநகர், அம்பாத்துரை (ர. நி), திண்டுக்கல் மாவட்டம் 624 302.
கைபேசி: 9363227606

1

இந்தப் பையன் பெயர் சந்தியாகு. தன்னுடைய ஆட்டு மந்தையுடன் அந்தப் பாழடைந்த தேவாலயத்தை இவன் அடைந்தபோது பொழுது சாய்ந்துவிட்டது. தேவாலயத்தின் மேற்கூரை எப்பொழுதோ கீழே விழுந்துவிட்டது. பொருட்கள் வைக்கும் புனித அறை இருந்த இடத்தில் பிரமாண்டமான அத்திமரம் வளர்ந்திருந்தது. ராப்பொழுதை அங்கேயே கழிப்பதெனத் தீர்மானித்துவிட்டான். சிதலமடைந்த வாசல் வழியே ஆடுகள் எல்லாம் நுழைந்துவிட்டனவா என்பதைக் கவனித்துக்கொண்டான். பிறகு ராத்திரி நேரத்தில் மந்தையில் எதுவும் வெளியே போய்விடாமல் தடுக்க சில கட்டைகளைக் குறுக்காகப் போட்டான். அந்தப் பகுதியில் ஓநாய்கள் பயம் இல்லைதான். இருந்தாலும், ஒருமுறை ராத்திரி ஓர் ஆடு எங்கோ ஓடிவிட, அதனைத் தேடிப் பிடிப்பதிலேயே அடுத்த பகல் முழுவதும் கழிந்துவிட்டது.

மேலாடையால் தரையைத் தட்டிவிட்டு, அப்போதுதான் படித்து முடித்திருந்த புத்தகத்தைத் தலையணையாக வைத்துப் படுத்துக்கொண்டான். 'இன்னுங் கனமான புத்தகத்தைத்தான் இனிமேல் படிக்கவேண்டும்; நீண்ட நாளைக்குப் படிக்கலாம், தலைக்கு வைக்கவும் ரொம்ப சௌகரியமாக இருக்கும்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

விழித்தபோது இன்னமும் இருட்டாகவே இருந்தது. பாதி சாய்ந்துவிட்ட கூரை வழியாக நட்சத்திரங்கள் தெரிந்தன.

இன்னும் கொஞ்ச நேரம் தூங்கியிருக்கலாம் என்று நினைத்தான். ஒரு வாரத்திற்கு முன்பும் இதே கனவைக் கண்டிருந்தான்; அன்று போலவே கனவு முடிவதற்குள் விழித்துக்கொண்டுவிட்டான்.

எழுந்தான்; தொரட்டியை எடுத்து இன்னும் தூங்கிக் கொண்டிருந்த ஆடுகளை எழுப்பத் துவங்கினான். இவன் எழுந்த உடனேயே பெரும்பாலான ஆடுகள் அசையத் துவங்கி விட்டதைக் கவனித்தான். மேய்ச்சல் இடம் தேடியும் தண்ணீர் தேடியும் கிராமப்புறங்களில் ஓட்டித் திரிந்து கடந்த இரண்டு ஆண்டுகளைக் கழித்த இவனுடைய ஜீவன் ஆடுகளுடன் ஏதோ ஒரு சூக்கும சக்தியால் பிணைக்கப்பட்டிருப்பதைப் போல் தோன்றியது. என்னை இவைகளுக்கு நன்கு தெரியும்; என்னுடைய போக்கைப் புரிந்துகொண்டவை என்று முணு முணுத்தான். அதைப்பற்றி ஒரு கணம் யோசித்தபோது விஷயம் நேர்மாறாக இருக்கலாம் என்று புரிந்தது. அவற்றின் போக்குக்கு இவன் பழகிப்போனான் என்பதுதான் உண்மை.

அவற்றுள் சில விழிப்பதற்குச் சற்றுக் கூடுதல் அவகாசம் எடுத்துக்கொண்டன. அவற்றை ஒவ்வொன்றாகப் பெயர் சொல்லி, தனது தொரட்டியால் தட்டி எழுப்பினான்; தான் சொல்வதை அந்த ஆடுகள் புரிந்துகொள்கின்றன என்றே நம்பிவந்தான். ஒரு சில நேரங்களில் தான் படிக்கும் புத்தகத் தில் தனக்கு ரொம்பப் பிடித்த பகுதிகளை அவைகளுக்கும் படித்துக் காட்டியதுண்டு. வயல் வெளிகளில் சுற்றித் திரிகின்ற இடையர்களின் சந்தோசத்தையோ தனிமையில் படுகிற பாட் டையோ அவைகளுக்குச் சொல்லியதும் உண்டு. தான் கடந்து வந்த கிராமங்களில் கண்ட காட்சிகளைப் பற்றிய தன் எண்ணங் களைக்கூட அவைகளுடன் பகிர்ந்துகொண்டிருக்கிறான்.

ஆனால், கடந்த சில நாட்களாக அவைகளிடம் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறான். அது அவர்கள் இன்னும் நான்கு நாட்களில் சென்றடையக் கூடிய கிராமத்தில் வசிக்கும் வியாபாரி ஒருவரின் மகளைப் பற்றி. போன வருஷம் ஒரே ஒருமுறை அந்தக் கிராமத்திற்குச் சென்றிருந்தான். அந்த வியாபாரி பலசரக்குகள் விற்கும் கடைக்குச் சொந்தக்காரர். ஏமாற்றப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக ஆட்டு ரோமத்தைத் தன் முன்னிலையிலேயே மழிக்க வேண்டும் என்பதை வற்புறுத்துவார். இவனுடைய நண்பன் ஒருவன் அந்தக் கடையைப் பற்றிச் சொல்லியிருந்தான். அதன்படி இவன் தன் மந்தையை அங்கே ஓட்டிச் சென்றிருந்தான்.

'கொஞ்சம் ரோமத்தை விற்கவேண்டும்' என்று பையன் அந்த வியாபாரியிடம் சொன்னான்.

கடையில் கூட்டமாக இருந்தது; மதியம் வரை காத்திருக்கும்படி கடைக்காரர் சொன்னார். அந்தக் கடையின் படிகளிலேயே அமர்ந்தவன் பையிலிருந்த புத்தகத்தை எடுத்தான்.

"ஆடு மேய்க்கிறவங்களுக்குக்கூட படிக்கத் தெரியும் என்று எனக்குத் தெரியாமல் போச்சே" என்று பின்புறமிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

அந்தலூசியப் பகுதிக்கே உரிய பாணியில் அந்தப் பெண் இருந்தாள். காற்றில் அலையும் கருங்குழல்; வெற்றிவாகை சூடும் மூரிஷ்காரர்களை மங்கலாக நினைவுபடுத்தும் கண்கள்.

"ஆமா, வழக்கமா நான் புத்தகங்களைவிட என்னுடைய ஆடுகளிடமிருந்து நிறைய கத்துக்கிறேன்" என்று பதில் சொன்னான். இரண்டு மணி நேரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்: தான் அந்த வியாபாரியின் மகள் என்றும் ஒவ்வொரு நாளும் இன்னொரு நாளைப் போலவே தோன்றிய அந்தக் கிராமத்தின் வாழ்க்கை பற்றியும் இவனிடம் சொன்னாள். அந்தலூசியக் கிராமப்புறங்களைப் பற்றி இந்தப் பையன் அவளிடம் கூறினான்; தான் சென்ற நகரங்களில் கிடைத்த செய்திகளைப் பற்றியும் கூறினான். ஆடுகளோடு பேசித் திரிந்தவனுக்கு அது ஒரு இனிமையான மாற்றமாக இருந்தது.

"படிப்பதற்கு எப்படிக் கற்றுக்கொண்டாய்?" என்று பேச்சினூடே அவள் கேட்டாள்.

"எல்லாரையும் போலத்தான்; பள்ளிக்கூடத்திலே." இவன் சொன்னான்.

"சரி, படிக்கத் தெரியும் என்றால் ஏன் இடையனாக இருக்கிறாய்?"

அவளுடைய கேள்விக்குப் பதில் சொல்வதைத் தவிர்க்கும் வகையில் இவன் ஏதோ பதிலை முணுமுணுத்தான். அவளால் அதனைப் புரிந்துகொள்ள இயலாது என்று நிச்சயமாக இவனுக்குத் தெரியும். தன்னுடைய பயணங்களைப் பற்றிய கதைகளை அடுக்கிக்கொண்டே போனான். அவளுடைய பளிச்சிடும் மூர் இன விழிகள் பயத்தாலும் வியப்பாலும் அகல விரிந்தன. நேரம் நகர்ந்துகொண்டிருந்தது. அந்த நாள் முடிந்து விடவே கூடாது என்றும் அவளுடைய தகப்பன் தன்னுடைய வேலையிலேயே மும்முரமாக இருக்க வேண்டும் என்றும் மேலும் மூன்று நாட்களுக்கு இவன் காத்திருக்க நேர வேண்டும் என்றும் விரும்பினான். ஒரே இடத்தில்

எப்பொழுதும் வாழ வேண்டும் என்று ஆசைப்படுவது இவன் அதுவரை அனுபவித்திராத உணர்வு என்று பட்டது. அந்தப் பெண்ணுடன் – காற்றில் மிதக்கும் அவளுடைய கருங் குழலுடன் – இவனுடைய வாழ்நாளில் அதுபோன்றதொரு நாள் மீண்டும் வரப்போவதில்லை.

ஒரு வழியாக அந்த வியாபாரி வந்தார். நான்கு ஆடுகளின் ரோமத்தை மழிக்கும்படி கேட்டு ரோமத்திற்கான பணத்தைக் கொடுத்துவிட்டார். அடுத்த வருஷம் திரும்பவும் வரும்படி கூறினார்.

✦

தற்பொழுது மீண்டும் அந்த ஊருக்குச் செல்ல நான்கு நாள் அவகாசம் மட்டுமே இருந்தது. இவன் பதற்றமடைந்தான். அதே சமயம் மனசும் கனத்தது: அந்தப் பெண் ஒருவேளை இவனை மறந்துவிட்டிருக்கலாம். எத்தனையோ இடையர்கள் தமது ஆட்டு ரோமத்தை விற்றுவிட்டு அந்த வழியாகப் போயிருப்பார்கள்.

'அதைப் பற்றிக் கவலை இல்லை; எனக்கு மற்ற இடங் களில் உள்ள பெண்களையும் தெரியும்' என்று தன்னுடைய ஆடுகளிடம் சொன்னான்.

ஆனால், அது கவலைக்குரிய விஷயம் என்பதை இவனு டைய இதயம் அறியும். கடற்பயணிகளைப் போல, ஊர் சுற்றும் வியாபாரியைப் போல, கவலையற்ற பயணங்களின் இனிமையை மறந்துவிடச் செய்யும் ஒரு நபர் வசிக்கும் நகரத்தை இடையர்களும் கண்டு கொள்வார்கள் என்பது இவனுக்குத் தெரியும்.

பொழுது புலர்ந்துகொண்டிருந்தது. இடையன் தனது மந்தையைச் சூரிய திசையை நோக்கி முடுக்கிக்கொண்டிருந் தான். இவைகளுக்கு ஒருபொழுதும் எந்த முடிவையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை; அதனால்தான் என்னுடன் இத்தனை நெருக்கமாக இருக்கின்றன என்று நினைத்தான்.

அந்த ஆடுகளுக்கு இருக்கக் கூடிய ஒரே கவலை புல்லும் புனலும்தான். அந்தலூசியாவில் உள்ள நல்ல மேய்ச்சல் நிலங்களைக் கண்டறியும் திறமை இவனிடம் இருக்கும்வரை அவை இவனுடைய நண்பர்கள்தாம். ஆமாம், சூரிய உதயத்திற் கும் மறைவிற்கும் இடையே முடிவற்ற தீராக்கணங்களாகத் தோன்றக்கூடிய அவற்றின் நாட்கள் எப்பொழுதும் ஒரே மாதிரியானவை.. அவை தம்முடைய காலத்தில் எந்தப் புத்தகத்தையும் படித்ததில்லை. நகரங்களில் பார்த்த காட்சி

களைப் பற்றி இவன் சொன்னபோதுகூட அவை புரிந்து கொண்டதில்லை. புல்லோடும் புனலோடும் நிறைவடைந்தன. கைம்மாறாகத் தாராளமாக தமது ரோமத்தைத் தந்தன; நல்ல தோழர்களாக இருந்தன; ஏதேனும் சில சமயங்களில் உணவாகவும் ஆயின.

'இன்றைக்கு நானொரு பூதமாக மாறி இவைகளை ஒவ்வொன்றாகக் கொல்வதென்று தீர்மானித்தாலும்கூட இந்த மந்தையில் பெரும் பகுதி சிதைந்த பின்னர்தான் இவை உணரக் கூடும்' என்று நினைத்தான். 'அவை என்னை நம்புகின்றன. தம்முடைய உள்ளுணர்ச்சியைச் சார்ந்திருக்க அறியமாட்டா தவை; அதனால்தான் நான் அவற்றைப் பராமரிக்கிறேன்.'

இந்தப் பையனுக்குத் தன்னுடைய எண்ணங்களே வியப் பாக இருந்தன. உள்ளே அத்தி மரம் வளர்ந்து நிற்கும் அந்த தேவாலயத்தில் பேய் குடியிருக்கக் கூடும். அதனால்தான் ஒரே கனவை இரண்டாவது முறையாகக் காணும்படியும் தன்மீது நம்பிக்கை வைத்துள்ள தோழர்கள்மீது கோபங்கொள் ளும்படியும் நேர்ந்தது. முந்தைய இரவு உணவின்போது குடித்தது போக கொஞ்சம் மீதமிருந்த ஒயினைக் குடித்தான். மேலாடையை உடம்போடு சேர்த்துக் கட்டிக்கொண்டான். இன்னும் சில மணி நேரத்திற்குள் சூரியன் உச்சியை அடையும் பொழுது, வயல்வெளிகளில் ஆடுகளை ஓட்டிச் செல்ல இயலாத அளவிற்கு வெப்பம் அதிகமாகிவிடும். கோடைக் காலங்களில் ஸ்பெயின் நகர மக்கள் அனைவரும் தூங்குகிற தருணம் அதுதான். இருட்டும் வரை வெப்பமாக இருக்கும். அப்பொழுதெல்லாம் தனது மேலாடையைத் தூக்கிக்கொண்டு திரிவான். அது ஒரு சுமையாகத் தோன்றுகிற போதெல்லாம் அது இருந்ததனால்தான் விடிகாலைக் குளிரைத் தாக்குப் பிடிக்க முடிந்தது என்று நினைத்துக்கொள்வான்.

'நாம் எப்பொழுதுமே மாற்றத்தைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும்' என்று நினைத்துக்கொள்வான். தனது மேலாடையின் சுமைக்கும் வெம்மைக்கும் நன்றி செலுத்துவான்.

அந்த மேலாடைக்கு என்று ஒரு நோக்கம் இருந்தது; இவனுக்கும் கூடத்தான். இவனுடைய நோக்கமெல்லாம் ஊர் சுற்றுவது. இரண்டு வருஷங்களாக அந்தலூசிய வெளி களில் அலைந்து திரிந்ததால் அந்தப் பகுதியில் உள்ள எல்லா நகரங்களையும் நன்கு அறிந்திருந்தான். அந்த முறை சந்திக்கும் போது ஒரு சாதாரண இடையன் படிக்கத் தெரிந்துகொண்டது எப்படி என்கிற விஷயத்தை அந்தப் பெண்ணுக்கு விளக்கி விடுவது என்று மனசுக்குள் திட்டம் போட்டிருந்தான். பதினாறு வயது வரை வேத பாடசாலையில் பயின்றவன். இவனுடைய

பெற்றோருக்கு இவன் ஒரு பாதிரியார் ஆகவேண்டும் என்று ஆசை. அப்படி ஆனால் சாதாரண விவசாயக் குடும்பத்துக்குப் பெருமை இல்லையா? அவர்கள் காலமெல்லாம் இந்த ஆடுகளைப் போலவே உணவுக்கும் தண்ணீருக்கும் அரும்பாடு பட்டார்கள். இவனோ லத்தீன், ஸ்பானிஷ், வேதசாஸ்திரம் பயின்றான். இவனுக்குக் குழந்தைப் பருவத்திலிருந்தே இந்த உலகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆசை; கடவுளைப் பற்றியும் மனிதர்களின் பாவங்களைப் பற்றியும் தெரிந்துகொள்வதைவிட அதுதான் இவனுக்கு முக்கியமாகப் பட்டது.

ஒரு தடவை வீட்டுக்கு வந்திருந்த சமயத்தில் ஒருநாள் மத்தியானம் துணிச்சல் எல்லாம் ஒன்று திரட்டி, தகப்பனாரிடம் தான் ஒரு பாதிரியாராகப் பிரியப்படவில்லை என்று சொன்னான். உலகமெல்லாம் சுற்றி வரவே தனக்கு ஆசை என்றும் சொல்லிவிட்டான்.

✧

“மகனே, உலகத்தில் இருக்கிறவங்க எல்லோரும் நம்ம ஊர் வழியாகத்தான் போறாங்க; எதையோ புதுசா கண்டு பிடிக்கப் போறது போலத்தான் வர்ராங்க; ஆனா, போகும் போது முதலில் வந்தது போலவேதான் இருக்காங்க. கோட்டையைப் பார்க்க மலை மேலே ஏறுவாங்க; இப்போ இருப்பதைக் காட்டிலும் பழைய காலம்தான் ரொம்ப நல்லா இருந்ததாக எண்ணித் தமது பயணத்தை முடித்துக்கொள்வார்கள். அடர்த்தியான முடியும் தடித்த தோலுமாகத் திரிந்தார்களே தவிர அடிப்படையில் இங்கே ஜீவனம் பண்ற நம்ம ஆளுங்களைப் போலத்தான் இருந்தார்கள்” என்று தகப்பனார் சொன்னார்.

“ஆனாலும், அவர்கள் இருக்கிற நகரங்களில் உள்ள கோட்டைகளை நான் பார்க்கவேண்டும்” என்று விளக்கினான் இவன்.

“அவர்களெல்லாம் நம்ம ஊரைப் பார்த்த பிறகு இங்கேயே எப்போதும் இருக்கத்தான் ஆசைப்படுகிறார்கள்” என்று தகப்பனார் விடாப்பிடியாகச் சொன்னார்.

“ஆமா, நானும் அவர்களுடைய ஊரைப் பார்க்கவும் அங்கே அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் ஆசைப்படுகிறேன்” என்று மகன் சொன்னான்.

“இங்கே வருகிற ஜனங்கள் செலவழிப்பதற்காக நிறையப் பணம் வைத்திருப்பவர்கள்; அதனால்தான் ஊர் சுற்ற முடி

கிறது. நம்மவர்களில் ஊர் சுற்றுபவர்கள் இடையர்கள் மட்டும்தான்."

"சரி, அப்படியானால் நானும் ஆடு மேய்க்கப் போகிறேன்."

தகப்பனார் அதற்கு மேலே பேசவில்லை. அடுத்த நாள் ஒரு சுருக்குப் பையை அவனிடம் கொடுத்தார். அதில் பழங்காலத்துத் தங்க நாணயங்கள் மூன்று இருந்தன.

"வயல்வெளியில் ஒரு நாள் இதைக் கண்டெடுத்தேன். என்னுடைய ஆஸ்தியில் ஒன்றாக இதை உனக்குக் கொடுக்க ஆசைப்பட்டேன். ஆனால், இப்போ உனக்குத் தேவையான ஆட்டு மந்தையை வாங்குவதற்கு வெச்சுக்கோ. ஆடுகளை வயல் வெளியில் ஓட்டித்திரி; ஆனால் எங்கே சுற்றினாலும் நம் ஊரைப் போல வராது; நம் ஊர்ப் பெண்கள்தான் ரொம்ப ரொம்ப அழகானவர்கள் என்பதை ஒரு நாள் புரிந்து கொள்வாய்."

தகப்பனார் இவனை ஆசீர்வதித்தார். இந்த உலகத்தை யெல்லாம் சுற்றிப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை அப்பா வின் கண்களில் மின்னுவதை இவனால் பார்க்க முடிந்தது – அப்பா தன் வாழ்நாள் பூராவும் குடிக்க நீருக்கும், உண்ண உணவுக்கும், இரவில் ஒரே இடத்தில் படுத்துறங்குவதற்கும் பட்ட கஷ்டங்களில் அந்த ஆசையைப் புதைத்து வைத்திருந் தார். ஆனால் அது இன்னும் உயிரோடுதான் இருந்தது.

✧

கீழ்வானம் செவ்வென்றிருந்தது; திடுமென சூரியன் தோன்றி னான். இவன் தன் தகப்பனாரிடம் பேசியதையெல்லாம் நினைவுபடுத்திக்கொண்டான்; மகிழ்ச்சியடைந்தான். இவன் அதற்குள்ளாக ஏராளமான கோட்டைகளையும் நிறையப் பெண்களையும் பார்த்துவிட்டான். ஆனாலும், யாருமே இவன் இன்னும் சில நாட்களில் பார்க்கப்போகிற ஒருத்திக்குச் சமான மாக இல்லை. தற்பொழுது இவனிடம் இருப்பதெல்லாம் ஒரு நீண்ட சட்டை, ஒரு புத்தகம் ... அதைக் கொடுத்துவிட்டு இன்னொன்று வாங்க வேண்டும் ... ஒரு சில ஆடுகள். ஆனால், அவற்றையெல்லாம்விட முக்கியமானது, இவன் ஒவ்வொரு நாளும் தன் கனவுலகில் வாழ்ந்துகொண்டிருந்தான். 'அந்தலூசிய வயல்வெளிகள் சலித்துப்போய்விட்டால், ஆடுகளையெல்லாம் விற்றுவிட்டுக் கடல் பயணம் போவான். போதுமான அளவுக்குக் கடலில் பயணம் செய்த பிறகு பல்வேறு நகரங்களையும், பல்வேறு பெண்களையும், பல்வேறு மகிழ்ச்சி தரும் விஷயங் களையும் பார்த்திருப்பான். வேதபாட சாலையிலேயே இருந்திருந்

தால் கடவுளைக்கூடப் பார்த்திருக்க முடியாது' என்று சூர்யோதயத்தைப் பார்க்கும்போது நினைத்துக்கொண்டான்.

முடிந்தபோதெல்லாம், புதுப்புதுச் சாலைகளிலேயே பயணித்தான். அந்தப் பகுதிகளில் இவன் பலமுறை சுற்றியிருக்கிறான். என்றாலும், அந்தப் பாழடைந்த தேவாலயத்திற்குள் போனதேயில்லை. உலகம் விரிந்து பரந்தது; பயணித்துத் தீர்க்கமுடியாதது. ஆட்டுமந்தையை அதன் போக்கிலேயே போகவிட்டுவிட்டு பிற விஷயங்களில் குஷியாகிவிடுவான். அதிலே பிரச்சினை என்னவென்றால் அந்த ஆடுகளுக்கு ஒவ்வொரு நாளும் தாம் புதிய சாலையில் செல்கிறோம் என்கிற உணர்ச்சியே இருந்ததில்லை. வயல்வெளிகள் புதிது புதிதாய் இருந்ததையோ பருவகாலங்கள் மாறியதையோ அவை கவனித்ததில்லை, புல்லும் புனலுந்தான் அவற்றினுடைய கவனமெல்லாம்.

'நாம எல்லோருமே அப்படித்தானே' என்று நினைத்துக் கொண்டான். அந்த நினைப்பே அவனுக்கு விநோதமாக இருந்தது. 'நானுங்கூட அப்படித்தான் இருக்கிறேன்; அந்த வியாபாரியின் மகளைப் பார்த்ததிலேயிருந்து வேறு எந்தப் பெண்ணையும் நினைக்கவே இல்லையே.' சூரியனைப் பார்த்து, உச்சிப் பொழுதுக்குள்ளே தாரிபா நகரத்திற்குப் போய்விடலாம் என்று கணக்குப் போட்டான். அங்கே சென்றவுடன், அந்தப் புத்தகத்தைக் கொடுத்துவிட்டு இன்னுங் கனமானதான ஒன்றை வாங்கவும், அந்தப் புட்டியில் ஒயினை நிரப்பிக்கொள்ளவும், முடி வெட்டி, சவரம் பண்ணி அந்தப் பெண்ணைப் பார்ப்பதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவும் முடியும் என்று கணக்குப் பண்ணினான். ஆனால், இவனுக்கு முன்பாக எவனாவது ஓர் இடையன் இவனைக் காட்டிலும் பெரிய ஆட்டுமந்தையோடு அங்கே சென்று அவளைப் பெண் கேட்டிருக்கலாம் என்ற சாத்தியத்தை நினைத்துப் பார்க்கக் கூட விரும்பியதில்லை.

ஒரு கனவு பலிப்பது சாத்தியம் என்பதில்தான் மனித வாழ்க்கையின் குதூகலமே இருக்கின்றது என்று நினைத்துக் கொண்டான். அப்படியே சூரியனிருக்கும் இடத்தை மறுபடி பார்த்தவன் நடையைத் துரிதப்படுத்தினான். தாரிபாவில் கனவுகளுக்கு விளக்கம் கூறும் கிழவி ஒருத்தி இருப்பது இவனுக்குத் திடீரென ஞாபகம் வந்தது.

✦

அந்தக் கிழவி இவனை அவளுடைய வீட்டின் பின்கட்டில் இருந்த அறைக்கு அழைத்துப் போனாள். அது முன் முற்றத்தி

லிருந்து வண்ண வண்ண முத்துக்களால் ஆன திரையால் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு மேஜை, ஏசுவின் தூய இருதய பொம்மை, இரண்டு நாற்காலிகள் – இவைதான் அந்த அறையில் இருந்த பொருட்கள்.

கிழவி கீழே உட்கார்ந்தாள், இவனையும் உட்காரச் சொன்னாள். இவனுடைய இரண்டு கைகளையும் தன் கையில் ஏந்திக்கொண்டு அமைதியாகப் பிரார்த்தனை செய்யத் துவங்கினாள்.

அது நாடோடிகளின் பிரார்த்தனையைப் போல ஒலித்தது. சாலைகளில் நாடோடிக் கூட்டங்களோடு இவனுக்கு ஏற்கனவே அனுபவம் உண்டு. அவர்களும் ஊர் சுற்றுபவர்கள்தான். ஆனால், அவர்களிடம் ஆட்டுமந்தை இருந்ததில்லை. நாடோடிகள் மற்றவர்களை ஏமாற்றிப் பிழைப்பவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறான். பேய்களோடு சவகாசம் வைத்துக்கொண்டு பிஞ்சுக் குழந்தைகளைப் பிடித்துக் கொண்டுபோய் கண் காணாத இடத்தில் வைத்துத் தங்களுக்கு அடிமைகளாக்கி விடுவார்கள் என்றுகூடச் சொல்லப்படுவதுண்டு. குழந்தைப் பருவத்தில் இவனுக்கும் நாடோடிகள் தன்னைப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்களோ என்கிற பயம் இருந்ததுண்டு. அந்தக் கிழவி இவனுடைய கைகளைத் தன்னுடைய கைகளில் எடுத்துக்கொண்ட போது இவனுக்கு அதே பயம் மீண்டும் ஏற்பட்டது.

ஆனால் அவள் ஏசுவின் புனித இருதயத்தை வீட்டில் வைத்திருக்கிறாளே என்று நினைத்தபடி தன்னைத் தைரியப் படுத்திக்கொள்ள முயன்றான். தன் கைகள் நடுங்கக்கூடாது; தான் ஒரு பயந்தாங்கொள்ளி என்று அவள் நினைத்துவிடக் கூடாது என்று நினைத்தான். மனசுக்குள் ‘பரமபதத்திலிருக்கும் பிதாவே’ எனச் சொல்லிக்கொண்டான்.

கிழவி இவனுடைய கைகளிலிருந்து தன் கண்ணை எடுக்காமலேயே, “மிகவும் சுவாரஸ்யமான கை” என்றாள்; பின்னர் மௌனமாகிவிட்டாள்.

இந்தப் பையன் பதற்றமடைய ஆரம்பித்தான். இவனுடைய கைகள் நடுங்கியதை அந்தக் கிழவி உணர்ந்தாள். இவன் உடனே தனது கைகளை இழுத்துக்கொண்டான்.

“நான் ஒன்றும் கைரேகை பார்ப்பதற்காக இங்கே வரவில்லை” என்று சொன்னான்; ஏற்கனவே, அங்கே சென்றமைக்காக வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். அவளுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டு எதையும் தெரிந்துகொள்ளாமலேயே அங்கிருந்து போய்விடலாம் என்றும் திரும்பத் திரும்ப

வந்த கனவுக்கு அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்து விட்டதாகவும் ஒரு கணம் நினைத்தான்.

"இங்கே வந்ததாலேதான் உன் கனவுகளைப் பற்றி தெரிஞ்சுக்கப் போறே" என்று அந்தக் கிழவி சொன்னாள். "கனவுகளெல்லாம் கடவுளுடைய பாஷை; அவர் நம்முடைய பாஷையிலே பேசினால் அவர் என்ன சொன்னார் என்று நான் விளக்க முடியும். ஆனா, அவர் ஆன்மாவோட பாஷை யிலே பேசும்போது, அதைப் புரிந்துகொள்ளக்கூடியவன் நீ மட்டும்தான். எப்படியிருந்தாலும், நீ என்னிடம் யோசனை கேட்டதற்காக எனக்குப் பணம் கொடுக்கத்தான் வேண்டும்."

'இது ஏமாற்று வேலை' என்று பையன் நினைத்தான். ஆனாலும், ஒரு கை பார்த்திடுவோமே என்று தீர்மானித்தான். இடையர்களுக்கு ஓநாய்களோடும், வறட்சிக் காலத்தோடும் போராடிப் பழக்கமுண்டு, அதுவே அவர்களுடைய வாழ்க்கைக்குப் பரபரப்பூட்டுவது.

"ஒரே கனவை இரண்டு முறை கண்டேன்" என்றான். "நான் என்னுடைய மந்தையோடு ஒரு வயல்வெளியில் இருப்பதாகக் கனாக்கண்டேன். அப்போது, ஒரு குழந்தை ஆடுகளோடு விளையாடிக்கொண்டிருந்தது. பெரியவர்கள் அப்படி விளையாடுவது எனக்குப் பிடிக்காது. ஏனென்றால், புது ஆட்களைக் கண்டால் ஆடுகள் மிரளும். ஆனால், குழந்தை கள் ஆடுகளை மிரட்டாமல் விளையாடுவார்கள், ஏனென்று எனக்குத் தெரியாது. மனிதர்களுடைய வயசுகூட ஆடுகளுக்கு எப்படித்தெரியும் என்பதும் எனக்குத் தெரியாது."

"உன்னுடைய கனாவைப்பற்றி மேலும் சொல்" என்றாள் கிழவி. "நான் சமைக்கப் போகணும், அத்தோடு உன்னிடம் நிறையப் பணம் வேற இல்லை, உன்னோடு நான் அதிக நேரத்தை வீணடிக்க முடியாது."

"குழந்தை ரொம்ப நேரம் ஆடுகளோடு விளையாடிக் கொண்டு இருந்தது", பையன் தொடர்ந்தான். கொஞ்சம் அசந்து தான் போய்விட்டான். "திடீர்னு, அந்தக் குழந்தை என்னுடைய இரண்டு கைகளையும் பிடித்தது; கொஞ்ச நேரத்தில் எகிப்தியப் பிரமிடுகளுக்குப் போயிட்டோம்." ஒரு கணம் நிறுத்தினான், எகிப்திய பிரமிடுகள் என்றால் அவளுக்குப் புரியுமா என்று நினைத்தான். ஆனால், அவள் ஒன்றும் பேசவில்லை.

பிறகு, "எகிப்திய பிரமிடுகளுக்குப் பக்கத்தில்" – அந்தக் கிழவி புரிந்துகொள்ளட்டும் என்று கடைசி மூன்று வார்த்தைகளை நிறுத்தி நிறுத்திச் சொன்னான். அந்தக் குழந்தை, 'நீ இங்கே

வந்தால் புதைக்கப்பட்டுள்ள புதையல் உனக்குத் தென்படும்' என்றது. சரியான இடத்தைக் காட்ட முயலும் தருணத்தில் நான் விழித்துக்கொண்டேன். இரண்டு முறையுமே அப்படித் தான்."

அவள் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, மீண்டும் இவன் கைகளை எடுத்துக் கவனமாகப் பரிசீலித்தாள்.

"இப்ப நான் எதுவும் உங்கிட்ட வாங்கிக்கப் போறதில்லை" என்று கிழவி சொன்னாள். "ஆனால், உனக்குப் புதையல் கிடைத்த பின்னர் பத்திலே ஒரு பங்கு எனக்குத் தரவேண்டும்."

இந்தப் பையன் பூரித்துப் போய்ச் சிரித்தான். மறைந்திருக் கிற புதையலைப் பற்றிய கனவாலே கையிலிருக்கிற கொஞ்சப் பணத்தைப் பத்திரப்படுத்த முடிந்ததே!

"சரி, கனாவுக்கு வியாக்யானம் சொல்" என்றான்.

"முதலில், சத்தியம் செய். நான் சொல்லப்போகிற விஷயத்துக்குப் பதிலாக உன்னோட புதையலிலே பத்திலே ஒரு பங்கைத் தருவாய் என்று சத்தியம் செய்."

சம்மதம் என்று சத்தியம் செய்தான். யேசுவினுடைய புனித இதய பொம்மையைப் பார்த்துக்கொண்டிருந்தபோது அந்தக் கிழவி மீண்டும் இவனிடம் சத்தியம் வாங்கினாள்.

அவள் சொன்னாள்: "உலக பாஷையில் உள்ள கனா இது. என்னால் விளக்க முடியும். ஆனா, விளக்கம் பண்றது ரொம்பக் கஷ்டம். அதனாலத்தான் உனக்குக் கிடைப்பதில் ஒரு பங்கை எனக்கும் கொடுப்பது சரி என்று நினைக்கிறேன்.

"அப்புறம், இதுதான் என்னோட விளக்கம்: நீ எகிப்தி லுள்ள பிரமிடுகளுக்குப் போயே ஆகணும். அவைகளைப் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை. உனக்கு அவைகளைக் காட்டியது ஒரு குழந்தை என்றால், அவை கட்டாயமாக இருக்கணும். அங்கே உன்னைப் பணக்காரனாக்கப் போகிற புதையலை நீ காண்பாய்."

இவனுக்கு வியப்பாக இருந்தது; பிறகு, எரிச்சலானது. இதற்காக இந்தக் கிழவியைத் தேடியிருக்க வேண்டிய அவசிய மில்லையே! ஆனால், பிறகுதான், அவளுக்கு எவ்விதக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லையே என்பது ஞாபகம் வந்தது.

"என்னுடைய நேரத்தை இதற்காக வீணடித்திருக்க வேண்டியதில்லை" என்று சொன்னான்.

“உன்னுடைய கனவு மிகவும் கடினமானதென்று சொன்னேன். வாழ்க்கையில் எளிமையான விசயங்கள்தாம் ரொம்பவும் அசாதாரணமானவை; புத்திசாலிகளால் மட்டுமே அவற்றைப் புரிந்துகொள்ள முடியும்; நான்தான் புத்திசாலி இல்லையே. அதனால்தான் கைரேகை பார்ப்பது போன்ற மற்ற வித்தைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கு.”

“சரி, எகிப்துக்கு நான் எப்படிச் செல்வது?”

“என்னால் கனாக்களுக்கு விளக்கம் மட்டுமே சொல்ல முடியும். அவைகளைப் பலிக்க வைக்க எனக்குத் தெரியாது. அதனால்தானே என்னுடைய மகள்கள் எனக்குக் கொடுப்பதைத் தின்று பிழைக்கிறேன்.”

“நான் எகிப்துக்கே போகவில்லை என்றால் என்னா ஆகும்?”

“எனக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போகும்; அப்படி நடப்பது இது முதல் முறையாக இருக்கப் போவதில்லையே.”

ஏற்கனவே நிறைய நேரத்தை அவனோடு வீணடித்துவிட்டதாச் சொல்லிக் கிழவி அவனைத் துரத்திவிட்டாள்.

பையனுக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது. இனிமேல் கனாக்களையே நம்புவதில்லை என்கிற முடிவுக்கு வந்தான். கவனிக்க வேண்டிய விஷயங்கள் நிறைய இருப்பது இவனுக்கு நினைவு வந்தது. எதையாவது சாப்பிடலாம் என்று சந்தைக்குப் போனான். தன்னுடைய புத்தகத்தைக் கொடுத்துவிட்டு மேலும் கனமான ஒன்றை வாங்கினான். தான் வாங்கியிருந்த புதிய ஒயினை ருசி பார்ப்பதற்குக் கடையிலிருந்த பெஞ்சில் இடம்பிடித்தான். பகல் பொழுது ரொம்பவும் வெப்பமாக இருந்தது; ஒயின் இதமளித்தது. நகரத்தின் நுழைவாயிலில் ஒரு நண்பனுக்குச் சொந்தமான பட்டியில் ஆடுகளை அடைத்து வைத்திருந்தான். அந்த நகரத்தில் இவனுக்கு நிறையப் பேரைத் தெரியும். பயணம் செய்வதில் இவனுக்குப் பிடிப்பு ஏற்பட்டதே அதனால்தான். புதுப்புது நண்பர்களை ஏற்படுத்திக்கொள்வான், அவர்களோடு தனது முழு நேரத்தையும் செலவழிக்க வேண்டியதில்லை. ஒரே நபரை ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொண்டிருந்தால், வேதபாடசாலையில் இவனுக்கு நடந்ததைப் போல, அந்த நபர் வாழ்க்கையின் ஒரு பகுதியாவதில்தான் முடியும். அப்புறம் அந்த நபர் மாறவேண்டும் என்கிற விருப்பம் வரும். பிறர் விரும்புகிறபடி ஒருவர் இல்லை என்றால் அவர்களுக்குக் கோபம் வரும். மற்றவர்கள் எப்படி வாழவேண்டும் என்பதிலெல்லாம் ஒவ்வொருவரும் தெளிவான கருத்து வைத்திருக்

கிறார்கள்; ஆனால், தமது வாழ்க்கையைப் பற்றி அப்படி யொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆடுகளை வயல்வெளிக்கு ஓட்டிச் செல்வதற்கு முன்பாக பொழுது மேலும் சாயும் வரைக்கும் காத்திருக்கத் தீர்மானித் தான். இன்னும் மூன்று நாட்கள்தான், அப்புறம் இவன் அந்த வியாபாரியின் மகள்கூட இருப்பான்.

வாங்கி வைத்திருந்த புத்தகத்தைப் படிக்கத் தொடங் கினான். முதல் பக்கத்திலேயே ஈமச்சடங்கு பற்றிய விவரணை யாக இருந்தது. அதில் வந்த ஆட்களுடைய பெயர்களும் உச்சரிப்பதற்குக் கடினமாக இருந்தன. 'எப்பொழுதாவது புத்தகம் ஒன்று எழுத நேர்ந்தால், ஒவ்வொரு இடத்திலும் ஒரேயொரு ஆளைத்தான் காட்ட வேண்டும்; படிப்பவர்களுக்கு நிறையப் பெயர்களை ஞாபகம் வைத்திருக்க வேண்டிய கஷ்டம் இருக்கக்கூடாது.' இப்படியே நினைவை ஓட்டினான்.

ஒருவாறாகப் படிப்பிலே ஆழ்ந்த போது, அந்தப் புத்தகம் இவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. பனிபெய்யும் நாளில் அந்த ஈமச்சடங்கு நடந்தது. குளிர்ச்சியாக உணர்வது இவ னுக்குப் பிடித்திருந்தது. இவன் படித்துக்கொண்டிருந்த போது ஒரு கிழவர் இவனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்; வார்த்தையாட முயன்றார்.

கடையில் இருந்த ஆட்களைக்காட்டி, "அவர்கள் என்ன செய்கிறார்கள்?" என்று கேட்டார்.

படிப்பிலே கவனம் செலுத்துவதையே விரும்புவதாகக் காட்டிக்கொள்வதற்காக, "வேலை செய்கிறார்கள்" என்று சொரத்தில்லாமல் பதில் சொன்னான்.

உண்மையில், அந்த வியாபாரி மகள் முன்பாக ஆடுகளின் ரோமத்தை மழிப்பதைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுதுதானே கடினமான வேலைகளைக்கூட மிக இலகுவாக செய்யக்கூடியவன் என்று இவனைப்பற்றி அவள் தெரிந்துகொள்ள முடியும். அந்தக் காட்சியை ஏற்கனவே இவன் பலமுறை கற்பனை செய்து பார்த்துவிட்டான். ஆடுகளின் ரோமத்தை பின்புறமிருந்து முன்னோக்கி மழிக்க வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் விவரித்தபோது அந்தப் பெண் சொக்கிப்போனாள். ஆடுகளை மழித்துக்கொண்டே சொல்வதற் காக நல்ல கதைகள் சிலவற்றை நினைவுப்படுத்திக்கொள்ள முயற்சி செய்தான். அவற்றில் பெரும்பாலானவை இவன் புத்த கங்களிலிருந்து படித்தவை. ஆனால், அவை தன் சொந்த அனுப வம் என்று சொல்வான். அவளுக்கு எந்த வித்தியாசமும் தெரியப் போவதில்லை, ஏனென்றால், அவளுக்குப் படிக்கத் தெரியாது.

அதேசமயம் அந்தக் கிழவர் இவனோடு வார்த்தையாட முயற்சிப்பதில் விடாப்பிடியாக இருந்தார். களைப்பாகவும் தாகமாகவும் இருப்பதாகச் சொல்லி இவனுடைய ஒயினிலே ஒரு மிடறு கிடைக்குமா என்று கேட்டார். தனியாக விட்டால் போதும் என்கிற எண்ணத்தில் புட்டியை எடுத்துக் கிழவரிடம் கொடுத்தான்.

ஆனாலும், கிழவருக்குப் பேசுவதில்தான் விருப்பம். "என்ன புத்தகம் படிக்கிறாய்" என்று கேட்டார். அவரிடம் முரட்டுத்தனமாக நடந்துகொள்ள வேண்டும் என்று நினைத் தான். வேறு பெஞ்சிற்கு மாறிவிடலாம் என்றும் தோன்றியது. ஆனால், இவனது தகப்பனார் பெரியவர்களிடம் மரியாதை யாக நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொடுத் திருந்தார். ஆகவே, புத்தகத்தை அவரிடம் நீட்டினான். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன: முதலில், இவனுக்கே அந்தப் புத்தகத்தினுடைய தலைப்பை உச்சரிக்க முடியவில்லை. இரண் டாவது, அந்தக் கிழவருக்குப் படிக்கத் தெரியாதென்றால், ஒருவேளை வெட்கப்பட்டுக்கொண்டு அவராகவே வேறு பெஞ்சுக்கு மாறிப் போய்விடுவார்.

'ஹம்ம்...' என்றார் அவர், ஒரு புதுமையான பொருளைப் பார்ப்பது போல, அந்தப் புத்தகத்தை நாலா பக்கமும் நோட்டமிட்டபடி சொன்னார்: "இது ஒரு முக்கியமான புத்தகம் தான். ஆனாலும் எரிச்சலூட்டக் கூடியது."

பையன் அதிர்ந்து போனான். அந்தக் கிழவருக்குப் படிக்கத் தெரிந்திருந்ததோடு ஏற்கனவே அந்தப் புத்தகத்தைப் படித்து மிருந்தார். அவர் சொன்னதைப் போல அந்தப் புத்தகம் எரிச்ச லூட்டக்கூடியது என்றால் அதனைக் கொடுத்துவிட்டு வேறு ஒன்றை வாங்கிக்கொள்வதற்கு அப்பொழுதுகூட அவகாசம் இருந்தது.

அந்தக் கிழவர் தொடர்ந்தார். "உலகத்தில் இருக்கிற அனைத்துப் புத்தகங்களும் சொல்கிற ஒரே விஷயத்தைத்தான் இந்தப் புத்தகமும் சொல்கிறது. ஜனங்கள் தங்களுடைய தலை விதியைத் தீர்மானிக்கக்கூடிய சக்தியற்றவர்களாக இருப்பதை இது விவரிக்கிறது. இந்த உலகத்தின் மிகப்பெரிய பொய்யை ஒவ்வொருவரும் நம்புவதாகச் சொல்லி முடிவடைகிறது."

"இந்த உலகத்தின் மிகப் பெரிய பொய் எது?" என்றான் மிக்க ஆச்சரியத்துடன்.

"இதுதான்; நம்முடைய வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நமக்கு நிகழக்கூடியவற்றின் மீதான கட்டுப்

பாட்டை நாம் இழந்துவிடுகிறோம். நம்முடைய வாழ்க்கை விதியின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இதுதான் உலகத்தின் மிகப்பெரிய பொய்."

"அப்படி எனக்கு ஒன்றும் நடக்கவில்லையே" என்றான். "அவர்களெல்லாம் நான் பாதிரியாக வேண்டும் என்று பிரியப்பட்டார்கள்; ஆனால், நான் இடையனாவதென்று முடிவெடுத்தேன்."

"ரொம்ப நல்ல விஷயம்" என்றார் கிழவர். "ஏனென்றால், உனக்கு உண்மையிலேயே ஊர் சுற்றுவது பிடிக்கும்."

'நான் நினைப்பதெல்லாம் இவருக்குத் தெரிந்து விடுகிறதே' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அந்தக் கிழவர் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தார், திருப்பித் தருவதாகவே தெரியவில்லை. கிழவரின் ஆடைகள் விநோதமாக இருந்ததைக் கவனித்தான். அரேபியரைப்போல் தோன்றினார், அந்தப் பகுதியில் அது ஒன்றும் புதிதல்ல. தாரிபாவிலிருந்து ஆப்பிரிக்கா சில மணிநேரப் பயணதூரம்தான். படகில் ஜலசந்தியைக் கடந்தால் போதும். அந்த நகரத்தில் அடிக்கடி அரேபியர்களைப் பார்க்கலாம்; தேவையான பொருட்களை வாங்குவார்கள்; ஒருநாளைக்குப் பலதடைவை புதுமாதிரியான ஸ்தோத்திரங்களை ஜெபித்துக்கொண்டிருப்பார்கள்.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று இந்தப் பையன் கேட்டான்.

"பல ஊர்களிலிருந்து."

"யாருக்குமே பல ஊர்கள் இருக்கமுடியாது. நான் ஓர் இடையன். நான் நிறைய ஊர்களுக்குப் போயிருக்கிறேன். ஆனால், என்னுடைய ஊர் ஒன்றே ஒன்றுமட்டும்தான்; ஒரு பழைய கோட்டைக்குப் பக்கத்திலே உள்ள நகரம்; அங்குதான் நான் பிறந்தேன்."

"சரி, நான் பிறந்தது சேலம் என்று சொல்லலாம்."

சேலம் எங்கே இருக்கிறது என்று இவனுக்குத் தெரியாது. ஆனாலும், தான் ஒன்றும் தெரியாதவன் என்று அவர் நினைத்துவிடக்கூடாது என்ற பயத்தில் கேட்கவில்லை. சந்தையில் இருந்த மக்களைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தான்; அவர்கள் வருவதும் போவதுமாக சுறுசுறுப்பாக இருந்தார்கள்.

ஏதாவது துப்புக் கிடைக்கலாம் என்ற முயற்சியில் இவன் கேட்டான்: "சேலம் எப்படி இருக்கும்?"

"அது எப்போதும் இருக்கிறபடிதான் இருக்கும்."

ஒரு துப்பும் கிடைக்கவில்லை. ஆனாலும், சேலம் அந்தலூசியாவில் இல்லை என்பது இவனுக்கு தெரியும். அப்படி இருந்திருந்தால் ஏற்கனவே இவனுக்குத் தெரிந்திருக்கும்.

"சரி, சேலத்தில் என்ன செய்கிறீர்கள்?"

"சேலத்தில் நான் என்ன செய்கிறேனா?" கிழவர் சிரித்தார். "நான்தான் சேலத்தின் ராஜா."

'மனிதர்கள் விநோதமான விஷயங்களைப் பேசுகிறார்கள்' என்று நினைத்துக்கொண்டான். 'சில சமயங்களில் ஆடுகளோடு இருப்பதே நல்லது, அவை எதையும் பேசுவதில்லை. புத்தகங் களோடு தனியே இருப்பது அதைவிட நல்லது, நாம் கேட்க வேண்டுமென்று விரும்பும்போது நம்பமுடியாத கதைகளை அவை சொல்லும். ஆனால், மனிதர்களோடு பேசினாலோ, விநோதமான விஷயங்களை எல்லாம் சொல்வார்கள். பேச்சை எப்படித் தொடர்வது என்று உங்களுக்கே தெரியாது.'

"எனது பெயர் மெல்ச்சிஜெடெக்" என்று அந்தக் கிழவர் சொன்னார்; "உன்னிடம் எத்தனை ஆடுகள் இருக்கின்றன?"

"போதுமானவை" என்றான். அந்தக் கிழவர் தன்னைப்பற்றி நிறையத் தெரிந்துகொள்ள விரும்புகிறார் என்று இவனுக்குத் தோன்றியது.

"நல்லது, நமக்குள்ளே இப்போது ஒரு பிரச்சினை. தேவை யான அளவுக்கு ஆடுகள் வைத்திருக்கிறாயென்றால் என்னால் உனக்கு உதவமுடியாது."

இவனுக்கு எரிச்சல் ஏற்பட்டது. இவன் எந்த உதவியையும் கேட்கவில்லை. அந்தக் கிழவர்தான் குடிப்பதற்கு ஒயின் கேட்டார். அப்புறம் பேச்சைத் துவக்கினார்.

"புத்தகத்தைக் கொடுங்கள்" என்றான். "நான் போய் ஆடுகளைத் திரட்டிக்கொண்டு புறப்பட வேண்டும்."

"உன்னுடைய ஆடுகளில் பத்திலே ஒரு பங்கை எனக்குக் கொடு" என்றார் கிழவர். "மறைந்திருக்கிற புதையலைக் கண்டுபிடிக்கும் வழியை நான் உனக்குச் சொல்கிறேன்."

இவனுக்குத் தான் கண்ட கனவு நினைவுக்கு வந்தது, உடனே எல்லாமே தெளிவாகிவிட்டது. 'அந்தக் கிழவி எதை யும் வாங்கிக்கொள்ளவில்லை; இந்தக் கிழவர் – அவளுடைய புருஷனாக இருக்க வேண்டும் – இல்லாத ஒன்றைப் பற்றித் தகவல் தருவதாகச் சொல்லி என்னிடமிருந்து நிறையப்

பணத்தைப் பறிக்க வழிபார்க்கிறார். ஒரு வேளை, இந்தக் கிழவருங்கூட ஒரு நாடோடியோ என்னமோ.'

ஆனால், பையன் எதையும் சொல்வதற்கு முன்னமே கிழவர் கீழே குனிந்து அங்கே கிடந்த குச்சி ஒன்றை எடுத்து மணலில் எதையோ எழுதத் துவங்கினார். அவருடைய மார்பில் ஏதோ ஒன்று பளிச்சென்று மின்னியது. அதன் பளபளப்பு பையனை ஒருகணம் குருடாக்கியது. கிழவர் தன்னுடைய வயதுக்கு மீறிய வேகத்தில் தோளில் தொங்கிய மேலாடையை இழுத்து அந்தப் பொருளை மறைத்துக்கொண்டார். பார்வை மீண்டபோது பையன் அந்தக் கிழவர் மணல் மீது என்ன எழுதியிருக்கிறார் என்பதைப் படிக்க முடிந்தது.

அந்தச் சிறிய நகரத்தின் சந்தை மணலில் பையன் தன்னுடைய தகப்பனார், தாயார், தான் படித்த வேதபாட சாலை ஆகியவற்றின் பெயர்களைப் படித்தான். இவனுக்கு இதுவரை தெரியாத அந்த வியாபாரியின் மகள் பெயரையும் படித்தான், யாரிடமும் தான் சொல்லியிராத விஷயங்களை எல்லாம்கூடப் படித்தான்.

○

"நான்தான் சேலம் ராஜா" என்று சொல்லியிருந்தார் கிழவர்.

பையன் வியப்புடனும் சங்கடத்துடனும் கேட்டான்: "ராஜா எதற்காக ஒரு இடையனோடு பேச வேண்டும்?"

"பல காரணங்கள்; உனது இலக்கினை அடைவதில் நீ வெற்றிபெற்றுவிட்டாய் என்பதுதான் மிகவும் முக்கியமானது என்று சொல்லலாம்."

ஒருவருடைய 'இலக்கு' என்றால் என்னவென்று பைய னுக்குப் புரியவில்லை.

"நீ அடைந்துவிட வேண்டும் என்று சதா ஆசைப்படு கிறாயே அதுதான். ஒவ்வொருவருக்கும் இளமைப்பருவத்தில் தம்முடைய இலக்கு என்னவென்று தெரியும்.

"அவர்களுடைய வாழ்க்கையின் அந்தக் கட்டத்தில் எல்லாமே தெளிவா இருக்கும்; எல்லாமே சாத்தியப்படும். அவர்கள் கனாக்காணவோ தம்முடைய வாழ்க்கையில் நடக்க வேண்டுமென்று விரும்பியவை அனைத்தையும் நிகழ்த்திப் பார்க்க எத்தனிக்கவோ அஞ்சுவதில்லை. ஆனால், காலப்போக்கிலே ஒரு மாயமான சக்தி அவர்கள் தம்முடைய இலக்கை அடைவதென்பது இயலாத காரியம் என்று அவர்களை நம்பவைக்கத் துவங்கிவிடும்."

அந்தக் கிழவர் சொன்னது எதுவும் பையனுக்குப் புரியவில்லை. ஆனாலும், அந்த 'மாய சக்தி' என்னவென்று தெரிந்துகொள்ள விரும்பினான். அந்த வியாபாரியின் மகளிடம் அதைச் சொல்லும்போது அவள் அசந்துபோவாள்!

"அந்த சக்தி பாதகமானது போலத் தோன்றும்; ஆனால், உண்மையில், அதுதான் உன் இலக்கினை அடைவதற்கான வழியைக் காட்டும். உன்னுடைய ஆன்ம பலத்தையும், மனோ பலத்தையும் ஆயத்தப்படுத்துவதும் அதுதான். ஏனென்றால், இந்தப் பூமியில் மாபெரும் உண்மை ஒன்று இருக்கிறது: நீ யாராக இருந்தாலும், நீ செய்வது எதுவாக இருந்தாலும், நீ ஏதேனும் ஒன்றை உண்மையாகவே விரும்புவாயானால், அதற்குக் காரணம் அந்த விருப்பம் பிரபஞ்சத்தின் ஆன்மாவி லிருந்து உதித்தது என்பதுதான். இந்தப் பூமியின் மீது உனது பிறப்பின் நோக்கமே அதுதான்.

"நீ விரும்புவதெல்லாம் பயணம் செய்யவேண்டும் என்பதாகவோ அல்லது ஒரு ஜவுளி வியாபாரியின் மகளை மணக்க வேண்டும் என்பதாகவோ இருக்கலாம்.

"ஆமாம், புதையலைத் தேடுவதாகக்கூட இருக்கலாம். பூமியின் ஆன்மா ஜனங்களின் சந்தோஷத்தாலே போஷிக்கப் படுகிறது; அதைப்போலவே, துக்கத்தாலும் போட்டி பொறாமை களாலும்கூட. ஒருவருடைய உண்மையான கடமை தன்னு டைய இலக்கினை அடைவதுதான். எல்லாமே ஒன்றுதான்.

"அத்துடன் நீ ஒன்றை அடைய விரும்பினால், அதில் வெற்றி பெறுவதற்கு இந்தப் பிரபஞ்சம் மொத்தமும் முயற்சி செய்யும்."

அந்தச் சந்தைப் பகுதியையும் அங்குள்ள நகரமக்களையும் கவனித்தபடி அவர்கள் இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருந்தனர். கிழவர்தான் முதலில் பேசினார்.

"நீ ஏன் ஆட்டு மந்தையைப் பராமரிக்கிறாய்?"

"ஏனென்றால் எனக்கு ஊர் சுற்றிப் பார்க்க விருப்பம்."

அந்தச் சந்தையின் ஒரு மூலையில் உள்ள கடையில் நின்றிருந்த ரொட்டிக்காரனைக் கிழவர் சுட்டிக் காட்டினார். "அவன் சிறுவனாக இருந்த போது ஊர் சுற்றிப் பார்க்கத்தான் ஆசைப்பட்டான். ஆனால், முதலில் ரொட்டிக்கடையை வாங்கிக் கொஞ்சம் கொஞ்சமா பணம் சேர்க்க நினைத்தான். இப்போ கிழவனான பிறகு ஆப்பிரிக்காவில் ஒரு மாதம் தங்கப் போகிறான். ஜனங்கள் தங்களுடைய கனவை வாழ்க்கையின் எந்தப்பருவத்திலும் நிறைவேற்றக்கூடிய திறம்படைத்தவர்கள் என்பதை அவன் உணர்ந்ததே கிடையாது."

“அவன் ஒரு இடையனாக ஆசைப்பட்டிருக்க வேண்டும்” என்றான் பையன்.

“ஆமாம், அவன் அதைப்பற்றியும் நினைத்தான்” என்றார் கிழவர். “ஆனால், ரொட்டிக்காரர்கள் இடையர்களைக் காட்டிலும் அதிக முக்கியமானவர்கள். அவர்களுக்கு வீடுகளுண்டு, இடையர்கள் திறந்த வெளியில் தங்குபவர்கள். பெண்களைப் பெற்றவர்கள் தம்முடைய பிள்ளைகள் இடையர்களைக் காட்டிலும் ரொட்டிக்காரர்களை மணப்பதையே விரும்புவார்கள்.”

பையன் இதயத்தில் ஓர் அடி விழுந்தது. வியாபாரியின் மகளை நினைத்தான், அவளுடைய ஊரில் நிச்சயமாக ஒரு ரொட்டிக்காரன் இருப்பான்.

கிழவர் தொடர்ந்தார்: “காலப்போக்கில், அவர்களுக்குத் தங்களுடைய இலக்கைக் காட்டிலும் ரொட்டிக்காரர்களைப் பற்றியும் இடையர்களைப் பற்றியும் ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது அதிக முக்கியமாகிப் போகிறது.”

கிழவர் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினார். அதில் ஒரு பக்கத்தைப் படிப்பதில் ஆழ்ந்துவிட்டார். பையன் காத்திருந்தான்; தான் படித்த போது அந்தக் கிழவர் குறுக்கிட்டது போலவே இவனும் செய்தான். “இதையெல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறீர்கள்?”

“ஏனென்றால், நீ உன்னுடைய இலக்கை அடைய முயற்சி செய்கிறாய்; இப்பொழுது எல்லாவற்றையும் கைவிட்டுட்டுப் போகிற கட்டத்தில் இருக்கிறாய்.”

“அந்தக் கட்டத்தில்தான் நீங்கள் தரிசனம் தந்தீர்களாக்கும்.”

“நான் எப்பொழுதுமே இது போல் வருவதில்லை, ஆனால், ஏதேனும் ஒரு வடிவத்தில் வந்துவிடுவேன். சில நேரங்களில் பிரச்சினைக்குத் தீர்வாக வருவேன். நல்ல யோசனையாய் வருவேன். வேறு சில நேரங்களில் கஷ்டமான காலகட்டத்தில் விஷயங்களை எளிதாக நிறைவேறச் செய்வேன். இன்னும் நிறைய வேலைகள் செய்வேன். ஆனால், பெரும்பாலான சமயங்களில் ஜனங்கள் அதையெல்லாம் நான்தான் செய்தேன் என்பதை உணருவதில்லை.”

கிழவர் ஒரு நிகழ்ச்சியை விளக்கினார்:

ஒரு வாரத்திற்கு முன்பாக, ஒரு கல் உருவெடுத்து ஒரு சுரங்கத் தொழிலாளி முன்னால் தோன்ற நேர்ந்ததைச் சொன்னார். அந்தச் சுரங்கத் தொழிலாளி எல்லாவற்றையும் விட்டுட்டு மரகதக் கற்களைத் தோண்டி எடுப்பதற்காகப் புறப்பட்டவன்.

ஐந்து வருடங்களாக ஒரு ஆற்றங்கரையில் தோண்டிக்கொண்டிருந்தான். ஆயிரக்கணக்கான கற்களைச் சோதித்து மரகதக் கற்களைத் தேடினான். எல்லாவற்றையும் கைவிடும் நிலையில் இருந்தான். சரியாக, அந்தக் கட்டத்தில் ... அவன் மேலும் ஒரு கல்லைச் சோதித்திருந்தால் போதும், ஒரே ஒரு கல்லை, அவன் தேடிய மரகதக்கல் கிடைத்திருக்கும். அந்த சுரங்கத் தொழிலாளி தன்னுடைய இலக்கை அடையும் முயற்சியிலே எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டான். ஆகையால், அந்தக் கிழவர் தலையிட விரும்பினார். தன்னை ஒரு கல்லாக உருமாற்றிக்கொண்டு உருண்டு போய் அந்தச் சுரங்கத்தொழி லாளியின் காலடியில் விழுந்தார். ஐந்து வருஷங்கள் ஒரு பயனும் இல்லாமல் போனதால் விரக்தி அடைந்த சுரங்கத் தொழிலாளி தனது கோபத்தின் உச்சத்தில் அந்தக் கல்லை எடுத்துத் தூக்கி எறிந்துவிட்டான். அவன் எறிந்த வேகத்தில் அது ஒரு பாறையில் விழுந்து அந்தப் பாறை பிளவுபட்டு கல் அதற்குள் பதிந்துவிட்டது. அதுதான் உலகத்திலேயே மிகவும் அழகான மரகதக்கல்.

கிழவர் சற்று கசப்புடன் சொன்னார்: "ஜனங்கள் இளம் பிராயத்திலேயே தாங்கள் வாழ்வதற்கான காரணத்தை அறிந்து கொள்கிறார்கள். அதனால்தானோ என்னவோ வெகுவிரைவில் அதனைக் கைவிடவும் செய்கிறார்கள். அது அப்படித்தான் இருக்கும்."

"மறைந்திருக்கிற புதையலைப் பற்றி என்னமோ சொன்னீங்களே" என்று பையன் கிழவரை நினைவுபடுத்தினான்.

"ஓடுகின்ற தண்ணீரின் வேகத்தால்தான் புதையல் வெளிப் படுத்தப்படுகிறது. அதே நீரோட்டத்தால்தான் அது புதைந்தும் போகிறது" என்றார் கிழவர். "உன்னுடைய புதையலைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பினால் உன்னுடைய மந்தையில் பத்திலே ஒரு பங்கை எனக்குத் தர வேண்டும்."

"புதையலில் பத்திலே ஒரு பங்கைத் தருகிறேன்."

கிழவர் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. "கிடைப்பதற்கு முன்கூட்டியே ஒரு பொருளைக் கொடுப்பதாக உறுதியளிக்க ஆரம்பித்தாயானால் அதை அடைவதற்கான வேலையைச் செய்வதில் ஆர்வம் போய்விடும்."

அந்த நாடோடிக் கிழவிக்குப் புதையலில் பத்திலே ஒரு பங்கைக் கொடுப்பதாக ஏற்கனவே சத்தியம் பண்ணி இருந்ததை இவன் சொன்னான்.

"அப்படிச் செய்ய வைப்பதில் நாடோடிகள் கைதேர்ந்தவர்கள்" என்றபடி கிழவர் பெருமூச்சு விட்டார். "எப்படியோ, வாழ்க்கையில் ஒவ்வொன்றிற்கும் ஒரு விலை இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டவரைக்கும் நல்லதுதான். அதைத்தான் வெளிச்சத்தின் வீரர்கள் போதிக்க முயற்சி பண்ணுகிறார்கள்."

கிழவர் அந்தப் புத்தகத்தைப் பையனிடம் திருப்பிக் கொடுத்தார்.

"நாளை இதே நேரம் உன்னுடைய ஆட்டு மந்தையில் பத்திலே ஒரு பங்கைக் கொண்டு வா. புதையலைக் கண்டு பிடிக்கிற வழியை நான் சொல்கிறேன். வணக்கம்."

தெரு மூலையில் அவர் மறைந்து போனார்.

✦

பையன் மீண்டும் புத்தகத்தைப் படிக்கத் துவங்கினான். ஆனால், இவனால் அதில் அதிகக் கவனம் செலுத்த இயலவில்லை. பதற்றமாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது. கிழவர் சொன்னது சரிதான் என்று இவனுக்குத் தெரியும். ரொட்டிக் கடைக்குச் சென்று ஒரு ரொட்டி வாங்கினான். கிழவர் ரொட்டிக்காரனைப் பற்றிச் சொன்னதை அவனிடம் சொல்லலாமா வேண்டாமா என்று நினைத்தபடியே அங்கு சென்றான். சில விஷயங்களை அதன் போக்கிலேயே விட்டுவிடுவது நல்லது என்று தோன்றியது. எதையும் சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டான். இவன் எதையாவது சொல்லப் போய் அந்த ரொட்டிக்காரன் என்னதான் வாழ்க்கையின் போக்குக்குப் பழகியவனாக இருந்தாலும் மூன்று நாளைக்கு அதையே நினைத்துக்கொண்டிருப்பான். அப்படியொரு ஆதங்கத்தை ரொட்டிக்காரனுக்கு ஏற்படுத்துவதை உறுதியோடு தடுத்துக் கொண்டான். நகரம் முழுவதும் சுற்றித் திரிந்த பின்னர் நுழைவாயிலை அடைந்தான். அங்கே ஒரு சிறிய கட்டிடம் இருந்தது. மக்கள் ஆப்பிரிக்கா செல்வதற்கான சீட்டுக்களை ஜன்னல் வழியாக வாங்கிக்கொண்டிருந்தார்கள். இவனுக்கு எகிப்து ஆப்பிரிக்காவிலே இருப்பது தெரியும்.

ஜன்னலுக்கு உள்ளே நின்றிருந்த மனிதன், "என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"நாளைக்கு வருகிறேன்" என்றபடி நகர்ந்துகொண்டான். இவனுடைய ஆடுகளில் ஒன்றை விற்றாலே போதும். அந்த

ஜலசந்தியின் மறுகரையைச் சென்றடைவதற்குப் போதிய பணம் கிடைத்துவிடும். இந்த எண்ணமே இவனை அச்சுறுத்தியது.

பையன் போவதைப் பார்த்துக்கொண்டிருந்த விற்பனையாளன் தனது உதவியாளனிடம் சொன்னான், "இன்னொரு கனவாளி; பயணம் போறதுக்குப் போதுமான பணம் இல்லாத பையன்."

பயணச்சீட்டு விற்குமிடத்தில் நின்றுகொண்டிருந்தபோது மந்தையின் ஞாபகம் வந்தது. ஓர் இடையனாகத் தனது பணியைத் தொடர வேண்டும் என்று தீர்மானித்தான். இரண்டு வருடங்களில் இடைத்தொழில் பற்றிய விஷயங்கள் – ஆடுகளின் ரோமத்தை மழிப்பது, சினையாக இருக்கும் மறிகளைப் பராமரிப்பது, ஓநாய்களிடம் இருந்து ஆடுகளைக் காப்பாற்றுவது – அனைத்தையும் கற்றுக்கொண்டான். அந்தலூசியாவிலுள்ள எல்லா வயல்வெளிகளும் மேய்ச்சல் நிலங்களும் இவனுக்குத் தெரியும். தன்னுடைய ஆடுகள் ஒவ்வொன்றிற்கும் நியாயமான விலையும் தெரியும்.

தன்னுடைய நண்பனுடைய பட்டிக்குத் திரும்புவதற்கு அதிகமான தூரம் கொண்ட சுற்றுப்பாதையில் செல்வதெனத் தீர்மானித்தான். நகரத்தின் கோட்டையைக் கடந்த போது தனது போக்கை மாற்றிக் கோட்டை மதிலுக்குச் செல்லும் படிக்கற்களில் ஏறினான். அங்கிருந்து தூரத்தில் இருந்த ஆப்பிரிக்காவைப் பார்க்க முடிந்தது. ஸ்பெயின் முழுவதும் ஆக்கிரமித்திருக்கும் மூர் மக்கள் அங்கிருந்துதான் வந்ததாக யாரோ முன்பொரு முறை அவனிடம் சொல்லியிருந்தார்கள்.

கிழவரோடு பேசிக்கொண்டிருந்த சந்தை உட்பட நகரம் முழுவதையும் இவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து பார்க்க முடிந்தது. "பாழாய்ப் போன நேரத்தில் அந்தக் கிழவனைச் சந்தித்தேன்" என்று சபித்துக்கொண்டான். கனவுகளுக்குப் பலன் சொல்கிற கிழவியைத் தேடித்தான் அந்த நகரத்திற்கு வந்தான். அந்தக் கிழவியும், அந்தக் கிழவரும் இவன் ஒரு இடையன் என்பதனாலேயே கொஞ்சம்கூட மதிக்கவில்லை. அவர்கள் ஒரு வகை ஏகாந்திகள்; எந்த விஷயத்திலும் நம்பிக்கையற்றவர்கள். இடையர்கள் தமது ஆடுகள் மீது எவ்வளவு பாசமாக இருப்பார்கள் என்பதெல்லாம் அவர்களுக்குப் புரியாது. மந்தையில் உள்ள ஒவ்வொரு ஆட்டைப் பற்றிய ஒவ்வொரு விஷயமும் இவனுக்குத் தெரியும். எவையெல்லாம் நொண்டி; இரண்டு மாதத்திற்குள் ஈனப் போகிறவை எவை; உள்ளதிலேயே அதிக சோம்பேறிகள் எவை என்பதெல்லாம் அறிவான். அவற்றின் ரோமத்தை மழிக்கவும் தெரியும். தோலை

உரிக்கவும் தெரியும். அவற்றை விட்டுப் பிரிந்தால் அவை கஷ்டப்படும்.

காற்று வலுக்கத் தொடங்கியது. அந்தக் காற்றைப்பற்றி இவனுக்குத் தெரியும். மக்கள் லிவாண்டர் – மத்திய தரைக்கடல் காற்று – என்பார்கள். மத்தியதரைக்கடல் நாடுகளின் கிழக்குப் பகுதியில் உள்ள லிவாண்ட்டிலிருந்து மூர் மக்கள் அதில் ஏறி வந்தவர்கள்.

லிவாண்டரின் வலிமை அதிகரித்தது. ஆட்டு மந்தையா புதையலா என்று நிச்சயிக்க முடியாத நிலையில் இருக்கிறேனே என்று நினைத்துக்கொண்டான். தனக்கு மிகவும் பழகிப் போன ஒன்றையோ, தான் அடைய விரும்பும் ஒன்றையோ தேர்வு செய்ய வேண்டிய நிலையில் இருந்தான். அத்துடன் அந்த வியாபாரியின் மகள் வேறு! ஆனால் அவள் இவனுடைய ஆட்டு மந்தை அளவிற்கு முக்கியமானவள் அல்ல. ஏனென்றால் அவள் இவனைச் சார்ந்து இருக்கவில்லை. அவளுக்கு இவன் நினைவுகூட இருக்குமோ என்னமோ? இவனைச் சந்தித்த நாள்கூட அவளுக்கு வித்தியாசமானதாகத் தோன்றியிருக்காது என்பது உறுதி. அவளைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் அடுத்த நாளைப் போல ஒரே மாதிரியானதுதான். அவ்வாறு இருப்பதற்குக் காரணம் ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையில் சூரியன் உதயமாகிற ஒவ்வொரு நாளிலும் நிகழ்கிற நல்ல விஷயங்களை உணர்ந்துகொள்ளத் தவறி விடுவதால்தான்.

என்னுடைய தகப்பனார், தாயார், நகரக் கோட்டை இவற்றையெல்லாம் விட்டுவிட்டுத்தான் வந்தேன். நான் இல்லாத சூழ்நிலைக்கு அவர்கள் பழகிவிட்டார்கள். எனக்கும் அப்படித்தான். ஆடுகளும்கூட நான் இல்லாத சூழ்நிலைக்குப் பழகிப் போய்விடும் என்று இவன் நினைத்தான்.

இவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே சந்தையைப் பார்க்க முடிந்தது. ஜனங்கள் ரொட்டிக்கடைக்கு வருவதும், போவதுமாக இருந்தார்கள். அந்தக் கிழவனோடு இவன் பேசிக் கொண்டிருந்த பெஞ்சின் மீது ஓர் இளம் ஜோடி அமர்ந்திருந் தனர்; முத்தமிட்டுக்கொண்டனர்.

“அந்த ரொட்டிக்காரன்...” தனக்குள் சொல்ல ஆரம்பித்தவன் யூகித்துக்கொண்டான். சிந்தனை முழுமையடையவில்லை. லிவாண்டர் காற்று மேலும் வலுத்தது, அதன் வேகத்தை இவன் முகத்தில் உணர முடிந்தது. அந்தக் காற்றுதான் மூர் மக்களை அங்கே கொண்டு வந்தது. ஆமாம்! அது பாலைவன வாசனையை யும் முகத்தை மறைத்துக்கொள்ளும் பெண்களின் வாசனையை

யும்கூடக் கொண்டு வந்தது. தாங்கள் அறியாததை, தங்கத்தை, சாகசத்தை, பிரமிடுகளைத் தேடிப் புறப்பட்ட மனிதர்களின் கனவுகளையும் வியர்வையையும் அது சுமந்து வந்தது. காற்றின் சுதந்திரத்தைக் கண்டு பையனுக்குப் பொறாமையாக இருந்தது. தானும் அதே சுதந்திரத்தை அடையக்கூடும் என்பதை உணர்ந் தான். தன்னைத் தவிர இவனைப் பிடித்து நிறுத்தக் கூடியது வேறு எதுவுமில்லை. அந்த ஆடுகள், வியாபாரியின் மகள், அந்தலூசிய வயல்வெளிகள் அவையெல்லாம் அவனுடைய இலக்கை நோக்கிய பாதையில் உள்ள படிக்கற்கள் மட்டுமே.

அடுத்த நாள் உச்சிப் பொழுதில் இவன் கிழவனைச் சந்தித் தான். தன்னுடன் ஆறு ஆடுகளைக் கொண்டு வந்திருந்தான்.

"எனக்கு ஒரே ஆச்சரியம்" என்றான் பையன். "என்னுடைய நண்பன் மற்ற ஆடுகளை எல்லாம் உடனே வாங்கிக்கொண் டான். எப்பொழுதும் இடையனாக இருப்பதாகவே அவன் கனவு கண்டுகொண்டிருந்தானாம். இது நல்ல சகுனம் என்கிறான்."

"அது எப்பவுமே அப்படித்தான்" என்று கிழவர் சொன்னார். "அதற்குத்தான் 'சாதகத் தத்துவம்' என்று பெயர். முதல் தடவையாகச் சீட்டு விளையாடும்போது நிச்சயம் வெற்றி வந்துகொண்டேயிருக்கும். 'ஆரம்ப அதிர்ஷ்டம்.' "

"ஏன் அப்படி?"

"ஏனென்றால், இலக்கை அடைந்தே தீரவேண்டும் என்று விரும்புகின்ற சக்தி ஒன்று உண்டு. ஜெயிப்பிலே ருசி உண்டாக்கி உன்னுடைய வெறிக்குத் தூபம் போடும்."

கிழவர் ஆடுகளைச் சோதனை போட ஆரம்பித்தார். ஒன்று நொண்டி; அதைப் பொருட்படுத்தக் கூடாது என்றும், ஏனென்றால் அதுதான் இருந்ததிலேயே மிகவும் புத்திசாலி ஆடு என்றும் நிறைய மயிர் கொடுக்கும் என்றும் விளக்கினான்.

"புதையல் எங்கே இருக்கிறது?" என்று கேட்டான்.

"எகிப்திலே, பிரமிடுகளுக்குப் பக்கத்தில்."

பையன் திடுக்கிட்டான். அந்தக் கிழவியும் இதைத்தான் சொன்னாள். ஆனால், அவள் கட்டணமாக எதுவும் வாங்கிக் கொள்ளவில்லை.

"புதையலைக் கண்டுபிடிப்பதற்கு நீ சகுனங்கள் சொல்ற படி கேட்கணும். ஒவ்வொருவரும் பின்பற்றுவதற்காகவே கடவுள் ஒரு பாதையை வகுத்து வைத்துள்ளார். அவர் உனக்காக வைத்திருக்கும் சகுனங்களை நீ அறியவேண்டும்."

பையன் பதிலேதும் பேசுவதற்குள் ஒரு பட்டாம்பூச்சி பறந்து வந்து இருவருக்கும் இடையே சிறகடித்தது. இவன் பாட்டனார் ஒருமுறை இவனிடம் சொல்லியிருந்தது ஞாபகம் வந்தது. பட்டாம்பூச்சிகள் நல்ல சகுனம்; வெட்டுக்கிளிகள் போல அசரீரிகளைப் போல; பல்லிகளைப் போல; நாலிதழ்ப் பூவைப் போல.

"அது சரி" என்று இவனுடைய எண்ணங்களைத் தெரிந்து கொள்ள வல்லவரான கிழவர் சொன்னார். "உன்னுடைய தாத்தா உனக்குச் சொல்லிக் கொடுத்ததைப் போலவே இவை யெல்லாம் நல்ல சகுணங்கள்."

கிழவர் தன் மேலாடையைத் திறந்தார். பையனுக்கு ஒரே அதிர்ச்சி. விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட கனமான தங்கத் தகட்டை மார்பில் அணிந்திருந்தார். முந்திய நாள் தான் பார்த்த அதிபிரகாசமான ஒளியை அவன் ஞாபகப் படுத்திக்கொண்டான்.

இவர் உண்மையிலேயே ஒரு ராஜாதான்! திருடர்களின் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காக மாறுவேடத்தில் திரிகிறார்.

மார்புப்பட்டையின் நடுவில் பதிக்கப்பட்டிருந்த ஒரு வெள்ளைக் கல்லையும் ஒரு கருப்புக் கல்லையும் எடுத்து இவனிடம் நீட்டி "எடுத்துக்கொள்" என்றார் கிழவர். "இவற்றின் பெயர் யுரிம் தும்மிம். கருப்புக்கல் 'ஆம்' என்பதையும் வெள்ளைக்கல் 'இல்லை' என்பதையும் குறிக்கும். சகுனங்களை உன்னால் புரிந்துகொள்ள இயலாத பட்சத்தில் இவை உனக்கு உதவும். எப்பொழுதும் நேரடியான கேள்விகளை மட்டுமே கேட்க வேண்டும்.

"உன்னால் முடிந்தவரை உனது சொந்த முடிவுகளையே எடுக்க முயற்சி செய். புதையல் பிரமிடுகளுக்குப் பக்கத்தில் உள்ளது, அது உனக்கு ஏற்கனவே தெரியும். ஆறு ஆடுகளைக் கொடுக்கும்படி வற்புறுத்தியதற்குக் காரணம் நீ உனது முடிவு களை எடுப்பதில் உதவியதற்காகத்தான்."

அந்தக் கற்களைச் சுருக்குப் பைக்குள் போட்டுக்கொண் டான். இனிமேல் இவன் தனது சொந்த முடிவுகளையே எடுப்பான்.

"நீ மேற்கொள்ள வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான் என்பதை மறக்கக்கூடாது. சகுனங்களின் மொழியையும் மறந்து விடாதே. எல்லாவற்றிற்கும் மேலாக உன்னுடைய இலக்கினை அது நிறைவேறும் வரை மறந்துவிடாதே.

“நான் செல்வதற்கு முன் உனக்கு ஒரு குட்டிக் கதை சொல்லப் பிரியப்படுகிறேன்.

“ஒரு வியாபாரி சந்தோஷத்தின் ரகசியத்தைக் கற்பதற்காகத் தன் மகனை அறிவாளி ஒருவரிடம் அனுப்பிவைத்தார். அவன் நாற்பது நாட்கள் பாலைவனம் முழுவதும் சுற்றித்திரிந்தான். கடைசியாக ஒரு மலை உச்சியில் இருந்த அழகான கோட்டையை அடைந்தான். அங்கேதான் அந்த அறிவாளி வசித்தார்.

“அந்தக் கோட்டையிலுள்ள பிரதான அறைக்குள் நுழைந்த நமது கதாநாயகன் ஒரு சந்நியாசி போன்ற ஆளுக்குப் பதிலாக, பரபரப்பாகச் செயல்படும் கூட்டத்தைக் கண்டான். வர்த்தகர்கள் வந்து சென்றார்கள்; அறையின் மூலைகளில் மக்கள் உரையாடிக்கொண்டிருந்தார்கள்; ஒரு சிறிய இசைக்குழு மெல்லிய இசையை எழுப்பிக்கொண்டிருந்தது; ஒரு மேஜை மேல் அந்தப் பகுதியில் கிடைப்பதிலேயே அதிக ருசியான உணவு வகைகள் இருந்த தட்டுக்கள் இருந்தன. அந்த அறிவாளி ஒவ்வொருவராக அழைத்துப் பேசிக்கொண்டிருந்தார். அவன் அவருடைய கவனத்தைப் பெறுவதற்காக இரண்டு மணி நேரத்திற்கு மேல் காத்திருக்க நேர்ந்தது.

“அந்த அறிவாளி இவன் சொல்வதை உன்னிப்பாகக் கேட்டார். சந்தோஷத்தின் இரகசியத்தை உடனே சொல்வதற்குத் தனக்கு அவகாசம் இல்லை என்று சொல்லிவிட்டார். அரண்மனை முழுவதையும் நன்றாகச் சுற்றிப்பார்த்துவிட்டு இரண்டு மணி நேரங்கழித்து வரச்சொன்னார்.

‘அதே சமயத்தில், நீ ஒரு காரியம் பண்ண வேண்டும்.’ அவர் இரண்டு துளி எண்ணெய் இருந்த கரண்டியை அவன் கையில் கொடுத்தபடி சொன்னார்: ‘நீ சுற்றிப் பார்க்கும்போது எண்ணெய் சிந்தாமல் இந்தக் கரண்டியைப் பிடித்துக்கொள்ள வேண்டும்.’

“அவன் கரண்டியைவிட்டுக் கண்களை எடுக்காமலே அரண்மனையின் படிக்கட்டுகளில் ஏறி இறங்க ஆரம்பித்தான். இரண்டு மணி நேரம் கழித்து அறிவாளி இருந்த அறைக்குச் சென்றான்.

“அறிவாளி கேட்டார்: ‘எனது சாப்பாட்டு அறையில் தொங்கும் பெர்சிய நாட்டுத் தோரணங்களைப் பார்த்தாயா? பத்து வருஷம் பாடுபட்டுத் தோட்டக்கலை நிபுணர் ஒருவர் உருவாக்கியிருக்கிற என் தோட்டத்தைப் பார்த்தாயா? என்னுடைய நூலகத்தில் இருந்த அழகழகான அடுக்குகளைக் கவனித்தாயா?’

"அவன் நெளிந்தான்; எதையுமே பார்க்கவில்லை என்று ஒப்புகொண்டான். தன்னிடம் ஒப்படைத்த எண்ணெய் சிந்தி விடக்கூடாது என்பதே அவனுடைய கவலையாக இருந்தது

"அப்படியானால் என்னுடைய வீட்டின் அதிசயங்களை எல்லாம் பார்த்துவிட்டு வா என்று அறிவாளி சொன்னார். 'ஒருவருடைய வீட்டைப்பற்றித் தெரிந்து கொள்ளாமல் அந்த ஆளை நீ நம்பக்கூடாது.'

"நிம்மதிப்பெருமூச்சுடன் அவன் கரண்டியை எடுத்துக் கொண்டு அந்த அரண்மனையைத் துருவிப்பார்க்கக் கிளம்பி விட்டான். இந்தமுறை சுவர்களிலும் மேற்கூரையிலும் இருந்த கலை வேலைப்பாடுகளை எல்லாம் உன்னிப்பாகக் கவனித் தான்; தோட்டத்தைப் பார்த்தான், சுற்றியிருந்த மலைகளையும், மலர்களின் அழகையும் ஒவ்வொன்றும் தேர்ந்து அமைக்கப் பட்டிருந்த நேர்த்தியினையும் ரசித்தான். அறிவாளியிடம் திரும்பிவந்து தான் பார்த்த ஒவ்வொன்றையும் மிக விரிவாக விளக்கினான்.

'ஆனால், நான் உன்னிடம் ஒப்படைத்த எண்ணெய் எங்கே?' என்று அறிவாளி கேட்டார்.

"கையில் பிடித்திருந்த கரண்டியைப் பார்த்தான்; எண் ணெயைக் காணோம்.

"அறிவாளிகளுக்கெல்லாம் அறிவாளியான அவர் சொன் னார்: 'உனக்கு நான் சொல்லவேண்டிய அறிவுரை ஒன்றே ஒன்றுதான். உலகத்தில் இருக்கிற அத்தனை அதிசயங்களையும் ரசிக்கணும், அதே சமயம் கரண்டியில் இருக்கிற எண்ணெய்த் துளிகளையும் மறந்துவிடக்கூடாது. இதுதான் மகிழ்ச்சியின் ரகசியம்.' "

இடையன் எதுவும் பேசவில்லை. கிழட்டு ராஜா இவனுக்குச் சொன்ன கதையைப் புரிந்துகொண்டான். ஓர் இடையன் ஊர்சுற்றிப் பார்க்க விருப்பப்படலாம்; ஆனால், ஆட்டுமந்தையை மறந்துவிடக்கூடாது.

கிழவர் பையனைப் பார்த்தார்; இரண்டு கைகளையும் சேர்த்து அவன் தலைக்குமேலே ஏதேதோ விநோதமான சைகை களைச் செய்தார். பிறகு, ஆடுகளை ஓட்டிக்கொண்டு நடையைக் கட்டினார்.

✧

தாரிபாவில் மிக உயர்ந்த இடத்தில் மூர்மக்களால் கட்டப்பட்ட ஒரு பழைய கோட்டை இருக்கிறது. அதன் சுவர்கள் மேலிருந்து

ஆப்பிரிக்காவைப் பார்க்கலாம். அந்த மதிய வேளையில் சேலம் ராஜா மெல்ச்சிஜெடெக் அந்தக் கோட்டைச் சுவரின் மீது அமர்ந்திருந்தார். மத்திய தரைக்கடல் காற்று முகத்தில் வருடியது. ஆடுகள், புதிய ஆள் என்பதால் சங்கடப்பட்டுக் கொண்டும் பெருமளவிலான மாற்றத்தினால் அதிர்ச்சியடைந்தும் அவரருகில் படபடத்துக் கிடந்தன.

மெல்ச்சிஜெடெக் துறைமுகத்தைவிட்டு வெளிக்கிளம்பி நீர்ப்பரப்பை உழுதபடி சென்றுகொண்டிருந்த ஒரு கப்பலைப் பார்த்தார். அந்தப் பையனை அவர் மீண்டும் பார்க்கப் போவதில்லை; பத்தில் ஒரு பங்கான அவரது கட்டணத்தை வசூல் செய்தபிறகு, எப்படி ஆப்ரகாமைப் பார்க்க முடிந்ததில்லையோ, அதேபோல. அவருடைய வேலையே அதுதான்.

கடவுளர்க்கெல்லாம் ஆசைகள் இருக்கக் கூடாது, ஏனென்றால், அவர்களுக்கு இலக்கென்று எதுவும் கிடையாது. பையன் வெற்றிபெற வேண்டும் என்று சேலம் ராஜா சற்று கவலையுடன் விரும்பினார்.

'விரைவிலேயே அவன் என்னுடைய பெயரை மறந்து போகப் போகிறான்' என்று நினைத்துக்கொண்டார். 'என்னுடைய பெயரை மீண்டும் ஒருமுறை சொல்லியிருக்க வேண்டும். அப்பொழுதுதான் என்னைப்பற்றி யாரிடமாவது பேசும்போது என்பெயர் மெல்ச்சிஜெடெக் என்றும் சேலம் நாட்டின் ராஜா என்றும் சொல்வான்.'

சற்றே வெட்கத்துடன் வானத்தைப் பார்த்தார்; தனக்குள் சொல்லிக்கொண்டார்: 'ஆண்டவரே, நீர் சொன்னதைப் போல, இது ஒருவிதத் தற்பெருமைதான் என்று எனக்குத் தெரியும். ஆனாலும், ஒரு கிழட்டு ராஜாவுக்குச் சில சமயங்களில் தனக்குள்ளேயே சற்றுப் பெருமைப்பட்டுக்கொள்ளவும் வேண்டியிருக்கிறதே.'

○

"ஆப்பிரிக்கா எவ்வளவு விநோதமாக இருக்கிறது" என்று இந்தப் பையன் வியந்தான்.

பானங்கள் விற்கும் கடையொன்றில் இவன் உட்கார்ந்திருந்தான். தான்ஜியரின் குறுகலான வீதி ஓரங்களில் இவன் பார்த்த மற்ற பானக்கடைகளைப் போலவேதான் அதுவும் இருந்தது. சிலபேர் மிகப்பெரிய குழாய் வழியாகப் புகைத்துக் கொண்டிருந்தார்கள். அது ஒவ்வொருவருடைய கைக்கும் மாறிக் கொண்டிருந்தது. சிலமணி நேரத்திற்குள், ஒருவரோடு ஒருவர் கைகோர்த்தபடி ஆட்கள் நடந்து செல்வதைப் பார்த்தான்;

பெண்கள் முகத்தை மூடிக்கொண்டு சென்றார்கள்; பாதிரிகள் கோபுரங்களின் உச்சியில் ஏறி ஓதினார்கள். ஆட்கள் அனைவரும் முழங்காலிட்டுத் தரையில் நெற்றியை வைத்தார்கள்.

"நாத்திகர்களுடைய வழக்கம்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். குழந்தையாக இருந்தபோது தேவாலயத்தில், வெள்ளைக் குதிரை மேலே, உறையிலிருந்து உருவப்பட்ட வாளை ஏந்தியபடி நின்ற புனித சந்தியாகு மாதாமோரோஸ் சிலையையும் காலடியில் இவர்களைப்போன்று மண்டியிட்டிருந்த உருவங்களையும் இவன் பார்த்துக்கொண்டே இருப்பான். இவனுக்கு அசௌகரியமாக இருந்தது. பயங்கரத் தனிமையாகவும் இருந்தது. நாத்திகர்கள் இவனை வெறுப்புடன் பார்த்தார்கள்.

அத்துடன், பயண அவசரத்தில் ஒரு விஷயத்தை – ஒரே ஒரு விஷயத்தை – மறந்துவிட்டான். அது இவனைப் புதையலை அடையவிடாமல் நீண்ட காலம் தடுக்கப்போகிறது – இந்நாட்டில் அரபு மொழி மட்டுமே பேசுவார்கள்.

கடைக்காரர் இவனருகில் வந்தார்; பக்கத்து மேஜையில் பரிமாறப்பட்டிருந்த பானத்தைச் சுட்டிக்காட்டினான்; கசப்பான ஒருவகைத் தேநீர் கிடைத்தது. இவனுக்கோ ஒயின் வேண்டும்.

ஆனால், அதைப்பற்றி அப்போதைக்குக் கவலைப்படத் தேவையில்லை. இவன் கவலைப்பட வேண்டிய விஷயம் புதையலையும் அதை அடைவதற்கு எப்படிப் போகப் போகிறான் என்பதும்தான். ஆடுகளை விற்றதில் பையில் நிறையப் பணம் இருக்கிறது. பணத்தை வைத்துக்கொண்டு மந்திரஜாலமே செய்யலாம் என்று இவனுக்குத் தெரியும். பணம் உள்ளவன் ஒருபோதும் தனிமையில் இருப்பதில்லை. காலந்தாழ்த்தாமல், முடியுமானால் இன்னும் சில நாட்களிலேயே பிரமிடுகளுக்குப் போய்விடுவான். தங்க மார்புப்பட்டை அணிந்த கிழவர் வெறும் ஆறு ஆடுகளுக்காகப் பொய் சொல்லியிருக்க மாட்டார்.

கிழவர் குறிகளையும் சகுனங்களையும் பற்றியெல்லாம் சொல்லியிருந்தார். ஜலசந்தியைக் கடந்து சென்றபோது சகுனங்களைப்பற்றி நினைத்துக்கொண்டான். 'ஆமாம், கிழவர் நன்றாகத் தெரிந்துதான் சொல்லியிருக்கிறார். அந்தலூசிய வயல்வெளிகளில் நிலத்தையும் வானத்தையும் கவனித்து எந்தப் பாதையைத் தேர்ந்தெடுப்பது என்பதைக் கற்றிருந்தான். ஒரு வகையான பறவைகளைக் காணநேர்ந்தால் அருகாமையில் பாம்பு இருக்கலாம்; ஒருவகையான புதர் வளர்ந்திருந்தால் அந்தப் பகுதியில் தண்ணீர் இருப்பதற்கு அடையாளம் என்பதையும் கண்டுவைத்திருந்தான். அவற்றையெல்லாம் ஆடுகள்தான் இவனுக்குக் கற்றுக்கொடுத்திருந்தன.

'ஆடுகளை அப்படி நன்றாக வழிநடத்தும் கடவுள் மனிதர் களையும் மிக நன்றாகவே வழிநடத்துவார்' என்று நினைத்துக் கொண்டான். அவனுக்குச் சற்றுத் தெம்பாக இருந்தது. அந்தத் தேனீரின் கசப்புகூட குறைந்திருந்தது.

"யார் நீ?" ஸ்பானிய மொழியில் ஒரு குரல் கேட்டது.

ஆசுவாசப்பட்டான். சகுனங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும்போதே நல்ல சகுனம் தோன்றிவிட்டது.

"நீ எப்படி ஸ்பானிஷ் பேசுகிறாய்?" என்று கேட்டான். அந்தப் புதிய ஆள் மேற்கத்திய பாணியில் உடை அணிந்த ஓர் இளைஞன். ஆனால், அவனுடைய தோலின் நிறம் அவன் அந்த நகரைச் சேர்ந்தவன் என்பதைக் காட்டியது. இவனை ஒத்த வயசும் உயரமும் இருக்கும்.

"இங்கே எல்லோருமே ஸ்பானிஷ் பேசுவார்கள். ஸ்பெயின் இங்கிருந்து இரண்டு மணிநேரப் பயணதூரத்தில்தான் இருக் கிறது."

"உட்கார், என்ன சாப்பிடுகிறாய்? உனக்கு ஏதாவது வாங்கித் தரவேண்டும். எனக்கும் ஒரு கிளாஸ் ஒயின் கேள்; இந்தத் தேநீர் நன்றாயில்லை."

"இந்த நாட்டிலே ஒயினெல்லாம் கிடையாது. இங்கே உள்ள மதம் அதையெல்லாம் தடைசெய்துள்ளது."

பிறகு, அவனிடம் பிரமிடுகளுக்குப் போக வேண்டியிருப் பதைச் சொன்னான். புதையலைப்பற்றிச் சொல்ல வந்தான், வேண்டாம் என்று முடிவு செய்துகொண்டான். சொல்லப் போய், இந்த அரபி அங்கே அழைத்துச்செல்வதற்குக் கூலியாக ஒரு பங்கு கொடு என்று கேட்பான். அதுவரையும் கைக்குக் கிட்டாத ஒன்றைக் கொடுப்பதாகச் சொல்வது பற்றிக் கிழவர் சொன்னது ஞாபகம் வந்தது.

"உன்னால் முடியும் என்றால் அங்கு செல்ல எனக்கு வழிகாட்டு; வழிகாட்டியாக நீ செய்யும் வேலைக்கு உண்டா னதை நான் கொடுக்கிறேன்."

"அங்கே போவது குறித்து எதாவது யோசனை வைத்திருக் கிறாயா?" புதியவன் கேட்டான்.

கடைக்காரர் அருகிலேயே நின்றுகொண்டு அவர்கள் பேசுவதை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்ததைப் பையன் பார்த்துவிட்டான். அந்த ஆள் அங்கே நிற்பது அவ னுக்குச் சங்கடமாக இருந்தது. ஆனால், அவன் அப்பொழுது

தான் ஒரு வழிகாட்டியைப் பிடித்திருக்கிறான். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பவில்லை.

"சஹாரா பாலைவனம் முழுவதையும் கடந்து போக வேண்டும்" என்று அந்தப் புதியவன் சொன்னான். "அப்படிப் போகவேண்டும் என்றால் பணம் வேண்டும். உன்னிடம் போதுமான அளவுக்குப் பணம் இருக்கிறதா என்று எனக்குத் தெரிய வேண்டும்."

அந்தக் கேள்வி பையனுக்கு விநோதமாகப் பட்டது. ஆனாலும், "நீ உண்மையாகவே ஒன்றை விரும்புவாயானால் இந்தப் பிரபஞ்சமே உனக்கு உதவிக்கு வரும்" என்று அந்தக் கிழவர் சொன்னதை இவன் நம்பினான்.

பையிலிருந்த பணத்தை அந்த இளைஞனிடம் கொடுப்பதற்காக எடுத்தான். அங்கே வந்த கடைக்காரர் அதைப் பார்த்துவிட்டார். அவர்கள் இருவரும் அரபு மொழியில் ஏதோ பேசிக்கொண்டார்கள். கடைக்காரர் எரிச்சலடைவதாகத் தோன்றியது.

"நாம் இங்கிருந்து போய்விடுவோம்; அவர் நம்மைப் போகச்சொல்கிறார்" என்று புது இளைஞன் சொன்னான்.

பையனுக்கு நிம்மதியாக இருந்தது. சாப்பிட்டதற்குப் பணத்தைக் கொடுக்க எழுந்த போது கடைக்காரர் இவனைப் பிடித்து இழுத்து கோபமான வார்த்தைகளால் திட்டத் துவங்கினார். இவனும் வலிமையானவன்தான், பதிலடி கொடுக்க வேண்டும் என்றுதான் விருப்பம். ஆனால், இவனோ வெளி நாட்டில் இருக்கிறான். புதிய நண்பன் கடைக்காரரைப் பிடித்துத் தள்ளிவிட்டு, இவனைத் தன்னுடன் இழுத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டான்.

"அவர் உனது பணத்தைக் கேட்கிறார். ஆப்பிரிக்காவின் மற்றப் பகுதிகளைப்போல் இல்லை தான்ஜியர். இது ஒரு துறைமுகப்பட்டினம். துறைமுகப்பட்டினம் என்றாலே திருடர்கள் ஜாஸ்தி" என்று அவன் சொன்னான்.

பையன் தன் புதிய நண்பனை நம்பினான்; ஒரு ஆபத்தான சூழ்நிலையிலிருந்து அவன் இவனைக் காப்பாற்றியிருக்கிறான். பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தான்.

பணத்தை வாங்கிக்கொண்ட புதியவன் சொன்னான்: "நாளைக்கே பிரமிடுகளுக்குப் போய்விடலாம்; ஆனால், நான் இரண்டு ஒட்டகங்களை வாங்க வேண்டும்." தான்ஜியரின் குறுகலான வீதிகளில் நடந்து சென்றார்கள். எங்கு பார்த்தாலும்

விற்பனைப்பொருட்கள் கொண்ட கடைகள் தெரிந்தன. சந்தை நடைபெறும் கடைவீதியின் மையப்பகுதியை அடைந்தார்கள். வாங்கவும் விற்கவும் ஆயிரக்கணக்கில் மக்கள் குவிந்திருந்தனர். காய்கறிகள் உடைவாள்களுக்கு மத்தியில் இருந்தன, கம்பளங்கள் புகையிலைக்குப் பக்கத்தில் விரித்து வைக்கப்பட்டிருந்தன. ஆனால், பையன் புதிய நண்பன் மேலேயே கண்வைத்திருந்தான். அவனிடம்தானே இவனுடைய மொத்தப் பணமும் இருக்கிறது. பணத்தைத் திருப்பிவாங்கி வைத்துக் கொள்ளலாமா என்று நினைத்தான். அது நட்புக்கு அழகாக இருக்காது என்று விட்டுவிட்டான். புதிய பூமியின் பழக்க வழக்கங்கள் எதுவும் இவனுக்குத் தெரியாது.

அவனைக் கவனித்துக்கொள்ள வேண்டியதுதான் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்; நண்பனைவிடத் தான் வலிமையானவன் என்கிற நம்பிக்கை.

கடைவீதியின் கூட்ட நெரிசல்களுக்கு மத்தியிலே, திடீரென, இவன் மிக மிக அழகான உடைவாள் ஒன்றைப் பார்த்தான். அதுபோன்ற ஒன்றை இதற்குமுன் பார்த்ததில்லை. வாள்பகுதி வெள்ளிமுலாம் பூசப்பட்டிருந்தது, கருப்பான கைப்பிடியில் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. எகிப்திலிருந்து திரும்பியதும் அந்த வாளை வாங்கிவிடுவதென நிச்சயித்துக் கொண்டான்.

"அந்த வாள் என்ன விலை என்று கேள்" என்று நண்பனிடம் சொன்னான். அந்த வாளைப் பார்த்துக்கொண்டிருந்த சில கணங்களில் கவனத்தைச் சிதறவிட்டுவிட்டதை உணர்ந்தான். நெஞ்சுக்கூடு உட்குழிந்து சுருங்கிப்போனதைப்போல இதயம் பிழிபட்டது. பார்க்கக் கூடாததைப் பார்க்க நேரிடும் என்ற உணர்வு இருந்ததால் திரும்பிப் பார்க்கவே பயந்தான். சுற்று முற்றும் பார்ப்பதற்கான தைரியத்தை வரவழைத்துக் கொள்ளும்வரை அந்த அழகிய வாளையே மேலும் சற்றுநேரம் தொடர்ந்து பார்த்தான்.

இவனைச் சுற்றிலும் சந்தையின் சந்தடி, வந்துபோகிற மக்களும் பேரம் பேசுகிற கூச்சலும் புதுவகை உணவுப்பண்டங்களின் நறுமணமும் – புதிய நண்பனை மட்டும் எங்கும் காணோம்.

கூட்ட நெரிசலில் நண்பனை விட்டுப் பிரிந்துவிட்டதாகத் தான் நம்ப விரும்பினான். அவன் திரும்பும் வரை அங்கேயே காத்திருப்பதென முடிவு செய்தான். இவன் காத்திருந்த போது ஒரு மதகுரு கோபுரத்தின் மீது ஏறி ஓதத் துவங்கினார். சந்தையில் இருந்த அனைவரும் முழங்காலில் குத்திட்டு, நெற்றி

தரையைத் தொடும்படி குனிந்து தொழுகை நடத்தினர். பின்னர், வேலைக்கார எறும்புக் கூட்டம் போல, கடைகளைக் கலைத்துக்கொண்டு சென்றுவிட்டனர்.

சூரியனும் தனது பயணத்தின் முடிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்; சந்தையைச் சுற்றிலும் இருந்த வெண்ணிற மாளிகைகளுக்குப் பின்னால் பொழுது மறையும் வரை இவன் பார்த்துக்கொண்டே இருந்தான். அன்றைய தினம் அதிகாலையில் அந்தச் சூரியன் உதித்த போது, அறுபது ஆடுகளுக்குச் சொந்தக்கார இடையனாக, வேறொரு கண்டத்தில், ஒரு பெண்ணைச் சந்திக்கப் போவதை எதிர்பார்த்தவனாக இருந்ததை நினைத்துக்கொண்டான். தனக்குப் பழக்கமான வயல்வெளியில் நடந்து திரிந்த அந்தக் காலை வேளையில் நடக்கப் போகிற ஒவ்வொன்றையும் தெரிந்தவனாக இருந்தான். ஆனால், இப்போது சூரியன் மறையப் போகிற இந்த வேளையில், வேறொரு தேசத்தில், புதிய பூமியில் புதிய ஆளாக, அந்த இடத்தின் மொழிகூட அறியாதவனாக இருக்கிறான். இப்போது இவன் இடையன் இல்லை, இவனிடம் எதுவும் இல்லை. திரும்பிப் போவதற்கோ, எல்லாவற்றையும் புதிதாகத் தொடங்குவதற்கோ பணமும் இல்லை.

சூரியன் உதித்து மறைவதற்குள் எல்லாமே நடந்து விட்டன என்று நினைத்தான். இவன் தன்னைத்தானே நொந்து கொண்டான். திடீரெனத் தனது வாழ்க்கை தலைகீழாகப் புரட்டப்பட்டுவிட்டதை நினைத்துப் புலம்பினான்.

அழவேண்டும் போல அவமானமாக இருந்தது. ஒருநாள் கூட இவன் தனது ஆடுகளுக்கு முன்னர் அழுதவனில்லை. ஆனால், இவன் இப்பொழுது வெறிச்சோடிப்போன சந்தையில், தனது சொந்த பூமியிலிருந்து வெகு தொலைவில் நின்றுகொண்டு அழுதான். இறைவன் இழைத்த அநீதியை நினைத்தும் தம்முடைய கனவுகளின்பால் நம்பிக்கை வைப்பவர்களுக்கு இறைவன் கொடுக்கிற பரிசினை நினைத்தும் அழுதான்.

என்னுடைய ஆடுகளுடன் இருந்தபோது சந்தோஷமாக இருந்தேன். சுற்றி இருந்தவர்களையும் சந்தோசப்படுத்தினேன். நான் வருவதைப் பார்த்தவர்கள் என்னை வரவேற்றார்கள். ஆனால் இப்போது தனிமையில் துயரத்துடன் இருக்கிறேன். ஒருத்தன் ஏமாற்றியதால் இனி ஒட்டுமொத்த ஜனங்களிடமும் வெறுப்புடனும் கசப்புணர்வுடனும் நடந்துகொள்ளப்போகிறேன். என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால் யாரேனும் புதையல் எடுத்தார்கள் என்று கேள்விப்பட்டால் அவர்களை வெறுக்கப்போகிறேன். உலகத்தில் வெற்றி பெற முடியாத அளவுக்குச் சிறுமைப்பட்டுப் போனதால் இருப்பதைக் கையில்

கெட்டியாகப் பிடித்துக்கொள்ளப் போகிறேன். ஏனென்றால் இப்போது என்னால் உலகை வெற்றிகொள்ள முடியாது.

மீதி ஏதாவது பையில் இருக்கிறதா என்று பார்க்கப் பையைத் திறந்தான். கப்பலில் தின்றது போக எஞ்சிய ரொட்டித்துண்டு இருக்குமென எண்ணினான். ஆனால், இருந்ததெல்லாம், கனமாக ஒரு புத்தகம், இவனுடைய மேலாடை, அந்தக் கிழவர் கொடுத்த இரண்டு கற்கள்.

கற்களைப் பார்த்தபோது, சற்று நிம்மதி ஏற்பட்டது. தங்கத் தால் ஆன நெஞ்சுப்பட்டையிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு கற்களுக்குப் பதிலாக ஆறு ஆடுகளைக் கொடுத்திருந்தான். அந்தக் கற்களை விற்றுவிட்டுத் திரும்பிப் போவதற்கான பயணச்சீட்டினைப் பெறவேண்டும். இம்முறை சுதாரித்துக் கொள்ள வேண்டும் என்று பலவாறு எண்ணமிட்டபடி, கற்களைச் சுருக்குப்பையிலிருந்து எடுத்துத் தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான். அது ஒரு துறைமுகப்பட்டினம்; துறைமுகப்பட்டி னங்களில் நிறைய திருடர்கள் இருப்பார்கள் என்பதுதான் இவனுடைய நண்பன் சொன்ன ஒரே ஒரு உண்மையான விஷயம்.

பானங்கள் விற்கும் கடைக்காரர் ஏன் அவ்வளவு பீதிய டைந்தவராக இருந்தார் என்பது இந்தப் பையனுக்கு இப்போது புரிந்தது. 'அவனை நம்பாதே' என்று சொல்ல அவர் முயன்றிருக்க வேண்டும். 'எல்லோரையும் போலத்தான் நானும் இருக்கிறேன். உலகம் உண்மையிலேயே எப்படி இருக்கிறது என்று பார்க்க முயலாமல், எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறேனோ அப்படி இந்த உலகம் இருப்பதாகப் பார்க்கிறேன்.'

அந்தக் கற்களின் மீது மெதுவாகத் தனது விரல்களை ஓட்டினான். அவற்றின் குளிர்ச்சியையும் மேற்பரப்பின் மென்மை யையும் உணர்ந்தான். இவனுடைய மொத்த சொத்துக்களே அவைதான், அவற்றைத் தடவிக்கொண்டிருப்பது இதமாக இருந்தது. கிழவர் ஞாபகத்துக்கு வந்தார்.

"நீ ஒன்றை விரும்பினால் அதனை அடைவதற்காக உதவும் வகையில் இந்த பிரபஞ்சமே திட்டம் தீட்டும்" என்று அவர் சொல்லியிருந்தார்.

கிழவர் சொன்ன விஷயத்தில் உள்ள உண்மையை உணர முயன்றான். ஜன சந்தடியில்லாத சந்தையில் இருந்தான்; தம்பிடிக் காசு கையில் இல்லை. இராப்பொழுதில் பாதுகாக்கப்பட வேண்டிய ஆடுகளும் இல்லை. ஒரு இராஜாவைச் சந்தித்ததற்குச் சாட்சியாக அந்தக் கற்கள் மட்டும் இருந்தன; இந்தப் பையனின் பழைய கதையைத் தெரிந்திருந்த ராஜா.

“இவை ‘யுரிம் – தும்மிம்’ எனப்படுபவை; சகுனங்களைத் தெரிந்துகொள்ள உனக்கு உதவும்.” சுருக்குப்பைக்குள் அந்தக் கற்களைத் திரும்பவும் போட்டு சோதித்துப் பார்ப்பதென்று தீர்மானித்தான். தெளிவான கேள்விகளையே கேட்க வேண்டும் என்று கிழவர் சொல்லியிருந்தார். அப்படியென்றால் தனக்கு வேண்டியதை இவன் குறிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே, அந்தக் கிழவருடைய ஆசீர்வாதம் தற்பொழுதும் இவனுக்கு உண்டா என்று கேட்டான்.

கற்களில் ஒன்றை வெளியே எடுத்தான், “ஆம்” என்பதைக் குறிக்கும் கறுப்புக்கல்.

“தேடுகிற புதையலைப் பெறுவேனா?” என்றபடி பைக்குள் கையைவிட்டு கற்களில் ஒன்றைத் தொடமுயன்றான். அப்போது பையிலிருந்த துவாரம் வழியாக இரண்டு கற்களும் வெளியே விழுந்துவிட்டன. பையில் துவாரம் இருந்ததை அதுவரை இவன் அறிந்திருக்கவில்லை. யுரிம் – தும்மிம் கற்களைத் தேடி எடுத்துப் பைகளில் போட்டுக்கொள்ளலாம் என்று கீழே குனிந்தான். ஆனால், தரையில் கிடந்த கற்களைப் பார்த்த போது இவனுக்கு இன்னொரு செய்தி நினைவுக்கு வந்தது.

“சகுனங்களின் பலன்களை அறியக் கற்றுக்கொள்; அவற்றின்படி நட” என்று அந்தக் கிழட்டு ராஜா சொல்லியிருந்தார்.

சகுனம்! தனக்குள் சிரித்துக்கொண்டான்: கற்களை எடுத்து மீண்டும் சுருக்குப்பைக்குள் போட்டுக்கொண்டான். பையைத் தைக்க வேண்டுமென்று நினைக்கவில்லை, விரும்பும்போது எப்போது வேண்டுமானாலும் கற்கள் விழுந்துவிடலாம். ஒருவன் தன் இலக்கிலிருந்து தப்பி ஓடிவிடாமல் தடுப்பதற்காகக் கேள்வி கேட்கப்படக்கூடாத விஷயங்கள் சில இருக்கத்தான் செய்கின்றன என்பதை இவன் தெரிந்து வைத்திருந்தான். “என்னுடைய முடிவுகளை நானே எடுப்பதென உறுதி பூண்டிருக்கிறேன்” என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

ஆனாலும், அந்தக்கிழவர் அப்பொழுதுகூட இவனுடன் தான் இருப்பதாக அந்தக்கற்கள் சொன்னது மேலும் நம்பிக்கை யூட்டியது. ஆள் அரவமற்ற சந்தையை மீண்டும் சுற்றிப் பார்த்தான். கவலை கொஞ்சம் குறைந்திருந்தது. அது புதிய இடம்தான்; புதுமையானதல்ல.

சொல்லப்போனால், இவன் எப்போதுமே பிரியப்பட்ட விஷயமும் அதேதான். புதிய இடங்களைப் பார்ப்பது. பிரமிடுகளைப் பார்க்காவிட்டால்கூட, இவனுக்குத் தெரிந்தவரை மற்ற இடையர்களைக் காட்டிலும் இவன் வெகுதூரம் பயணித்துவிட்டான். ஓ! அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து இரண்டு

மணி நேரக் கப்பல் பயண தூரத்தில் அத்துணை வித்தியாச மான விஷயங்கள் இருக்குமென்று அவர்களுக்குத் தெரியாமல் போயிற்றே என்று இவன் ஆதங்கப்பட்டான். அந்தத் தருணத் தில் இவனுடைய புதிய உலகம் ஆள் அரவமற்ற சந்தைப்பகுதி யாக இருந்தபோதிலும் அது உயிர்த்துடிப்போடு இயங்கிக் கொண்டிருந்ததை இவன் ஏற்கனவே பார்த்துவிட்டான். அதனை எப்பொழுதும் மறக்க மாட்டான். அந்த வாளை நினைத்துக் கொண்டான். நினைத்தபோது, இலேசாக எங்கோ வலித்தது, ஆனாலும், அதனைப் போன்ற வாளை அதுவரை அவன் பார்த்ததில்லை. அந்த விஷயங்களையெல்லாம் அசை போட்டுக் கொண்டிருந்தபோது, திருடன் ஒருவனிடம் பலியாகிப் போன வறியவனாகத் தன்னை நினைத்துக் கொள்வதா அல்லது புதை யலைத் தேடிப் புறப்பட்ட சாகச வீரனாகவா என்ற இரண்டில் ஒன்றைத் தீர்மானிக்க வேண்டியிருந்ததையும் உணர்ந்தான்.

"நானொரு புதையலைத் தேடும் சாகசவீரன்" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

✧

சந்தைப் பகுதியின் மத்தியிலேயே அயர்ந்து தூங்கிக்கொண் டிருந்த அவனை யாரோ உலுக்கி எழுப்பினான். அப்பொழுது தான் சந்தை மீண்டும் உயிர்த்தெழத் தொடங்கியிருந்தது.

சுற்றிலும் மலங்க, மலங்கப் பார்த்தவன் தன் ஆடுகளைத் தேடினான். பிறகுதான் தானொரு புதிய உலகில் இருப்பதை உணர்ந்தான்; வருத்தப்படுவதற்குப் பதிலாக சந்தோஷப்பட் டான். இனிமேல், ஆடுகளுக்குப் புல்லும், நீரும் தேடவேண்டிய தில்லை. அதற்குப் பதிலாக, புதையலைத் தேடிப் போகலாம். பையிலே தம்பிடிக் காசு இல்லை; ஆனால் நம்பிக்கை இருந்தது. புத்தகங்களில் வியந்து பார்த்த சாகசவீரர்களுள் ஒருவனாகவே தானும் ஆகிவிடுவதென முந்தைய இரவே முடிவு செய்திருந்தான்.

சந்தை வழியே மெதுவாக நடந்தான். வியாபாரிகள் தங்கள் கடைகளை அமைத்துக்கொண்டிருந்தனர். ஒரு மிட்டாய் வியாபாரிக்கு அந்த வேலையில் ஒத்தாசை செய்தான். அந்த மிட்டாய்க்காரரின் முகத்தில் புன்னகை நிலைத்திருந்தது. அவர் மிகவும் மகிழ்ச்சியாகவும், தனது வாழ்க்கை இன்னதென்பதில் தெளிவானவராகவும், அன்றைய பணியைத் துவங்க ஆயத்த மானவராகவும் இருந்தார். அவருடைய புன்னகை இவனுக்கு அந்தக் கிழவரை, அந்தப் புதிரான கிழட்டு ராஜாவை நினைவு படுத்தியது. 'இந்த மிட்டாய்க்காரர் பிற்காலத்தில் தொலைதூரப் பயணம் செய்வதற்காகவோ, ஒரு கடைக்காரரின் மகளை மணந்துகொள்வதற்காகவோ மிட்டாய்களைச் செய்யவில்லை;

இந்தத் தொழில் அவருக்குப் பிடித்திருக்கிறது ... ஆகவே, அதைச் செய்கிறார்' என்று இவன் நினைத்துக்கொண்டான், அந்தக் கிழவர் செய்த அதே செயலைத் தானும் செய்யக்கூடும் என்பதை உணர்ந்தான். ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் அவர் தனது இலக்கிற்கு அருகாமையில் இருக்கிறாரா அல்லது தொலைவில் இருக்கிறாரா என்பதை உணர்வது எளிதானது. நான்தான் இதற்கு முன்னால் அதைச் செய்து பார்க்கவில்லை என்று நினைத்துக்கொண்டான்.

கடையை அமைத்தவுடன், தான் செய்த முதல் மிட்டாயைக் கடைக்காரர் பையனிடம் தந்தார். நன்றி சொல்லிவிட்டு அதைத் தின்றான்; நடையைக் கட்டினான். சிறிதுதூரம் சென்ற போது, இவனுள் ஒரு பொறி தட்டியது. கடையைத் திறந்து வைக்கும் பணியில் இருந்தபோது அவர்கள் இருவரில் ஒருவர் அரபு மொழியிலும், மற்றவர் ஸ்பானிய மொழியிலும் பேசிக்கொண்டதை உணர்ந்தான்.

எனினும் ஒருவரை ஒருவர் நன்றாகவே புரிந்துகொண்டார்கள்.

'வார்த்தைகளை மட்டுமே சார்ந்திராத மொழி ஒன்று உண்டு' என்று இவன் நினைத்தான். அந்த அனுபவம் இவனுக்கு ஏற்கனவே இருந்தது – ஆடுகளுடன் நேர்ந்ததுண்டு; தற்போது மனிதர்களுடனும் அது சாத்தியப்படும்.

ஏராளமான புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறான். அவற்றுள் சில இவன் ஏற்கனவே அறிந்திருந்தவைதாம்; உண்மையில் புதியவை அல்ல; இவன் அதற்கு முன்னால் உணர்ந்துகொள்ளாதவை. அவற்றை உள்வாங்கிக்கொள்ளாமைக்கு இவன் அவற்றிற்குப் பழகிப்போயிருந்ததுதான் காரணம். வார்த்தைகள் சாராத அந்தப் புதிய மொழியைப் புரிந்துகொள்ளக் கற்றுக்கொள்ளும் பட்சத்தில் இந்த உலகத்தையே புரிந்துகொள்ளக் கற்றுக்கொள்ளக்கூடும் என்பதை உணர்ந்தான்.

நிம்மதியாக, பதற்றமில்லாமல், தான்ஜியரின் குறுகிய வீதிகளில் நடைபோட உறுதிபூண்டான். அப்போதுதான் இவனால் சகுனங்களின் பயன்களைத் தெரிந்துகொள்ளக்கூடும். அதற்கு நிறையவே பொறுமை தேவை என்பதும் இவனுக்குத் தெரியும், இடையர்களுக்குப் பொறுமையைப் பற்றி நன்கு தெரியும். அந்த விசித்திர பூமியிலும் ஆடுகளிடமிருந்து கற்ற அதே படிப்பினையைத் தான் பிரயோகிப்பதைக் கவனித்தான்.

"எல்லாமே ஒன்றுதான்" என்று அந்தக்கிழவர் சொல்லியிருந்தார்.

புலர்ந்த பொழுதோடு அந்தப் பளிங்கு வியாபாரியும் விழித்துக் கொண்டார். ஒவ்வொரு நாளும் ஏற்படுகிற அதே பதற்றத்தை உணர்ந்தார். வாடிக்கையாளர்கள் மிக அரிதாகக் கடந்து செல்லக்கூடிய மலைஉச்சி வீதியில் ஒரு கடை வைத்துக்கொண்டு முப்பது வருடங்களாக ஒரே இடத்தில்தான் இருந்தார். மாற்றிக் கொள்வதற்கு இப்போது காலம் கடந்துவிட்டது. அவருக்குத் தெரிந்த ஒரே விஷயம் பளிங்குக் கண்ணாடிச் சாமான்களை வாங்கி விற்பது. அவருடைய கடைக்கு மக்கள் நிறையப்பேர் வந்து போன காலம் ஒன்று இருந்தது. அரபிய வியாபாரிகள், பிரெஞ்சு மற்றும் ஆங்கிலப் புவியியலாளர்கள், ஜெர்மானிய வீரர்கள் என்று எல்லோருமே பெரிய மனிதர்கள். அந்தக் காலத்தில் பளிங்கு வியாபாரம் என்பது ஆச்சரியமானதாக இருந்தது. தான் ஒரு பெரும் பணக்காரனாகிவிடலாம்; வயதான போது தன்னருகில் அழகிய பெண்களை வைத்துக்கொள்ளலாம் என்றெல்லாம் அவர் நினைத்ததுண்டு.

ஆனால், காலப்போக்கில் தான்ஜியர் மாறிவிட்டது. அருகிலுள்ள நகரம் கியூட்டா, தான்ஜியரைக் காட்டிலும் வேக மாக வளர்ந்துவிட்டதால் வியாபாரம் படுத்துவிட்டது. அண்டை அயலாரெல்லாம் இடம் பெயர்ந்துவிட்டனர். மலைமீது ஒரு சில கடைகள் மட்டுமே எஞ்சியிருந்தன. அங்கிருந்த அந்தக் கடைகளைத் தேடி மலை ஏறிச் செல்பவர்கள் யாருமில்லை.

பளிங்கு வியாபாரிக்கு வேறு வழியில்லை. முப்பது ஆண்டு களாகப் பளிங்குச் சாமான்களை வாங்கி விற்று வாழ்க்கையைக் கடத்திவிட்டார். வேறு எதையும் புதிதாகச் செய்வதென்பது தற்போது அவரால் ஏலாது.

அந்த வீதியில் எப்போதாவது வந்து போகிற சிலரைக் கவனித்துக்கொண்டிருப்பதிலேயே காலை நேரம் முழுவதையும் கழித்துவிடுவார். அதைத்தான் அவர் வருஷக்கணக்கில் செய்து கொண்டிருந்தார். கடந்து செல்வோர் ஒவ்வொருவரின் போக் கையும் அவர் அறிவார். ஆனால், மதிய உணவு வேளைக்குச் சற்று முன்பாக ஒரு பையன் கடை எதிரே நின்றான். சாதாரண உடை அணிந்திருந்தான். பளிங்கு வியாபாரியின் பயிற்சிபெற்ற கண்களுக்கு அவனிடம் பணம் ஏதுமில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. இருந்தபோதிலும், அவன் கடந்து செல்லும் வரை ஒரு சில நிமிஷங்கள் தனது மதிய உணவைத் தள்ளிப் போடத் தீர்மானித்தார்.

✧

கதவில் தொங்கவிடப்பட்டிருந்த அட்டை அந்தக்கடையில் பல மொழிகள் பேசப்படும் என்பதை அறிவித்தது. கல்லாவுக்குப் பின்னால் ஒரு மனிதர் நிற்பதைப் பையன் பார்த்தான்.

"நீங்க விருப்பப்பட்டால், அந்த ஜன்னலில் உள்ள கண்ணாடி சாமான்களையெல்லாம் நான் துடைத்து வைக்கிறேன்" என்று இவன் சொன்னான். "இப்போ இருக்கிற நிலையில் யாருமே அவற்றை வாங்குவதற்குப் பிரியப்படமாட்டார்கள்."

அவர் இவனைப் பார்த்தார். பதிலேதும் சொல்லவில்லை.

"அதற்குக் கூலியாக ஏதேனும் சாப்பிடக் கொடுத்தால் போதும்."

அப்போதும் அவர் எதையும் பேசவில்லை. அவர் ஒரு முடிவுக்கு வரப் போகிறார் என்பதைப் பையன் உணர்ந்து கொண்டான். இவனுடைய கைப்பையில் மேலாடை இருந்தது. அந்தப் பாலைவனத்தில் அது இவனுக்குத் தேவைப்படப் போவதில்லை. மேலாடையை வெளியே எடுத்துக் கண்ணாடி சாமான்களைத் துடைக்கத் துவங்கினான். அரைமணி நேரத்திற்குள் ஜன்னலில் இருந்த எல்லாச் சாமான்களையும் சுத்தம் செய்துவிட்டான். இவன் சுத்தம் செய்துகொண்டிருந்த போதே கடைக்குள் இரண்டு வாடிக்கையாளர்கள் நுழைந்து சில கண்ணாடிப் பொருட்களை வாங்கினர்.

துடைத்து முடித்தபின்பு அவரிடம் சாப்பிட ஏதேனும் தரும்படி கேட்டான். "நாம ஹோட்டலுக்குப் போய் மதியச் சாப்பாடே சாப்பிடலாம்" என்று பளிங்கு வியாபாரி சொன்னார்.

கதவில் அட்டை ஒன்றை மாட்டிவிட்டு அருகிலிருந்த சிறிய உணவகத்திற்குச் சென்றனர். அங்கே கிடந்த ஒரே ஒரு மேஜையில் அவர்கள் அமர்ந்ததும் பளிங்கு வியாபாரி சிரித்தார்.

"நீ துடைத்திருக்க வேண்டும் என்பதுகூட அவசியமில்லை" என்றார் அவர். "திருக்குரான்படி பசித்தவனுக்கு நான் சாப்பாடு போட்டாக வேண்டும்."

"சரி, பிறகு ஏன் என்னைச் செய்யவிட்டீர்கள்" என்று இவன் கேட்டான்.

"ஏன்னா, பளிங்கு சாமான்கள் அழுக்காக இருந்தன. அத்தோடு நாம் இருவருமே கோணல் புத்திகொண்ட நமது மனதைச் சுத்தப்படுத்த வேண்டியிருந்தது."

சாப்பிட்டு முடித்ததும் அந்த வியாபாரி பையன் பக்கம் திரும்பிச் சொன்னார்: "நீ என் கடையிலே வேலை பாரேன். இன்றைக்கு நீ வேலை செய்தபோது இரண்டு பேர் சாமான் வாங்க வந்தாங்க; இது ஒரு நல்ல சகுனம்."

சகுனத்தைப் பற்றி ஜனங்கள் ரொம்பத்தான் பேசுகிறார்கள் என்று பையன் நினைத்துக்கொண்டான். ஆனால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது உண்மையாக அவர்களுக்கே தெரியாது. வார்த்தைகளே இல்லாத ஒரு மொழியைப் பல வருடங்களாக ஆடுகளோடு பேசிக்கொண்டிருந்தேன் என்பதை நானே உணரவில்லையே.

"என்னிடம் வேலை பார்க்கப் போகிறாய் அல்லவா?" என்று வியாபாரி கேட்டார். "இன்றைக்கு மீதிநேரம் முழுவதும் வேலை பார்க்கிறேன். ராத்திரி பூராவும் விடியவிடிய வேலை செய்து உங்க கடையில் இருக்கிற எல்லாக் கண்ணாடிச் சாமான்களையும் துடைத்து வைத்துவிடுகிறேன். அதற்குப் பதிலாக, நாளைக்கு எகிப்துக்கு போறதுக்கான பணம் எனக்குத் தேவை" என்று பதில் சொன்னான்.

வியாபாரி நகைத்தார். "ஒரு வருஷம் முழுவதும் கண்ணாடிச் சாமான்களைத் துடைத்து வைத்தாலுங்கூட, எல்லாச் சாமான்களையும் விற்று நல்ல கமிஷன் சம்பாதித்தாலுங்கூட எகிப்துக்குப் போவதற்கு மேற்கொண்டு கடன்தான் வாங்க வேண்டும். இந்த இடத்திற்கும் அந்த நாட்டிற்கும் இடையிலே ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் பாலைவனமாகக் கிடக்கின்றது."

அந்தப் பட்டினமே தூங்கிப்போனதுபோல் ஓர் ஆழ்ந்த அமைதி ஒருகணம் நிலவியது. கடைத்தெருக்களிலே எவ்வித அரவமும் இல்லை; வியாபாரிகளிடையே பேரம் பேசும் கூச்சலில்லை; கோபுரங்களின் மீதேறி வாங்கொலிப்போர் யாருமில்லை; நம்பிகையாவது, சாகசச் செயலாவது, கிழட்டு ராஜாவாவது, பிரமிடுகளாவது! உலகே அமைதியில் ஆழ்ந்து விட்டது போலத் தோன்றியது; காரணம், பையனின் ஆன்மா ஸ்தம்பித்துவிட்டது. அங்கே அமர்ந்தபடி உணவகத்தின் கதவு வழியே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்; செத்துப் போய்விடலாம் போலிருந்தது. அந்த ஒரு கணத்தில் எல்லாமே நிரந்தரமாக முற்றுப்பெற்று விட்டது போலத் தோன்றியது.

வியாபாரி இவனைக் கவலையுடன் பார்த்தார். அன்று காலையில் அவர் அடைந்த அத்தனை சந்தோஷமும் திடுமென மறைந்துவிட்டது.

“உன்னுடைய நாட்டுக்குத் திரும்பிப் போவதற்குத் தேவையான பணத்தை நான் கொடுக்கிறேன், மகனே” என்றார் பளிங்கு வியாபாரி.

இவன் ஒன்றும் பேசவில்லை. எழுந்தான்; தனது ஆடையைச் சரி செய்துகொண்டான்; பையை எடுத்துக்கொண்டான்.

“உங்களிடம் வேலை செய்கிறேன்” என்றான்.

நீண்ட இன்னொரு அமைதிக்குப்பிறகு மேலும் சொன்னான்: “சில ஆடுகளை வாங்குவதற்கு எனக்குப் பணம் தேவை.”

பையன் பளிங்கு வியாபாரியிடம் கிட்டத் தட்ட ஒரு மாத காலம் வேலை பார்த்தான். அது தனக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய வகையில் சரியானதொரு வேலையாக இல்லை என்பதைக் கண்டுகொண்டான். அந்த வியாபாரி கல்லாப் பெட்டிக்கு அருகில் தொணதொணத்துக்கொண்டே பொழுதைப் போக்கினார்; சாமான்களைக் கவன மாகக் கையாள வேண்டும், உடைத்துவிடக்கூடாது என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

ஆனாலும் இவன் அந்த வேலையில் ஒட்டிக் கொண்டிருந்தான். ஏனென்றால், அந்த வியாபாரி கிழட்டுப் புலம்பல் பேர்வழியாக இருந்த போதி லும் இவனிடம் நியாயமாக நடந்துகொண்டார். விற்கிற ஒவ்வொரு பொருளுக்கும் நல்ல கமிஷன் கிடைத்தது. இவன் ஏற்கனவே கொஞ்சம் பணம் சேமித்துவிட்டான். அன்று காலையில் கணக்குப் போட்டுப் பார்த்தான்: இதே போலத் தொடர்ந்து தினமும் வேலை பார்த்தாலும் ஒரு சில ஆடுகளை வாங்குவதற்குக்கூட ஒரு முழு வருஷம் பிடிக்கும்.

பளிங்குச் சாமான்களை எல்லாம் அலங்கார மாக அடுக்கி வைக்க ஒரு அடுக்கு செய்ய விரும்பு வதாக அவன் வியாபாரிடம் சொன்னான். “அதை நாம் வெளியில் வைக்கலாம்; மலை அடிவாரத்தில் செல்லும் மக்களைக் கவர்ந்து இழுக்கும்.”

“அப்படி எதையும் இதுவரை நான் வைத்த தில்லையே; கடந்து செல்லும் மக்கள் அதன் மீது மோதி சாமான்களை உடைத்துவிடுவார்கள்” என்றார் வியாபாரி

“அதுசரி! நான்கூட வயல் வெளியில் ஆடு களை ஓட்டிக்கொண்டு சென்ற சமயங்களில் ஏதேனும் பாம்பு தீண்டி சில ஆடுகள் செத்துக்கூடப்

போயிருக்கலாம். ஆனாலும், அதுதானே ஆட்டு இடையரின் வாழ்க்கை முறை.”

மூன்று பளிங்குக் குடுவைகளைக் கேட்ட வாடிக்கையாளர் ஒருவரை வியாபாரி கவனித்துக்கொண்டிருந்தார். தான்ஜியரின் பிரதான வசீகரங்களில் ஒன்றாக அந்தத் தெரு இருந்த பழைய காலம் திரும்பிவிட்டதைப் போல முன்னெப்போதைக் காட்டிலும் விற்பனை நன்றாகவே நடந்தது.

வாடிக்கையாளர் சென்ற பின்னர் வியாபாரி கூறினார்: “வியாபாரம் உண்மையிலேயே விருத்தியாயிருக்கிறது. நான் ரொம்பவே நல்லா இருக்கேன். நீ உன்னுடைய ஆடுகளோடு சீக்கிரமே போய்விடலாம். வாழ்க்கையில் வேறென்ன வேண்டும்?”

“ஏனென்றால், நாம் சகுனங்கள் சொல்கிறபடி நடக்க வேண்டும்” என்றான். என்ன சொல்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ளாமலேயே அப்படிச் சொன்னதற்காக வருத்தப் பட்டான். ஏனென்றால், வியாபாரி அந்தக் கிழட்டு ராஜாவை ஒருபோதும் சந்தித்திருக்க மாட்டார்.

“இதைத்தான் ‘சாதகத் தத்துவம்’ என்று சொல்கிறார்கள்; தொடக்காளி அதிர்ஷ்டம்; ஏனென்றால், உன்னுடைய விதியை நீ அடைந்தே தீர வேண்டும் என்று வாழ்க்கை விரும்புகிறது” என்று கிழ ராஜா சொல்லியிருந்தார்.

ஆனாலும் அந்த வியாபாரி இவன் சொன்னதைப் புரிந்து கொண்டார். பையன் அந்தக் கடையில் இருப்பதே நல்ல சகுனம்தான். காலப்போக்கிலே பணம் கல்லாவில் கொட்டிக் கொண்டிருந்ததால் இவனை வேலைக்கு அமர்த்தியதில் அவருக்கு எவ்வித வருத்தமும் இல்லை. உரியதைக் காட்டிலும் அதிகமாகவே இந்தப் பையனுக்குப் பணம் கிடைத்தது. ஏனென்றால் அந்த வியாபாரி விற்பனை அவ்வளவு அதிகமாக இருக்காது என்று நினைத்து கமிஷன் விகிதத்தை உயர்த்திச் சொல்லியிருந்தார். ஆடுகளோடு கூடிய சீக்கிரத்திலேயே இவன் திரும்பிப் போய்விடுவான் என்பது அவரது நம்பிக்கை.

அலங்கார அடுக்கு என்கிற சிந்தனையிலிருந்து திசை திருப்புவதற்காக அவர் கேட்டார்: “பிரமிடுகளுக்குச் செல்ல ஏன் விருப்பப்பட்டாய்?”

தன்னுடைய கனவைப் பற்றி எதுவும் சொல்லாமலேயே பையன் “அவைகளைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன்” என்றான். புதையல் என்பது இப்போது வேதனைக்குரிய நினைவு என்றாகி விட்டது. அதைப்பற்றிய எண்ணத்தையே தவிர்க்க முயன்றான்.

வியாபாரி சொன்னார்: வெறுமனே பிரமிடுகளைப் பார்ப்பதற்காக இந்தப் பாலைவனத்தைக் கடக்க விரும்பும் நபர் இந்தப் பக்கத்தில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அவை வெறும் கல்குவியல்கள்; உன் வீட்டுக் கொல்லையில் நீ கூட அப்படி ஒன்றைக் கட்டிக்கொள்ளலாம்."

அப்பொழுது கடைக்குள் நுழைந்த வாடிக்கையாளரைப் பார்த்துத் திரும்பிக்கொண்டே பையன் சொன்னான்: "நீர் பயணம் செய்வது போல் ஒருபோதும் கனவு கண்டிருக்க மாட்டீர்."

இரண்டு நாட்களுக்குப் பின்னர் அலங்கார அடுக்கு வைப்பதைப் பற்றி கடைக்காரர் இவனிடம் பேசினார்.

"நான் அவ்வளவாக மாற்றத்தை விரும்புகிறவனில்லை. நீயோ நானோ அந்தப் பணக்கார வியாபாரி ஹாசனைப் போன்றவர்களல்ல. வியாபாரத்தில் அவர் ஏதேனும் தப்பு செய்தால் அவ்வளவாக அவரைப் பாதிக்காது. ஆனால், நம்ம இரண்டு பேரின் பிழைப்பும் தப்பாகவே போய்விடும்."

அதுவும் உண்மைதான் என்று பையன் வெறுப்போடு எண்ணிக்கொண்டான்.

"பளிங்குகளை அலங்காரமாக அடுக்கி வைக்க வேண்டும் என்று ஏன் நினைக்கிறாய்?"

"நான் என்னுடைய ஆடுகளுடன் விரைவாகத் திரும்பிச் செல்ல விரும்புகிறேன். அதிர்ஷ்டம் நம்ம பக்கம் இருக்கும் போதே அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அது நமக்கு ஒத்தாசை செய்யும் அளவுக்கு நாமும் ஒத்துழைக்க வேண்டும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். 'தொடக்காளி அதிர்ஷ்டமும்' அதுதான்."

கடைக்காரர் சில கணங்கள் மௌனமாக இருந்தார். பிறகு சொன்னார்: "இறைத்தூதர் எங்களுக்குத் திருக்குரானைக் கொடுத்தார். வாழ்க்கையிலே நிறைவேற்றப்பட வேண்டிய ஐந்து கட்டளைகளையும் விட்டுச் சென்றார். அவற்றுள் ரொம்ப முக்கியமானது ஒரே உண்மையான கடவுள் மீது நம்பிக்கை வைப்பது. ஏனையவை: ஒரு நாளைக்கு ஐந்துமுறை தொழுதல்; ரமலான் நோன்பு இருத்தல்; ஏழைகளுக்கு உதவுதல்."

அந்த இடத்தில் நிறுத்திக்கொண்டார். இறைத்தூதரைப் பற்றிப் பேசியபோது அவருடைய கண்களில் கண்ணீர் ததும்பியது. அவர் ஒரு பக்திமான். என்னதான் பொறுமையற்றவராக இருந்த போதிலும், தன்னுடைய வாழ்க்கையை இஸ்லாத்தின் படி வாழ்வதையே பெரிதும் விரும்பினார்.

பையன் கேட்டான்: "ஐந்தாவது கட்டளை என்ன?"

வியாபாரி பதில் சொன்னார்: "இரண்டு நாளைக்கு முன்னால் பயணம் செய்வதைப் பற்றி நான் கனவுகூடக் கண்டிருக்க மாட்டேன் என்று நீ சொன்னாய். ஒவ்வொரு முஸ்லீமின் ஐந்தாவது கட்டளையாக இருப்பது புனித யாத்திரை மேற்கொள்வதுதான்; வாழ்க்கையில் ஒரு முறையாவது புனித ஸ்தலமான மெக்காவுக்குப் போய் வரவேண்டியது எங்களுடைய கடமை.

"பிரமிடுகளைக் காட்டிலும் ரொம்ப தூரத்தில் இருக்கிறது மெக்கா. என்னுடைய இளம் வயதில் இந்தக் கடையைத் துவங்குவதற்கான பணத்தைச் சேர்ப்பது மட்டுமே என்னுடைய ஒரே ஆசையாக இருந்தது. என்றேனும் ஒருநாள் பணக்காரனாகி விடுவோம்; மெக்காவுக்குப் போக முடியும் என்று நினைத்திருந்தேன். கொஞ்சம் பணமும் சேர்க்க ஆரம்பித்தேன். ஆனாலும், கடையைப் பொறுப்பாக விட்டுவிட்டுப் போவதற்கு யாருமே கிடைக்கவில்லை. பளிங்குச் சாமான்கள் எல்லாம் நுட்பமான பொருட்கள் அல்லவா! அதே சமயம் மெக்காவுக்குச் செல்கிற எத்தனையோ பேர் என் கடைவழியாகப் போயிருக்கிறார்கள். அவர்களில் சில பேர் பணம் படைத்த யாத்ரீகர்கள். ஒட்டக வண்டிகளில் வேலையாட்களோடு போவார்கள். ஆனால், யாத்திரை செல்பவர்களில் பெரும்பாலானவர்கள் என்னை விட ஏழைகள்.

"அங்கே சென்று வந்தவர்கள் எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்கள். யாத்திரை சென்று வந்ததற்கான சின்னங்களைத் தமது வீட்டுக் கதவுகளில் ஒட்டி வைத்துக்கொள்கிறார்கள். அவர்களில் ஒரு ஆள் செருப்புத் தைக்கும் தொழிலாளி. பாலைவனம் வழியாகவே ஒரு வருஷம் பயணம் செய்ததாகவும், ஆனாலும், அதைவிட தான்ஜியர் வீதிகளில் தோல் வாங்குவதற்காக அலையும் போதுதான் அதிகக் களைப்படைவதாகவும் சொல்கிறார்."

"அது சரி, இப்பொழுது நீங்கள் ஏன் மெக்காவுக்குப் போகக் கூடாது?"

"ஏனென்றால், மெக்காவைப் பற்றிய எண்ணந்தான் என் உயிரைப் பிடித்து நிறுத்திக்கொண்டிருக்கிறது. பகலும் ராத்திரியும் அந்த நினைப்பு ஒன்றுதான் ஒரே மாதிரியான சலித்துப் போன வாழ்க்கையையும், அடுக்குகளில் உள்ள பளிங்கு ஜடங்களையும், கொடுமையான அந்த ஒரே கடைச் சாப்பாட்டையும் சகித்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கிறது. அந்தக் கனவும் நிறைவேறிவிட்டால் நான் உயிர் வாழ்வதற்கே தேவையில்லாமல் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறது.

"ஆடுகளைப் பற்றியும் பிரமிடுகளைப் பற்றியும் நீயும் கனவு காண்கிறாய்; ஆனாலும் நீ என்னிலிருந்து வேறுபட்டவன். ஏனென்றால், நீ உன்னுடைய கனவுகளை அடைய ஆசைப்படு கிறாய். எனக்கு மெக்காவைப்பற்றி நினைத்துக்கொண்டு இருந்தாலே போதும். ஏற்கனவே பாலைவனத்தைக் கடந்து சென்றது போலவும் புனிதக் கல் நடப்பட்டிருக்கிற சதுக்கத்தை அடைந்தது போலவும் அதை தொடுவதற்கு முன்னால் ஏழு முறை சுற்றிவந்தது போலவும் தொழும்போது எனக்குப் பக்கத்திலும் எனக்கு முன்பாகவும் யார் யார் இருக்கவேண்டும், தொழுகையைப் பற்றியும் பிற விஷயங்களைப் பற்றியும் அவர்களிடம் என்னவெல்லாம் பேச வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் ஏற்கனவே கற்பனை பண்ணிப் பார்த்து விட்டேன். இந்த விருப்பம் நிறைவேறாமல் ஏமாந்து போவேனோ என்று பயமாக இருப்பதால், அதைப்பற்றி கனவு காண்பதை மட்டுமே ரொம்ப விரும்புகிறேன்."

அன்றைக்குக் கடைக்காரர் அலங்கார அடுக்கு வைப் பதற்குப் பையனுக்கு அனுமதி அளித்தார். கண்ட கனவுகளைக் கண்டது போலவே நிறைவேற்றிக்கொள்ள எல்லோராலும் இயலுவதில்லை.

✧

மேலும் இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டன. அலங்கார அடுக்கு மேலும் பல வாடிக்கையாளர்களைப் பளிங்குக் கடைக்குள் ஈர்த்தது. பையன் கணக்குப் போட்டுப் பார்த்தான். இன்னும் ஆறுமாதங்கள் வேலைபார்த்தால் ஸ்பெயினுக்குத் திரும்பும்போது அறுபது ஆடுகள் வாங்கிவிடலாம்; அதன்பிறகு மேலும் அறுபது. ஆக, ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்தில், இவனுடைய மந்தை இரண்டு மடங்காகப் போகிறது. அரேபியர்களோடு வியாபாரம் செய்யலாம். ஏனெனில், அவர்களுடைய புதுமையான மொழியை இவனால் இப்போது பேசமுடியும். அன்றொரு நாள் காலையில் சந்தையில் தனித்து நிற்கும்போது தொட்டதற்குப் பிறகு 'யூரிம் – தும்மிம்' கற்களை ஒருபோதும் பயன்படுத்தியதில்லை. ஏனென்றால், அந்தக் கடைக்காரருக்கு மெக்கா எப்படி எட்டாத தூரமாக இருந்ததோ அதைப்போல ஆகிவிட்டது இவனுக்கு எகிப்து. எது எப்படி யிருந்தாலும், இவனுக்கு அங்கு வேலைபார்ப்பது சந்தோஷ மாகவே இருந்தது. வெற்றியாளனாகத் தாரிபாவுக்குக் கப்பல் ஏறிவிடலாம் என்பதையே எந்த நேரமும் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

'நீ விரும்புவது என்ன என்பதை எப்பொழுதுமே அறிந் திருக்க வேண்டும்' என்று கிழட்டு ராஜா சொல்லியிருந்தார்.

இவனும் அறிந்துகொண்டான். அதற்காகவே உழைத்துக் கொண்டிருந்தான். அந்த விசித்திர பூமியில் இவனுடைய புதையல் வேண்டுமானால் முடிந்த கதையாகியிருக்கலாம்; ஒரு திருடனை எதிர்கொள்ள நேர்ந்திருக்கலாம்; ஆனால், ஒரு பைசா செலவழிக்காமல் இவனுக்கு இருமடங்கு மந்தை கிடைக்கப் போகிறதே!

பெருமையாகத்தான் இருந்தது; பளிங்கு வியாபாரம் செய்வது எப்படி என்பதுபற்றி – வார்த்தைகளில்லாத மொழியைப் பற்றி – சகுனங்களைப்பற்றி – இப்படி முக்கியமான விஷயங்களைக் கற்றுக்கொண்டுவிட்டான். ஒரு நாள் மதியம் மலைஉச்சிக்கு வந்த ஒரு ஆள் குறைபட்டுக்கொண்டதைக் கவனித்தான். 'கஷ்டப்பட்டு ஏறி வந்தால், குடிப்பதற்கு ஏதாவது கிடைக்கிற மாதிரி ஒரு நல்ல இடம்கூட இங்கே இல்லையே.' சகுனங்களை உணர்ந்துகொள்ளப் பழகிப்போனதால், இந்தப் பையன் கடைக்காரரிடம் பேசினான்:

"மலை ஏறி வருகிற மக்களுக்குத் தேநீர் விற்கலாமே."

"இங்கே சுற்றிலும் தேநீர் விற்கும் கடைகள் நிறைய இருக்கின்றன" என்று கடைக்காரர் சொன்னார்.

"ஆனாலும், நாம் பளிங்குக் குடுவைகளில் தேநீர் விற்கலாம். தேநீரை ருசி பார்ப்பவர்கள் குடுவைகளையும் வாங்குவார்கள். அழகான பொருட்களைப் பார்த்தால் எந்த ஆட்களும் சொக்கிப்போவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கேன்."

கடைக்காரர் பதில் பேசவில்லை. அன்றைக்கு மதியம், தொழுகைக்குப் பிறகு கடையை மூடிவிட்டு, தன்னுடன் அமர்ந்து, அரேபியர்களுக்குப் பழக்கமான ஹுக்காவில் புகை பிடிக்க வருமாறு பையனை அழைத்தார்.

"உன்னுடைய எதிர்பார்ப்புத்தான் என்ன?" என்று வியாபாரி கேட்டார்.

"நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். என்னுடைய ஆடுகளைத் திரும்பவும் வாங்க வேண்டும். அதற்கு நான் பணம் சம்பாதித்தாக வேண்டும்."

அந்த வியாபாரி ஹுக்காவுக்குள் புதிதாகக் கங்குகளைப் போட்டார்; புகையை ஆழமாக உள்ளே இழுத்தார்.

"இந்தக் கடையை முப்பது வருஷமாக நடத்தி வருகிறேன். பளிங்குகளில் நல்லது எது கெட்டது எது என்று எனக்குத் தெரியும். பளிங்குச் சாமான்களைப் பற்றிய ஒவ்வொரு விஷயமும் எனக்குத் தெரியும். அதனுடைய அளவு என்ன; எப்படியெல்

லாம் பயன்படும் என்பதெல்லாம் தெரியும். பளிங்குக் குவளை களில் தேநீர் விற்றால் கடை பெரிதாயிடும்; என் வாழ்க்கை முறையே மாறிப்போகும்."

"அது நல்லதுதானே?"

"நான் ஏற்கனவே இருப்பதைக் கொண்டு வாழ்வதற்குப் பழகிப் போனவன். நீ இங்கே வருவதற்கு முன்பு, நண்பர்களெல் லாம் போய்விட்ட பின்னரும் இதே இடத்தில் நீண்ட காலத்தை வீணாக்கிவிட்டோமே என்றும், அவர்கள் முன்னைவிட வளமாக இருக்கிறார்களோ ஓட்டாண்டியாகிப் போனார்களோ என்றெல்லாம் நினைத்துக்கொண்டிருப்பேன். அது என்னை நிலை குலையச்செய்யும். இப்பொழுது அவ்வளவு மோசமாக இல்லை என்பதைக் காண முடிகிறது. இந்தக் கடை இவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும் என்றுதான் நான் எப்பொழுதும் விரும்பினேன். எதையும் மாற்ற நான் விரும்பவில்லை. ஏனென் றால், மாறிய சூழ்நிலையை எப்படிக் கையாள்வதென்பது எனக்குத் தெரியாது. அப்படியே இருந்து பழகிப்போனேன்."

என்ன சொல்வதென்று பையனுக்குத் தெரியவில்லை. அந்த வயோதிகர் தொடர்ந்தார்: "நீ எனக்குக் கிடைத்த உண்மையான வரம். இதற்கு முன்பு பார்க்க முடியாத ஏதோ ஒன்றை என்னால் இன்றைக்குப் புரிந்துகொள்ள முடிகிறது. வரத்தை அலட்சியப்படுத்தினால் அது சாபமாகிவிடும். வாழ்க்கை யில் எனக்கென்று புதிதாக எதுவும் தேவையில்லை. ஆனாலும், நான் இதுவரை கண்டிராத வளத்தையும் அதன் உச்சங்களை யும் பார்த்தாக வேண்டும் என்று வற்புறுத்துகிறாய். அதை யெல்லாம் நான் இப்பொழுது கண்டுகொண்டதாலும், என்னால் இயலக்கூடியவைகளும் எவ்வளவோ ஏராளமாக இருக்கின்றன என்பதை உணர்ந்துவிட்டதாலும் நீ வருவதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் ரொம்ப மோசமாகத்தான் உணரப் போகிறேன். ஏனென்றால், என்னால் சாதிக்கக்கூடியவை பற்றியெல்லாம் எனக்குத் தெரியும், நான் அவற்றைச் செய்ய விரும்பியதில்லை."

'தாதிபாவுலே ரொட்டிக்காரனிடம் சொல்ல நினைத்ததைச் சொல்லாமல் விட்டதுகூட நல்லதாகப் போயிற்று' என்று பையன் தனக்குள் நினைத்துக்கொண்டான்.

மேலும் சிறிது நேரம் அவர்கள் புகைத்தபடி இருந்தனர். பொழுது சாய்ந்துகொண்டிருந்தது. அவர்கள் அரேபிய மொழியில் பேசிக்கொண்டிருந்தார்கள், அப்படிப் பேச முடிந்ததை நினைத்துப் பையனுக்குச் சற்றுப் பெருமை. இந்த உலகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொன்றையும் ஆடு களால் கற்றுக் கொடுக்க முடியும் என்று இவன் நினைத்திருந்த

காலம் ஒன்று உண்டு. ஆனாலும், அவைகளால் ஒருபோதும் அரேபிய மொழியைக் கற்றுக் கொடுத்திருக்க முடியாது.

'ஆடுகளால் கற்றுக் கொடுக்க முடியாத மற்ற விஷயங்களும் உலகத்தில் இருக்கலாம்' என்று அவன் நினைத்துக்கொண்டே அந்த வயோதிக வியாபாரியை மரியாதையோடு பார்த்தான். உண்மையில், ஆடுகள் புல்லையும் புனலையும் தேடுவதைத்தான் எப்பொழுதும் செய்துகொண்டிருந்தன. மேலும், அவை இவனுக்கு எதையும் கற்றுக்கொடுக்காமல் இருந்திருக்கலாம்; ஆனால், இவன் அவைகளிடம்தான் கற்றுக்கொண்டான்

கடைசியாக, அந்த வியாபாரி சொன்னார்: "மெக்தூப்!"

"அதற்கு என்ன அர்த்தம்?"

"இதைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் நீ அரேபிய னாகப் பிறந்திருக்க வேண்டும்; இருந்தபோதிலும், உன்னுடைய பாஷையில் 'எழுதப்பட்டது' என்பது போல ஏதோ ஒன்றாக இருக்கக்கூடும்."

பிறகு, ஹுக்காவில் உள்ள நெருப்புக்கங்குகளை அணைத்துக் கொண்டே அவர், பளிங்குக் குவளைகளில் தேநீர் விற்பதைத் தொடங்கலாமென்று இவனிடம் சொன்னார். சில நேரங்களில், ஆற்று நீரைப் பிடித்து நிறுத்த எந்த வழியும் தென்படுவதில்லை.

✧

மலைமீது ஏறிய மக்கள் உச்சியை அடைந்ததும் களைப்படைந்து விடுவார்கள். ஆனாலும், புத்துணர்ச்சி அளிக்கக்கூடிய சுவையான தேநீர் வழங்கும் பளிங்குக் கடையை அவர்கள் அங்கே கண்டார் கள். அழகிய பளிங்குக் குவளைகளில் பரிமாறப்பட்ட தேநீரைப் பருக உள்ளே நுழைந்தார்கள்.

"என் மனைவி ஒருபோதும் இதைப்பற்றி நினைத்ததில்லை" என்று சொன்ன ஒருவர் சில பளிங்குச் சாமான்களை வாங்கிச் சென்றார். அவர் அன்றிரவு நண்பர்களுக்கு விருந்தளிக்கப் போகிறார். கண்ணாடிப் பொருட்களின் அழகு விருந்தினர் களைக் கவர்ந்துவிடும். "பளிங்குக் குவளையிலே குடிக்கும்பொழுது தேநீர் ரொம்பவும் சுவையாயிருக்கிறது. ஏனென்றால், தேநீரின் மணமெல்லாம் அதிலே தேங்கிவிடும்" என்று இன்னொருவர் குறிப்பிட்டார். மூன்றாவது ஆள் சொன்னார்: "கிழக்குத் தேசங் களில் பளிங்குக் குவளைகளில் தேநீர் கொடுப்பதுதான் மரபு. ஏனென்றால், அதிலே ஒரு மாயசக்தி இருக்கிறது."

வெகு விரைவிலேயே செய்தி ரொம்பத் தூரம் பரவிவிட் டது. ரொம்பப் பழைய வியாபாரத்தில் புதிதாக எதையோ

செய்கிற கடையைப் பார்ப்பதற்காக அதிக அளவில் மக்கள் மலை ஏறத் தொடங்கிவிட்டார்கள். பளிங்குக் குவளைகளில் தேநீர் பரிமாறக்கூடிய கடைகள் பல திறக்கப்பட்டன; ஆனால், அவை மலைஉச்சியில் இல்லாதபடியால் அந்தக் கடைகளில் வியாபாரம் மந்தம்தான்.

நாளடைவில் அந்த வியாபாரி புதிதாக இரண்டு வேலை யாட்களை அமர்த்த வேண்டியதாயிற்று. பளிங்குச் சாமான் களோடு ஏராளமான அளவு தேயிலையையும் இறக்குமதி செய்தார். புதிய பொருட்கள் மீதுள்ள மோகத்தால் ஆடவரும் பெண்டிரும் அவருடைய கடையை மொய்த்தனர்.

இவ்வாறு மாதங்கள் சில கடந்தன.

✦

விடிவதற்கு முன்பே பையன் விழித்துக்கொண்டான். ஆப்பிரிக்கக் கண்டத்தில் இவன் காலடி வைத்து அன்றோடு பதினொரு மாதம் ஒன்பது நாட்கள் கடந்துவிட்டன.

அந்த நாளுக்கென்றே சிறப்பாக வாங்கப்பட்ட வெள்ளை லினென் துணியில் தைக்கப்பட்ட அரேபிய ஆடைகளை அணிந்துகொண்டான். தலைப்பாகையை முறைப்படி அணிந்து ஒட்டகத் தோலால் ஆன ஒரு வளையத்தை மாட்டி இறுக்கிக் கொண்டான். புதிய காலணிகளை அணிந்தபடி அமைதியாகப் படி இறங்கினான்.

நகரம் இன்னும் தூங்கிக்கொண்டிருந்தது. காலை உணவை முடித்தான், பளிங்குக் குவளையில் தேநீர் குடித்தான். பிறகு சூரிய ஒளிபரவும் வாசல்நடையில் அமர்ந்து ஹுக்கா புகைத்தான்.

சலனமின்றிப் புகைத்துக்கொண்டிருந்தான்; எதைப்பற்றிய நினைவும் இல்லை. பாலைவன மணத்தைச் சுமந்துவந்த காற்றின் ஒலியைக் கவனித்துக்கொண்டிருந்தான். புகைத்து முடித்த பின்னர் சட்டைப்பைக்குள் கைவிட்டான், வெளியே எடுக்க வேண்டியதை அவதானித்த கை அங்கேயே சில கணங்கள் இருந்தது.

கத்தையாய்ப் பணம்; நூற்றிருபது ஆடுகள் வாங்குவதற்குப் போதுமான பணம், ஊர் திரும்புவதற்கான பயணச் சீட்டு, ஆப்பிரிக்காவிலிருந்து பொருட்களைத் தன்னுடைய நாட்டிற்கு இறக்குமதி செய்துகொள்வதற்கான உரிமம்.

வியாபாரி எழுந்து கடையைத் திறக்கும்வரை பொறுமை யாகக் காத்திருந்தான். பிறகு, மேலும் சிறிது தேநீர் அருந்த இருவருமாகச் சென்றனர்.

பையன் சொன்னான்: "இன்றைக்கு நான் புறப்படுகிறேன். ஆடுகள் வாங்குவதற்குத் தேவையான பணம் என்னிடம் உள்ளது; மெக்காவுக்குச் செல்வதற்குத் தேவையான பணம் உங்களிடம் இருக்கிறது."

வியாபாரி ஒன்றும் பேசவில்லை.

"என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கள்?" என்று கேட்டான். "எனக்கு எவ்வளவோ உதவி பண்ணியிருக்கிறீர்கள்."

அவர் ஒன்றுமே பேசாமல் தேநீர் தயாரிப்பதிலேயே இருந்தார். பிறகு, இவன் பக்கம் திரும்பினார்.

"உன்னைப் பற்றிப் பெருமைப்படுகிறேன். என்னுடைய கடைக்கு ஒரு புதிய எழுச்சியை நீ கொண்டு வந்தாய், உனக்குத் தெரியும் நான் மெக்காவுக்குச் செல்லப்போவதில்லை என்று. அதே போல நீயும் ஆடுகளை வாங்கப் போவதில்லை; அதுவும் உனக்குத் தெரியும்."

"அப்படி என்று யார் சொன்னது?" என்று பையன் பதற்றத்துடன் கேட்டான்.

"மெக்தூப்," என்று பளிங்கு வியாபாரி சொன்னார்.

பின்பு பையனை ஆசீர்வதித்தார்.

✧

அறைக்குச் சென்று தனது உடைமைகளை மூட்டை கட்டினான்; மூன்று கோணிகள் நிறைந்தன. புறப்படும்போது அந்த அறை யின் மூலையில் இடையருக்கான தனது பழைய பையைப் பார்த்தான்; கசங்கிக் கிடந்தது. நீண்ட நாட்களாக அதைப் பற்றிய நினைவே இல்லை. வீதியில் யாருக்காவது கொடுத்து விடலாம் என்று நினைத்து பையிலிருந்து தன்னுடைய மேலா டையை எடுத்தான். இரண்டு கற்கள் தரையில் உருண்டன: யுரிம் – தும்மிம்.

அவை கிழட்டு ராஜாவை நினைவூட்டின. நீண்ட நாட்களாக அவரை நினைத்துக்கூடப் பார்த்ததில்லை என்பதை உணர்ந்த போது இவனுக்குப் பதற்றம் ஏற்பட்டது. கௌரவமாக ஸ்பெயினுக்குத் திரும்பப் போதுமான பணத்தைச் சேமிக்க வேண்டும் என்கிற ஒரே நினைவோடு கிட்டத்தட்ட ஒரு வருஷம் இடைவிடாமல் உழைத்துவிட்டான்.

கிழட்டு ராஜா சொல்லியிருந்தார்: "கனவு காண்பதை விட்டு விடாதே, சகுனங்களைப் பின்பற்று."

யுரிம் – தும்மிம் கற்களை எடுத்தான்; அந்தக் கிழராஜா இவனோடுதான் இருக்கிறார் என்கிற விநோத உணர்வு மீண்டும்

ஏற்பட்டது. ஓராண்டு காலமாகக் கடுமையாக உழைத்தவன் புறப்பட வேண்டிய தருணம் என்று சகுனங்கள் சொல்லின.

அரபு மொழியைப் பேசுவதற்கு அந்த ஆடுகள் கற்றுக் கொடுத்திராத போதிலும், முன்னர் செய்துகொண்டிருந்த அதே வேலையைச் செய்வதற்காகவே தான் திரும்பிச் செல்லப் போவதாக நினைத்தான்.

ஆனால், அதைக் காட்டிலும், எல்லாராலும் புரிந்து கொள்ளக்கூடிய உலகப் பொது மொழி ஒன்று உள்ளது என்கிற அதிமுக்கியமான ஒன்றை ஆடுகள் இவனுக்குக் கற்றுக் கொடுத்திருந்தன. அந்த மொழி இவன் கடையின் நிலைமையை முன்னேற்றுகிற முயற்சி முழுவதிலும் பயன்படுத்திய மொழி; ஊக்கமூட்டக்கூடிய மொழி; பரிவோடும் பயன்பாட்டோடும் காரியங்களைச் சாதிக்கக் கூடிய மொழி; நம்பிக்கையும் ஆசையும் வைத்துள்ள விஷயங்களைத் தேடுவதில் பங்கு வகிக்கக் கூடிய மொழி. தான்ஜியர் அப்பொழுது புதுமையானதொரு நகரமல்ல, அந்த இடத்தை வெற்றி கொண்டதைப் போலவே உலகையும் வெற்றிகொள்ள முடியும் என்பதை உணர்ந்தான்.

"நீ ஒன்றை விரும்பும்போது அதனை அடைய இந்தப் பிரபஞ்சமே வழி வகுக்கும்" என்று கிழட்டு ராஜா சொல்லியிருந்தார்.

ஆனாலும், இவன் கொள்ளையடிக்கப்பட்டதைப் பற்றியோ, எல்லையற்ற பாலைவனத்தைப் பற்றியோ, தங்களது கனவுகளை நன்கு அறிந்திருந்தும் அவற்றை அடைய விரும்பாத மக்களைப் பற்றியோ, ராஜா எதுவும் சொல்லவில்லை. பிரமிடுகள் வெறும் கற்குவியல்கள் என்பதைப் பற்றியோ, யார் வேண்டுமானாலும் தம் வீட்டுக் கொல்லையில் அவற்றைக் கட்டிக்கொள்ளலாம் என்பதைப் பற்றியோகூட அந்தக் கிழராஜா சொல்லவில்லை. ஏற்கனவே வைத்திருந்ததைக் காட்டிலும் பெரியதொரு ஆட்டு மந்தை வாங்கும் அளவுக்குப் பணம் கிடைக்கும்போது நீ அவற்றை வாங்க வேண்டும் என்பதைக்கூடக் குறிப்பிட மறந்துவிட்டார்.

அந்தப் பையை எடுத்துத் தன்னுடைய மற்ற பொருட்களோடு வைத்துக்கொண்டான்; படிகளில் இறங்கினான். வியாபாரி வெளிநாட்டுத் தம்பதியரைக் கவனித்துக்கொண்டிருந்ததையும் மேலும் இரண்டு வாடிக்கையாளர்கள் பளிங்குக் குவளைகளில் தேநீர் பருகியபடி உலவிக்கொண்டிருந்ததையும் பார்த்தான். அந்த அதிகாலை நேரத்திற்கு அது வழக்கத்தை மீறிய சுறுசுறுப்பாகப் பட்டது. தான் நின்றிருந்த இடத்திலிருந்து பார்த்தபோது கடைக்காரரின் தலைமுடி கிழட்டு ராஜாவின் தலைமுடியைப் போலவே அவனுக்கு முதன்முறையாகத் தென்பட்டது. தான்ஜியரில் இவனுடைய முதல் நாளில் –

உணவோ, உறைவிடமோ இல்லாத அந்த நாளில் – இவன் சந்தித்த மிட்டாய்க் கடைக்காரரின் புன்னகை நினைவுக்கு வந்தது. அந்தப் புன்னகையும்கூட கிழட்டு ராஜாவின் புன்னகையைப் போலவே இருந்தது.

அவர் அங்கங்கே இருந்து தன்னுடைய தடயங்களை விட்டுச் சென்றது போல இருந்தது. இருந்தபோதிலும், அவர்களில் யாருமே அந்தக் கிழட்டுராஜாவை ஒருபோதும் சந்தித்ததில்லை. மாறாக, தம்முடைய இலக்கை அடைய முயல்வோருக்கு உதவ மட்டுமே காட்சி அளிப்பதாக அவர் சொல்லியிருந்தார்.

பளிங்கு வியாபாரியிடம் சொல்லிக்கொள்ளாமலேயே புறப்பட்டான். அங்கேயிருந்த அந்நியர் மத்தியில் இவன் அழுதுவிட விரும்பவில்லை. அந்த இடத்தையும், அங்கு இவன் கற்றுக்கொண்ட நல்ல விஷயங்கள் அனைத்தையும் விட்டுப் பிரியப் போகிறான். இருந்த போதிலும், அளவற்ற தன்னம்பிக்கை கொண்டவனாக இருந்தான். இந்த உலகத்தையே வெற்றி கொள்ளப் போகிறவனைப் போல உணர்ந்தான்.

'மறுபடியும் ஆட்டு மந்தைகளைக் கட்டி மேய்க்க எனக்குப் பழகிப் போன வயல் வெளிகளுக்குத்தானே திரும்பிப் போகப் போகிறேன்' என்று தனக்குத் தானே உறுதிபடச் சொல்லிக் கொண்டான். ஆனால், அந்த முடிவு இவனுக்கு அவ்வளவாக மகிழ்ச்சிதருவதாக இல்லை. ஒரு கனவைச் செயல்படுத்துவதற் காக ஓராண்டு முழுக்க உழைத்தான். அந்தக் கனவின் முக்கியத் துவம் நிமிடத்திற்கு நிமிடம் குறைந்துகொண்டே வந்தது; ஒரு வேளை, அது இவனுடைய கனவென்பதே உண்மை யில்லை போலும்.

"யாருக்குத் தெரியும் . . .?" பளிங்கு வியாபாரியைப் போல இருப்பதுகூட நல்லதுதான் போலும்: மெக்காவுக்குப் போகப் போவதே கிடையாது; அப்படிச் செய்யப்போவதாக வாழ்நாள் முழுக்க நினைத்துக்கொண்டே காலத்தைக் கடத்துவது. தன்னைச் சமாதனப்படுத்திக்கொள்ளும் முயற்சியாக அதனை நினைத்துக்கொண்டான். யுரிம் – தும்மிம் கற்களை இவன் அப்பொழுதும் தன் கையில் வைத்துக்கொண்டிருந்ததால் அவை அந்தக் கிழ ராஜாவின் மனோபலத்தையும் சக்தியையும் இவன் மீது செலுத்திக்கொண்டிருந்தன. அங்கே இவனுடைய முதல் நாளில் இவன் நுழைந்த அதே தேநீர்க் கடைக்குச் சென்றான். அது என்ன சந்தர்ப்பவசமாக நடந்ததா? இல்லை, அதுவும் ஒரு சகுனமா? என்று பையன் நினைத்தான். அங்கே அந்தத் திருடனைக் காணோம். கடைக்காரர் இவனுக்குத் தேநீர் கொடுத்தார்.

பையனின் சிந்தனை விரிந்தது: ஓர் இடையனாக எப்பொழுது வேண்டுமானாலும் மீண்டும் சென்றுவிடலாம் ஆடுகளைப் பராமரிப்பதற்குக் கற்றுக்கொண்டேன் அது எனக்கு மறந்துபோய்விடவில்லை. ஆனால், எகிப்திலே இருக்கின்ற பிரமிடுகளுக்குச் செல்வதற்கு என்றுமே வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடலாம்; அந்தக் கிழவர் தங்கத்தால் ஆன நெஞ்சுப் பட்டை அணிந்திருந்தார்; அவருக்கு என்னுடைய பழைய கதையெல்லாம் தெரிந்திருந்தது; அவர் உண்மையிலேயே ஒரு ராஜாதான் – புத்திசாலி ராஜா.

அந்தலூசியக் குன்றுகள் இரண்டு மணி நேரப் பயண தூரத்தில் இருந்தன. ஆனால், இவனுக்கும் பிரமிடுகளுக்கும் இடையே ஒரு முழுப் பாலைவனமே பரந்து கிடந்தது. இருந்த போதிலும், இவன் அந்தச் சூழ்நிலையை வேறு வழியில் மதிப்பீடு செய்து பார்த்தான். தன்னுடைய புதையலை நோக்கி இரண்டு மணி நேரப் பயண தூரம் நெருங்கிவிட்டான் – அந்த இரண்டு மணி நேரம் ஒரு முழு ஆண்டுக் காலமாக நீண்டுவிட்டது பற்றிக் கவலையில்லை.

ஆட்டு மந்தையோடு திரும்பிப் போகவேண்டும் என்று விரும்புவற்கான காரணம் எனக்குத் தெரியும். ஆடுகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவை ஒரு பிரச்சினையே இல்லை. அவை எனக்கு நல்ல தோழர்களாக இருக்க முடியும். மாறாக, அந்தப் பாலைவனம் எனக்கு நல்ல நண்பனாக இருக்குமா என்பது தெரியவில்லை. அந்தப் பாலைவனத்திலே தான் என்னுடைய புதையலை நான் தேட வேண்டும். அது கிடைக்காத பட்சத்தில், நான் எப்பொழுது வேண்டுமானாலும் சொந்த ஊருக்குப் போகலாம்; என்றென்றைக்கும் தேவையான அளவுக்கு என்னிடம் பணம் உள்ளது. பிறகு என்ன...?

உடனே அதீத மகிழ்ச்சியடைந்தான். இடையனாக இருப்ப தற்கு இவன் எப்பொழுது வேண்டுமென்றாலும் செல்லலாம். ஒரு பளிங்குக் கடை விற்பனையாளனாகவும் எப்பொழுது வேண்டுமென்றாலும் ஆகலாம். மற்ற புதையல்களும் இந்த உலகத்தில் ஒளிந்திருக்கலாம். ஆனால் இவன் ஒரு கனவு கண்டுவிட்டான்; ஒரு ராஜாவைச் சந்தித்துவிட்டான். அவை யெல்லாம் எல்லோருக்கும் சும்மா நிகழ்ந்துவிடக் கூடியதா?

அந்தக் கடையை விட்டுப் புறப்பட்ட போதே திட்டம் தீட்டியிருந்தான். பளிங்கு வியாபாரிக்குப் பளிங்குகளை அனுப்பிக் கொண்டிருந்த ஒருவர் பாலைவனத்தைக் கடந்து செல்லும் சரக்கு வண்டிகள் மூலமாக அவற்றை இறக்குமதி செய்தார் என்பது இவனுக்கு ஞாபகம் வந்தது. 'யுரிம் – தும்மிம்' கற்களைக்

கையில் வைத்திருந்தான். அந்த இரண்டு கற்களால்தான் தன்னுடைய புதையலை நோக்கிய பாதையில் மீண்டும் சென்று கொண்டிருக்கிறான்.

"தம்முடைய இலக்கினை அடைய விரும்புவோரின் அருகில் நான் எப்பொழுதுமே இருக்கிறேன்" என்று அந்தக் கிழட்டுராஜா சொல்லியிருந்தார்.

பளிங்குப் பொருட்களை அனுப்பும் ஆளுடைய சரக்கு மண்டியிலே போய், பிரமிடுகள் உண்மையிலேயே அவ்வளவு தூரத்தில்தான் இருக்கின்றனவா என்று தெரிந்துகொள்வதால் என்ன நஷ்டம்?

✦

ஒரு கட்டிடத்தில் கிடந்த பெஞ்சின் மீது ஓர் ஆங்கிலேயர் அமர்ந்திருந்தார். ஒரே துர்நாற்றமாக இருந்தது. கால்நடைகளின் வாடை, வியர்வை நாற்றம், புழுதி. அதில் ஒரு பகுதி சரக்கு மண்டியாகவும் ஒரு பகுதி கொட்டடியாகவும் இருந்தது. 'இது போன்ற இடத்திலே கொண்டு போய் விடும் என்று நான் நினைக்கவில்லை; பத்து ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் இருந்த நான் இங்கே ஒரு கொட்டடியில் கிடக்கிறேன்' என்று எண்ணமிட்டபடி வேதியியல் பற்றிய இதழ் ஒன்றினைப் புரட்டிக்கொண்டிருந்தார் அந்த ஆங்கிலேயர்.

ஆனால், அவர் அப்படி ஓடிக்கொண்டே இருக்க வேண்டியவர்தான். அவர் சகுனங்களை நம்புபவர். அவருடைய வாழ்க்கை, அவருடைய படிப்பு எல்லாமே பிரபஞ்சத்தின் ஒரே உண்மையான மொழியினைக் கண்டு பிடிப்பதை இலக்காகக் கொண்டிருந்தன. அவர் முதலில் எஸ்பெரன்ட்டோ என்கிற செயற்கை மொழியைக் கற்றார்; பிறகு உலகில் உள்ள அனைத்து மதங்களையும்; இப்பொழுது ரஸவாதம். அவருக்கு எஸ்பெரன்ட்டோ மொழி பேசத் தெரியும்; முக்கியமான மதங்கள் அனைத்தையும் நன்கு புரிந்துகொள்வார். ஆனாலும், இன்னும் அவரால் ரஸவாதி ஆக முடியவில்லை. வாழ்க்கையின் முக்கியமான கேள்விகளுக்குப் பின்னால் இருக்கிற உண்மைகளையெல்லாம் அவரால் கண்டுபிடிக்க முடிந்தது. ஆனால் அவருடைய படிப்பு அதற்கு மேல் அவரால் கடந்து செல்ல முடியாதபடியானதொரு கட்டத்தில் கொண்டு போய் விட்டுவிட்டது. ஒரு ரஸவாதியோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள எவ்வளவோ முயன்றார்; முடியவில்லை. ரஸவாதிகள் எல்லோருமே விநோதமானவர்கள்; தங்களைப் பற்றி மட்டுமே நினைப்பவர்கள்; அவருக்கு உதவ அநேகமாக

எல்லோருமே மறுத்துவிட்டார்கள். யாருக்குத் தெரியும் – ஒருவேளை 'ஞானக்கல்' பற்றிய ரகசியத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் அதன் காரணமாக அது பற்றிய அறிவைத் தமக்குள்ளேயே வைத்துக்கொண்டார்களோ என்னவோ?

தகப்பனார் விட்டுச் சென்ற செல்வத்தில் பெரும்பகுதியை ஏற்கனவே ஞானக்கல்லைத் தேடுவதில் ஒரு பயனுமின்றி வீணடித்துவிட்டார். உலகிலுள்ள மிகப்பெரிய நூலகங்களில் ஏராளமான நேரத்தைச் செலவழித்துப் பார்த்துவிட்டார். ரஸவாதம் பற்றிய முக்கியமான புத்தகங்கள் அனைத்தையும் வாங்கிப் பார்த்துவிட்டார். பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அரேபிய ரஸவாதி ஐரோப்பாவுக்கு வந்திருந்தார் என்று ஒரு புத்தகத்தில் படித்திருந்தார். அவர் இருநூறு வருடங்களுக்கும் மேற்பட்ட வயதானவர் என்றும், ஞானக்கல்லையும் அமிர்தத் தையும் அவர் கண்டுபிடித்திருந்தார் என்றும் சொல்லப்பட்டி ருந்தது. அந்தக் கதை அந்த ஆங்கிலேயரை ஆழமாகப் பாதித் தது. பாலைவனத்திற்குத் தொல்பொருள் ஆய்வுப் பயணமாகச் சென்று திரும்பிய அவருடைய நண்பர் ஒருவர் சொல்லியிருக் காவிடில் அதனை ஒரு கட்டுகதை என்றே எண்ணியிருப்பார். அசாத்தியமான சக்தி கொண்ட அரேபியர் ஒருவரைப் பற்றி அவர்தான் சொன்னார்.

"அல் – பயோம் பாலைவனச் சோலையில் அவர் வசிக் கிறார். இருநூறு வயதானவர் என்று மக்கள் பேசிக்கொள் கிறார்கள். எந்த உலோகத்தையும் தங்கமாக மாற்ற அவரால் முடியும்" என்று அவருடைய நண்பர் சொன்னார்.

அந்த ஆங்கிலேயரால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை; பொறுப்புகள் அனைத்தையும் புறக்கணித்துவிட்டார்; இருந்த முக்கியமான புத்தகங்களைச் சேகரித்துக்கொண்டார். தற்பொழுது அங்கே, தூசிபடிந்து, துர்நாற்றம் வீசுகிற சரக்குமண்டிக்குள்ளே உட்கார்ந்திருந்தார். வெளியே பெரிய பாலைவனச் சரக்கு வண்டி சகாராவைக் கடந்து செல்ல ஆயத்தமாகிக்கொண்டி ருந்தது. அது அல் – பயோம் வழியாகத்தான் செல்லும்.

'ரஸவாதியைப் பார்க்கப் போகிறேன்' என்று அந்த ஆங்கிலேயர் எண்ணமிட்டபோது மிருகங்களின் துர்நாற்றம் ஏதோ கொஞ்சம் தாங்கிக்கொள்ளக் கூடியதாகவே தோன் றியது.

அரேபிய இளைஞன் ஒருவன் தன் மூட்டை முடிச்சுக்களோடு வந்திறங்கினான். ஆங்கிலேயருக்கு வணக்கம் சொன்னான்.

"எங்கே போறீங்க?" என்று அந்த அரேபிய இளைஞன் கேட்டான்.

"பாலைவனத்துப் போகிறேன்" என்று பதில் சொல்லி விட்டுப் படிப்பதில் கவனத்தைத் திருப்பினார். அந்த நேரத்தில் அவர் பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. அத்தனை ஆண்டு களாகப் படித்திருந்த எல்லா விஷயங்களையும் ஒரு முறை திருப்பிப் பார்த்துவிட வேண்டியது அவருக்கு அவசியமாக இருந்தது. ஏனென்றால், அந்த ரஸவாதி, நிச்சயமாக அவரைச் சோதித்துப் பார்ப்பார்.

அரேபிய இளைஞனும் ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் துவங்கினான். அந்தப் புத்தகம் ஸ்பானிய மொழியில் எழுதப் பட்டிருந்தது. 'இதுவும் நல்லதுதான்' என்று ஆங்கிலேயர் நினைத்தார். அவருக்கு அரபு மொழியைக் காட்டிலும் ஸ்பானிய மொழி நன்கு பேச வரும். இந்தப் பையனும் அல் – பயோமுக்குச் செல்கிறான் என்றால் வேறு முக்கியமான வேலை இல்லாத நேரங்களில் பேச்சுத்துணையாக இருப்பான்.

"இது விநோதமாகத்தான் இருக்கிறது" என்று அந்தப் புத்தகத்தின் தொடக்கத்தில் இருந்த ஈமச்சடங்குக் காட்சியை மீண்டும் படிக்க முயன்றபோது இந்தப் பையன் சொல்லிக்கொண்டான். "இரண்டு வருஷங்களாக இந்தப் புத்தகத்தைப் படித்துவிடலா மென்று முயல்கிறேன்; துவக்கத்தில் உள்ள சில பக்கங்களைக் கடந்து போகவே முடியவில்லை." குறுக்கீடு செய்வதற்கு ஒரு ராஜா இல்லை என்ற போதிலும் இவனால் ஊன்றிப் படிக்க முடியவில்லை.

இவன் எடுத்திருந்த முடிவு பற்றிய சில சந்தேகங்கள் அப்பொழுதும் இருந்தன. ஆனால் இவனால் ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது. முடிவு எடுப்பது என்பது விஷயங் களின் தொடக்கம் மட்டுமே. ஒருவன் ஒரு முடிவை எடுக்கும் போது வலுவானதொரு நீரோட்டத்தில் பொத்தென்று குதித்து விடுகிறான். அது அவன் அந்த முடிவை எடுக்கும்போது அவன் நினைத்துப் பார்த்திராத இடங்களுக்கெல்லாம் கொண்டு சேர்த்துவிடுகிறது.

"புதையலைத் தேடிப் புறப்பட்டபோது ஒரு பளிங்குக் கடையில் வேலை பார்ப்பேன் என்று கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை" என்று நினைத்துக்கொண்டான். "இந்தப் பாலைவனச் சரக்கு வண்டிக்காரர்களோடு சேர்ந்து போவது என்னுடைய முடிவாக இருக்கலாம். அது எங்கே போகும் என்பது எனக்குப் புரியாத புதிராகத்தான் இருக்கப் போகிறது."

அருகாமையில் அந்த ஆங்கிலேயர் புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். நட்பு பாராட்டுவதற்கு உரிய ஆளாகத்

தெரியவில்லை. பையன் உள்ளே நுழைந்த போதே அவர் எரிச்சலடைந்தது போலத்தான் தெரிந்தது. அவர்கள் அதற்குள் நண்பர்களாயிருக்கக் கூடும்; ஆனால் ஆங்கிலேயர்தான் பேச்சைச் சட்டென்று முடித்துக்கொண்டார்.

பையன் புத்தகத்தை மூடிவிட்டான். அந்த ஆங்கிலேயர் செய்ததைப்போன்ற எதையும் தான் செய்துவிடக் கூடாது என்று எண்ணினான். பையிலிருந்து யுரிம் – தும்மிம் கற்களை எடுத்தான்; அவற்றுடன் விளையாடத் துவங்கினான்.

"யுரிம் – தும்மிம்!" என்று அந்தப் புதியவர் கத்திவிட்டார்.

கண்சிமிட்டும் நேரத்தில் அவற்றைப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

"அவை விற்பனைக்கு அல்ல" என்று சொன்னான்

"அந்த அளவுக்கு அதற்கு மதிப்புமில்லை. பாறைப் படிகங்களால் ஆனவை. அது போன்ற பாறைப் படிவங்கள் லட்சக்கணக்கில் பூமியில் கிடக்கின்றன. அத்தகைய கற்களைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு இவை யுரிம் – தும்மிம் என்பது தெரியும். உலகின் இப்பகுதியில் இவை கிடைக்கின்றனவா என்பது எனக்குத் தெரியாது" என்று ஆங்கிலேயர் பதிலளித்தார்

"அதை ஒரு ராஜா எனக்குப் பரிசாகக் கொடுத்தார்" என்று பையன் சொன்னான்.

அவர் அதற்குப் பதில் சொல்லவில்லை; பதிலாக, தனது பைக்குள் கைவிட்டு அதே போன்ற இரு கற்களை எடுத்தார்.

"ராஜா என்றா சொன்னாய்?"என்று கேட்டார்

"என்னைப் போன்ற ஒரு இடையனோடு ஒரு ராஜா பேசினார் என்பதை நீங்கள் நம்பவில்லை என்று நினைக்கிறேன்." பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று இவன் விரும்பினான்.

"இல்லவே இல்லை. உலகமே ஒருவனை ராஜா என்று ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இடையர்கள் அவனை ராஜா என்று மதிப்பார்கள். ஆதலால் இடையர்களோடு ராஜாக்கள் பேசுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை."

எதைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்பதைப் பையன் புரிந்து கொள்ளமாட்டானோ என்கிற தயக்கத்தோடு அவர் தொடர்ந்தார். "இது பற்றி பைபிளில் இருக்கிறது; யுரிம் – தும்மிம் கற்களைப் பற்றியும் அதே நூலில்தான் கற்றுக்கொண்டேன். கர்த்தரால் அனுமதிக்கப்பட்ட ஒரே ஒரு தெய்வீக வடிவம் இதுதான்; பாதிரிமார் தம்முடைய தங்கத்தாலான நெஞ்சுப் பட்டையில் இவற்றைப் பதித்துக்கொள்வார்கள்."

அந்தச் சரக்குமண்டியில் இருந்ததுகூடப் பையனுக்கு திடீரென சந்தோஷத்திற்குரிய விஷயமாகத் தோன்றியது.

"இதுவும் ஒரு சகுனமாக இருக்கலாம்" என்று அந்த ஆங்கிலேயர் அரைகுறையான குரலில் சொன்னார்.

"சகுனங்களைப் பற்றி உங்களுக்குச் சொன்னது யார்?" பையனின் ஆர்வம் அந்தக் கணம் அதிகரித்து.

"வாழ்க்கையில் ஒவ்வொன்றுமே சகுனம்தான்" என்ற ஆங்கிலேயர் அப்போது படித்துக்கொண்டிருந்த இதழை மூடிவிட்டார். அனைவராலும் புரிந்துகொள்ளக் கூடிய பிரபஞ்ச மொழி ஒன்று இருந்தது. ஆனால் ஏற்கனவே மறக்கப் பட்டுவிட்டது. மற்றவற்றோடு அந்தப் பிரபஞ்ச மொழியையும் நான் தேடிக்கொண்டுதான் இருக்கிறேன். அதற்காகத்தான் இங்கே வந்திருக்கிறேன். அந்தப் பிரபஞ்ச மொழியை அறிந்த மனிதரைக் கண்டுபிடிக்க வேண்டும்; அவர்தான் ரஸவாதி."

சரக்குமண்டித் தலைவனின் குறுக்கீட்டால் பேச்சுத் தடைப்பட்டது.

"நீங்கள் இருவருமே அதிர்ஷ்டசாலிகள்தான். அல் – பயோமுக்கு ஒரு பாலைவன வண்டி இன்றைக்குப் புறப்படு கிறது" என்று ஒரு பருத்த அரேபியன் சொன்னான்.

"ஆனால், நான் எகிப்துக்குப் போகிறேன்" என்று சொன் னான் பையன்.

"அல் – பயோம் எகிப்திலேதான் இருக்கு; என்ன அரேபி யனப்பா நீ?" என்று அந்தப் பருத்த அரேபியன் சலித்துக் கொண்டான்.

அவன் சென்ற பின்னர் ஆங்கிலேயர் சொன்னார். "இது ஒரு நல்ல அதிர்ஷ்டமான சகுனம்; என்னால் முடிந்ததென்றால் 'அதிர்ஷ்டம், எதேச்சை நிகழ்ச்சி' இந்த மாதிரி சொற்களைப் பற்றி ஒரு பெரிய சொற்களஞ்சியமே எழுதிவிடுவேன். இது போன்ற சொற்களைக் கொண்டுதான் பிரபஞ்ச மொழியே எழுதப்பட்டுள்ளது."

"கையில் யுரிம் – தும்மிம் கற்களோடு இவனைச் சந்தித்தது கூட ஏதோ எதிர்பாராமல் நடந்த நிகழ்வல்ல" என்று அவர் பையனிடம் சொன்னார். இவனும்கூட ரஸவாதியைத் தேடு கின்றானோ என்பதையும் விசாரித்தார்.

"நான் ஒரு புதையலைத் தேடுகிறேன்" என்று பையன் சொன்னான். அதைச் சொல்லிவிட்டதற்காக உடனே வருத்தப் படவும் செய்தான். ஆனால் ஆங்கிலேயர் அதைப் பொருட் படுத்தியதாகக் தெரியவில்லை.

"ஒரு வழியில் நானும் அப்படித்தான்" என்றார் அவர்.

ரஸவாதம் என்று இந்தப் பையன் சொல்லிக்கொண்டிருந்த போது சரக்குமண்டித் தலைவன் அவர்களை வெளியே வரும்படி அழைத்தான்.

✧

கரிய கண்களைக் கொண்ட தாடிக்காரன் ஒருவன் சொன்னான்: "இந்தப் பாலைவன வண்டிக்கு நான்தான் தலைவர். நான் அழைத்துச் செல்லும் ஒவ்வொருவருடைய வாழ்வுக்கும் சாவுக்கும் நானே பொறுப்பாளி. இந்தப் பாலைவனம் ஒரு ஏடாகூடமான பெண்; சில சமயங்களில் ஆட்களைப் பைத்தியம் பிடிக்க வைத்துவிடுவாள்."

கிட்டத்தட்ட இருநூறு பேர் அங்கே குழுமியிருந்தனர். நானூறு விலங்குகள் – ஒட்டகங்கள், குதிரைகள், கோவேறு கழுதைகள், கோழிகள் கூட்டத்தில் பெண்களும் குழந்தைகளும் இருந்தனர். இடையில் வாள் சொருகியும், தோளிலிருந்து துப்பாக்கி தொங்கவிட்டபடியும் நிறைய ஆட்கள் இருந்தனர். ஆங்கிலேயர் புத்தகங்கள் நிரம்பிய பெட்டிகள் பல வைத்திருந்தார். ஒரே குளறுபடியான கூச்சல்; அந்தத் தலைவன் தான் சொல்வதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தான்.

"பலதரப்பட்ட மக்கள் இங்கே இருக்கின்றீர்கள். ஒவ்வொருவரும் ஒரு கடவுளை வணங்குவீர்கள். நான் தொழுகிற ஒரே கடவுள் அல்லா. அவருடைய பெயரால் சத்தியம் செய்கிறேன். இந்தப் பாலைவனத்தை வெற்றிகரமாக நீங்கள் கடந்து போவதற்கு என்னால் ஆன அனைத்தையும் செய்வேன். ஆனால், நீங்கள் ஒவ்வொருவரும் நீங்கள் நம்பிக்கை வைத்துள்ள கடவுள்மீது சத்தியம் செய்ய வேண்டும். என்னுடைய ஆணை எதுவாகயிருந்தாலும், கீழ்ப்படிய வேண்டும், கீழ்ப்படியவில்லை என்றால் பாலைவனத்திலேயே சாக வேண்டியதுதான்."

கூட்டத்தினரிடையே முணுமுணுப்பு கிளம்பியது. ஒவ்வொருவரும் தம்முடைய கடவுளின் பேரால் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்கள். பையன் இயேசுவின் பேரால் சத்தியப் பிரமாணம் செய்தான். ஆங்கிலேயர் எதுவும் செய்யவில்லை. ஒரு சாதாரண சத்தியப் பிரமாணத்தைக் காட்டிலும் அதிக நேரமாக முணுமுணுப்பு நீண்டது. மக்கள் பாதுகாப்பு வேண்டி வானத்தை நோக்கித் தொழுதுகொண்டிருந்தார்.

குளறுபடியானதொரு நீண்ட தொனி ஒலித்தது. பிறகு அனைவரும் தமது வாகனங்களில் ஏறிக்கொண்டனர். பைய

னும் அந்த ஆங்கிலேயரும் ஒட்டகங்களை வாங்கி அவற்றின் முதுகுகளில் தட்டுத்தடுமாறி ஏறிக்கொண்டனர். புத்தகங்கள் நிறைந்த பல பெட்டிகள் ஏற்றப்பட்டிருந்த ஆங்கிலேயருடைய ஒட்டகத்துக்காக இவன் இரக்கப்பட்டான்.

சரக்குமண்டியில் இருந்தபோது தடைப்பட்ட பேச்சைத் தொடங்கும் வகையில் ஆங்கிலேயர் சொன்னார்: "எதேச்சையாக நிகழ்வது என்றெல்லாம் ஒன்றுமே இல்லை. நான் இங்கே ஏன் வந்திருக்கிறேனென்றால் ஒரு அரேபியரைப் பற்றிக் கேள்விப்பட்ட என் நண்பனொருவன் . . ."

பாலைவன வண்டி நகரத் தொடங்கியது. ஆங்கிலேயர் சொன்னதைக் கேட்பது கடினமாகிவிட்டது. இருந்தபோதிலும் தான் விவரிக்க இருந்ததைப் பற்றி இவனுக்குத் தெரியும். ஒன்றை மற்றொன்றோடு இணைக்கின்ற மாயச் சங்கிலி, அதே சங்கிலிதான் இவனை ஒரு இடையனாக்கியது; ஒரே கனவைத் திரும்ப திரும்பக் காணச் செய்தது; ஆப்பிரிக்காவில் ஒரு நகரத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தது; ராஜாவைக் காணச் செய்தது; பணத்தைப் பறி கொடுக்கச் செய்து பளிங்கு வியாபாரியைச் சந்திக்க வைத்தது. அப்புறம் . . .

தன்னுடைய இலக்கினை அடைவதை நோக்கி ஒருவன் நெருங்க நெருங்க அந்த இலக்கே அவனுடைய இருத்தலுக்கான காரணமாகிவிடுகிறது என்று இவன் நினைத்தான்.

கிழக்கு நோக்கிப் பயணியர் கூட்டம் நகர்ந்துகொண்டிருந்தது. காலை நேரத்தில் பயணம்; சூரியன் கடுமையாக இருக்கும் வேளையில் ஓய்வு; மாலை நேரத்தில் மீண்டும் பயணம். பையன் ஆங்கிலேயரிடம் பேசும் சந்தர்ப்பம் குறைவு. அவர் தன்னுடைய புத்தகங்களிலேயே பெரும்பாலான நேரத்தைக் கழித்தார்.

பாலைவனத்தினூடே முன்னோக்கிச் சென்றுகொண்டிருந்த கால்நடைகளையும் மக்களையும் அவன் அமைதியாகக் கவனித்துக்கொண்டே இருந்தான். அவர்கள் புறப்பட்ட நாளில் இருந்த நிலைமை வேறு; அதிலிருந்து எல்லாமே மிகவும் மாறிப்போய்விட்டது. அன்றைக்கு ஒரே குழப்பமும் கூச்சலுமாக இருந்தது. குழந்தைகளின் அழுகுரல் ஒருபுறம், கால்நடைகளின் கனைப்பொலிகள் ஒருபுறம், எல்லாமே வழிகாட்டிகள் மற்றும் வணிகர்கள் எழுப்பிய அதிர்ச்சியூட்டும் ஆணைகளோடு கலந்து ஒலித்தன.

ஆனால் பாலைவனத்தில் இடையறாது வீசிய காற்றின் ஒலி மற்றும் கால்நடைகளின் குளம்படி ஓசை மட்டுமே

நிலவியது. வழிகாட்டிகள்கூட மிகக் குறைவாகவே தமக்குள் பேசிக்கொண்டனர்.

ஓர் இரவு ஒட்டக ஓட்டிகளில் ஒருவன் சொன்னான்: "இந்த மணற் பரப்பைப் பல முறை கடந்து சென்றிருக்கிறேன். பாலைவனம் மிகவும் விரிந்து பரந்தது. தொடுவானம் நம்மை நாமே அற்பமாக நினைக்கும் அளவுக்கு தொலைதூரத்தில் தெரியும். மௌனமாகவே இருந்துவிட வேண்டும் போல இருக்கும்."

அவன் சொன்னதன் அர்த்தத்தைப் பையன் உள்ளுணர் வாகப் புரிந்துகொண்டான். இத்தனைக்கும் இவன் இதற்கு முன்னால் பாலைவனத்தில் காலடி வைத்ததுகூடக் கிடையாது. கடலையோ, நெருப்பையோ காண நேர்ந்த போதெல்லாம் அமைதியாகிவிடுவான். அவற்றினுடைய மூலாதார சக்தி அப்படியொரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

"ஆடுகளிடமிருந்து நிறைய விஷயங்களைக் கற்றுக்கொண் டிருக்கிறேன்; பளிங்குகளிடமிருந்தும் கற்றுக்கொண்டிருக் கிறேன்; இந்தப் பாலைவனத்தினிடமிருந்தும் ஏதேனும் கற்றுக் கொள்ளக்கூடும். இது முதிர்ச்சியும் ஞானமும் கொண்டதாகத் தோன்றுகிறது."

காற்று நிற்பதாக இல்லை. தாரிபாவில் கோட்டையின்மீது அமர்ந்திருந்த போது இதே போன்ற காற்று முகத்தின்மீது வீசிக்கொண்டிருந்ததை நினைவு கூர்ந்தான். ஆடுகளிடமிருந்து கிடைக்கும் ரோமத்தை நினைவுபடுத்தியது – இவனுடைய ஆடுகள் எப்போதும் போல புல்லையும் புனலையும் அந்தலூசிய வயல் வெளியில் தேடி அலைந்துகொண்டிருக்கலாம்.

'அவை இனி என்னுடையவை அல்ல' என்று தனக்குத் தானே சொரத்தில்லாமல் சொல்லிக்கொண்டான். 'அவை புதிய இடையனுக்குப் பழகிப் போயிருக்கலாம்; என்னை இப்பொழுது மறந்து போயிருக்கலாம். அதுதான் நல்லது. சதா சுற்றித் திரிந்து பழக்கப்பட்ட ஆடுகள் போன்ற ஜீவன் களுக்கு மாறிக்கொள்ளவும் தெரியும்.'

அந்த வியாபாரியின் மகளை நினைத்துப் பார்த்தான். அவளுக்கு ஒருவேளை இந்நேரம் திருமணமாகி இருக்கலாம். அதுவும் ஒரு ரொட்டிக்காரனுக்கு இல்லாவிட்டால் படித்த, ஆர்வமூட்டும் கதைகளைச் சொல்லக்கூடிய வேறொரு இடை யனுக்கு – இவன் ஒருவன் மட்டும்தான் என்பதில்லையே, ஆனாலும் ஒட்டகம் ஓட்டியினுடைய வார்த்தைகளை உள்ளுணர் வாகப் புரிந்துகொண்டதை நினைத்துப் புளகாங்கிதமடைந் தான்: எல்லா மக்களுடைய கடந்த காலத்தையும் நிகழ்காலத்

தையும், தெரிவிக்கக் கூடிய பிரபஞ்ச மொழியை இவனும் கற்றுக்கொண்டுவிட்டானோ! 'வெறும் ஊகங்கள்' என்று அவை பற்றி அம்மா சொல்வாள். வாழ்க்கையின் பிரபஞ்ச நீரோட்டத்தில் திடுமென மூழ்கிவிடுவதே உள்ளுணர்வு என்று புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டான். அங்கேதான் அனைத்து மக்களின் சரித்திரமும் உள்ளது. நாம் அனைத்தையும் தெரிந்து கொள்ள இயலும். ஏனெனில், அங்கே எல்லாமே எழுதப் பட்டுள்ளன.

பளிங்கு வியாபாரியை நினைத்துக்கொண்டவன், "மக்தூப்" என்றான்.

பாலைவனம் சில இடங்களில் மணற் பரப்பாகவும் வேறு சில இடங்களில் பாறைகளாகவும் இருந்தது. பாலைவனப் பயணியர் கூட்டம் மணல் மேடுகளால் தடுக்கப்படும்போது அவற்றைச் சுற்றிக்கொண்டு செல்ல நேரிட்டது. மிகப் பெரிய பாறைப் பகுதி குறுக்கிடும்போது மிக நீளமான சுற்றுப் பாதையில் செல்ல வேண்டி வந்தது. கால்நடைகளின் குளம்புகள் பதிவதற்கு இயலாத வகையில் மிக நுட்பமான மணல் இருந்த பட்சத்தில், போதிய பருமனுள்ள மணற் பாதையைத் தேட வேண்டியிருந்தது. அம்மாதிரி இடங்களில் கால்நடைகள் சறுக்கி விழுந்தன. ஒட்டக ஓட்டிகள் அவற்றின் மீதிருந்த சரக்குகளை இறக்கினர். அப்பகுதியைக் கடக்கும் வரை தாங்களே சுமந்து சென்று பின்னர் அவற்றின்மீது ஏற்றினர் வழிகாட்டிகளில் யாரேனும் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டாலோ இறந்துவிட்டாலோ சீட்டுக் குலுக்கிப் புதிய நபரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஆனால், இவை எல்லாமே ஒரே ஒரு காரணத்தை அடிப்படையாக்கொண்டு நிகழ்ந்தன. எத்தனை தூரம் சுற்றுப் பாதைகளை மேற்கொண்டாலும், சரிக்கட்டும் பணிகளைக் கையாண்டாலும் பாலைவனப் பயணியர் கூட்டம் திசை காட்டும் கருவி சொல்லும் திசையை நோக்கியே நகர்ந்தது. குறுக்கீடுகளைச் சரி செய்த உடனேயே அதனுடைய இலக்கு பயணத்திசைக்குத் திரும்பியது. பாலைவனச் சோலைகளின் இருப்பிடத்தை அடையாளங்காட்டும் நட்சத்திரங்களைக் கண்டும் திசையை அறிந்துகொண்டனர். வைகறை வானில் மின்னும் மீன்களைக் கண்டு, நீர் நிலைகளும் ஈச்ச மரங்களும் குடியிருப்பும் பிற மக்களும் இருக்கக் கூடிய திசையில்தான் செல்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்டனர். ஆங்கிலேயர் ஒருவர் மட்டும் இதைப் பற்றியெல்லாம் தெரிந்துகொள்வதில் ஆர்வமின்றி இருந்தார். எந்தநேரமும் புத்தகங்களைப் படிப்பதிலேயே மூழ்கி இருந்தார்.

இவனிடமும் புத்தகம் இருந்தது; பயணம் புறப்பட்ட முதல் சில தினங்கள் படிக்க முயற்சி செய்தான். ஆனால் பாலைவனப் பயணத்தையும் காற்றையும் கவனிப்பது அதைவிட அதிக ஆர்வமூட்டக்கூடியதாக இருந்தது. தன்னுடைய ஒட்டகத்தைப் பற்றியும் அதனுடன் ஓர் உறவு ஏற்படுத்திக்கொள்ளவும் தெரிந்துகொண்ட பின்னர் புத்தகத்தைத் தூர எறிந்து விட்டான். அந்தப் புத்தகத்தைத் திறந்த ஒவ்வொரு சமயத்திலும் ஏதேனும் முக்கியமான ஒன்றைக் கற்றுக்கொள்ள நேரிடுகிறது என்றொரு மூட நம்பிக்கையை அவன் வளர்த்துக்கொண்டிருந்த போதிலும், அது தேவையில்லாத ஒரு சுமை என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

பயணத்தின்போது தனது அருகாமையிலேயே வந்து கொண்டிருந்த ஒட்டக ஓட்டியுடன் நட்புக் கொண்டான். பயணியரெல்லாம் இரவில் நெருப்பைச் சுற்றி அமர்ந்திருந்த போது அந்த ஒட்டக ஓட்டியிடம் இடையனாகத் தான் பெற்ற அனுபவங்களையெல்லாம் சொன்னான்.

அது போன்றதொரு உரையாடலின்போது ஒட்டகமோட்டி தனது வாழ்க்கையைப் பற்றி விவரித்தார்:

"எல் கெய்ரம் என்ற ஊருக்குப் பக்கத்தில் நான் வசித்து வந்தேன். எனக்கொரு பழத்தோட்டம் இருந்தது; என்னுடைய குழந்தைகள் இருந்தனர்; சாகும் வரை வாழ்வில் மாற்றம் எதுவும் இருக்காது என்கிற எண்ணத்தில் வாழ்ந்து வந்தேன். ஒரு வருஷம், முன்னெப்போதுமே இல்லாத அளவு அதிகமாக விளைந்தது. நாங்கள் எல்லோரும் மெக்காவுக்குப் போனோம். என் வாழ்க்கையில் நிறைவேற்றாமல் இருந்த ஒரு கடமையை நிறைவேற்றிவிட்டேன். இனி நிம்மதியாகச் சாகலாம் என்கிற நினைப்பில் நன்றாகவே இருந்தேன்.

"இந்தப் பூமி ஒரு நாள் அதிர்ந்தது; நைல் நதி கரை புரண்டது; இப்படியெல்லாம் மற்றவர்களுக்கு மட்டுமே நடக்கும்; என்னைப் பொருத்தவரை ஒருபோதும் நடக்காது என்று நினைத்திருந்தேன். வெள்ளத்தில் ஆலிவ் மரங்களையெல் லாம் இழந்துவிடுவோம் என்று அக்கம் பக்கம் இருந்தவர்களெல் லாம் பயந்தனர். குழந்தைகளை இழந்துவிடுவோமா என்றபயம் எனது மனைவிக்கு. எனக்குச் சொந்தமாக இருந்த எல்லா வற்றையுமே இழந்துவிடுவேனோ என்று நானும் நினைத்தேன்.

"என்னுடைய தோட்டம் அழிந்துவிட்டது. பிழைப்புக்கு வேறு வழி தேட வேண்டியதாகப் போயிற்று. அதனால்தான் நான் இப்பொழுது ஒட்டகம் ஓட்டியாக இருக்கிறேன். ஆனால், அன்றைக்கு ஏற்பட்ட நாசம் அல்லாவின் வார்த்தையை எனக்குப்

புரிய வைத்தது. தம்முடைய தேவைகளையும் விருப்பங்களையும் அடைய வல்லவர்கள் தாம் அறியாத விஷயங்களைப்பற்றி அஞ்சத் தேவையில்லை.

"சொத்துக்களாக இருந்தாலும், உடைமைகளாக இருந்தாலும், உயிராக இருந்தாலும், நம்மிடம் உள்ளதை இழந்து விடுவோமோ என்று நாம் அஞ்சுகிறோம். நமது வாழ்க்கைச் சரிதைகளையும் உலக வரலாற்றையும் ஒரே கைதான் எழுது கிறது என்பதைப் புரிந்துகொள்ளும்போது அந்த அச்சம் பறந்து விடும்."

சில சமயங்களில், அவர்களுடைய கூட்டம் இன்னொன்றைச் சந்திக்கும். ஒரு கூட்டத்திடம் மற்றொரு கூட்டத்திற்குத் தேவைப் படும் ஏதேனும் ஒன்று தவறாமல் இருக்கும் – எல்லாம் உண்மை யாகவே ஒரே கையில் எழுதப்பட்டவை என்பதுபோல! நெருப்பைச் சுற்றி அமர்ந்திருக்கும் சமயங்களில் ஒட்டகமோட்டி கள் தங்களுக்குள் சூறைக்காற்றுகளைப் பற்றிய செய்திகளைப் பரிமாறிக்கொள்வார்கள். பாலைவனம் பற்றிய கதைகளையும் சொல்வார்கள்.

வேறு சில சமயங்களில் முகமூடி அணிந்த மர்ம மனிதர் கள் தோன்றுவார்கள். பெடோயின்கள் எனப்படும் அவர்கள் பாலைவனப் பாதைகளில் காவல் தொழில் செய்பவர்கள். திருடர்களைப் பற்றியும் காட்டுமிராண்டிக் கூட்டங்களைப் பற்றியும் எச்சரிக்கை செய்தார்கள். அமைதியாக வந்து, வந்த படியே போய்விடுவார்கள். கண்கள் மட்டுமே தெரியும்படி கறுப்பு உடை அணிந்திருப்பார்கள். ஒரு நாள் இரவு ஆங்கிலேயரும் இந்தப் பையனும் குளிர்காய்ந்துகொண்டிருந்த இடத்திற்கு ஓர் ஒட்டகமோட்டி வந்தார். ஆதிவாசிகள் இடையே சண்டை நடக்குமென்று வதந்திகள் கிடைத்ததாக அவர் சொன்னார்.

மூவருமே மௌனத்தில் ஆழ்ந்தனர். யாரும் எதுவுமே பேசவில்லை. எனினும் பையன் காற்றில் ஒருவகையான பயஉணர்வை அவதானித்தான். மீண்டும் ஒருமுறை வார்த்தை களற்ற மொழியின் – பிரபஞ்ச மொழியின்அனுபவம் அவனுக்குக் கிடைத்தது.

"ஏதாவது ஆபத்தில் மாட்டிக்கொண்டோமா?" என்று ஆங்கிலேயர் வினவினார்.

ஒட்டகமோட்டி சொன்னார்: "பாலைவனத்திற்குள் சென்று விட்டால், திரும்பிப் போவது என்கிற பேச்சுக்கு இடமில்லை. திரும்பிப் போக முடியாதபோது முன்னோக்கிச் செல்வதற்கு உகந்த வழி எது என்பதைப் பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டும். ஆபத்து உள்பட எல்லாமே அல்லா கையில்."

"மக்தூப்" – இந்தப் புதிரான வார்த்தையைச் சொல்லித் தனது பேச்சை முடித்துக்கொண்டார்.

ஒட்டகமோட்டி போன பின்பு ஆங்கிலேயரிடம் பையன் சொன்னான்: "பயணக் கூட்டத்தின் மீது நீங்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். நாம் எத்தனையோ சுற்றுவழிப் பாதைகளில் போனாலும் ஒரே இலக்கை நோக்கித்தான் முன்னேறுகிறோம்."

"நீ உலகத்தைப் பற்றி நிறையப் படிக்க வேண்டும்; புத்தகங்களும் ஒருவகையில் பாலைவனப் பயணத்தைப் போலவேதான்" என்றார் ஆங்கிலேயர்.

நிறைய மனிதர்கள் மிருகங்களுடன் கூட்டங்கூட்டமாக விரைந்து பயணிக்கத் தொடங்கினார்கள். பகல் பொழுதுகள் எப்போதுமே அமைதியாகத்தான் இருந்தன; இப்பொழுது நெருப்பைச் சுற்றி அமர்ந்து பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்த இரவுகளும்கூட அமைதியாகிவிட்டன. ஓர் இரவு, பயணியர் இருப்பதை யாருக்கும் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காகப் பயணியர் கூட்டத்தின் தலைவன் நெருப்பு மூட்ட வேண்டாம் என்று தீர்மானம் போட்டான்.

இரவு நேரங்களில், பாலைவனக் குளிரிலிருந்து காத்துக் கொள்வதற்காக, கால்நடைகளைச் சுற்றிலும் நிறுத்தி நடுவில் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து உறங்கும் முறையைப் பின்பற்றினார்கள். கூட்டத்தைச் சுற்றிலும் ஆயுதம் தாங்கிய இரவுக் காவலர்களைத் தலைவன் நியமித்தான்.

ஓரிரவு ஆங்கிலலேயருக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பையனை அழைத்துக்கொண்டு அவர்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றியிருந்த மணல் வெளியில் உலாவினார். அன்று பௌர்ணமி; பையன் தன்னுடைய கதையை ஆங்கிலேயருக்குச் சொன்னான்.

அவன் பளிங்குக் கடையில் வேலையில் சேர்ந்த பிறகு அடைந்த முன்னேற்றம் பற்றிக் கேட்டபோது ஆங்கிலேயர் சொக்கிப்போனார். "அதுதான் அனைத்து விஷயங்களையும் ஆளுமை கொள்கிற தத்துவம். இதனை ரஸவாதத்தில் உலகத்தின் ஆன்மா என்பார்கள். உளப்பூர்வமாக எதையாவது விரும்பும் போது நாம் உலகத்தின் ஆன்மாவிடம் மிகவும் நெருக்கமாகி விடுறோம். அது எப்போதுமே ஆக்கபூர்வமான சக்திதான்.

"ஆன்மா என்பது மனித இனத்திற்கு மட்டுமே கிடைத்த வரம் என்பதில்லை. பூமியின் மீதுள்ள எல்லாவற்றிற்குமே ஆன்மா உள்ளது. தாதுப் பொருளாக இருந்தாலும் சரி, தாவரங்களாக இருந்தாலும், மிருகங்களாக இருந்தாலும், ஏன் எண்ணத்திற்குக்கூட ஆன்மா உண்டு.

"பூமி உயிரோடு இருப்பதால்தான் அதன் மீதுள்ள எல்லாமே மாற்றத்திற்குள்ளாகின்றன. ஆம், அதற்கும் ஆன்மா உண்டு. அந்த ஆன்மாவின் ஒரு பகுதியாக நாம் இருப்பதால் அது நமக்காகச் செயல்படுகிறது என்பதை நாம் அவ்வளவாகப் புரிந்துகொள்வதில்லை. ஆனாலும் பளிங்குக் கடையில் அந்தப் பளிங்குச் சாமான்கள்கூட உனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்தன என்பதை உணர்ந்திருப்பாயே!"

பையன் நிலவையும், சலவை செய்தது போன்றிருந்த மணலையும் பார்த்துக்கொண்டே சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். பாலைவனத்தைக் கடந்து போகிற அந்தப் பயணியர் கூட்டத்தைக் கவனித்தான். அவையும்கூட அதே மொழியில்தான் பேசின. அதனால்தான் இந்தப் பாலைவனம் நாம் கடந்து செல்வதை அனுமதிக்கிறது. சரியான தருணத்தில் இந்தக் கூட்டம் செல்கிறதா என்பதை அறிய ஒவ்வொரு அடியையும் அது சோதித்துக்கொண்டிருக்கிறது. அப்படி நாம் செல்லும் பட்சத்தில், பாலைவனச் சோலையை அடைந்துவிடுவோம்.

"நம்மில் யாராவது ஒருவர் இந்த மொழியைப் புரிந்து கொள்ளாமல் சுயபலத்தை மட்டுமே நம்பி இந்தக் கூட்டத்தில் சேர்ந்திருப்போமேயானால், பயணம் மிகவும் கடுமையானதாகி விடும்."

அவர்கள் முழு நிலவைப் பார்த்தப்படியே நின்றிருந்தனர்.

பையன் சொன்னான்: "சகுனங்களின் மாயசக்தியே அதுதான். பாலைவனத்தின் சில அறிகுறிகளை வழிகாட்டிகள் அவதானிப்பதை நான் பார்த்திருக்கிறேன். இந்தப் பயணக் கூட்டத்தின் ஆன்மாவும் பாலைவனத்தின் ஆன்மாவும் பேசிக் கொள்வதைக்கூட நான் பார்த்திருக்கிறேன்."

ஆங்கிலேயர் சொன்னார்: "இனி நான் பயணக்கூட்டத் தின் மீது அதிகக் கவனம் செலுத்துவேன்."

"உங்களுடைய புத்தகங்களை நானும் படிக்கப் போகிறேன்" என்று பையனும் சொன்னான்.

✦

விநோதமான புத்தகங்கள்! பாதரசம், உப்பு, ராட்சத மிருகங்கள், அரசர்கள் என எதையெதையோ பேசின. அவற்றில் எதையுமே இவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் எல்லாப் புத்தகங்களுமே ஒரே ஒரு கருத்தைத் திரும்பத் திரும்பச் சொல் வதாகப் பட்டது. எல்லாமே ஒரே பொருளின் வெளிப்பாடுகள் தான்.

ரஸவாத நூல்கள் அனைத்திற்குமான மிக முக்கியமான பகுதி ஒரு சில வரிகளில் அடங்கியிருந்தது. அது ஒரு மரகதக்கல்மீது பொறிக்கப்பட்டுள்ளதாக அந்தப் புத்தகங்கள் ஒன்றில் படித்தான்.

பையனுக்கு நாமும் எதையாவது சொல்லிக் கொடுக்கிறோம் என்ற பெருமையில் ஆங்கிலேயர் சொன்னார்: "அதுதான் மரகதப் பட்டயம்."

"சரி, அப்படி என்றால் இத்தனை புத்தகங்கள் எதற்கு?" என்று பையன் கேட்டான்.

"அந்தச் சில வரிகளைப் புரிந்துகொள்வதற்காகத்தான்" என்று ஆங்கிலேயர் பதில் சொன்னார். அவர் சொன்ன பதிலில் அவருக்கே நம்பிக்கை இருந்ததாகத் தெரியவில்லை.

புகழ்பெற்ற ரஸவாதிகளின் கதைகள் பற்றிய புத்தகம் இவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. சோதனைக் கூடங்களிலே உலோகங்களைத் தூய்மைப்படுத்தும் வேலையில் தங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக்கொண்ட மனிதர்கள்; உலோகத்தைப் பல ஆண்டுகள் சூடேற்றிக்கொண்டே இருந்தால் அது தன்னுடைய தனித்த குணாம்சங்களிலிருந்து விடுபட்டு விடும்; எஞ்சியிருப்பது உலகத்தின் ஆன்மா என்று அவர்கள் நம்பினர். அத்தகைய உலக ஆன்மாதான் புவிப்பரப்பின் மீதுள்ள அனைத்தையும் புரிந்துகொள்ள உதவியது. ஏனென்றால், அந்த மொழியின் மூலம்தான் எல்லாப் பொருட்களுமே தொடர்புகொண்டன. அந்தக் கண்டுபிடிப்பு 'பிரதான வேலை' எனப்பட்டது. அதன் ஒரு பகுதி திரவமாகவும் மறு பகுதி திடப்பொருளாகவும் இருந்தது.

"இந்த மொழியைப் புரிந்துகொள்வதற்கு மனிதர்களையும் சகுனங்களையும் கவனித்தால் போதாதா?" என்று பையன் கேட்டான்.

"எல்லாவற்றையும் ரொம்பச் சுலபமானவை என்று நினைக்கின்ற கிறுக்குத்தனம் உன்னிடம் இருக்கிறது" – ஆங்கிலேயர் எரிச்சல்பட்டார். "ரஸவாதம் என்பது ஆபத்தான விஷயம். ஒவ்வொரு கட்டத்தையும் ஆசான்கள் பின்பற்றிய முறைப்படி அப்படியே செய்ய வேண்டும்."

'பிரதான வேலை'யின் திரவப் பகுதி அமிர்தம், ஜீவரசம் என்றும் அது சர்வரோக நிவாரணி என்றும் பையன் புரிந்து கொண்டான். அதுதான் ரஸவாதிகளை முதுமை அடையாமல் வைத்திருந்தது; திடப்பகுதி ஞானக்கல் எனப்படுவது.

ஆங்கிலேயர் சொன்னார்: "ஞானக்கல்லைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதல்ல. உலோகங்களைச் சுத்தப்படுத்தும்

உலையைக் கவனித்துக்கொண்டே ரஸவாதிகள் பல ஆண்டு களைக் கழித்திருக்கிறார்கள். உலைக்கு அருகிலேயே காலம் முழுவதும் கழிந்துவிட்டபடியால் வாழ்க்கையின் பிற சுகங்களைத் துறந்துவிட்டனர். உலோகங்களைத் தூய்மைப்படுத்துவதென்பது தங்களையே தூய்மைப்படுத்திக்கொள்வதற்கு வழி வகுக்கிறது என்பதை அவர்கள் கண்டுகொண்டனர்."

இவனுக்குப் பளிங்கு வியாபாரியின் ஞாபகம் வந்தது. பளிங்குச் சாமான்களைத் தூய்மை செய்வது இவனுக்கு நல்லது என்றும் அதன் மூலம் இவன் எதிர்மறையான எண்ணங் களிலிருந்து விடுபடலாம் என்றும் அவர் சொல்லி இருந்தார். ஒருவருடைய அன்றாட வாழ்க்கையிலேயே ரஸவாதத்தைப் பற்றிக் கற்றுக்கொள்ளலாம் என்பதில் இவனுக்கு ரொம்பவுமே உடன்பாடாகிப் போனது.

ஆங்கிலேயர் தொடர்ந்தார்: "அது மட்டுமல்ல, ஞானக் கல்லுக்கு ஓர் அற்புதமான குணம் இருக்கிறது; அந்தக் கல்லின் துமியளவைக் கொண்டு மிகப்பெருமளவிலான உலோகத்தைத் தங்கமாக மாற்றிவிடலாம்."

இதைக் கேட்டவுடன் பையனுக்கு ரஸவாதத்தின்மீது ரொம்பவும் ஆர்வம் ஏற்பட்டது. கொஞ்சம் பொறுமையாகக் கற்றுக்கெண்டால் தானும் எல்லாவற்றையும் தங்கமாக்கிவிட லாம் என்று நினைத்தான். இவ்வாறு செய்வதில் வெற்றி பெற்ற பல்வேறு மனிதர்களின் வாழ்க்கையைப் பற்றிப் படித்தான்: ஹெல்வேஜியஸ், எலியாஸ், புல்க்கானெல்லி, ஹெப்பர்... அவை அற்புதமான கதைகள்; அவர்கள் ஒவ்வொருவரும் தம்முடைய இலக்கினை எய்தும் வரை வாழ்ந்தவர்கள்; நெடிய பயணங்களை மேற்கொண்டு, ஞானிகளுடன் உரையாடி, நம்பவியலாத பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியவர்கள்; முடிவில் ஞானக்கல்லையும் ஜீவரஸத்தையும் கண்டடைந்தவர்கள்.

ஆனால் பிரதான வேலையை அடையும் முறையைக் கற்றுக்கொள்ள முயன்ற போது இவன் நம்பிக்கை முழுவதை யும் இழந்துவிட்டான். வரைபடங்களாகவும் சங்கேதக் குறிப்பு களாகவும் புரியாத செய்திகளாகவும் இருந்தன.

✦

"ஏன் இப்படிப் போட்டுக் குழப்பி வைத்திருக்கிறார்கள்?" என்று ஓர் இரவில் பையன் ஆங்கிலேயரைக் கேட்டுவிட்டான். ஆங்கிலேயர் எரிச்சலடைகிறார் என்பதையும் தனது புத்தகங் களைப் பிரிந்திருக்க மனமில்லை என்பதையும் பையன் கவனித்தான்.

"ஏனென்றால், புரிந்துகொள்ளவேண்டும் என்று யாருக்கெல்லாம் அக்கறை இருக்கிறதோ அவர்கள் மட்டும் புரிந்துகொள்ளட்டும்" என்று அவர் சொன்னார். "எல்லோரும் ஈயத்தைத் தங்கமாக்கினால் என்ன ஆகும் என்று யோசித்துப்பார் தங்கம் மதிப்பையே இழந்துவிடும்.

"யாரெல்லாம் விடாப்பிடியாக ஆழ்ந்து படிக்கிறார்களோ அவர்கள் மட்டும்தான் பிரதான வேலையிலே வெற்றி பெற முடியும். அதற்காகத்தானே இந்தப் பாலைவனத்தின் நடுவில் வந்து கிடக்கிறேன். இந்தப் புதிர்களையெல்லாம் விடுவிக்கக் கூடிய உண்மையான ரஸவாதியைத் தேடிக்கொண்டிருக்கிறேன்."

"இந்தப் புத்தகங்கள் எல்லாம் எப்போது எழுதப்பட்டன?"

"பல நூற்றாண்டுகளுக்கு முன்னால்."

"அந்தக் காலத்திலெல்லாம் அச்சடிக்கிற எந்திரம் இல்லையே?" என்று பையன் விவாதம் செய்தான். "ரஸவாதத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள யாருக்குமே எந்த வழியும் இல்லாமல் போய்விட்டது. இத்தனை படங்களோடு விநோதமானதொரு மொழியில் எதற்காகத்தான் எழுதினார்களோ?"

ஆங்கிலேயர் இவனுக்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. "இந்தப் பாலைவனப் பயணம் எப்படி நடக்கிறது என்று நானும்தான் கடந்த சில நாட்களாகக் கவனித்து வருகிறேன். எனக்கு எதுவுமே பிடிபடவில்லையே?" என்று சொன்னார். சண்டையைப் பற்றிய பேச்சு அடிக்கடி அடிபடுகிறது என்பதை மட்டுமே அவரால் கவனிக்க முடிந்தது.

பின்பு ஒரு நாள் புத்தகங்களை எல்லாம் ஆங்கிலேயரிடம் இந்தப் பையன் திருப்பிக் கொடுத்தான். "ஏதாவது கற்றுக்கொண்டாயா?" என்று ஆங்கிலேயர் கேட்டார். அது என்னவாக இருக்கும் என்பதைக் கேட்க ஆவல்; அத்தோடு சண்டை நடந்துவிடுமோ என்கிற எண்ணத்தைத் தவிர்க்க யாருடனாவது பேச வேண்டியதும் அவசியமாகப் பட்டது.

"உலகுக்கென்று ஓர் ஆன்மா இருக்கிறது. அந்த ஆன்மாவைப் புரிந்துகொள்பவர்களால் எல்லாவற்றிற்குமான மொழியைப் புரிந்துகொள்ள முடியும் என்பதைக் கற்றுக்கொண்டேன்; பல ரஸவாதிகள் தம்முடைய இலக்கினை அடைந்தார்கள் என்பதையும் உலகஆன்மா, ஞானக்கல், ஜீவரஸம் ஆகியவற்றைக் கண்டுபிடித்ததோடு முடித்துக்கொண்டார்கள் என்பதையும் கற்றுக்கொண்டேன்."

"ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக மரகதத்தளத்தின் மீது எழுதப்படக்கூடிய அளவிற்குச் சாதாரணமான விஷயங்கள்தான் இவை என்பதையும் கற்றுக்கொண்டேன்."

ஆங்கிலேயருக்கு ஒரே ஏமாற்றம். காலங்காலமாக நடந்த ஆராய்ச்சி, மாயசக்தி மிக்க சின்னங்கள், விநோதமான சொற்கள், பரிசோதனைக் கருவிகள் – இவை எவையுமே இந்தப் பையனைப் பாதிக்கவில்லையே! இவற்றையெல்லாம் புரிந்து கொள்ள ஏலாத அளவுக்கு இவனுடைய ஆன்மா காட்டுமிராண்டித்தனமானது என்று எண்ணினார்.

புத்தகங்களை எடுத்து உரிய பைகளில் பத்திரப்படுத்தினார்.

"நீ போய்ப் பாலைவனப் பயணத்தையே கவனி. அதில் இனி நான் கற்றுக்கொள்வதற்கு ஒன்றுமில்லை" என்று அவர் சலித்துக்கொண்டார். இந்தப் பையன் பாலைவனத்தின் மௌனத்தையும் கால்நடைகளின் குளம்புகள் எழுப்பிய மணலையும் அவதானிக்கத் திரும்பிவிட்டான்.

"ஒவ்வொருவரும் கற்றுக்கொள்வதற்கென்று பிரத்தியேகமான முறை இருக்கிறது" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். "அவருடைய முறை என்னுடையதைப் போல இல்லை. என்னுடையது அவருடையதைப் போல இல்லை. ஆனாலும், இரண்டு பேருமே அவரவர் இலக்குகளைத் தேடித் தான் போய்க்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் அவரை நான் மதிக்கிறேன்."

✧

இரவு பகலாகப் பாலைவனப் பயணம் தொடர்ந்தது. முகமூடியணிந்த பாலைவனக் காவலர்கள் அடிக்கடி தென்பட்டார்கள். ஒட்டகமோட்டி தற்போது இவனுக்கு மிக நெருங்கிய நண்பராகிவிட்டார். ஆதிவாசிகளுக்கு இடையேயான சண்டைகூட ஏற்கனவே மூண்டுவிட்டது என்று சொன்னார். பயணியர் கூட்டம் பாலைவனச் சோலையை அடைந்துவிட்டால் அதிர்ஷ்டம்தான்.

கால்நடைகள் தளர்ந்துவிட்டன. மக்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வது ரொம்பவே குறைந்துவிட்டது. பேரமைதிதான் ராப்பொழுதின் மிக மோசமான அம்சமாக இருந்தது. ஒட்டகங்களின் நறநறப்பு வெறுமனே ஒலியாக இருந்த காலம் போய் அவர்கள் அனைவரையும் அச்சுறுத்துவதாக ஆகிவிட்டது. கொள்ளையர்கள் அடையாளம் கண்டு புகுந்துவிடுவார்கள்.

இருந்தாலும், ஒட்டகமோட்டி போர் அபாயத்தைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

ஓர் இரவு பேரிச்சம்பழம் தின்றுகொண்டிருந்தார்கள். நெருப்பும் இல்லை; நிலவும் இல்லை. ஒட்டகமோட்டி பையனிடம் சொன்னார்: "இப்பொழுது நான் உயிருடன் இருக்கிறேன். சாப்பிடும்போது அதைமட்டுமே நினைப்பேன். பயணத்தின்

போது முன்னேறிச் செல்வதில் மட்டுமே கவனத்தைச் செலுத்து வேன். போரிட நேர்ந்தால், அதுவும் மற்ற நாட்களைப் போலவே சாவதற்கானதொரு நல்ல நாள்தான்.

"ஏனென்றால், நான் கடந்த காலத்திலோ எதிர்காலத்திலோ வாழ்வதில்லை. என்னுடைய ஆர்வமெல்லாம். நிகழ்காலத்தில் மட்டும்தான். உன்னுடைய கவனத்தை நிகழ்காலத்தில் மட்டுமே ஊன்றிக்கொள்ள முடியுமானால் மிகவும் மகிழ்ச்சியாக இருப் பாய். இந்தப் பாலைவனத்திலும் ஜீவன் இருக்கிறது; வானத் திலே நட்சத்திரங்கள் ஜொலிக்கின்றன. ஆதிவாசிகள் சண்டை போடுகிறார்களென்றால் அதற்குக் காரணம் அவர்களும் மனித இனத்தின் ஒரு பகுதிதானே. வாழ்வு என்பதை ஒரு பெரிய விழாவாக, கோலாகலமான கொண்டாட்டமாகக் கருத வேண் டும். ஏனென்றால், நாம் ஜீவித்திருக்கின்ற இந்தக் கணம்தான் வாழ்வென்பது."

இரண்டு இரவுகள் கழித்து, படுக்கையை விரிக்கும்போது, அவர்கள் ஒவ்வொரு இரவும் கவனித்து வந்த நட்சத்திரத்தைத் தேடினான். ஏற்கனவே இருந்ததைக் காட்டிலும் தொடுவானம் சற்றுத் தாழ்வாக இருப்பதாகப் பட்டது. ஏனென்றால், நட்சத் திரங்கள் பாலைவைனத்திலேயே தெரிவதுபோல் தோன்றியது.

"அதுதான் பாலைவனச் சோலை" என்று ஒட்டகவோட்டி சொன்னார்.

"அப்படியானால், ஏன் நாம் இப்பவே அங்கே போகக் கூடாது" என்று பையன் கேட்டான்.

"ஏனென்றால், நாமெல்லாம் தூங்க வேண்டும்."

✦

சூரியன் உதித்த போதே பையன் விழித்துக்கொண்டான். அங்கே இவன் முன்பாக முந்தைய இரவு சிறிய நட்சத்திரங் களைப் பார்த்த இடத்தில் அந்தப் பாலைவனம் முழுவதுமாக எல்லையற்ற வரிசையில் ஈச்சமரங்கள் விரிந்துபரந்து நின்றிருந்தன.

அதிகாலையிலேயே விழித்துக்கொண்ட ஆங்கிலேயர் சொன்னார்: "சாதித்துவிட்டோம்!"

பையன் மௌனமாக இருந்தான். பாலைவனத்தின் அமைதி இவனுக்கு இதமாக இருந்தது. பசுமையான மரங்களைப் பார்த்துக்கொண்டிருந்ததே நிறைவாக இருந்தது. பிரமிடுகளைச் சென்றடைய மேலும் நெடுந்தூரம் செல்ல வேண்டியிருந்தது. அப்போது ஒரு நாளைக்கு இந்தக் காலை நேரத்தை நினைத்துப் பார்க்கும்போது சாதாரணமாகப் போய்விடும். ஆனால், அது

தான் நிகழ்தருணம் – ஒட்டகமோட்டி குறிப்பிட்ட கொண்டாட்டம் அதுதான் – கடந்த காலம் புகட்டிய பாடங்களிலும் எதிர்காலக் கனவுகளிலும் வாழ்வதைப் போலவே அதிலும் லயித்திருக்க விரும்பினான். ஈச்சமரக் காட்சியும்கூட பிறிதொரு நாள் வெறுமனே நினைவுக்குரிய ஒன்றாகிப் போகலாம். தற்பொழுது, அவை நிழல், நீர், சண்டையிலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றைக் குறிக்கின்றன. நேற்று ஒட்டகத்தின் நறநறப்பு ஆபத்தின் அடையாளமாக இருந்தது. இப்போதோ ஈச்சமரங்களின் வரிசை அற்புதத்தை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது.

'உலகம் பல மொழிகளில் பேசுகிறது' என்று நினைத்தான்.

✦

'விரைந்து கடந்துவிடுகிறது காலம், இந்தப் பாலைவனப் பயணியர் கூட்டமும். அதுபோல்தான்' என்று பாலைவனச் சோலையை நோக்கி நூற்றுக்கணக்கான மனிதர்களும் விலங்குகளும் சென்று சேர்ந்துகொண்டிருந்ததைப் பார்த்த ரஸவாதி நினைத்தார். புதிய வரவுகளைப் பார்த்து மக்கள் ஆரவாரித்தனர். பாலைவனப் புழுதி சூரியனையே மறைத்தது. குழந்தைகள் குதூகலத்தில் கும்மாளம் போட்டனர். பயணியர் கூட்டத்தின் தலைவனுக்கு ஆதிவாசிகளின் தலைவர்கள் வாழ்த்துச் சொல்லி அவர்களோடு அளவளாவிக்கொண்டிருந்ததைத் தூரத்திலிருந்து ரஸவாதி பார்த்தார்.

ஆனால், அவையெதுவுமே ரஸவாதிக்கு ஒரு பொருட்டல்ல. அதுபோல நிறையப் பேர் வந்து போனதை ஏற்கனவே பார்த்திருந்தார். ஆனால் அந்தப் பாலைவனம் அப்படியேதான் இருந்தது. அந்தப் பாலைவன மணற்பரப்பில் அரசர்கள் போனதையும் பார்த்தார். ஆண்டிகளையும் பார்த்தார். காற்றடிக்கும் திசையைப் பொறுத்து மணல் திட்டுகள் வேண்டுமானால் இடம் மாறி இருக்கலாம். அவருடைய குழந்தைப் பருவத்திலிருந்து மணல் ஒரே மாதிரியாகத்தான் இருந்தது. வாரக் கணக்கில் மஞ்சள் மணலையும் நீல வானத்தையும் பார்த்துக் கொண்டே பயணம் செய்த பயணியர் பசுமையான ஈச்சமரங்களை முதன்முதலாகப் பார்த்தபோது அடைந்த மகிழ்ச்சியைப் பார்த்து அவர் பரவசமடைந்தார். ஈச்சமரங்களைப் பார்த்து பெருமிதம் கொள்வதற்காகவே இறைவன் பாலைவனத்தைப் படைத்தான் போலும் என்று அவர் நினைத்துக்கொண்டார்.

அதைவிடவும் அதிக காரியார்த்தமான விஷயங்களில் கவனம் செலுத்துவதென்று தீர்மானித்தார். தன்னுடைய ரகசியங்கள் சிலவற்றைச் சொல்லித்தரவேண்டிய ஆள் ஒருவன் அந்தப் பாலைவனப் பயணியர் கூட்டத்தில் உள்ளான் என்பதை

அறிவார். அப்படித்தான் சகுனங்கள் சொல்லியிருந்தன. ஆனால், அந்த ஆளைத் தெரியாது. இருந்தாலும், அவருடைய பயிற்சி பெற்ற கண்கள் அவன் எதிரே வரும்போது அடையாளம் கண்டுகொள்ளும். அதற்கு முன்பாக அவரிடம் பயிற்சி பெற்ற வனைப் போல அவனும் திறமைசாலியாகத்தான் இருக்கவேண் டும் என்று நம்பினார்.

அந்த விஷயங்கள் எல்லாம் ஏன் வாய்மொழியாக மட்டுமே பிறருக்குக் கற்றுத்தர வேண்டியவைகளாக இருந்தன என்று சலித்துக்கொண்டார். 'சரியாகச் சொன்னால் இவை ரகசியங் களே அல்ல. இறைவன் தனது ரகசியங்களை எல்லாம் அனைத்து ஜீவராசிகளுக்கும் எளிதாகவே வெளிப்படுத்திவிட்டான்.'

அதற்கு ஒரே ஒரு விளக்கம்தான் அவருக்குத் தோன்றியது. அந்த விஷயங்களை அதேமுறையில் கற்றுக் கொடுப்பதற்குக் காரணம் அவை தூய வாழ்க்கையால் தோற்றுவிக்கப்பட்டவை. அதுபோன்ற வாழ்க்கையைச் சொற்களாகவோ வரைபடங் களாகவோ சிறைப்படுத்திவிட முடியாது.

வரைபடங்களாலும் வார்த்தைகளாலும் மக்கள் கவரப் பட்டுவிட்டபடியால் அது உலக மொழியை மறந்துவிடுவதில் போய் முடிந்துவிட்டது.

✦

தான் பார்ப்பதைப் பையனால் நம்பமுடியவில்லை. பாலைவனச் சோலை! பூகோளப் பாடப் புத்தகத்தில் பார்த்ததைப்போல சில ஈச்சமரங்களால் சூழப்பட்ட ஒரு கிணறு அல்ல. அது அவனுடைய சொந்த முந்நூறு நாடான ஸ்பெயினில் உள்ள பல நகரங்களைவிடப் பெரியதாக இருந்தது. கிணறுகள், ஐம்பதாயிரம் ஈச்சமரங்கள், அவற்றின் நடுவே பரந்து கிடக்கும் எண்ணற்ற வண்ண வண்ணக் கூடாரங்கள்.

ரஸவாதியைச் சந்திக்கும் ஆவலில் பொறுமையிழந்தவராக 'ஆயிரத்தொரு இரவுகள்' போல இருந்ததாக ஆங்கிலேயர் வியந்தார்.

குழந்தைகள் சூழ்ந்துகொண்டனர்; புதிதாக வந்திருக்கும் மக்களையும் விலங்குகளையும் பார்க்கும் ஆர்வம் அவர்களுக்கு. சோலையைச் சேர்ந்த ஆண்கள் பாலைவனத்தில் சண்டை நடந்ததைப் பார்த்தீர்களா என்று விசாரித்தார்கள்; பெண்கள் வியாபாரிகள் கொண்டு வந்திருந்த துணிகளையும் விலையு யர்ந்த கற்களையும் வாங்குவதில் ஒருவரோடு ஒருவர் போட்டி யிட்டனர். பாலைவன அமைதி என்பது தொலைதூரக் கனவாகிவிட்டது. பயணியர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்,

ஏதோ, இப்பொழுதுதான் ஆவி உலகத்தை விட்டு வெளியேறி மக்கள் வசிக்கும் பூமிக்கு மீண்டும் வந்துவிட்டவர்களைப் போல ஒரே சிரிப்பும் கூச்சலுமாக ஓயாமல் பேசிக்கொண்டிருந் தார்கள். நிம்மதியும் சந்தோஷமும் நிலவியது.

அவர்கள் அந்தப் பாலைவனத்தில் கவனத்தோடு முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால், பாலைவனச் சோலைகள் எப்பொழுதுமே நடுநிலைமை வகிக்கும் பகுதிகளாகக் கருதப்படுபவை என்று ஒட்டகமோட்டி இந்தப் பையனுக்கு விளக்கிக்கொண்டிருந்தார். ஏனென்றால், அங்கு வசிப்பவர்களுள் பெரும்பான்மையானவர்கள் பெண்களும், குழந்தைகளும் மட்டுமே. பாலைவனம் நெடுகிலும் சோலைகள் இருந்தன. ஆனால், ஆதிவாசிகள் சோலைகளையெல்லாம் புகலிடங்களாக விட்டுவிட்டுப் பாலைவனத்தில் போரிட்டனர்.

பாலைவனப் பயணியர் கூட்டத்தின் தலைவன் மக்களை யெல்லாம் சற்று சிரமப்பட்டு ஒன்றுதிரட்ட வேண்டியதாயிற்று. அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைச் சொன்னார். ஆதிவாசிகளுக்கிடையே நடக்கும் சண்டை ஓயும்வரை அவர் கள் அந்தச் சோலையில்தான் தங்க வேண்டும். புதியவர்கள் என்பதால் ஏற்கனவே அங்கு வசிப்பவர்களோடு இருப்பிடங் களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இருந்தாலும் அவர்களுக்கு நல்ல, வசதியான இடங்களையே தருவார்கள். விருந்தோம்பல் விதி அதுதான். பிறகு, அவர்கள் அனைவரும், காவலாளிகள் உட்பட, தம்மிடமுள்ள ஆயுதங்களை ஆதிவாசித் தலைவர்கள் நியமித்திருந்த ஆட்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

அவை போர் விதிமுறைகள் என்றும், படைகளுக்கோ துருப்புக்களுக்கோ சோலையில் இடமில்லை என்றும் தலைவர் விளக்கினார்.

ஆங்கிலேயர் தனது பையிலிருந்து குரோமிய முலாம் பூசப்பட்ட கைத்துப்பாக்கியை எடுத்து ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டிருந்த ஆட்களிடம் கொடுத்தார். அது பையனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

“கைத்துப்பாக்கி எதற்கு?” என்று இவன் கேட்டான்.

“ஜனங்களை நம்புவதற்கு இது உதவியாக இருந்தது” என்று ஆங்கிலேயர் பதிலளித்தார்.

அதே சமயம், பையனுக்குப் புதையல் ஞாபகம் வந்துவிட் டது. தனது கனவுகளை நோக்கி இவன் நெருங்க நெருங்க, இடர்ப்பாடுகளும் மிகமிகக் கடினமாகிவிட்டன. ‘தொடக்காளி அதிர்ஷ்டம்’ என்று கிழராஜா சொன்னது அதற்குமேல்

பலிக்கவில்லையோ என்று பட்டது. தனது கனவை அடையும் முயற்சியில் இவனது மனஉறுதிக்கும் துணிச்சலுக்குமான சோதனைகளுக்கு இடையறாது ஆட்பட்டான். அதனால், இவன் அவசரப்படவோ, பொறுமையை இழக்கவோ முடியாது. வலியப்பிடித்து முன்னோக்கித் தள்ளுவானேயானால், இவனுடைய பாதையில் இறைவன் விட்டுவைத்திருந்த குறிகளையும் சகுனங்களையும் காணத் தவறிவிடுவான்.

'என்னுடைய பாதை நெடுகிலும் இறைவன் அவைகளை விட்டுவைத்திருக்கிறார்.' அந்த எண்ணம் இவனுக்கே வியப்பாக இருந்தது. அதுவரை, இவன் சாப்பிடுவதைப் போல, தூங்குவதைப் போல, சகுனங்களை இவ்வுலகின் நிகழ்வுகளாகவே கருதிவந்தான் – என்ன செய்ய வேண்டும் என்பதை அடையாளம் காட்ட கடவுள் பயன்படுத்தும் மொழி என்கிற அளவில் இவன் ஒருபோதும் நினைத்ததில்லை.

"பொறுமையை இழந்துவிடாதே" என்று தனக்குள் மீண்டும் சொல்லிக்கொண்டான். ஒட்டகமோட்டி சொன்னதைப் போல, 'சாப்பிடும் நேரத்தில் சாப்பாட்டில் கவனமாக இருக்கவேண்டும்; பயணம் செய்கிறபோது பயணத்தில் கவனமாயிருக்க வேண்டும்.'

முதல்நாள் ஆங்கிலேயர் உட்பட அனைவரும் களைப்பினால் தூங்கிவிட்டனர். பையனுக்கு அவனுடைய நண்பர் இருந்த இடத்திலிருந்து சற்று தொலைவில் அவனை ஒத்த வயதுடைய ஐந்து பேருடன் ஒரு கூடாரம் ஒதுக்கப்பட்டது. அவர்கள் பாலைவனத்தைச் சேர்ந்தவர்கள்; பெருநகரங்களைப் பற்றிய இவனுடைய கதைகளைக் கேட்டு வியந்தனர்.

ஓர் இடையனாகத் தனது வாழ்க்கையைப் பற்றி அவர்களிடம் சொன்னான். பளிங்குக் கடையில் இவனுடைய அனுபவங்களைப் பற்றிச் சொல்லப்போகும் போது ஆங்கிலேயர் இவன் இருந்த கூடாரத்திற்கு வந்துவிட்டார்.

பையனை வெளியே அழைத்துக்கொண்டு வந்தவர் சொன்னார்: "காலையிலே இருந்து உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்; ரஸவாதி இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க எனக்கு உனது உதவி தேவை."

முதலில், தாமாகவே அவரைக் கண்டுபிடித்துவிடலாம் என்று முயன்றனர். ரஸவாதி என்பவர் பெரும்பாலும் அந்தப் பாலைவனச் சோலையில் உள்ள மற்ற மக்களைக் காட்டிலும் வித்தியாசமானதொரு முறையில் வாழ்பவராக இருப்பார். அவரது கூடாரத்தில் தொடர்ந்து ஓர் உலை எரிந்துகொண்டே இருக்கக்கூடும். அவர்கள் எங்கெல்லாமோ தேடி அலைந்தனர்.

அவர்களால் கற்பனை செய்துகூடப் பார்க்கவியலாத அளவிற்குப் பெரியதாகப் பாலைவனச் சோலை இருந்ததைக் கண்டனர். நூற்றுக்கணக்கான கூடாரங்கள் இருந்தன.

"கிட்டத்தட்ட ஒரு முழு நாளையுமே வீணாக்கிவிட்டோம்" என்று கிணறு ஒன்றின் அருகில் இந்தப் பையனோடு அமர்ந்த படி ஆங்கிலேயர் சொன்னார்.

"யாரிடமாவது விசாரிக்கலாம்" என்று இவன் ஆலோசனை சொன்னான்.

தான் அந்தப் பாலைவனச் சோலைக்கு வந்த காரணத்தைப் பிறருக்குச் சொல்ல ஆங்கிலேயர் விரும்பவில்லை; அதற்கு இடமளிக்கக்கூடிய வகையில் அவருடைய மனதும் இல்லை. ஆனாலும், கடைசியாக, தன்னைக்காட்டிலும் அரபுமொழியில் நன்கு பேசக்கூடிய பையன் விசாரிப்பதற்கு ஒத்துக்கொண்டார். அந்தக் கிணற்றுக்கு ஆட்டுத்தோலில் நீர் நிரப்ப வந்த ஒரு பெண்ணை அணுகினான்.

"வணக்கம் அம்மா, இந்தப் பாலைவனச்சோலையிலே ரஸவாதி இருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதற்காக அலைந்து கொண்டிருக்கிறோம்."

அப்படி ஓர் ஆளை அதுவரை கேள்விப்பட்டதில்லை என்று சொல்லிவிட்டு அந்தப் பெண் விரைந்துவிட்டாள். அப்படி விரைவதற்கு முன்பு, கறுப்பு அங்கி அணிந்த பெண்களிடம் இவன் பேசாமல் இருப்பது நல்லது என்று அறிவுறுத்திவிட்டுச் சென்றாள். ஏனெனில், அவர்கள் திருமணமானவர்கள். அங்குள்ள மரபினை இவன் மதித்தாக வேண்டும்.

ஆங்கிலேயருக்கு ஏமாற்றமாகிவிட்டது. தேவையற்ற ஒன்றுக்காகத் தான் நெடியதொரு பயணத்தைச் செய்துவிட்டோமோ என்று பட்டது. பையனுக்கும் வருத்தம்தான். இவனுடைய நண்பர் தன் இலக்கினைத் தேடி வந்தவர். அத்தோடு, ஒருவர் அத்தகைய தேடலில் ஈடுபட்டால், இந்தப் பிரபஞ்சமே வெற்றிக்குத் துணைபுரியும் என்றல்லவா அந்தக் கிழராஜா சொல்லியிருந்தார். அவருடைய வார்த்தை தப்பாகப் போகாது.

"இதற்கு முன்பாக ரஸவாதிகளைப் பற்றி நானும் எப்பவுமே கேள்விப்பட்டதில்லை. இங்கே இருப்பவர்களும் அப்படித்தானோ என்னவோ?" என்று பையன் சொன்னான்.

ஆங்கிலேயரின் கண்களில் பிரகாசம். "அதுவேதான்! 'ரஸவாதி' என்றால் என்ன என்று இங்கே இருக்கிறவர்கள் யாருக்கும் தெரியாமல் இருக்கலாம். நோய்களைக் குணப் படுத்துகிற ஆள் யார் என்று கேள்."

கறுப்பு அங்கி அணிந்த பல பெண்கள் நீர் இறைக்கக் கிணற்றுக்கு வந்தார்கள். அவர்கள் யாருடனும் அவன் பேச வில்லை, ஆங்கிலேயரோ வற்புறுத்திக்கொண்டே இருந்தார். பிறகு, ஓர் ஆள் வந்தான்.

"ஜனங்களுடைய நோய்களைக் குணப்படுத்துகிற ஆளைத் தெரியுமா?" என்று இவன் கேட்டான்.

"எங்களுடைய நோய்களை அல்லா குணப்படுத்துகிறார்" என்று அந்த ஆள் சொன்னான், புதிய நபர்களைக் கண்டு மிரண்டுவிட்டான் என்பது தெளிவாகத் தெரிந்தது. "நீங்க மாந்திரீக வைத்தியரைத் தேடிக்கிட்டிருக்கீங்க." திருக்குரானி லிருந்து சில சுலோகககங்களை ஓதிக்கொண்டே சென்றுவிட்டான்.

மற்றொருவர் தென்பட்டார், வயதானவர், சிறிய வாளி ஒன்றைத் தூக்கிக்கொண்டு வந்தார். இந்தப் பையன் அதே கேள்வியை அவரிடம் கேட்டான்.

"அவரை நீங்க எதுக்குப் பார்க்கணும்?"

"ஏன்னா, அவரைச் சந்திப்பதற்காகவே பல மாதங்கள் பயணம் செய்து என் நண்பர் இங்கே வந்திருக்கிறார்."

சில கணங்கள் யோசித்துவிட்டு அந்த வயோதிகர் சொன் னார், "அப்படி ஒரு ஆள் இந்தச் சோலையிலே இருப்பதானால், அது அந்த அசாத்திய சக்தி வாய்ந்தவராகத்தான் இருக்க வேண்டும். அவரைத் தாங்கள் விரும்பும்போது எங்களது தலைவர்கள்கூடக் காண முடியாது. அவர் சம்மதம் தெரிவித் தால் மட்டும்தான்.

"சண்டை முடிகிற வரைக்கும் இங்கேயே இருங்கள்; பிறகு பயணியர் கூட்டத்தோடு போய்விடுங்கள். இந்தச் சோலையில் உள்ளவர்களின் வாழ்க்கையில் தலையிடாதீர்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

ஆங்கிலேயர் குதூகலமாகிவிட்டார்; அவர்கள் சரியான பாதையில்தான் போய்க்கொண்டிருந்தார்கள்.

கடைசியாக, ஓர் இளம்பெண் வந்தாள், அவள் கறுப்பு உடை அணிந்திருக்கவில்லை. தோளில் ஒரு பாத்திரம், தலையைச் சுற்றியொரு துப்பட்டா, ஆனால், முகத்தை மூடி யிருக்கவில்லை. ரஸவாதியைப் பற்றிக் கேட்பதற்காக அவளை அணுகினான்.

அந்தக்கணம் காலமே நின்று போனது போலத் தோன்றியது. உலக ஆன்மா அவனுள் அலைமோதிப் பொங்கிக்கொண்டிருந் தது. அவளுடைய கரிய கண்களுக்குள் எதையோ தேடினான்.

அவளுடைய இதழ்கள் மௌனத்திற்கும் புன்னகைக்கும் இடையே சமநிலையில் நின்றன. இந்த உலகம் முழுவதும் பேசிய மொழியின் மிக முக்கியமானதொரு பகுதியைத் தெரிந்து கொண்டான். புவிப்பரப்பின் மீதுள்ள ஒவ்வொருவரும் தமது இதயத்தால் புரிந்துகொள்ளக்கூடிய மொழி. காதல்! மனித சமுதாயத்திற்கெல்லாம் மூத்தது. இந்தப் பாலைவனத்தைக் காட்டிலும் பழமையானது. இரண்டு ஜோடிக் கண்கள் சந்தித்துக் கொள்ளும்போதெல்லாம் ஒரே மாதிரியான ஈர்ப்பு விசையை ஏற்படுத்தக்கூடியது. அந்தக் கிணற்றடியில் அதே விசைக்கு, அவர்களுடைய கண்களும் ஆளாகிவிட்டன. அவள் புன்னகைத் தாள். உண்மையிலேயே அது நல்ல சகுனம். தன் வாழ்நாள் முழுவதும் தன்னை அறியாமலேயே இவன் எதிர்பார்த்திருந்த சகுனம். இவன் தனது ஆடுகளில் தேடிய சகுனம்; தனது புத்தகங்களில் தேடிய சகுனம்; பளிங்குச் சாமான்களிலும் பாலைவன அமைதியிலும் தேடிய சகுனம்.

உலகின் தூயமொழி அதுதான்; எந்த விளக்கமும் தேவைப் படுவதில்லை; முடிவின்றிக் காலங்காலமாய்ப் பயணித்துக் கொண்டிருக்கும் பிரபஞ்சத்திற்குத் தேவைப்படாததைப் போலவே, தன்னுடைய வாழ்க்கையின் ஒரே ஒரு பெண் முன்னிலையில் தான் இருந்ததாகவும் வார்த்தைகளின் தேவையில்லாமலேயே அவளும் அதையே இனங் கண்டுகொண்டதாகவும் அந்தக் கணம் அவனுக்குப் பட்டது. இந்த உலகில் மற்றெதைக் காட்டி லும், அதில் உறுதியாக இருந்தான். காதலிக்க வேண்டும்; கைப்பிடிக்கும் முன்னரேயே அந்த நபரைத் தெரிந்திருக்க வேண்டும் என்று இவனுடைய பெற்றோர்களும் பாட்டன் பாட்டிமாரும் சொல்லக் கேட்டிருந்தான். அந்த முறையில் காதலுணர்வு பெற்றவர்கள் பிரபஞ்ச மொழியை ஒருக்காலும் கற்றிருக்க முடியாது. ஏனென்றால், அந்த மொழியைத் தெரிந்து கொள்ளும்போது இந்த உலகில் யாரோ ஒருவர் நமக்காகக் காத்திருப்பதைப் புரிந்துகொள்ளுதல் எளிது. அது பாலைவனத் தின் மத்தியில் இருக்கலாம்; பெரும் நகரங்களில் இருக்கலாம். அப்படிப்பட்ட இருவர் ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டுக் கண்கள் சந்திக்கும்போது கடந்தகாலம் எதிர்காலம் என்பதெல் லாம் முக்கியமற்றவை ஆகிவிடுகின்றன. அந்தக்கணமும் சூரிய னுக்குக் கீழ்உள்ள ஒவ்வொன்றும் ஒரே கரத்தால்தான் எழுதப் பட்டுள்ளன என்கிற நம்பமுடியாத உறுதிப்பாடும் மட்டுமே நின்று நிலவுகின்றன. அந்தக் கரம்தான் காதலுணர்வைத் தூண்டு கிறது. இந்த உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் இரட்டை ஆன்மாவைத் தோற்றுவிக்கின்றது. காதலுணர்வு இல்லாமல் போனால் கனவுகள் பொருளற்றவை ஆகிவிடும்.

‘மக்தூப்’ – பையன் நினைத்துக்கொண்டான்.

ஆங்கிலேயர் பையனை உலுக்கினார்: "போ . . . அவளைக் கேளு." பையன் அந்தப் பெண்ணை நெருங்கினான், அவள் சிரித்தாள்; இவனும் சிரித்தான்.

"உன்னுடைய பெயர் என்ன?" என்று கேட்டான்.

பார்வையைத் தவிர்த்தபடி அந்தப் பெண் சொன்னாள்: "பாத்திமா."

"என்னுடைய நாட்டிலேயேயும் சில பெண்களை அப்படித்தான் கூப்பிடுவார்கள்."

"அது இறைத்தூதரின் மகள் பெயர்" – பாத்திமா சொன்னாள். "அயல் நாடுகளின் மீது படையெடுத்தவர்கள் இந்தப் பெயரையும் கொண்டு சென்றிருக்கிறார்கள்." படையெடுத்தோரைப் பற்றி அந்த அழகி பெருமிதத்துடன் பேசினாள்.

ஆங்கிலேயர் இவனைத் தூண்டிக்கொண்டிருந்தார். அவளிடம் மக்களின் நோய்களைக் குணப்படுத்துகிற ஆளைப் பற்றிக் கேட்டான்.

அவள் சொன்னாள்: "அவர் உலகத்தின் ரகசியங்களை எல்லாம் தெரிந்தவர். பாலைவனப் பேய்களோடெல்லாம் பேசுவார்."

பேய்கள் நன்மை தீமைகளின் ஆவிகள். தெற்குத்திசையைச் காட்டியபடி, "அதோ அங்கேதான் அந்த விநோதமான ஆள் குடியிருக்கிறார்" என்றாள். தன்னுடைய பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு போய்விட்டாள்.

ஆங்கிலேயரும் மாயமானார்; ரஸவாதியைக் காணச் சென்றுவிட்டார். இந்தப் பையன் கிணற்றடியிலேயே நெடுநேரம் அமர்ந்திருந்தான். தாரிபாவில் ஒருநாள் மத்தியதரைக்கடல் காற்று அந்தப் பெண்ணுடைய நறுமணத்தைத்தான் கொண்டு வந்தது என்று ஞாபகப்படுத்திப் பார்த்தான். அப்படி ஒருத்தி இருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்பாகவே அவள்மீது மையல் கொண்டுவிட்டதாக உணர்ந்தான். அவள் மீது கொண்ட காதல் இந்த உலகில் உள்ள அனைத்துப் புதையலையும் கண்டறியும் வல்லமையைக் கொடுக்கும் என்பதைத் தெரிந்துகொண்டான்.

அந்தப் பெண்ணைப் பார்ப்போம் என்கிற நம்பிக்கையோடு கிணற்றடிக்கு அடுத்த நாளும் சென்றான். பாலைவனத்தை வெறித்தபடி ஆங்கிலேயர் அங்கே இருந்ததைக் கண்டு வியப்படைந்தான்.

"மதியத்திலிருந்து சாயுங்காலம் முழுவதும் காத்திருக்கிறேன்" என்று அவர் சொன்னார். "முன்னிரவு முதல்

நட்சத்திரங்கள் தோன்றுகின்ற நேரத்தில்தான் அவரைப் பார்க்க முடிந்தது. நான் அவரைத் தேடிக்கொண்டிருப்பதைப் பற்றி அவரிடம் சொன்னேன். நான் இதுவரை ஈயத்தைத் தங்கமாக மாற்றியிருக்கிறேனா என்று அவர் கேட்டார். அதைக் கற்றுக் கொள்ளத்தான் நான் இங்கே வந்திருப்பதாகச் சொன்னேன்.

"அதை நானாகவேதான் முயன்று செய்ய வேண்டும் என்று அவர் சொன்னார். அவர் சொன்னதெல்லாம் அவ்வளவுதான்: 'போ; முயற்சிசெய்.' "

பையன் எதுவும் பேசவில்லை. பாவம் ஆங்கிலேயர். அவர் ஏற்கனவே எத்தனையோ முறை செய்ததை மீண்டும் செய்ய வேண்டும் என்பதைக் கேட்பதற்காகவா இவ்வளவு தூரம் பயணம் செய்து இங்கே வந்தார்!

"அப்படியென்றால், முயற்சி செய்யுங்கள்" என்று ஆங்கிலே யரிடம் சொன்னான்.

"அதைத்தான் நானும் செய்யப்போகிறேன். இப்பொழுதே தொடங்கப் போகிறேன்."

ஆங்கிலேயர் அகன்றதும், பாத்திமா வந்தாள். பாத்திரத்தில் நீரை நிரப்பினாள். பையன் சொன்னான்: "உன்னிடம் ஒரு சேதி சொல்லத்தான் நான் வந்தேன். உன்னை என் மனைவி யாக்கிக்கொள்ள விருப்பப்படுகிறேன். நான் உன்னைக் காதலிக் கிறேன்."

'பொத்'தென்று பாத்திரம் கீழே விழுந்தது. நீர் சிதறியது.

"தினந்தினம் இங்கே வந்து உனக்காகக் காத்திருக்கப் போகிறேன். எங்கோ பிரமிடுகளுக்கு அருகில் இருக்கிற புதை யலைத் தேடிப் பாலைவனம் கடந்து வந்தேன். இந்தச் சண்டை எனக்கொரு சாபமாக இருந்தது. ஆனால், இப்போது அதுவே ஒரு வரமாகிவிட்டது; உன்னிடம் என்னைச் சேர்த்துவிட்டது."

"என்றாவது ஒரு நாள் சண்டை முடியத்தானே போகிறது" என்று அந்தப் பெண் சொன்னாள்.

தன்னைச்சுற்றிலும் இருந்த ஈச்சமரங்களை அவன் வெறித்துக் கொண்டிருந்தான். இடையனாக இருந்த காலத்தை நினைவு கூர்ந்தான். மீண்டும் ஒரு இடையனாக இருக்க முடியும். தேடி வந்த புதையலைக் காட்டிலும் பாத்திமா முக்கியமானவள்.

இவன் நினைத்துக்கொண்டிருந்ததை யூகித்தவளைப் போல அந்தப் பெண் சொன்னாள்: "ஆதிவாசிகள் எப்போதும் புதையல் தேடுவதிலேயே இருப்பார்கள். ஆனாலும், பாலைவனப் பெண்கள் தம்முடைய ஆடவரைப் பார்த்துப் பெருமிதம் கொள்வார்கள்."

பாத்திரத்தில் திரும்பவும் நீர் நிரப்பிக்கொண்டு சென்று விட்டான்.

பாத்திமாவைச் சந்திப்பதற்காக இந்தப் பையன் தினமும் கிணற்றடிக்குப் போனான். இடையனாகத் தன்னுடைய வாழ்க்கையைப் பற்றியும், ராஜாவைப் பற்றியும், பளிங்குக் கடை பற்றியும் அவளிடம் சொன்னான். இருவரும் நண்பர்களாகி விட்டார்கள். அவளுடன் கழிக்கின்ற பதினைந்து நிமிடங்கள் தவிர ஒவ்வொரு நாளும் நகருவதாகவே தெரியவில்லை. கிட்டத் தட்ட ஒரு மாத காலம் இவன் அந்தப் பாலைவனத்தில் இருந்துவிட்டான். அப்போது ஒருநாள் பாலைவனப் பயணியர் கூட்டத் தலைவன் தன்னுடன் வந்த பயணிகள் அனைவரை யும் அழைத்து ஒரு கூட்டம் போட்டான்.

"போர் எப்பொழுது முடியும் என்பது தெரியவில்லை. நமது பயணத்தைத் தொடர இயலாது. போர் நீண்ட நாள் நீடிக்கலாம்; சில வருடங்கள்கூட ஆகலாம். இரண்டு பக்கமும் ஆற்றல் மிக்க சக்திகள் செயல்படுகின்றன. இரண்டு படை களுக்குமே போர் முக்கியமானதாகிப் போயிற்று. நன்மைக்கும் தீமைக்கும் எதிரான போர் அல்ல. இரண்டு சக்திகளுக்கிடையே தமது வல்லமையை நிலை நிறுத்துவதற்காக நடத்தப்படுகிற போர். அத்தகைய போர் மூண்டுவிடுமானால் மற்ற வகையான போர்களைவிட அதிக நாள் நீடிக்கும். ஏனென்றால் இரண்டு பக்கமுமே அல்லா இருப்பார்."

தமது இருப்பிடங்களுக்கு மக்கள் திரும்பினர். அன்றைய மதிய வேளையில் அவன் பாத்திமாவைச் சந்திக்கக் கிணற்ற டிக்குப் போனான். காலையில் நடந்த கூட்டத்தைப் பற்றி அவளிடம் சொன்னான். பாத்திமா சொன்னாள்: "நாம் சந்தித்த தற்கு மறுநாள் என்னைக் காதலிப்பதாகச் சொன்னாய். பிறகு பிரபஞ்ச மொழி பற்றியும் உலக ஆன்மா பற்றியும் எனக்கு ஓதினாய். அதன் காரணமாக உன்னுள் ஒரு பகுதியாக நான் ஆகிவிட்டேன்."

அவளுடைய குரலின் ஓசையைக் கவனித்தான். ஈச்சரமரங் களின் காற்றொலியைக் காட்டிலும் இனிமையானதாகப் பட்டது.

"இங்கே இந்தப் பாலைவனச் சோலையில் நான் நெடுங் காலமாக உனக்காகக் காத்துக்கொண்டு இருந்திருக்கிறேன். என்னுடைய கடந்த கால வாழ்க்கையையும் குல மரபையும் இந்தப் பாலைவனத்துப் பெண்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று இங்குள்ள ஆடவர்கள் விரும்புவார்களோ அந்த விதிமுறைகளையும் மறந்துவிட்டேன். நான் குழந்தையாக

இருந்த காலந்தொட்டு இந்தப் பாலைவனம் எனக்கொரு அதிசயமான பரிசினைக் கொண்டு வந்து சேர்க்கும் என்று கனவு கண்டிருந்தேன். இப்பொழுது எனது பரிசு வந்து சேர்ந்து விட்டது: அதுதான் நீ."

இவன் அவளுடைய கைகளை எடுத்துக்கொள்ள விரும்பி னாள். ஆனால் பாத்திமாவின் கைகள் அவளுடைய ஜாடியின் கைப்பிடிகளைப் பற்றியிருந்தன.

"உன்னுடைய கனவுகளைப் பற்றியும், கிழட்டு ராஜாவைப் பற்றியும், புதையலைப் பற்றியும் சொல்லியிருக்கிறாய். சகுனங் களைப் பற்றிக்கூடச் சொல்லியிருக்கிறாய். ஆகையால், இப் பொழுது எனக்கு எதைப்பற்றிய பயமும் இல்லை. ஏனென்றால், அந்தச் சகுனங்கள்தான் உன்னை என்னிடம் சேர்ந்துள்ளன. உனது கனவுகளின் ஒரு பகுதி நான்; நீ சொல்வதைப் போலவே உனது இலக்கின் ஒரு பகுதி நான்.

"அதனால்தான் நீ உன்னுடைய லட்சியத்தை அடைய தொடர்ந்து முயல வேண்டும். போர் ஓயும் வரை காத்திருக்க வேண்டுமென்றால், அது வரை காத்திரு, அதற்கு முன்பாகவே புறப்பட வேண்டுமென்றால், உனது கனவுகளைத் தொடர்ந்து செல். காற்றினால் மணல் திட்டுகள் மாறுகின்றன. ஆனால் பாலைவனம் ஒரு போதும் மாறுவதில்லை. அது போலவே தான் நாம் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள காதலும்.

"மக்தூப்; நான் உன் கனவில் ஒரு பகுதி என்பது உண்மை யானால் ஒரு நாள் நீ திரும்பி வருவாய்."

அன்று அவளை விட்டுப் பிரியும் போது இவனுக்குக் கவலையாக இருந்தது. இவனுக்குத் தெரிந்த மணமான இடையர் களைப் பற்றியெல்லாம் நினைத்துக்கொண்டான். தொலைதூர வயல் வெளிகளுக்குச் செல்ல வேண்டி நேர்ந்தபோதெல்லாம் தமது மனைவிகளைச் சமாதானப்படுத்த அவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். காதலித்தவர்களோடு கலந்திருக்க வேண்டும் என்பதே காதலின் விருப்பம்.

அடுத்துச் சந்தித்துக்கொண்ட போது அதனைப் பாத்திமா விடம் சொன்னான்.

அவள் சொன்னாள்: "பாலைவனத்தோடு செல்லும் எங்களது ஆடவர் எல்லோருமே திரும்பி விடுவதில்லை; எங்களுக் கும் தெரியும். இருந்தாலும், பழகிப்போய்விட்டது. திரும்பி வராதவர்கள் மேகக் கூட்டங்களில் ஒரு பகுதியாகவோ, புதர் களில் மறைந்திருக்கும் விலங்குகளில் ஒரு பகுதியாகவோ, நிலத்திற்கடியிலிருந்து வரும் நீரின் பகுதியாகவோ ஆகி விடு

கின்றார்கள்; காணக்கூடியவற்றிலெல்லாம் காட்சி தருகிறார்கள். அவர்கள் உலக ஆன்மா ஆகிவிடுகிறார்கள்.

"சிலர் திரும்பி வருவதும் உண்டு. அதைப் போல தம்முடைய ஆடவரும் ஒரு நாள் திரும்பலாம் என்று நம்புவதால் மற்ற பெண்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள். அந்த மாதிரிப் பெண்களைப் பார்க்கும் போதெல்லாம் அவர்களுடைய மகிழ்ச்சியைக் கண்டு எனக்குப் பொறாமை ஏற்படும். இப்பொழுது நானும் அவர்களில் ஒருத்தியாகக் காத்திருக்கப் போகிறேன்.

"பாலை நிலப் பெண் நான்; அதை நினைத்துப் பெருமைப் படுகிறேன். மணல் திட்டுக்களை வடிவமைக்கின்ற காற்றைப் போல உல்லாசமாக என் கணவர் உலவி வர வேண்டும் என்பதே எனது விருப்பம். அது அப்படித்தான் நேரும் என்றால், மேகக் கூட்டங்களில் ஒரு பகுதியாக, விலங்குகளில் ஒரு பகுதியாக, பாலைவன நீரின் பகுதியாக ஆகிவிடும் உண்மையை ஏற்றுக்கொள்வேன்."

இவன் ஆங்கிலேயரைத் தேடிப் போனான். அவரிடம் பாத்திமாவைப் பற்றிச் சொல்ல விரும்பினான். தனது கூடாரத்திற்கு வெளியே ஆங்கிலேயர் ஓர் உலை அமைத்திருப்பதைப் பார்த்ததும் அதிர்ந்து போனான். அது ஒரு விநோதமான உலை, விறகுகளைக் கொண்டு எரிக்கப்படுவது. அதன் மீது ஒரு கண்ணாடிக் குடுவை சூடேற்றப்படுவதைப் பார்த்தான். புத்தகங்களைப் படிக்கும்போது இருந்ததைக் காட்டிலும் அவருடைய கண்கள் அதிகப் பிரகாசமாக இருந்தன.

"இந்த வேலையில் முதற்கட்டம் இதுதான்; கந்தகத்தைப் பிரித்தெடுக்க வேண்டும். அதை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதில் தோற்றுவிடுவோமோ என்கிற பயம் எனக்கில்லை. தோற்றுவிடுவோமோ என்கிற பயம்தான் என்னைப் 'பிரதான வேலை'யைச் செய்யவிடாமல் தடுத்தது. பத்து வருஷங்களுக்கு முன்பே துவங்கியிருக்கக்கூடிய வேலையைத் தற்போது தொடங்குகிறேன். ஆனாலும், இருபது வருஷங்கள் வரை காத்திருக்க நேரவில்லை என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்."

விறகை நெருப்பில் போடுவதைத் தொடர்ந்தார். அஸ்தமனச் சூரியஒளியால் பாலைவனம் இளஞ்சிவப்பாக மாறும் வரை இவன் காத்திருந்தான். பாலைவனத்திற்குள் சென்று அதனுடைய மௌனத்தில் இவனுடைய கேள்விகளுக்கு விடை கிடைக்குமா என்று சோதிக்கவேண்டும் என்கிற உணர்வு உந்தியது.

சிறிது நேரம் உலாவினான். அடையாளம் கண்டுகொள்வதற்காக ஈச்சமரங்கள் தன் பார்வையில் இருக்கும்படி பார்த்துக்

கொண்டான். காற்றின் ஒலியைக் கவனித்தான். காலடியில் குறு மணலினை உணர்ந்தான். அங்குமிங்குமாகச் சில கிளிஞ்சல்கள் கிடந்தன. இந்தப் பாலைவனம் முன்பொரு காலத்தில் கடலாக இருந்திருக்கலாம். ஒரு பாறையின் மீது அமர்ந்தான். மயக்கிக்கொண்டிருந்த தொலைவானத்திற்கு ஆட்பட்டான். உரிமை கொண்டாடுவது என்பதிலிருந்து காதலைப் பிரித்துப் பார்க்க முற்பட்டான். பிரிக்க முடியவில்லை. பாத்திமா பாலை நிலத்தைச் சேர்ந்தவள்; புரிந்துகொள்வதற்கு ஏதேனும் உதவும் என்றால், அதுவும் அந்தப் பாலை நிலம்தான்.

எண்ணமிட்டபடி அங்கே அமர்ந்திருந்தபோது தலைக்கு மேலே ஏதோ அசைவை உணர்ந்தான். பார்த்தபோது இரண்டு வல்லூறுகள் உச்சி வானில் பறந்துகொண்டிருந்தது தெரிந்தது.

காற்றில் சிறகடித்த வல்லூறுகளைக் கவனித்தான். அவை பறக்கும் விதத்தில் எந்தச் சிறப்பம்சமும் தென்படவில்லை. இருந்தாலும், அவனுக்கு ஏதோ ஒரு உணர்வு ஏற்பட்டது. அதன் பொருள் என்னவென்று பிடிபடவில்லை. பறவைகளின் இயக்கத்தைக் கண்காணித்துக்கொண்டே இருந்தான். ஏதாவது தென்படுகிறதா என்பதை அறிய முயன்றான். உரிமை கொண்டாடாத காதலைப் பற்றி அந்தப் பாலைவனப் பறவைகள் விவரிக்கக் கூடும்.

தூக்கம் வந்தது; உள்ளம் விழித்திருப்பதை விரும்பியது; ஆனாலும், தூங்குவதையே விரும்பினான். 'உலக மொழியைக் கற்றுக்கொண்டிருக்கிறேன். பறக்கின்ற வல்லூறுகள் உட்பட உலகின் ஒவ்வொரு நிகழ்வும் காட்சியும் எனக்குள் அர்த்தப்படத் தொடங்கியுள்ளன' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அந்த மனோலயத்தில் தான் காதல் வயப்பட்டிருப்பதற்காக நன்றியுணர்வுகொண்டான். காதல் வயப்படும் போது, அவை உணர்த்தும் அர்த்தங்கள் அதிகமாகிவிடுகின்றன என்றும் நினைத்தான்.

திடீரென வல்லூறுகளில் ஒன்று வானில் எம்பிப் பறந்து மற்றதைத் தாக்கியது. அதே சமயம் பையனின் முன் ஒரு மாயத் தோற்றம் விர்ரிட்டது. உருவிய வாள்களுடன் ஒரு படை பாலைவனச் சோலைக்குள் புகுந்தது. உடனே அந்தக் காட்சி மாயமாய் மறைந்துவிட்டது. இவன் அதிர்ந்து போனான். கானல் நீர்க் காட்சிகளைப் பற்றி மக்கள் பேசுவதைக் கேட்டிருக்கிறான். இவனேகூட சில சமயங்களில் பார்த்திருக்கிறான். ஆசைகளின் திணிவு மிகுதியால் பாலைவன மணற்பரப்பின் மீது மெய்யாகவே கிடைத்துவிட்டதைப் போல பொய்யாகக் காட்சியளிக்கும். ஆனால், பாலைவனச் சோலைக்குள் படைகள் ஊடுருவ வேண்டும் என்று ஒருபோதும் ஆசைப்பட்டதில்லை என்பது உறுதி.

அந்தக் காட்சியை மறந்துவிட்டுத் தனது மோன நிலைக்கே திரும்ப விரும்பினான். பாலைவனத்தின் மீதும் அங்கிருந்த பாறைகளின் மீதும் படிந்திருந்த இளஞ்சிவப்பு நிழல்களின் மீது தனது கவனத்தைக் குவிக்க முயன்றான். அதற்கு அனுமதிக் காத வகையில் அவனுடைய உள்ளத்தில் ஏதோ ஒன்று உறுத்திக்கொண்டே இருந்தது.

"எப்போதும் சகுனங்களின் படி நட" என்று கிழட்டுராஜா சொல்லியிருந்தார். இவன் தான் கண்ட காட்சியை நினைவு படுத்திப் பார்த்தான்; மெய்யாகவே அது நடக்கப் போகிறது என்று உணர்ந்தான்.

எழுந்து ஈச்ச மரங்களை நோக்கி நடந்தான். மீண்டும் ஒரு முறை தன்னைச் சுற்றியுள்ளவை எல்லாம் பேசுகிற மொழிகள் பலவற்றையும் உள்வாங்கினான். இம்முறை பாலை வனம் பாதுகாப்பாகிவிட்டது. பாலைவனச் சோலைதான் ஆபத்துக்குள்ளாகிவிட்டது.

அஸ்தமனச் சூரியனைக் கவனித்தபடி ஒரு ஈச்சமரத்தடி யில் ஒட்டகமோட்டி அமர்ந்திருந்தார். மணல் திட்டுகளின் மறுபுறமிருந்து இவன் தென்படுவதைக் கண்டுகொண்டார்.

"போர்ப்படை வந்துகொண்டிருக்கிற காட்சி ஒன்று எனக்குத் தென்பட்டது" என்று இவன் சொன்னான்.

"இந்தப் பாலைவனம் மனித இதயங்களைக் காட்சிகளால் நிறைக்கும்" என்று ஒட்டகமோட்டி பதிலிறுத்தார்.

ஆனால், இவன் அவருக்கு வல்லூறுகளைப் பற்றிச் சொன் னான். அவை பறப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே தான் திடீரென உலக ஆன்மாவினுள் மூழ்கிவிட்டதாக உணர்ந்த தாகவும் சொன்னான்.

இவன் சொன்னது ஒட்டகமோட்டிக்குப் புரிந்தது. இந்தப் புவிப்பரப்பின் மீதுள்ள எந்த ஒரு பொருளும் மற்றெல்லாப் பொருள்களினுடைய சரித்திரமனைத்தையும் வெளிப்படுத்தக் கூடும் என்பது அவருக்குத் தெரியும். புத்தகத்தின் ஏதேனும் ஒரு பக்கத்தைத் திறப்பதானாலும், ஒருவருடைய கையைப் பார்ப்பதானாலும், சீட்டுக் கட்டில் ஒரு சீட்டை மாற்றுவதானா லும் பறவைகள் பறப்பதைக் கவனிப்பதானாலும் – அந்தக் கணத்தைய அவருடைய அனுபவத்தோடு பிணைக்கப்பட்டிருப் பதாகக் காணலாம். உண்மையில் அத்தகைய நிகழ்வுகள் தாமா கவே எதையும் வெளிப்படுத்திவிடுவதில்லை. தம்மைச் சுற்றி நிகழ்வதைக் காணுகின்ற மக்கள்தான் உலக ஆன்மாவை ஊடு ருவுவதற்கான வழிவகைகளை அவற்றின் மூலம் தேடுகின்றனர்.

உலக ஆன்மாவை ஊடுருவுவதற்கான வழிவகைகளை ஆதாரமாகக்கொண்டு பிழைப்பு நடத்துகிறவர்கள் பாலைவனத்தில் நிறையவே இருந்தனர். அவர்களைச் சாமியார்கள் என்பர். பெண்களும் முதியவர்களும் அவர்களைக் கண்டு அஞ்சினர். அவர்களிடம் சோசியம் பார்த்து ஆதிவாசிகளுக்கும் சலித்து விட்டது. ஏனென்றால், சாகப் போவது ஒருவன் தலையெழுத்து என்று முன்பே தெரிந்துகொண்டால் போரிடுவதில் திறமை காட்ட விருப்பமில்லாமல் போய்விடும். போரின் சுவையையும் அனுபவிக்க விரும்பினர். நடக்கப் போவது என்ன என்பதை ஏற்கனவே அல்லா எழுதி வைத்துவிட்டார். அவர் எழுதியிருப்பது எதுவாக இருந்தாலும் அது எப்போதும் மனிதகுலத்திற்கு நன்மை பயப்பதாகவே இருக்கும். ஆகையால், நிகழ்காலத்தின் வாழ்வை மட்டுமே ஆதிவாசிகள் விரும்பினர். நிகழ்காலம் வியப்புகள் நிறைந்தது. பல விஷயங்களில் அவர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியவர்கள்: எதிரியுடையவாள் எங்கே? எங்கே அவன் குதிரை? உயிர்த்திருப்பதற்காக எந்த விதமாக வாளை வீசுவான்? ஒட்டகமோட்டி ஒரு போராளி அல்ல; அவர் துறவியிடம் ஜோசியம் பாப்பவர். பெரும்பாலானவர்கள் சொல்வது சரியாக இருக்கும். சிலர் சொல்வது பலிக்காது. ஒரு நாள் அவர் பார்த்திருந்ததிலேயே மிகவும் வயதான சாமியார் ஒருவரைப் பார்த்தார். அந்தச் சாமியார் பார்ப்பதற்கு ரொம்பவுமே பயங்கரமான ஆள். எதிர்காலத்தின் மீது உனக்கென்ன அப்படியொரு ஆர்வம் என்று அவர் ஒட்டகமோட்டியிடம் கேட்டார்.

"ஆமாம், அப்பொழுதானே சில காரியங்களைச் செய்ய முடியும். நடக்க வேண்டாமென்று விரும்புகிற விஷயங்களை மாற்றிக்கொள்ளலாமல்லவா."

"அப்படியானால், அவை உன்னுடைய எதிர்காலத்தின் ஒரு பகுதியாக இல்லாமற் போய்விடும்."

"சரி, வருவதை எதிர்கொள்ள என்னைத் தயார் செய்து கொள்வதற்காகவாவது எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

"நல்லது நடக்கும் என்றால் அது உனக்கு இன்ப அதிர்ச்சியாக இருக்கும்; நடக்கப்போவது தீயதாக இருக்குமானால், முன்கூட்டியே தெரிந்துபோனமையால் அது நிகழ்வதற்கு முன்பிருந்தே வருத்தப்பட நேரிடும்."

"நான் ஒரு மனிதன் என்பதனாலேயே எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எதிர்காலத்தின் அடிப்படையில்தான் மனிதர்களின் வாழ்க்கையே அமைகிறது."

குச்சிகளை உருட்டி ஜோசியம் சொல்லும் சாமியார் அவர். தரையில் அவற்றை உருட்டி அவை விழுகிற விதத்தின் அடிப் படையில் பலன்களைச் சொல்வார். அன்றைக்கு அவர் அவற்றை உருட்டவில்லை; ஒரு துண்டுத்துணியில் சுருட்டி மடக்கித் தனது பைக்குள் போட்டுக்கொண்டார்.

"ஜனங்களுக்கு ஜோசியம் சொல்லித்தான் நான் பிழைக் கிறேன். குச்சிகளை உருட்டும் வித்தை எனக்குத் தெரியும். எல்லாவற்றையும் எழுதி வைத்துள்ள இடத்திற்கு ஊடுருவிச் செல்வதற்கு அவற்றை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதும் எனக்கு தெரியும். அங்கே கடந்த கால விஷயங் களைத் தெரிந்துகொள்ள மறந்து போனவற்றையெல்லாம் கண்டுபிடித்துவிடுவேன், நிகழ்காலத்தில் தென்படுகிற சகுனங் களையும் புரிந்துகொள்வேன்.

"என்னிடம் ஜோசியம் பார்ப்பவர்களுக்கு நான் எதிர் காலத்தை அப்படியே சொல்லிவிடுவதில்லை. எதிர்காலத்தைப் பற்றிய யூகங்களையே சொல்வேன். எதிர்காலம் இறைவனுக் குரியது. அவர் மட்டுமே அசாதாரணமான சந்தர்ப்பங்களில் எதிர்காலத்தை வெளிப்படுத்துவார். நான் எதிர்காலத்தை யூகிப்பது எப்படி? நிகழ்காலத்தில்தான் ரகசியமே இருக்கிறது. நிகழ்காலத்தை உன்னிப்பாகக் கவனித்தாயானால், அதை மேம்படுத்திக்கொள்ளலாம். நிகழ்காலத்தை மேம்படுத்தி விட்டால் எதிர்காலமும் நல்லதாகவே இருக்கும். எதிர் காலத்தை மறந்துவிடு; கடவுள் தன் குழந்தைகளிடம் அன்பு செலுத்துகிறார் என்பதில் நம்பிக்கை கொள்; போதனைகளின் படி அன்றாட வாழ்க்கையை அமைத்துக்கொள்; ஒவ்வொரு நாளும் தனக்குள் ளாகவே எல்லையற்ற எதிர்காலத்தைக் கொண்டு வருகிறது."

"எந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் இறைவன் எதிர் காலத்தைப் பார்க்க அனுமதிப்பார்" என்று ஒட்டகமோட்டி கேட்டார்.

"அதை அவராகவே வெளியிடும்போதுதான் தெரியும். அபூர்வமாகத்தான் அப்படி நடக்கும். அப்படிச் செய்வது கூட, ஒரே ஒரு காரணத்துக்காகத்தான்: மாற்றப்பட வேண்டியது என்று எழுதப்பட்ட எதிர்காலத்திற்காக."

பையனுக்கு எதிர்காலத்தின் ஒரு பகுதியைக் கடவுள் காட்டிவிட்டார் என்று ஒட்டகமோட்டி நினைத்தார். இவன் ஒரு கருவியாகப் பயன்பட வேண்டுமென்று அவர் ஏன் விரும்பினார்?

“போ, ஆதிவாசித் தலைவர்களிடம் பேசு; நெருங்கிக் கொண்டிருக்கும் படைகளைப் பற்றிச்சொல்” என்று ஒட்டக மோட்டி சொன்னார்.

“என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள்.”

“அவர்கள் பாலைவனத்து ஆட்கள்; அவர்கள் சகுனங்களுக்குப் பழகிப் போனவர்கள்”

“அப்படியானால், ஒருவேளை அவர்களுக்கு ஏற்கனவே அதுபற்றித் தெரிந்திருக்கும்”

“அதைப் பற்றியெல்லாம் தற்பொழுது அவர்களுக்குக் கவலையில்லை. எதையாவது அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அல்லா விருப்பப்பட்டார் என்றால், யாராவது ஒருத்தர் அவர்களிடம் தெரிவிப்பார்கள் என்பதை நம்புபவர் கள். இது போன்ற சம்பவங்கள் இதற்குமுன் நிறைய நிகழ்ந்துள் ளன. இந்த முறை அந்த ஆள் நீதான்.”

பையன் பாத்திமாவை நினைத்துக்கொண்டான்; ஆதிவாசித் தலைவர்களைப் பார்க்கப் போவதென்று தீர்மானித்துவிட்டான்.

✧

பாலைவனச் சோலையின் மத்தியில் பெரிய வெண்மைநிறக் கூடாரத்தின் முன் காவல் காத்து நின்றிருந்த காவலாளியைப் பையன் அணுகினான்.

“தலைவர்களைப் பார்க்க வேண்டும்; பாலைவனத்தி லிருந்து சகுனங்களைக் கொண்டு வந்திருக்கிறேன்.”

பதிலேதும் சொல்லாமல் காவலாளி கூடாரத்திற்குள் சென்றான்; அங்கேயே சிறிது நேரம் இருந்தவன் வெளியே வந்தபோது வெண்ணிற ஆடையும், தங்க அணிகலன்களும் தரித்திருந்த ஓர் அரேபிய இளைஞன் அவனுடன் வந்தான். அந்த இளைஞனிடம் தான் கண்டவற்றைப் பையன் சொன் னான். இவனை அங்கேயே காத்திருக்கச் சொல்லிவிட்டுக் கூடாரத்திற்குள் அவன் மறைந்துவிட்டான்.

இரவு கவிழ்ந்தது; போராளிகளும் வியாபாரிகளும் கலவை யாக உள்ளே போவதும் வருவதுமாக இருந்தனர். குடியிருப்பின் தீபங்கள் ஒவ்வொன்றாக அணைந்தன. பாலைவனத்தைப் போலவே சோலையும் அமைதியில் ஆழ்ந்துவிட்டது. பெரிய கூடாரத்தில் இருந்த விளக்குகள் மட்டுமே எரிந்துகொண்டிருந் தன. அந்த நேரம் முழுவதும் பையன் பாத்திமா நினைவாகவே இருந்தான். அவளுடன் கடைசியாக மேற்கொண்ட உரை

யாடலை மட்டும் இன்னமும் இவனால் புரிந்துகொள்ள இயலவில்லை.

கடைசியாக, பல மணி நேரக் காத்திருப்புக்குப் பின்னர் காவலாளி இவனை உள்ளே வரும்படி கூப்பிட்டான். உள்ளே இருந்தவற்றைப் பார்த்ததும் பையன் அசந்து போனான். இது போன்றதொரு கூடாரம் பாலைவனத்தின் மத்தியில் இருக்கக் கூடுமென்று இவன் ஒருபோதும் கற்பனை செய்த தில்லை. அழகு மிகுந்த கம்பளங்கள் தரையில் விரிக்கப்பட் டிருந்தன. அது போன்றவற்றின் மீது அது வரை இவன் நடந்த தில்லை. கூரையிலிருந்து தங்கத்தால் வேலைப்பாடுகள் செய்யப் பட்ட விளக்குகள் தொங்கின. ஒவ்வொன்றிலும் மெழுகுவர்த்தி எரிந்துகொண்டிருந்தது. கூடாரத்தின் பின் கட்டில் அரைவட்ட வடிவத்தில் தலைவர்கள் அற்புத வேலைப்பாடுகள் கொண்ட வெள்ளி இருக்கைகளில் வீற்றிருந்தனர். தின்பண்டங்களும் தேநீர்க் குவளைகளும் நிரம்பிய வெள்ளித் தட்டுக்களை ஏந்திய வேலைக்காரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். வேறு சிலர் ஹுக்காக்களுக்குத் தணப்பேற்றிக்கொண்டிருந் தனர். புகையின் இனிய நறுமணம் சுற்றப்புறத்தை நிரப்பியது.

தலைவர்கள் எட்டுப்பேர்; மிகவும் முக்கியமானவர் யார் என்று இவனுக்கு உடனே தெரிந்துவிட்டது. அரைவட்ட வடிவத்தின் நடுவில் வெண்ணிற ஆடையும் தங்க அணிகலன் களும் அணிந்து அமர்ந்திருக்கும் அரேபியர்தான். சற்று முன் இவனுடன் பேசிய அரேபிய வாலிபன் அவருக்கருகில் இருந்தான்.

இவனை நோட்டமிட்டபடியே தலைவர்களில் ஒருவர் கேட்டார்: “சகுனங்களைப் பற்றிப் பேசிய இந்தப் புதியவன் யார்?”

“நான்தான்” என்று பையன் பதில் சொன்னான். அத்துடன், தான் கண்டவற்றை எடுத்துரைத்தான்.

“பரம்பரை பரம்பரையாக நாம் இங்கே இருப்பது தெரிந் திருந்தும் இந்தப் பாலைவனம் ஏன் இந்த விஷயங்களை எல்லாம் ஒரு புது ஆளிடம் சொல்ல வேண்டும்?” – இன்னொரு தலைவர் பேசினார்.

பையன் சொன்னான்: “ஏனென்றால், பாலைவனத்திற்கு இன்னமும் என்னுடைய கண்கள் பழக்கப்படவில்லை. பாலை வனத்திலேயே இருக்கிறவர்கள் கண்கள் பார்க்க முடியாததைக் கூட என்னால் பார்க்க முடியும்.”

அத்துடன், உலக ஆன்மாவைப் பற்றிக்கூட எனக்குத் தெரியும் என்று இவன் தனக்குள் நினைத்துக்கொண்டான்.

"பாலைவனச் சோலை நடுநிலையான பூமி; ஒரு பாலை வனச் சோலையை யாரும் தாக்குவதில்லை" என்று மூன்றாவது தலைவர் கருத்துத் தெரிவித்தார்.

"நான் பார்த்ததைத்தான் உங்களிடம் சொல்கிறேன். நம்ப விருப்பமில்லை என்றால், விட்டுவிடலாம்."

தலைவர்கள் சைகைகள் கலந்த விவாதத்தில் ஆழ்ந்து விட்டனர். அவர்களுடைய அரபு மொழிப் பேச்சுவழக்கு இவனுக்குப் பிடிபடவில்லை. இவன் அங்கிருந்து புறப்பட எத்தனித்தபோது காவலாள் அங்கேயே இருக்கும்படி சொன்னான். இந்தப் பையனுக்கு பயம் வந்துவிட்டது. ஏதோ தவறு நடக்கப் போவதாகச் சகுனம் சொன்னது; பாலைவனத்தில் பார்த்ததை ஒட்டகமோட்டியிடம் சொன்னதற்காக வருத்தப் பட்டான்.

திடீரென்று, மத்தியில் அமர்ந்திருந்த முதியவர் இனம் புரியாதபடி புன்னகைத்தார். இவனுக்குச் சற்றுத் தெளிவு ஏற் பட்டது. அவர் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை. சொல்லப் போனால், அதுவரை ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஆனால், பையனுக்கு ஏற்கனவே உலகமொழி பழகிப்போய் விட்டது. கூடாரத்தை நிரப்பியிருந்த அமைதியின் அதிர்வுகளை இவனால் உணர முடிந்தது. தான் அங்கு சென்றது சரிதான் என்றது உள்ளுணர்வு.

விவாதம் முடிவடைந்தது. தலைவர்கள் சிறிது நேரம் அமைதியாக முதியவர் பேசியதைக் கவனித்தனர்; பிறகு, முதியவர் இவன் பக்கம் திரும்பினார். இம்முறை அவருடைய தோற்றம் இறுக்கமாகவும் அந்நியமாகவும் இருந்தது.

முதியவர் இவனுக்கும் புரியக்கூடிய பேச்சு வழக்கில் அப்போது பேசினார்: "இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு ஒரு தொலைதூர தேசத்திலே, கனவுகளை நம்பக்கூடிய ஒரு ஆளை இருட்டுக் கொட்டகையில் போட்டு அடைத்து, அப்புறம் அடிமையாக விற்றுவிட்டார்கள். அந்த ஆளை நம் வியாபாரி கள் வாங்கி எகிப்துக்குக் கொண்டு வந்தார்கள். கனவுகளை நம்புவோர் அவற்றின் பலன்களையும் சொல்வார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும்."

முதியவர் தொடர்ந்தார்: "மெலிந்த பசுக்களைப் பற்றியும் கொழுத்த பசுக்களைப் பற்றியும் யாரோ ராஜா கனவு கண்ட காலத்தில் நான் சொல்கிற அந்த ஆள் எகிப்தைப் பஞ்சத்தி லிருந்து காப்பாற்றினான். அவன் பெயர் ஜோசப். உன்னைப் போலவே அவனும் புது நாட்டிலே புதிய ஆள்தான்; அவனுக் கும் ஏறத்தாழ உன் வயதுதான் இருக்கும்."

சற்று நேரம் பேசுவதை நிறுத்தினார். அவருடைய கண்கள் அப்பொழுதுங்கூட நட்பாக இல்லை.

"நாங்கள் எப்பொழுதுமே மரபை அனுசரிப்பவர்கள். அந்தக் காலத்திய மரபுதான் எகிப்தைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்றியது. எகிப்தியர்களை உலகத்திலேயே பெரும் பணக் காரர்களாக ஆக்கியது. பாலைவனத்தை எப்படிக் கடப்பது, குழந்தைகள் எவ்வாறு திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதையும் மரபுதான் எங்களுக்குப் போதிக்கிறது. பாலைவனச் சோலை நடுநிலையான பூமி என்பதையும் மரபுதான் சொல்கிறது. ஏனென்றால், இருதரப்பினருக்குமே பாலைவனச் சோலைகள் இருக்கின்றன. ஆகவே, இருதரப்புமே தாக்குதலுக்கு உட்படும்."

முதியவர் பேசியபோது யாரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. "ஆனாலும் அதே மரபுதான் பாலைவனத்தின் செய்திகளையும் நம்பவேண்டும் என்கிறது. நமக்குத் தெரிந்தவை அனைத்தையுமே பாலைவனம்தான் நமக்குப் போதித்தது."

முதியவர் ஒரு சைகை காட்டினார். அனைவரும் எழுந்து நின்றனர். கூட்டம் முடிந்தது. ஹுக்காக்கள் அணைக்கப்பட்டன. காவலாளிகள் விறைப்பாக நின்றனர். பையன் புறப்படத் தயாரானான்; முதியவர் மீண்டும் பேசினார்:

"பாலைவனக் குடியிருப்பில் யாரும் ஆயுதங்களை வைத் திருக்கக் கூடாது என்கிற உடன்படிக்கையை நாளைக்கு மீறப் போகிறோம். பகல் முழுவதும் எதிரிகளை எதிர்பார்த்துக் கொண்டு இருப்போம். பொழுது சாய்ந்ததும் ஆயுதங்களை எல்லாம் என்னிடம் ஒப்படைத்துவிட வேண்டும். எதிரில் சாகும் பத்துப் பேருக்கு ஒரு தங்கக் காசு வீதம் உனக்குக் கிடைக்கும்.

"அவர்களாகச் சண்டைக்கு வருகிற வரைக்கும் நாம் ஆயுதங்களைப் பயன்படுத்திவிடக் கூடாது. ஆயுதங்களும் பாலைவனத்தைப் போலவே ஏடாகூடமானவை. பயன்படுத் தாமல் விட்டுவிட்டாலும் தேவைப்படும் போது பயன்படாமல் போய்விடும். நாளைப் பகல் முடிவதற்குள் ஆயுதங்களில் ஒன்றையாவது பயன்படுத்தத் தேவையில்லாமல் போகும் பட்சத்தில் உன்மீது ஒன்று பயன்படுத்தப்படும்."

பையன் கூடாரத்தை விட்டுப் புறப்பட்ட போது முழு நிலவின் ஒளியில் மட்டுமே அந்தக் குடியிருப்புப் பிரகாசித்தது. இவனுடைய கூடாரத்தை அடைய இன்னும் இருபது நிமிஷம் பிடிக்கும். தனது பாதையில் நடக்கத் தொடங்கினான்.

நிகழ்ந்தவை இவனை அச்சுறுத்தின. உலக ஆன்மாவை அடைகிற வழியில் வெற்றி கண்டுவிட்டான். அதற்கான

விலையாக இவன் தன் உயிரையே பலி கொடுக்க வேண்டும் போலும். அது ஓர் அஞ்சத்தக்க பந்தயம்தான்; ஆடுகளை விற்றுவிட்டு இலக்கினை நோக்கிப் பயணிக்கத் தொடங்கிய நாள் முதற்கொண்டு ஆபத்தான பந்தயங்களில் ஈடுபட்டுக் கொண்டேதான் இருந்தான். ஒட்டகமோட்டி சொன்னதைப் போல நாளைக்குச் சாவது ஒன்றும் பின்னொரு நாளைக்குச் சாவதைக் காட்டிலும் மோசமானது அல்ல. வாழ்வதற்காகவோ அல்லது இந்த உலகத்தைவிட்டுப் புறப்படுவதற்காகவோதான் ஒவ்வொரு நாளும் விடிகிறது. எல்லாமே ஒரே வார்த்தையில் அடக்கம்: "மக்தூப்."

அமைதியாகத் தொடர்ந்து நடந்தான். இவனுக்கு வருத்தம் ஒன்றும் இல்லை. நாளை இவன் சாக நேர்ந்தால் எதிர் காலத்தை மாற்ற இறைவன் விருப்பப்படவில்லை என்பதுதான் காரணமாக இருக்கக்கூடும். ஜலசந்தியைக் கடந்து பயணித்த பிறகு, பளிங்குக் கடையில் பணியாற்றிய பிறகு, பாலைவனத் தின் அமைதியையும் பாத்திமாவின் விழிகளையும் அறிந்த பின்புதானே சாகப் போகிறான். நெடு நாட்களுக்கு முன்பே வீட்டைவிட்டுப் புறப்பட்டவன் தன்னுடைய ஒவ்வொரு நாளையும் மிக அழுத்தமாகவே வாழ்ந்து தீர்த்துவிட்டான். நாளைக்கே செத்துப் போனாலும் மற்ற இடையர்களைக் காட்டிலும் ஏற்கனவே இவன் அதிகமாக அனுபவித்தவனாகி விடுவான். அதற்காகப் பெருமைப்பட்டான்.

திடீரென இடியோசை ஒன்று கேட்டது. அதுவரை அறிந்திராத காற்று இவனைத் தூக்கித் தரையில் வீசியது. கண்ணுக்குப் புலப்படாதபடி முழு நிலவையே மறைக்கும் படியாக அடர்ந்து எழும்பிய புழுதிப் படலம் அந்தப் பகுதி முழுவதும் சுழன்று சுற்றியது. மதர்த்த வெண்குதிரை ஒன்று இவனது தலைக்கு மேலே தனது முன்னங்கால்களைத் தூக்கியபடி குலை நடுக்கும்படி கனைத்துக்கொண்டிருந்தது.

கண்ணை மறைத்த புழுதிப்படலம் ஒருவாறு அடங்கிய போது இவன் கண்ட காட்சி நடுநடுங்கச் செய்தது. முழுக்கக் கறுப்பு உடை தரித்திருந்த வீரனொருவன் குதிரையின் மீது அமர்ந்திருந்தான். அவனது இடது தோளின் மீது ஒரு வல்லூறு அமர்ந்திருந்தது. தலைப்பாகை அணிந்திருந்த அவனது கண் களைத் தவிர முகம் முழுவதும் கருந்துணியால் மூடப்படிருந்தது. பாலைவன ஒற்றனைப் போலிருந்தான். அவனுடைய தோற்றத் தில் ஒரு தூதுவன் என்பதற்கும் மேலாக அதிகார தோரணை இருந்தது. நீளமான, வளைந்த வாள் ஒன்றினைச் சேணத்தில் பொருத்தப்பட்டிருந்த உறையிலிருந்து உருவினான். நிலாவெளிச் சத்தில் வாள் பளபளத்தது.

அல் – பயோமில் நின்றிருந்த ஐம்பதாயிரம் ஈச்சமரங்களிலும் எதிரொலிக்கும்படியானதொரு உரத்த குரலில் கத்தினான்: “வல்லூறுகள் பறக்கும் விதம் பற்றிய சகுனத்தின் பலனைச் சொல்ல யாருக்குத் துணிச்சல்?”

“அந்தத் துணிச்சல் எனக்குத்தான்” என்று பையன் சொன்னான். குளம்படியில் நாத்திகர்கள் மண்டியிட வெண் குதிரை மீது வீற்றிருந்த சந்தியாகு மாத்தமோரஸ் சிலை நினைவுக்கு வந்தது. ஏற்றிருக்கும் பாத்திரங்கள்தாம் மாறி இருக்கின்றனவே தவிர, அந்த ஆள் சரியாக அந்தச் சிலை போலவே தோற்றமளித்தான்.

“துணிச்சலோடு நான்தான் அப்படிச் செய்தேன்” என்று திரும்பவும் சொன்னான். சொன்னவன் வாளின் வீச்சை ஏற்றுக்கொள்ளும் வகையில் தலையைத் தாழ்த்திக் காட்டினான். “பல உயிர்கள் காப்பாற்றப்படும். ஏனென்றால், உலகத்தின் ஆன்மாவின் வழியாக என்னால் பார்க்க முடிந்தது.”

வாள் விழவில்லை; பதிலாக அதனை மெல்லத் தாழ்த்தி பையனின் நெற்றியில் கூர்முனையை நிறுத்தினான். ஒரு துளி ரத்தம் படிந்தது.

குதிரை வீரன் சற்றும் அசையவில்லை. பையனும் அப்படியே. தப்பித்து ஓடிவிடக்கூட இவனுக்குத் தோன்றவில்லை. சாகப் போகிறான். அதுவும் பாத்திமாவின் பொருட்டு. சகுனங்கள் இறுதியில் உண்மையாகிவிட்டன. அங்கே இவன் எதிரியுடன் நேருக்கு நேராக. ஆனாலும் சாவைப் பற்றிக் கவலைப் படத் தேவை ஏதுமில்லை. உலகத்தின் ஆன்மா இவனுக்காகக் காத்திருக்கிறது. விரைவில், அதில் ஒரு பகுதியாகப் போகிறான். நாளை இவனுடைய எதிரியும்கூட அந்த ஆன்மாவில் ஒரு பகுதியாக ஆகலாம்.

அந்தப் புதியவன் இவனுடைய நெற்றியில் வாளை நிறுத்தியபடியே இருந்தான். “ஏண்டா வல்லூறுகள் பறந்ததன் பலனைச் சொன்னாய்?”

“சொல்ல வேண்டும் என்று அந்தப் பறவைகள் விரும்பியதைத்தான் சொன்னேன். பாலைவனக் குடியிருப்பினை அவை காப்பாற்ற விரும்பின. நாளை நீங்கள் அனைவருமே சாக நேரலாம். ஏனெனில், அங்கே உங்களிடம் இருப்பதைக் காட்டிலும் அதிக ஆட்கள் இருக்கின்றனர்.”

வாளின் முனை இருந்த இடத்திலேயே இருந்தது. “அல்லாவின் விருப்பத்தை மாற்ற நீ யார்?”

“படைகளைப் படைத்தவர் அல்லா, அவரே வல்லூறுகளையும் படைத்தார். பறவைகளின் மொழியினை எனக்குக்

கற்றுக் கொடுத்தவர் அல்லா. எல்லாமே அதே கையினால்தான் எழுதப்பட்டிருக்கின்றன." ஒட்டகமோட்டியின் வார்த்தைகளை நினைவுபடுத்திக்கொண்டு இந்தப் பையன் சொன்னான்.

பையனின் நெற்றியிலிருந்து வாள் நகர்ந்தது. இவனுக்கு அளவு கடந்த ஆசுவாசம் ஆனாலும், பயந்து ஓடிவிடவில்லை.

"ஜாக்கிரதை! குறி சொல்கிற வேலையெல்லாம் வேண் டாம்! எழுதப்பட்ட எதையும் மாற்றுவதற்கு வழியில்லை."

"நான் பார்த்ததெல்லாம் ஒரு படை மட்டுமே. போரின் முடிவை நான் பார்க்கவில்லை."

இந்தப் பதிலால் அந்தப் புதியவன் திருப்தியடைந்தது போலத் தோன்றியது. ஆனாலும், அப்பொழுதும், வாளைக் கையில் ஏந்தியபடியே இருந்தான். "ஒரு புதிய ஆளான நீ இந்தப் புதிய பூமியில் என்ன செய்கிறாய்?"

"நான் எனது இலக்கை நோக்கிச் சென்றுகொண்டிருக் கிறேன்; அதை உன்னால் புரிந்துகொள்ள முடியாது."

அந்தப் புதியவன் வாளை உறைக்குள் போட்டான்; பையனுக்கு நிம்மதி.

"உன்னுடைய துணிச்சலைச் சோதிக்க வேண்டியதாகப் போயிற்று" என்று புதியவன் சொன்னான். "உலக மொழியைப் புரிந்துகொள்ளத் துணிச்சல் மிக மிக அவசியம்."

பையனுக்கு வியப்பாக இருந்தது. மிகச் சிலருக்கு மட்டுமே தெரிந்த விஷயங்களைப் பற்றி இவன் பேசிக்கொண்டிருந்தான்.

அவன் தொடர்ந்தான்: "இவ்வளவு தூரம் வந்துவிட்ட பிறகு விட்டுவிடாதே! பாலைவனத்தின்பால் ஆசை வைக்க வேண்டும். ஆனாலும், முழுமையாக நம்பிவிடக் கூடாது. ஏனென்றால், பாலைவனம் எல்லோரையுமே சோதனைக்கு உள்ளாக்கும். ஒவ்வொரு அடியும் சவால்தான். கவனத்தைச் சிதறவிட்டால் கொன்றுவிடும்."

அவன் சொன்னதெல்லாம் கிழட்டு ராஜாவை நினைவு படுத்தியது.

"போராளிகளும் வந்து, நாளைய பொழுதும் சாயும் வரை உன் தலையும் தப்புமானால் என்னை வந்து பார்" என்றான் அந்தப் புதியவன்.

வாளைச் சுழற்றிய அதே கை அப்போது சவுக்கைப் பிடித்திருந்தது. புழுதிப் படலத்தைக் கிளப்பிவிட்டபடி குதிரை மீண்டும் பின்னங்கால்களில் நின்றது.

குதிரைவீரன் பாய்ந்து செல்லும்போது இந்தப் பையன் கத்தினான்: "உன்னுடைய இருப்பிடம் எங்கே?"

சவுக்கைப் பிடித்திருந்த கை தென்திசையைக் காட்டியது.

பையன் ரஸவாதியைச் சந்தித்துவிட்டான்.

அடுத்த நாள் காலையில் ஆயுதமேந்திய இரண்டாயிரம் வீரர்கள் அல் – பயோம் ஈச்சமர மறைவில் பரவலாக நின்றிருந் தனர். சூரியன் உச்சியை அடைவதற்கு முன்பாக ஐந்நூறு ஆதிவாசி வீரர்கள் தொடுவானத்தில் தோன்றினார்கள். வட திசையிலிருந்து அந்தக் குதிரைப் படையினர் குடியிருப்பினுள் நுழைந்தனர். அது அமைதியான ஊடுருவல் போலத்தான் தோன்றியது. ஆனால், அவர்கள் தமது அங்கிகளுக்குள் ஆயுதங் களை ஒளித்து வைத்திருந்தனர். அல்ஃபயோம் மத்தியில் இருந்த வெண்மை நிறக் கூடாரத்தை அடைந்ததும் பட்டாக் கத்திகளையும் துப்பாக்கிகளையும் வெளியே உருவினர்; காலியாக இருந்த கூடாரத்தைத் தாக்கினர்.

குடியிருப்பு ஆட்கள் பாலைவனத்திலிருந்து வந்த குதிரை வீரர்களைச் சூழ்ந்துகொண்டனர். அரைமணி நேரத்தில் அத்து மீறி நுழைந்தவர்களில் ஒருவனைத் தவிர அத்தனை பேரும் மடிந்தனர். ஈச்சமரக் கூட்டத்தின் மற்றொருபுறம் குழந்தைகள் பாதுகாக்கப்பட்டிருந்ததால் என்ன நடந்ததென்பதை அவர்கள் யாரும் பார்க்கவில்லை. பெண்கள் அனைவரும் தத்தம் கூடாரங் களிலேயே தங்கிவிட்டனர். தமது கணவன்மார்களைக் காப் பாற்றக் கோரித் தொழுதுகொண்டிருந்தனர். நடந்த சண்டை எதையும் அவர்களும் பார்க்கவில்லை. தரையில் பிணங்கள் மட்டும் கிடக்கவில்லை என்றால் அந்த பாலைவனச் சோலை யில் அன்றைய தினம் என்றைக்கும் போலவே ஒரு சாதாரண நாளாகக் காட்சி அளித்திருக்கும்.

பிழைத்திருந்த ஒற்றை ஆள் அந்தப் படையின் தளபதி. குடியிருப்பின் தலைவர்கள் முன்னிலையில் அன்றைய மதியம் அவன் நிறுத்தப்பட்டான். மரபுக்குப் புறம்பாக நடந்ததற்கான காரணத்தை வினவினர். நீண்ட நாட்களாகப் போர் நடந்து கொண்டிருந்ததால் தனது வீரர்கள் பசியாலும் தாகத்தாலும் சோர்ந்து போயினர் என்றும், அக்குடியிருப்பைக் கைப்பற்றி மீண்டும் போருக்குத் திரும்பும் வகையில் தம்மைத் தயார் படுத்திக்கொள்ளத் தீர்மானித்ததாகவும் தளபதி சொன்னான்.

ஆதிவாசி வீரர்களுக்காகத் தான் மிகவும் வருந்தியதாகவும் ஆனாலும், மரபு புனிதமானது என்றும் குடியிருப்பின் தலைவர்

சொன்னார். தளபதி மரியாதையற்ற ரணத்திற்கு ஆளாக வேண்டும் என்று ஆணையிட்டார். வாளாலோ, துப்பாக்கிக் குண்டாலோ அவனைக் கொல்லாமல் பட்டுப் போன ஈச்ச மரத்தில் தூக்கிலிட்டார். பாலைவனக் காற்றில் அவனது உடல் ஊசலாடியது.

பையனை அழைத்து ஐம்பது தங்கக் காசுகளைப் பரிசளித்தார் ஆதிவாசிகள் தலைவர். எகிப்திற்கு வந்த ஜோசப் பற்றிய தனது கதையை மீண்டும் சொன்னார்; பாலைவனச் சோலையின் ஆலோசகராக இருக்கும்படி வேண்டினார்.

✧

சூரியன் மறைந்து முதல் நட்சத்திரங்கள் காட்சியளிக்கத் துவங்கிய போது பையன் தென்திசை நோக்கிப் புறப்பட்டான். ஒரு வழியாகத் தனித்ததொரு கூடாரம் தென்பட்டது. அந்த வழியாகச் சென்ற அரேபியர் சிலர் அந்த இடம் பேய்கள் வசிக்கிற இடம் என்று சொன்னார்கள். ஆனாலும் அவன் அங்கேயே அமர்ந்து காத்திருந்தான்.

நிலா உச்சியை அடைந்த போது ரஸவாதியின் குதிரை கண்ணில் பட்டது. செத்துப்போன வல்லூறுகள் இரண்டு அவரது தோள்களில் தொங்கின.

"நான் இங்கே இருக்கிறேன்" என்று பையன் சொன்னான்.

"நீ இங்கே இருக்கக் கூடாதே" என்று ரஸவாதி பதிலுக்குச் சொன்னார். "உன்னுடைய இலக்கு இங்கே கொண்டு வந்து சேர்த்ததா?"

"ஆதிவாசிகளுக்கிடையே நடக்கிற சண்டையில் பாலைவனத்தைக் கடந்து செல்வதற்கு முடியவில்லை; அதனால்தான் இங்கே இருக்கிறேன்."

குதிரையிலிருந்து இறங்கிய ரஸவாதி கூடாரத்திற்குள் அவரோடு நுழையும்படி சைகை காட்டினார். பாலைவனச் சோலையில் இருந்த ஏராளமான கூடாரங்களைப் போலத் தான் அதுவும் இருந்தது. ரஸவாதத்தில் பயன்படுத்தும் உலைகளையும் கருவிகளையும் பையன் தேடினான். எதுவும் இல்லை. குவியலாகச் சில புத்தகங்கள், ஒரு சமையல் அடுப்பு, விசித்திரமாக வடிவமைப்புக்களைக் கொண்ட கம்பளங்கள் ஆகியவை மட்டுமே இருந்தன.

"உட்கார்! ஏதேனும் குடிப்போம்; பிறகு இந்தப் பருந்துகளைச் சாப்பிடுவோம்!"

இவனுக்குச் சந்தேகம்; முந்தைய தினம் இவன் பார்த்த அதே வல்லூறுகள்தானா அவை? ஆனால், இவன் பேச வில்லை. ரஸவாதி நெருப்பை மூட்டினார். நறுமணத்தால் அந்தக் கூடாரம் நிரம்பியது. ஹுக்காக்களின் மணத்தை விடவும் அது நன்றாக இருந்தது.

"என்னை எதற்குப் பார்க்க விரும்பினீர்கள்?" என்று பையன் கேட்டான்.

"சகுனங்களால்தான்" என்று ரஸவாதி பதிலளித்தார். "நீ வருவாய் என்றும் உனக்கு என் உதவி தேவை என்றும் காற்று சொன்னது."

"காற்று சொன்னது என்னைப் பற்றியல்ல; இன்னொரு அயல்நாட்டார்; ஆங்கிலேயர்; அவர்தான் உங்களைத் தேடிக் கொண்டிருந்தார்."

"அவர் முதலில் செய்ய வேண்டிய வேலை வேறு இருக் கிறது. ஆனாலும், அவர் சரியான திசையிலேதான் போய்க் கொண்டிருக்கிறார். இந்தப் பாலைவனத்தைப் புரிந்துகொள்ள முயற்சிசெய்ய ஆரம்பித்துவிட்டார்."

"என்னை எதற்காக...?"

"ஒருவன் எதையாவது உண்மையாகவே விரும்பினால் இந்தப் பிரபஞ்சமே அதை அவன் அடைவதற்குத் தேவையான திட்டம் தீட்டும்." அந்தக் கிழட்டு ராஜாவின் வார்த்தைகளை ரஸவாதி எதிரொலித்தார். இவனுக்குப் புரிந்துவிட்டது. இவனுடைய இலக்கை நோக்கிய பயணத்தில் உதவுவதற்கு இன்னொருவர் வந்துவிட்டார்.

"ஆக, எனக்குச் சொல்லித்தரப் போகிறீர்கள்?"

"இல்லை, நீ தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் ஏற்கனவே தெரிந்துகொண்டாய்; புதையல் இருக்கும் திசையை மட்டும் உனக்குக் காட்டப் போகிறேன்."

"ஆனால், ஆதிவாசிகளுடைய சண்டை நடக்கிறதே?"

"பாலைவனத்தில் என்ன நடக்கிறதென்று எனக்கும் தெரியும்."

"புதையல் எனக்கு ஏற்கனவே கிடைத்துவிட்டது; ஓர் ஒட்டகம் வைத்திருக்கிறேன், பளிங்குக் கடையிலேயிருந்து கொண்டு வந்த பணம் இருக்கிறது, ஐம்பது தங்கக்காசுகள் வேறு வைத்திருக்கிறேன். எனது நாட்டுக்குத் திரும்பிப் போனால் நானும் ஒரு பணக்காரன்தான்."

"ஆனால், இதிலே எதுவுமே பிரமிடுகளிலிருந்து கொண்டு வரப்படவில்லையே!" என்றார் ரஸவாதி.

"பாத்திமாகூட இருக்கிறாள். என்னிடம் உள்ள எல்லா வற்றையும்விட அவள் சிறந்த புதையல்."

"அவளுங்கூட பிரமிடுகளில் கிடைத்தவள் இல்லையே!"

அமைதியாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். புட்டி ஒன்றைத் திறந்து ரஸவாதி ஏதோ ஒரு சிவப்புத் திரவத்தை இவனுடைய குவளையில் ஊற்றினார். அவ்வளவு இனிமை யான ஒயினை இவன் அதுவரை சுவைத்ததே இல்லை.

"இங்கே ஒயின் தடைசெய்யப்பட்டது இல்லையா?"

"வாயினுள்ளே போவது எதுவும் பாவம் இல்லை; வாயி லிருந்து வெளியே வருவதில்தான் இருக்கிறது."

ரஸவாதி சற்றே பயந்திருந்தார். பையன் ஒயினைக் குடித்த தும் நிம்மதியானார். உணவை முடித்துக்கொண்டு கூடாரத் தின் வெளியே அமர்ந்தனர். நிலவொளியின் பிரவாகத்தில் நட்சத்திரங்கள் மங்கின.

பையன் மகிழ்ச்சியாக இருந்ததைப் பார்த்த ரஸவாதி சொன்னார்: "குடித்துக் குஷியாக இரு. இரவு நன்றாக ஓய்வெடு; மல்யுத்தத்திற்குத் தயாராகிற போராளியைப் போல. உனது இதயம் எங்கெங்கே இருக்கிறதோ அங்கேதான் புதையலும் இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்; நீ உனது புதையலை அடைந்தே தீர வேண்டும்; அப்பொழுதுதான் உனது பாதை நெடுகிலும் நீ கற்றுக்கொண்ட ஒவ்வொன்றும் அர்த்தமுள்ளவையாகும்

"நாளைக்கே ஒட்டகத்தை விற்றுவிடு; ஒரு குதிரையை வாங்கிக்கொள். ஒட்டகங்களை நம்ப முடியாது; ஆயிரக்கணக் கில் அடி வைத்து நடக்கும்; களைப்படைந்தது போலவே தெரியாது; திடீரென்று ஒரு நாள் மண்டியிடும்; செத்துப் போகும். ஆனால், குதிரைகள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் களைப்படையும்; அவற்றிடம் எந்த அளவு வேலை வாங்க வேண்டும் என்பதையும் அவை சாகப் போகும் தருணத்தையும் நீ தெரிந்துகொள்வாய்."

✧

அடுத்த இரவு ரஸவாதியின் கூடாரம் முன்பாகப் பையன் குதிரைமீது காட்சி அளித்தான். ரஸவாதி தயாராக இருந்தார். தனது குதிரைமீது ஏறிக்கொண்டார்; இடது தோளின்மீது

வல்லூறை வைத்தார். பையனிடம் அந்தப் பாலைவனத்தில் ஜீவராசிகள் இருக்கும் இடத்தைக் காட்டச் சொன்னார். "அத்த கைய அறிகுறிகளை அறிந்தவர்களால் மட்டுமே புதையலைக் கண்டுபிடிக்க முடியும்" என்றார்.

நிலவொளி வழிகாட்ட மணற்பரப்பின்மீது பயணத்தைத் தொடங்கினர். 'அந்தப் பாலைவனத்தில் ஜீவராசியைக் கண்டு பிடிக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை; இன்னும் அந்த அளவுக்குப் பாலைவனத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வில்லை' என்று பையன் நினைத்தான்.

ரஸவாதியிடம் அதனைச் சொல்ல நினைத்தான்; ஆனால் பயம். வானத்தில் வல்லூறுகள் பறந்ததைப் பையன் பார்த்திருந்த பாறைப்பகுதியை அடைந்தார்கள். அப்பொழுது அங்கே அமைதியும் காற்றும் மட்டுமே நிலவியது.

"பாலைவனத்தில் ஜீவராசிகளைக் கண்டுபிடிக்க எனக்குத் தெரியவில்லை. இங்கே ஜீவராசிகள் இருப்பது தெரியும்; ஆனால், அவற்றின் இருப்பை அறிந்துகொள்ளத் தெரியாது."

"உயிர் உயிரை ஈர்க்கும்" என்று ரஸவாதி பதிலிறுத்தார்.

பையன் புரிந்துகொண்டான்; குதிரையின் கடிவாளத்தைத் தளர்த்தினான்; குதிரை பாறைகள் மீதும் மணல் மீதும் சீறிப் பாய்ந்தது. சுமார் அரை மணிநேரம் பையனின் குதிரையைப் பின் தொடர்ந்து ரஸவாதியும் பறந்தார். பாலைவனச் சோலை யின் ஈச்சமரங்களைக் காணமுடியவில்லை; தலைக்கு மேலே கம்பீரமாக மிதந்த பெருநிலவையும் பாலைவனப் பாறைகளில் பட்டுப் பிரதிபலித்த அதன் வெள்ளிக் கதிர்களையும் மட்டுமே காணமுடிந்தது. காரணம் ஏனோ தெரியவில்லை; திடீரென்று இந்தப் பையனின் குதிரையின் வேகம் தணிந்தது.

"இங்கே ஜீவராசி இருக்கிறது" என்று பையன் ரஸவாதி யிடம் சொன்னான். "பாலைவனத்தின் மொழி எனக்குத் தெரியவில்லை; ஆனால், உயிரின் மொழி என் குதிரைக்குத் தெரியும்."

இருவரும் குதிரையை விட்டு இறங்கினர். ரஸவாதி எதுவும் பேசாமல் மெல்ல நகர்ந்து கற்களுக்கிடையே எதையோ தேடினார்; சட்டென்று நின்றுவிட்டார்; தரையில் குனிந்தார். கற்களுக்கிடையே ஒரு துவாரம் இருந்தது. அதற்குள் கையை விட்டார். பிறகு தோள் வரை முழுக்கையையும் உள்ளே விட்டார். அங்கே ஏதோ நெளிந்தது. ரஸவாதியின் கண்கள் – இவனால் கண்களை மட்டுமே காண முடிந்தது – சிரமத்துடன் ஒருக்கணித்தது. பொந்துக்குள் இருந்த ஒன்றுடன் அவருடைய

கை போராடிக்கொண்டிருந்தது தெரிந்தது. பின்பு அதீத வேகத்துடன் கையை வெளியே இழுத்தபடி துள்ளிக் குதித்தார். பையன் பயந்து போனான். அவருடைய கை ஒரு பாம்பின் வாலைப் பிடித்திருந்தது.

பையனும் ரஸவாதியை விட்டுவிலகித் துள்ளிக்குதித்தான். பாம்பு சீற்றத்துடன் போராடியது. ஸ்ஸ்ஸ் என்ற இரைச்சல் பாலைவன அமைதியைக் குலைத்தது. அது ஒரு நாகப்பாம்பு; அதன் விஷம் நிமிஷத்தில் ஆளைக் கொன்றுவிடும்.

"விஷம்; ஜாக்கிரதை" என்று இந்தப் பையன் அலறினான். ஆனால், அவருடைய முழுக்கையைப் பொந்துக்குள் விட்டிருந் தார்; ஏற்கனவே நிச்சயமாகக் கொத்தியிருக்கும். அவருடைய முகபாவம் அமைதியாகவே இருந்தது. ரஸவாதி இருநூறு வயதானவர் என்று ஆங்கிலேயர் அவனிடம் சொல்லியிருந்தார். பாலைவனத்தில் உள்ள பாம்புகளைக் கையாள்வது அவருக்குத் தெரிந்திருக்கும்.

தனது நண்பர் குதிரையின் அருகே சென்று வாளை உருவுவதைப் பையன் கவனித்துக்கொண்டிருந்தான். வாளின் கூர்நுனியைக் கொண்டு மணலில் ஒரு வட்டம் வரைந்தார்; வட்டத்திற்குள் பாம்பை வைத்தார்; அந்தப் பாம்பு அடங்கி விட்டது.

ரஸவாதி கூறினார்: "பயப்பட வேண்டாம்; வட்டத்தை விட்டு வெளியேறாது. பாலைவனத்தில் ஜீவராசியைக் கண்டு பிடித்துவிட்டாய். இந்தச் சகுனம்தான் எனக்குத் தேவை."

"அதற்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம்?"

"ஏனென்றால், பிரமிடுகளைச் சுற்றிப் பாலைவனம் இருக்கிறது."

பையன் பிரமிடுகளைப் பற்றிப் பேச விரும்பவில்லை. இவனுடைய இதயம் கனத்தது; முன்னிரவிலிருந்தே சோகமய மாக இருந்தான்; புதையலைத் தொடர்ந்து தேடிச்சென்றால், பாத்திமாவை இழக்க நேரிடலாம் என்று தோன்றியது.

"பாலைவனத்தைக் கடப்பதற்கு நான் வழிகாட்டப் போகிறேன்" என்று ரஸவாதி சொன்னார்.

"பாலைவனச் சோலையிலேயே தங்கிவிட விரும்புகிறேன். பாத்திமாவைக் கண்டுவிட்டேன்; என்னைப் பொறுத்தவரை அவள் புதையலைவிட உயர்ந்தவள்" என்று பையன் பதில் சொன்னான்.

ரஸவாதி சொன்னார்: "பாத்திமா பாலைவனத்துப் பெண்; ஆண்கள் தொலைதூரம் சென்று திரும்ப வேண்டியவர்

கள் என்பது அவளுக்குத் தெரியும். அவள் தன்னுடைய புதையலைப் பெற்றுவிட்டாள்; அதுதான் நீ. தேடிக்கொண்டிருப் பதை நீ கண்டுபிடிப்பதைத்தான் அவள் எதிர்பார்க்கிறாள்."

"சரி, இங்கேயே தங்கினால் என்ன நேர்ந்துவிடும்?"

"என்ன நேரிடும் என்பதைச் சொல்கிறேன். பாலைவனச் சோலையின் ஆலோசகராவாய்; நிறைய ஆடுகளும் ஒட்டகங் களும் வாங்குவதற்குப் போதுமான தங்கம் உன்னிடம் உள்ளது. பாத்திமாவைத் திருமணம் செய்துகொண்டு ஒரு வருஷம் இரண்டு பேரும் சந்தோஷமாக இருப்பீர்கள். பாலைவனத்தை நேசிக்கக் கற்றுக்கொள்வாய்; ஐம்பதாயிரம் ஈச்ச மரங்கள் ஒவ்வொன்றும் பழகிப் போகும். உலகம் சதா மாறிக்கொண்டே இருப்பதைச் செயல்முறையில் காட்டுவதைப் போல அவை வளருவதைக் கவனித்துக்கொண்டிருப்பாய். சகுனங்களைச் சொல்லிக் கொடுப்பதில் பாலைவனம் மிகச்சிறந்த ஆசான். ஆதலால், அவற்றின் பலன்களைச் சொல்வதில் மேலும் மேலும் வல்லவனாகி விடுவாய்.

"இரண்டாவது வருஷத்தில், ஒருநாள் புதையல் ஞாபகம் வரும்; சகுனங்கள் அதைப்பற்றி அழுத்தமாகப் பேசத் தொடங் கும். நீ அவற்றை அலட்சியப்படுத்தப் பார்ப்பாய். உன்னுடைய அறிவைப் பயன்படுத்தி பாலைவனச் சோலைக்கும் அதன் மக்களுக்கும் நல்லது செய்வாய். ஆதிவாசித் தலைவர்கள் நீ செய்வதைப் பார்த்துப் பாராட்டுவார்கள். உன்னுடைய ஒட்டகங்கள் செல்வத்தையும் அதிகாரத்தையும் உனக்கு ஈட்டித்தரும்.

"மூன்றாவது வருஷத்திலே, புதையலைப் பற்றியும் இலக்கைப் பற்றியும் சகுனங்கள் தொடர்ந்து பேசும்; ராத்திரி நேரங்களில் தூக்கம் பிடிக்காமல் பாலைவனச் சோலையைச் சுற்றிச் சுற்றி வருவாய். உன்னுடைய புதையல் வேட்டையிலே தான் குறுகிட்டுக் கெடுத்துவிட்டதாக நினைத்து பாத்திமா கவலைப்படுவாள். ஆனாலும், நீ அவளை விரும்புவாய். அவள் பதிலுக்கு உன்னை விரும்புவாள். பாலைவனத்துப் பெண்கள் கணவன்மாரின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பதையே விரும்புபவர்கள்; அதனால்தான் அவள் உன்னை ஒருபோதும் இங்கேயே தங்கி விடும்படி சொன்னதில்லை. இவையெல்லாம் உனது நினைவுக்கு வரும். ஆதலால், நீ அவளைக் குற்றம் சொல்ல மாட்டாய். ஆனாலும், பாத்திமாவின் மீது கொண்ட காதலின்பால் மேலும் கூடுதல் நம்பிக்கை வைத்துப் புறப்பட்டுச் சென்றிருக் கலாமோ என்று எண்ணமிட்டபடி இந்தப் பாலைவன மணலில் பலமுறையும் நடந்து திரிவாய். ஏனென்றால், திரும்பி வராமல் போய்விடுவோமோ என்கிற பயம்தான் உன்னை

இந்தக் குடியிருப்பிலேயே பிடித்து நிறுத்தியது. அந்தக் கட்டத்தில், உனது புதையல் நிரந்தரமாகப் புதைக்கப்பட்டுவிட்டது என்று சகுனங்கள் சொல்லும்.

“பிறகு, நாலாவது வருஷத்தில், சகுனங்கள் உன்னைக் கைவிட்டுவிடும். ஏனென்றால், நீ அவற்றைக் கவனிப்பதை நிறுத்தியிருப்பாய். ஆதிவாசித் தலைவர்களுக்கும் அது தெரிந்து போகும்; ஆலோசகர் பதவியிலிருந்து நீக்கப்படுவாய். ஆனால், அதற்குள், நிறைய வியாபாரப்பொருட்கள், ஒட்டகங்கள் என்று பெரும் பணக்காரன் ஆகி விடுவாய். இலக்கினை அடைய முடியாமற் போய்விட்டதென்கிற நினைப்புடனும் காலங்கடந்து விட்டதென்கிற ஏக்கத்துடனும் மீதமுள்ள காலத்தைக் கழிப்பாய்.

“தன்னுடைய இலக்கினைத் தேடி அடைவதற்குக் காதல் ஒரு போதும் ஒருவனுக்குத் தடையாக இருப்பதில்லை என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும்; ஒருவன் தன்னுடைய தேடலைக் கைவிடுவானேயானால் அதற்குக் காரணம் அது உண்மையான காதலாக, உலக மொழியைப் பேசக் கூடிய காதலாக இல்லை என்பதுதான்.”

ரஸவாதி மணலில் வரைந்திருந்த வட்டத்தை அழித்தார். பாறைகளுக்கிடையே பாம்பு நெளிந்து சென்றது. மெக்காவுக்குச் செல்ல வேண்டும் என்பதை எப்போதும் விருப்பமாகவே வைத்திருந்த பளிங்கு வியாபாரியையும், ரஸவாதியைத் தேடித் திரிந்த ஆங்கிலேயரையும் இவன் நினைத்துக்கொண்டான். பாலைவனத்தின் மீது அசாத்திய நம்பிக்கைகொண்டிருக்கும் அந்தப் பெண்ணை நினைத்தான். மேலும், தான் விரும்பும் பெண்ணிடம் தன்னைக் கொண்டு வந்து சேர்த்த பாலைவனம் நெடுகிலும் பார்வையை ஓடவிட்டான்.

தத்தமது குதிரையின் மீது ஏறி அமர்ந்தனர். அப்பொழுது ரஸவாதியைப் பின் தொடர்ந்து பையன் பாலைவனச் சோலையை நோக்கிச் சென்றான். குடியிருப்பின் ஓசைகளைக் காற்று அவர்களிடம் கொண்டு வந்துசேர்த்தது; பையன் பாத்திமாவின் குரலைக் கேட்க முயன்றான்.

அன்றைய இரவு வட்டத்திற்குள் அடைபட்டிருந்த நாகப் பாம்பினை இவன் கவனித்துக்கொண்டிருக்க, தோளின்மீது வல்லூறு வைத்திருந்த விநோதமான குதிரைவீரன் காதலைப் பற்றியும், புதையலைப் பற்றியும், பாலைவனப் பெண்களைப் பற்றியும், இவனுடைய இலக்கினைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தான்.

“உங்களோடு வருகிறேன்” என்று பையன் சொன்னான். இவனுடைய இதயத்தில் அமைதி நிலவியது.

"நாளை சூரிய உதயத்திற்கு முன்னால் புறப்படுவோம்" என்பது ரஸவாதியினுடைய ஒரே பதிலாக இருந்தது

✦

பையனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. விடிவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பாகக் கூடாரத்தில் தூங்கிக்கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவனை எழுப்பினான். பாத்திமா வசிக்கிற இடத்தைக் காட்டும்படி கேட்டான். அவளுடைய கூடாரத் திற்கு இருவரும் சென்றனர். ஓர் ஆடு வாங்குவதற்குப் போது மான அளவு தங்கத்தை இவன் அந்த நண்பனுக்குக் கொடுத்தான்.

கூடாரத்திற்குள் சென்று பாத்திமாவை எழுப்பி தான் வெளியே காத்திருப்பதாகச் சொல்லும்படி வேண்டினான். அந்த அரேபியச் சிறுவன் சொன்னபடி செய்தான். மேலும் ஓர் ஆடு வாங்கும் அளவு தங்கத்தை அவனுக்குக் கொடுத்தான்.

"எங்களைத் தனித்திருக்க விடு" என்று அரேபியச் சிறுவனிடம் சொன்னான். அரேபியன், பாலைவனச் சோலை யின் ஆலோசகருக்கு உதவிய பெருமிதத்துடனும். இரண்டு ஆடுகளை வாங்குமளவிற்குப் பணம் கிடைத்ததில் மிகழ்ச்சி யுடனும் கூடாரத்திற்குத் தூங்கப் போனான்.

கூடாரத்தின் நுழைவாயிலுக்குப் பாத்திமா வந்தாள். ஈச்சமரங்களுக்கு நடுவே இருவரும் நடந்து சென்றனர். இது மரபுக்குப் புறம்பானது என்று அவனுக்குத் தெரியும், அப்பொழுது அதுவெல்லாம் அவனுக்கு ஒரு பொருட்டாகப் படவில்லை.

"நான் போகிறேன்; திரும்பி வருவேன் என்பதை நீ தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். உன்னை நான் காதலிக்கிறேன் ஏனென்றால் . . ."

"எதையும் சொல்ல வேண்டாம்." பாத்திமா குறுக்கிட்டாள். "ஒருவரை விரும்புவதற்குக் காரணம் அவரை விரும்புவதுதான்; விரும்புவதற்குக் காரணம் எதுவும் தேவையில்லை."

ஆனாலும், அவன் தொடர்ந்தான்: "கனாவொன்று கண்டேன்; ராஜாவைச் சந்தித்தேன்; பளிங்கு விற்றேன்; பாலைவனம் கடந்தேன். பிறகு, ஆதிவாசிகள் சண்டையால் ரஸவாதியைத் தேடிக் கிணற்றடிக்குப் போனேன். ஆக, உன்னைக் கண்டு பிடித்துக் காதலிப்பதற்காக இந்தப் பிரபஞ்சமே எனக்கு உதவும் பொருட்டு திட்டம் தீட்டியிருக்கிறது."

இருவரும் தழுவிக்கொண்டனர் – ஒருவரை ஒருவர் தொட்டுக்கொண்டது அதுவே முதல் தடவை.

"நான் கட்டாயம் திரும்பி வருவேன்" என்றான்.

பாத்திமா கூறினாள்: "இதற்கு முன்னால் இந்தப் பாலை வனத்தை எப்பொழுதுமே ஏக்கத்துடன் பார்த்திருக்கிறேன். இனிமேல் நம்பிக்கையோடு பார்ப்பேன். ஒருநாள் என் தந்தை புறப்பட்டுப் போனார். ஆனால், என் தாயாரிடம் திரும்பி வந்தார். அதன் பின்னர், புறப்பட்டுச் சென்ற ஒவ்வொரு முறையும் திரும்பி வந்தார்."

அவர்கள் எதுவும் பேசவில்லை. ஈச்சமரங்களுக்கிடையே மேலும் சற்று தூரம் நடந்தனர். பிறகு அவளுடைய கூடாரத் தின் வாசலில் அவளை விட்டுச் சென்றான்.

"நான் திரும்பி வருவேன்; உன் தாயாரிடம் உன் தந்தை திரும்பி வந்ததைப் போலவே" என்று சொன்னான்.

பாத்திமாவின் கண்களில் கண்ணீர ததும்புவதைப் பார்த்தான்.

"அழுகிறாயா?"

"நான் பாலைவனத்துப் பெண்தான்; அதற்கும் மேலாக, நான் ஒரு பெண்" என்று தனது முகத்தை மறைத்தபடி சொன்னாள்.

பாத்திமா தனது கூடாரத்திற்குத் திரும்பிச் சென்றாள். விடிந்தவுடன், பல வருடங்களாகச் செய்து வந்த தோட்ட வேலைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டாள். ஆனால், எல்லாமே மாறிவிட்டது. பாலைவனச் சோலையில் தற்போது பையன் இல்லை; நேற்று அது பெற்றிருந்த முக்கியத்துவத்தை அந்தக் குடியிருப்பு இனி எப்போதும் பெறப்போவதில்லை. ஐம்பதாயிரம் ஈச்சமரங்களையும் முந்நூறு கிணறுகளையும் கொண்டதாக இருக்கப் போவதில்லை. ஏராளமான பயணிகள் வந்து தங்கி தம்முடைய நீண்ட பயணத்தின் முடிவில் களைப்பாறக் கூடிய தொரு இனிய சூழல் கொண்டதாகக் காட்சி அளிக்கப்போவ தில்லை. அவளைப் பொறுத்தவரை அன்றிலிருந்து அந்தப் பாலைவனச் சோலை ஒரு வெற்றிடம்தான்.

அன்றிலிருந்து பாலைவனம்தான் முக்கியத்துவம் பெறப் போகிறது. ஒவ்வொரு நாளும் அவள் அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறாள். தன்னுடைய புதையலைத் தேடி எந்த நட்சத்திரத்தைப் பின்பற்றி அவன் சென்றிருப்பான் என்பதை யூகிக்க முயலுவாள். தன் முத்தங்களைக் காற்றின் வழி அனுப்புவாள். அந்தக் காற்று இவனுடைய முகத்தை வருடும்போது தான் உயிரோடு இருக்கின்ற சேதியைச் சொல் லட்டும்; இவனுக்காகவே காத்திருப்பதைச் சொல்லட்டும்;

புதையலைத் தேடிச் சென்ற துணிச்சல்காரனுக்கென்றே காத்திருக்கிறாள் என்பதைச் சொல்லட்டும். அந்த நாளிலிருந்து அந்தப் பாலைவனம் அவளுக்கு உணர்த்தப் போவது ஒன்றேஒன்று மட்டும்தான்: இவன் திரும்பிவிடுவான் என்கிற நம்பிக்கை.

✦

"விட்டுவிட்டு வந்ததைப்பற்றி நினைக்காதே" என்று பாலைவன மணலில் பயணத்தைத் தொடங்கியபோது ரஸவாதி இவனிடம் சொன்னார். "உலக ஆன்மாவில் எல்லாமே எழுதப்பட்டிருக்கிறது, எக்காலத்துக்கும் அங்கேயே நிலைத்திருக்கும்."

"புறப்பட்டுச் செல்வதைக் காட்டிலும் திரும்பி வருவதைப் பற்றியே ஆண்கள் அதிகமாகக் கனவு காண்பார்கள்" என்று இவன் சொன்னான். பாலைவனத்தின் அமைதிக்கு மீண்டும் அவன் பழகிப்போய்விட்டான்.

"ஒருவனுக்குக் கிடைத்தது தூய்மையான பொருளால் ஆக்கப்பட்டிருந்தால் அது கெட்டுப் போகாது, எப்போது வேண்டுமானாலும் அதனிடம் திரும்பி வந்துவிடலாம். வெடித்துச் சிதறும் நட்சத்திரத்தைப் போல கணநேர ஒளியைப் போன்ற தொன்றைப் பெற்றிருக்கும் ஒருவனுக்குத் திரும்பும்போது பார்க்க எதுவும் இருக்காது."

ரஸவாத மொழியில் பேசிய போதிலும் பாத்திமாவைத் தான் குறிப்பிடுகிறார் என்பது இவனுக்குத் தெரியும்.

விட்டுவிட்டு வந்ததைப் பற்றி நினைத்துப் பார்க்காமல் இருக்க மிகவும் கடினமாகத்தான் இருந்தது. முடிவற்ற தனிமை கொண்ட அந்தப் பாலைவனம் இவனைக் கனவுலகில் சஞ்சரிக்கச் செய்தது. ஈச்ச மரங்களும், கிணறுகளும், இவன் விரும்பிய பெண்ணின் முகமும் அப்போதும் கண்முன் விரிந்தன. சோதனைகளில் ஈடுபட்டுள்ள ஆங்கிலேயரும், தான் ஓர் ஆசான் என்பதையே அறியாத ஒட்டகமோட்டியும்கூடத் தென்பட்டனர். 'ரஸவாதி ஒருபோதும் காதலில் ஈடுபட்டதில்லை' என்று பையன் நினைத்துக்கொண்டான்.

ரஸவாதியின் குதிரை முன்னால் சென்றது, அவருடைய தோளில் வல்லூறு இருந்தது. அந்தப் பறவைக்குப் பாலைவன மொழி நன்றாகத் தெரியும். பயணம் நிறுத்தப்படும் இடங்களில், அந்தப் பறவை வேட்டையைத் தேடிப் பறந்துவிடும். முதல்நாள் ஒரு முயலுடன் திரும்பியது. இரண்டாவது நாள் இரண்டு பறவைகளைக் கொண்டுவந்தது.

இரவு நேரங்களில் தூங்குவதற்கான சாதனங்களை விரித்தனர்; தணப்புகளை மறைத்து வைத்தனர். பாலைவன

இரவுகள் குளிர்ந்து கிடந்தன; தேய்பிறை நிலவால் மேலும் இருண்டு கிடந்தன. ஒரு வாரகாலம் பயணம் செய்தார்கள், நடந்துகொண்டிருந்த பாலைவனப் போர்களைத் தவிர்த்து ஒதுங்கிச் செல்வதற்குத் தேவையான முன்னெச்சரிக்கைகளைப் பற்றிப் பேசியபடியே சென்றனர். போர் தொடர்ந்து நடந்தது. சில சமயங்களில், துயரம் தோய்ந்த இனிமையான குருதிமணம் காற்றில் மிதந்து வந்தது; அண்மையில்தான் சண்டை நடந்தது; கண்கள் கவனிக்கத் தவறினாலும் காட்டிக்கொடுக்கக்கூடிய சகுனங்களின் மொழி இருப்பதைக் காற்று இந்தப் பையனுக்கு நினைவூட்டியது.

ஏழாவது நாள், வழக்கத்திற்கு முன்னதாகவே கூடாரமிடுவ தென்று ரஸவாதி தீர்மானித்தார். வல்லூறு வேட்டையைத் தேடிப் பறந்து சென்றது. ரஸவாதி தனது தண்ணீர்ப் புட்டியைப் பையனுக்குக் கொடுத்தார்.

"உன்னுடைய பயணம் முடியும் தறுவாயில் இருக்கிறது. உன்னுடைய இலக்கினைத் தேடி அடைந்துவிட்டதற்காக உன்னைப் பாராட்டுகிறேன்" என்று ரஸவாதி சொன்னார்.

பையன் சொன்னான்: "வழிநெடுகிலும் நீங்கள் ஒன்றுமே சொல்லவில்லையே, உங்களுக்குத் தெரிந்ததில் சிலவற்றை எனக்குச் சொல்லிக் கொடுப்பீர்கள் என்று நினைத்தேன். சில நாட்களுக்கு முன்னால், ரஸவாதம் பற்றிய புத்தகங்கள் நிறைய வைத்திருந்த மனிதரோடு இந்தப் பாலைவனத்தில் பயணம் செய்தேன். ஆனால், அவற்றிலிருந்து எதையுமே கற்றுக்கொள்ள முடியவில்லை."

ரஸவாதி பதில் சொன்னார்: "கற்றுக்கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது; அதுதான் செயல்முறை. தெரிந்து கொள்ள வேண்டியவை எல்லாவற்றையும் உன்னுடைய பயணத்தின் மூலமாகவே தெரிந்துகொண்டாய். நீ தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றே ஒன்றுதான் இருக்கு."

அது என்னவென்று தெரிந்துகொள்ள இவன் விரும்பி னான். ஆனால், வல்லூறுவைத் தேடி தொடுவானத்தையே அவர் பார்த்துக்கொண்டிருந்தார்.

"உங்களை ஏன் ரஸவாதியென்று கூப்பிடுகிறார்கள்?"

"ஏனெனில் அதுதான் நான்."

"தங்கமாக்கும் முயற்சியில் மற்ற ரஸவாதிகள் எல்லாம் என்ன தப்புச் செய்தார்கள்? ஏன் அவர்களால் முடியவில்லை?"

ரஸவாதி பதில் சொன்னார்: "அவர்கள் தங்கத்தை மட்டுமே தேடினார்கள். தம்முடைய இலக்கான புதையலை

மட்டுமே அவர்கள் தேடினர். இலக்கிற்காகவே வாழ்ந்து தீர வேண்டுமென்று உண்மையில் விரும்பியதில்லை".

"நான் இன்னமும் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்ன?" என்று பையன் கேட்டான்.

ஆனால், ரஸவாதி தொடர்ந்து அடிவானத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். ஒருவழியாக வல்லூறு அவர்களுக்கான உணவுடன் திரும்பியது. சுவாலையின் ஒளி வெளியே தெரியாமல் இருப்பதற்காக ஒரு குழியைத் தோண்டி நெருப்பு மூட்டினர்.

உணவைத் தயாரித்துக்கொண்டே அவர் சொன்னார்: "ரஸவாதியாக இருப்பதனாலேதான் நான் ஒரு ரஸவாதி. என்னுடைய தாத்தாவிடமிருந்து இந்த வித்தையைக் கற்றுக் கொண்டேன். அவர் அவரது அப்பாவிடமிருந்து – அப்படியே போனால் உலகத்தின் ஆரம்பகாலம் வரைக்கும் போகும். அந்தக்காலத்தில், 'பிரதான வேலை' பற்றின சேதியை ஒரு பச்சைக்கல்பட்டையின் மீது எழுதிவிடலாம். ஆனால், எளிமை யான விஷயங்களை மக்கள் புறக்கணிக்கத் தொடங்கிவிட்டார் கள். உபதேசங்கள், வழிவகைகள், வியாக்கியானங்கள், தத்து வார்த்த ஆராய்ச்சிகள் என்று எழுதத் தொடங்கிவிட்டார்கள். மற்றவர்களைக் காட்டிலும் தனக்குத்தான் நிறையத் தெரியும் என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இருந்தாலும், இன்றைக்கும் மரகதப் பட்டயம் ஜீவனோடு இருக்கிறது."

"மரகதப் பட்டயத்தில் என்ன எழுதியிருக்கிறது?" என்று இவன் அறிய விரும்பினான்.

மணலில் வரைய ஆரம்பித்தார்; ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துவிட்டார்; அவர் வரையும் போது, அன்றொருநாள், அந்தச் சந்தைப்பகுதியில் கிழட்டு ராஜாவைச் சந்தித்ததை இவன் நினைத்துக்கொண்டான்; பல வருடங்களுக்கு முன்னால் அது நடந்தது போலத் தோன்றியது.

எழுதி முடித்த பிறகு ரஸவாதி சொன்னார்: "மரகதப் பட்டையில் எழுதப்பட்டிருந்தது இதுதான்."

மணலில் எழுதியிருப்பதை இவன் படிக்க முயன்றான்.

"இது ஒரு குறியீடு!" சற்று ஏமாந்து போன பையன் சொன்னான்: "ஆங்கிலேயருடைய புத்தகங்களில் பார்த்தது போலவே இருக்கிறது."

ரஸவாதி பதிலிறுத்தார்: "இல்லை. அந்த இரண்டு பருந்து கள் பறந்து செல்வதைப் போன்றது. காரண காரியங்களால் மட்டுமே இதைப் புரிந்துகொள்ள இயலாது. உலக ஆன்மாவுக் கான நேரடிப் பாதைதான் மரகதப் பட்டை.

“சொர்க்கத்தினுடைய நகலும் படிவமுமாகத்தான் இயற்கையான உலகம் இருக்கிறது என்பதை அறிவாளிகள் புரிந்து கொண்டார்கள். இந்த உலகத்தின் இருப்பு, தூய்மையானதொரு உலகம் இருக்கின்றது என்பதற்கான உறுதிப்பாடு மட்டுமே. கண்ணுக்குத் தெரியக்கூடிய காட்சிகளையும் பொருட்களையும் கொண்டு ஆன்ம போதனைகளையும் ஞானத்தின் அதிசயங்களையும் மனிதன் புரிந்துகொள்ளட்டும் என்று இறைவன் உலகினைப் படைத்தார். இதைத்தான் நான் செயல்பாடு என்கிறேன்.”

“மரகதப் பட்டயத்தில் எழுதி உள்ளதை நான் புரிந்து கொள்ள முடியுமா?”

“ஒரு வேளை, ரஸவாத சோதனைச்சாலையில் நீ இருந்திருக்கும் பட்சத்தில், மரகதப் பட்டயத்தில் உள்ளதைத் தெரிந்து கொள்வதற்கான மிகச்சிறந்த வழியைக் கற்றுக்கொள்வதற்கு இது நல்ல தருணமாக இருந்திருக்கக்கூடும். ஆனால், நீ இப்போது பாலைவனத்திலே இருக்கிறாயே – இதிலேயே மூழ்கிவிடு; இந்தப் பாலைவனமே உலகினைப் புரிந்துகொள்ளச் செய்யும். உண்மையைச் சொல்வதானால், பூமிப்பரப்பின் மீதுள்ள எல்லாமே அந்த வேலையைச் செய்யும். பாலைவனத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுகூட இல்லை; ஒரு துகள் மணலைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துப்பார், படைப்பினுடைய அத்தனை அதிசயங்களையும் அதில் பார்க்கலாம்.”

“பாலைவனத்துக்குள்ளே மூழ்கிப் போவது எப்படி?”

“உன்னுடைய இதயத்தைக் கவனி, அதற்கு எல்லாம் தெரியும். ஏனென்றால், அது உலக ஆன்மாவிலிருந்து வந்தது, ஒருநாள் அங்கேயே திரும்பிப் போய்விடும்.”

✧

அடுத்த இரண்டு தினங்கள் அந்தப் பாலைவனத்தில் அமைதியாகப் பயணம் செய்தனர். மிகக் கடுமையாகச் சண்டை நடந்த இடங்களை நெருங்கிய போதெல்லாம் ரஸவாதி மிகவும் எச்சரிக்கையாகிவிடுவார். பயணம் தொடர்ந்துகொண்டிருந்த போது பையன் தன்னுடைய இதயம் கூறுவதைக் கவனிக்க முயன்றான்.

அப்படிச் செய்வதொன்றும் எளிதாக இல்லை. முன்பெல்லாம் இவனுடைய இதயம் தனது கதையைச் சொல்லத் தயாராகவே இருந்தது, ஆனால், காலப்போக்கில் அது உண்மை அல்ல. மணிக்கணக்கில் துயரங்களைச் சொல்லுவதில் கழித்த காலகட்டங்களும் இருந்தன. வேறு சில நேரங்களில் பாலைவனச்

சூரியோதங்களின் போது மிகவும் உணர்ச்சிவசப்பட்டது இவன் தன் கண்ணீரை மறைக்க வேண்டியதாயிற்று. புதையலைப் பற்றிப் பேசும்போது இதயம் மிகவும் வேகமாகத் துடிக்கத் தொடங்கும்; பாலைவனத்தின் முடிவற்ற தொடுவானத்தினை உற்றுநோக்கி ஆழ்ந்துவிடும்போது துடிப்பின் வேகம் குறைந்து விடும். ஆனால், இவனும் ரஸவாதியும் அமைதியில் ஆழ்ந்து விடும்போதுகூட இவனுடைய இதயம்ஒருபோதும் அமைதி யடைந்ததில்லை.

அன்றொரு நாள் கூடாரத்தை அமைத்துக்கொண்டிருந்த போது இவன் கேட்டான்: “ஏன் நாம் நமது இதயம் பேசுவதைக் கவனிக்க வேண்டும்?”

“ஏனென்றால், எங்கே உனது இதயம் இருக்கிறதோ அங்கேதான் உனது புதையலையும் கண்டுபிடிப்பாய்.”

“ஆனால், எனது இதயம் படபடக்கிறது; அதற்கென்று கனவுகள் உள்ளன; உணர்ச்சி வயப்படுகிறது; பாலைவனப் பெண் ஒருத்தியின்பால் கரிசனங்கொள்கிறது; என்னுள் இருப் பதை எல்லாம் கேட்கிறது, அவளைப்பற்றி நினைக்கும் போதெல் லாம், பல இரவுகள் தூக்கத்தைப் பறித்துக்கொள்கிறது.”

“ஆமாம், அதுதான் சரி. உனது இதயம் உயிர்த்துடிப்போடு இருக்கிறது. அது சொல்ல விரும்புவதையெல்லாம் உற்றுக் கவனி.”

அடுத்த மூன்று தினங்களும் அந்த இரண்டு பயணிகளை யும் ஆயுதமேந்திய ஆதிவாசிகள் பலர் கடந்து சென்றனர், வேறு சிலரைத் தொடுவானத்தில் பார்த்தனர். இந்தப் பையனு டைய இதயம் அச்சத்தை அறிவித்தது, உலக ஆன்மாவிட மிருந்து கேட்ட கதைகளைச் சொன்னது; புதையலைத் தேடிச் சென்று வெற்றியே பெறாத மனிதர்களின் கதைகளைச் சொன் னது. புதையலைக் கண்டுபிடிக்காமலேயே போய்விடுவோமோ அல்லது அந்தப் பாலைவனத்தில் மாண்டுவிடுவோமோ என்கிற மாதிரியெல்லாம் எண்ணங்களைத் தோற்றுவித்து சில நேரங்களில் அச்சுறுத்தியது. வேறு சில சமயங்களில் அன்பையும், ஆஸ்தியையும் அடைந்து மனநிறைவுபெற்றுவிட்ட தாகச் சொன்னது.

குதிரைகளுக்கு ஓய்வளிப்பதற்காகத் தங்கியபோது பையன் ரஸவாதியிடம் சொன்னான்: “என்னுடைய இதயம் ஒரு நம்பிக்கைத் துரோகி, நான் தொடர்ந்து செல்வது அதற்குப் பிடிக்கவில்லை.”

ரஸவாதி பதிலிறுத்தார்: “அதிலேயும் அர்த்தம் இருக்கிறது. எங்கே உனது தேடல் பயணத்திலே உன்னிடம் இருப்பதை

எல்லாம் தொலைத்துவிடுவாயோ என்று இயல்பாகவே அஞ்சுகிறது."

"சரி, அப்படியென்றால், எதற்காக இதயம் சொல்வதை நான் கவனிக்க வேண்டும்?"

"ஏனென்றால், உன்னால் அதை ஒருபோதும் அமைதியாக வைத்துக்கொள்ள இயலாது. அது சொல்வதைக் கேட்கப் போவதேயில்லை என்று நீ பாசாங்கு காட்டினாலும், உலகத்தைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் என்ன நினைக்கிறாய் என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கெண்டு உனக்குள்ளேயே இருக்கும்."

"அது நம்பிக்கைத் துரோகியாக இருந்தாலும், அது சொல்வதைக் கேட்க வேண்டும் என்று சொல்கிறீர்களா?"

"எதிர்பாராமல் விழுகிற அடிதான் துரோகம். உன்னுடைய இதயத்தைப் பற்றி நன்கு தெரிந்துகொள்வாயானால், அதனால் அப்படிச் செய்யவே முடியாது. ஏனென்றால், அதனுடைய கனவுகளும் விருப்பங்களும் உனக்குத் தெரிந்துவிடும்; அவற்றைச் சமாளிக்கும் விதத்தையும் நீ அறிந்துகொள்வாய்.

"உனது இதயத்திடமிருந்து நீ தப்பிக்கவே முடியாது. ஆகவே, அது சொல்ல வருவதைக் கவனிப்பதுதான் நல்லது; அந்த வகையில், எதிர்பாராத தாக்குதலைப் பற்றிப் பயப்பட வேண்டியதே இல்லை."

பாலைவனப் பயணத்தின் போதெல்லாம் இவன் தொடர்ந்து மனதைக் கவனித்துக்கொண்டே சென்றான். அதனுடைய நெளிவு சுழிவுகளைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டான். பயம் தொலைந்தது; பாலைவனச் சோலைக்குத் திரும்பவேண்டும் என்ற துடிப்பு மறந்துபோனது. ஏனென்றால், ஒரு நாள் மதியம், இவனது இதயம் மகிழ்ச்சியாக இருப்பதாக இவனிடம் சொன்னது. "நான் சில நேரங்களில் புலம்பினேனென்றால், அதற்குக் காரணம் நானொரு ஆளுடைய இதயம் என்பதுதான். மனிதர்களுடைய இதயம் அப்படிப்பட்டதுதான். தங்களுடைய மிக முக்கியமான கனவுகளைத் தேடிப்போகக்கூடப் பயப்படுகிறார்கள். ஏனென்றால், நாம் அதற்குத் தகுதியில்லையோ, அடைய முடியாமல் போயிடுமோ என்று நினைக்கிறார்கள். அவர்களுடைய இதயங்களாகிய நாங்கள், ஒரேயடியாகப் பிரிந்து போய்விட்ட அன்பிற்குரியவர்களையும், நன்றாக இருந்திருக்க வேண்டியவை எல்லாம் அப்படி இல்லாமற் போன கால கட்டங்களையும், தேடிக் கண்டுபிடித்திருக்கப்பட வேண்டிய

புதையல்கள் காலகாலத்திற்கும் மணலுள் புதைந்து கிடப்பதையும் நினைத்து அச்சத்திற்கு ஆளாகிறோம். ஏனென்றால், அதுபோன்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் பயங்கரமாகத் துன்புறுகிறோம்."

நிலவில்லா வானத்தை வெறித்துக்கொண்டிருந்த ஓர் இரவு நேரத்தில் ரஸவாதியிடம் இவன் சொன்னான், "துன்பப்பட வேண்டியிருக்குமோ என்று எனது இதயம் அஞ்சுகிறது."

"துன்பம் பற்றிய பயம் துன்புறுவதைக் காட்டிலும் மோசமானது என்று உனது இதயத்திற்குச் சொல். கனவுகளைத் தேடிப் புறப்பட்ட இதயங்கள் எவையும் ஒருபோதும் துன்பத்திற்கு ஆளானதில்லை; ஏனென்றால், தேடிச்செல்கிற ஒவ்வொரு கணமும் இறைவனையும் நிரந்தரத்தையும் எதிர்கொள்ளுகிற தருணம் என்பதையும் சொல்."

பையன் தனது இதயத்திடம் சொன்னான்: "தேடிப் போகிற ஒவ்வொரு நொடியும் இறைவனை எதிர்கொள்ளும் தருணம். என்னுடைய புதையலை விசுவாசத்தோடு தேடும்போது, ஒவ்வொரு நாளும் ஒளிமிகுந்ததாகிவிடுகிறது. ஏனென்றால், நான் தேடுவதில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு மணிப்பொழுதும் எனது கனவின் ஓர் அங்கமாக மாறிவிடுகிறது. என்னுடைய புதையலை விசுவாசத்துடன் தேடிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் நான் ஓர் உண்மையைக் கண்டறிந்துள்ளேன்; இத்தகைய முயற்சியில் ஈடுபடும் துணிச்சல் மட்டும் எனக்கு இல்லாமற் போயிருக்கும் பட்சத்தில், ஓர் இடையன் அடைவதென்பது சாத்தியமற்றது என்று தோன்றக்கூடிய விஷயங்களை நான் ஒருபோதும் பார்த்திருக்க முடியாது."

மதியம் முழுவதும் இதயம் அமைதியாக இருந்தது; இரவு ஆழ்ந்து தூங்கினான். விழித்தெழுந்தபோது, உலக ஆன்மாவிலிருந்து வந்த விஷயங்களை எல்லாம் இவனது இதயம் இவனுக்குச் சொல்லத் தொடங்கியது. மகிழ்ச்சியாக இருக்கிற மக்களுடன் இறைவன் இருக்கிறான் என்றும் ரஸவாதி சொன்னதைப் போல பாலைவனத்தின் ஒரு துகள் மணலில் கூட மகிழ்ச்சியைக் காணலாம் என்றும் சொன்னது. ஏனென்றால் ஒரு துகள் மணல் என்பது படைப்பின் ஒரு தருணம்; இந்தப் பிரபஞ்சம் உருவெடுப்பதற்குப் பல லட்சக்கணக்கான ஆண்டுகளானது.

இவனுடைய இதயம் தொடர்ந்தது: "இந்த மண்ணில் வசிக்கும் ஒவ்வொருவரும் தேடி அடைவதற்காக ஒரு புதையல் காத்துக்கிடக்கிறது. இதயங்களாகிய நாங்கள் அத்தகைய புதையல்களைப் பற்றியெல்லாம் அதிகம் பேசுவதில்லை.

ஏனென்றால், மக்கள் அவற்றைத் தேடிப் போக விரும்புவதில்லை. குழந்தைகளிடம்தான் அவற்றைப் பற்றிப் பேசுவோம். பின்னர், வாழ்க்கையை அதன் விதியை நோக்கி அதன்போக்கில் போகட்டும் என்று விட்டு விடுவோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, ஒரு சிலர் மட்டும் தமக்கென வகுக்கப்பட்டுள்ள பாதையை – தம்முடைய இலக்கினையும் மகிழ்ச்சியையும் நோக்கி வகுக்கப்பட்டுள்ள பாதையைப் பின்பற்றுகிறார்கள். பெரும்பாலான மக்கள் இவ்வுலகினை அச்சந்தரக்கூடியதோர் இடமாகவே கருதுகிறார்கள். அப்படி அவர்கள் கருதுவதால் இந்தப் பூமியும் அஞ்சி நடுங்குவதற்கானதொரு இடமாகவே மாறிவிடுகிறது.

“ஆகவே, அவர்களுடைய இதயங்களாகிய நாங்கள் மிக மிக மென்மையாகப் பேசுகிறோம்; ஒருபோதும் பேசுவதை நிறுத்துவதே இல்லை, ஆனாலும் எங்களுடைய பேச்சுக் கேட்கப்படாமல் போய்விடுமோ என்று எண்ணத் தொடங்கி விடுகிறோம். தம்முடைய இதயங்கள் சொல்வதைக் கேளாமையால் மக்கள் துன்புறக்கூடாது என்று விரும்புகிறோம்.”

“தம்முடைய கனவுகளைப் பின்பற்றிச் செல்லுமாறு மக்களுடைய இதயங்கள் ஏன் அவர்களிடம் சொல்லக்கூடாது?” என்று பையன் ரஸவாதியைக் கேட்டான்.

“ஏனென்றால், அதுதான் ஒரு இதயத்தை மிகவும் கஷ்டப்படச் செய்கிறது; இதயம் கஷ்டப்பட விரும்புவதில்லை.”

அப்பொழுதிலிருந்து பையன் தனது மனதைப் புரிந்து கொண்டான். தன்னுடன் பேசுவதை ஒருபோதும் நிறுத்திவிட வேண்டாம் என்று வேண்டினான். தன்னுடைய கனவுகளிலிருந்து இவன் விலகிப் போகும் பட்சத்தில் வலியுறுத்தி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டான். எச்சரிக்கையைக் கேட்கும் போதெல்லாம் அதன்படி நடப்பதாகவும் உறுதி பூண்டான்.

அன்றிரவு ரஸவாதியிடம் இதைப்பற்றியெல்லாம் சொன்னான். உலக ஆன்மாவிடம் அவனுடைய இதயம் திரும்பி விட்டது என்பதை ரஸவாதி புரிந்துகொண்டார்.

“இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்?” என்று பையன் கேட்டான்.

“பிரமிடுகள் இருக்கும் திசையை நோக்கித் தொடர்ந்து செல்; சகுனங்களைப் பின்பற்றுவதைத் தொடர்ந்து செய்; புதையல் இருக்கும் இடத்தைக் காட்டக்கூடிய வல்லமை உன் இதயத்திற்கு இருக்கிறது.”

"நான் தெரிந்துகொள்ள வேண்டிய அந்த ஒரு விஷயம் இதுதானா?"

"இல்லை; நீ மேலும் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் இது: ஒரு கனவை அடைவதற்குமுன் அதன் பாதைநெடுகிலும் கற்றுக்கொண்ட விஷயங்கள் அனைத்தையும் உலக ஆன்மா சோதிக்கும். அப்படிச் செய்வது பாவம் ஒன்றுமில்லை. அப்போது தான் நம்முடைய கனவுகளை அடைவதோடு அதன் பாதை நெடுகிலும் நாம் கற்றுக்கொண்ட விஷயங்களில் பாண்டித்தியம் பெற முடியும். அந்தக் கட்டத்தில்தான் பெரும்பாலான மக்கள் கைவிட்டுவிடுவார்கள். அந்தக் கட்டத்தில்தான், ஒருவன், பாலைவன மொழியில் சொல்வதைப் போல, ஈச்சமரங்கள் தொடுவானத்தில் தென்படும்போது தாகத்தால் மாண்டு போகிறான்.

"ஒவ்வொரு தேடலும் ஆரம்ப அதிர்ஷ்டத்தோடுதான் ஆரம்பமாகும், வெற்றிக்குரியவன் கடுமையாகச் சோதிக்கப் படுவதில் முடியும்."

தனது நாட்டில் சொல்லப்படுகிற ஒரு பழமொழி இவனுக்கு ஞாபகம் வந்தது. ராத்திரி நேரத்திலேயே மிக மிக இருட்டான தருணம் விடிவதற்குச் சற்று முன்புதான்.

✦

அடுத்த நாள் ஆபத்தின் முதல் அறிகுறி தெளிவாகத் தெரிந்தது. ரஸவாதியும் இந்தப் பையனும் இருந்த இடத்திற்கு மூன்று ஆதிவாசி வீரர்கள் வந்து அங்கே அவர்கள் என்ன செய்கிறார் கள் என்று விசாரித்தனர்.

"எனது கழுகைக் கொண்டு வேட்டையாடிக்கொண்டிருக் கிறேன்" என்று ரஸவாதி சொன்னார்.

"ஆயுதங்கள் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என்று சோதிக்கப் போகிறோம்" என்று ஆதிவாசிகளுள் ஒருவன் சொன்னான்.

ரஸவாதி மெதுவாகக் குதிரையை விட்டு இறங்கினார். பையனும் அப்படியே செய்தான்.

அவனுடைய பையைச் சோதித்த ஆதிவாசி கேட்டான். "ஏன் பணமெல்லாம் கொண்டு போகிறாய்?".

"பிரமிடுகளுக்குப் போய்ச்சேர அது எனக்குத் தேவை."

ரஸவாதியினுடைய உடைமைகளைச் சோதித்த ஆதிவாசி ஏதோ ஒரு திரவம் நிரம்பிய சிறிய பளிங்குக் குடுவை ஒன்றையும்

கோழிமுட்டையைக் காட்டிலும் சற்றுப் பெரிதாக இருந்த மஞ்சள் நிறக் கண்ணாடி முட்டையையும் பார்த்தான்.

"இதுவெல்லாம் என்ன?"

"ஞானக்கல்லும் ஜீவரஸமும், ரஸவாதிகளினுடைய பிரதான படைப்பு. ஜீவரஸத்தைச் சாப்பிடுவோரை ஒருபோதும் நோய் அண்டாது; ஞானக்கல்லின் சிறுகீற்றைக் கொண்டு எந்த உலோகத்தையும் தங்கமாக்கிவிடலாம்."

அந்த அரேபியர்கள் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள்; அவரும் சேர்ந்து சிரித்தார். அவருடைய பதில் விநோதமாக இருப்பதாக அவர்கள் நினைத்தார்கள். பையனையும் அவரையும் தமது உடைமைகளுடன் தொடர்ந்து செல்ல அனுமதித்தார்கள்.

அவர்கள் தமது பயணத்தைத் தொடர்ந்தபோது அவன் ரஸவாதியைப் பார்த்துக் கேட்டான்: "உங்களுக்கென்ன பைத்தியமா? ஏன் அப்படிச் செய்தீர்கள்?"

"வாழ்க்கையின் எளிய பாடங்களில் ஒன்றை உனக்குக் காண்பிக்கத்தான். உன்னிடம் பெரும் புதையல்களை வைத்துக் கொண்டு அதைப் பிறரிடம் சொல்ல முற்பட்டால் அவர்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள்."

பாலைவனப் பயணம் தொடர்ந்தது. நாட்கள் செல்லச் செல்ல, பையனின் இதயம் மௌனமாகிக்கொண்டே வந்தது. கடந்த காலத்தைப் பற்றியோ எதிர்காலத்தை பற்றியோ எந்த விஷயத்தையும் தெரிந்துகொள்ள விரும்பவில்லை. பாலைவனத்திலேயே ஆழ்ந்து உலக ஆன்மாவைப் பருகுவதிலே நிறைவடைந்தது. பையனும் அவனுடைய இதயமும் தோழர்களாகிவிட்டார்கள். ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதென்பது ஒருபோதும் இயலாது.

பாலைவனத்தின் நிசப்த நாட்கள் களைப்பூட்டுவதாக இருந்தமையால் இவனுக்கு வலுவூட்டும் விதத்திலும், தெம்பூட்டும் விதத்திலும் மட்டுமே இவனுடைய இதயம் பேசியது. இவனுடைய வல்லமை மிக்க தன்மைகள் என்னென்ன என்பதைச் சொன்னது. ஆட்டு மந்தையை விற்றுவிட்ட துணிச்சல், இலக்கினை அடைந்து தீருவதென்ற விடாமுயற்சி, பளிங்குக் கடையில் வேலை பார்த்தபோது காட்டிய ஆர்வம்.

பையன் ஒருபோதும் கவனித்தறியாத ஒரு விஷயத்தையும் அவனுடைய இதயம் சொன்னது: இவனை அச்சுறுத்திய ஆபத்துகளைப் பற்றிச் சொன்னது. ஆனால், அவற்றை இவன்

உணர்ந்ததுகூட இல்லை. ஒரு முறை இவன் தனது தகப் பனாரிடமிருந்து எடுத்த துப்பாக்கியை இவன் தனக்கே ஊறு விளைவித்துக் கொள்வான் என்பதற்காக ஒளித்து வைத்ததைச் சொன்னது. பின்பொருநாள் உடல்நலக்குறைவால் வயல்வெளி களில் வாந்தி எடுத்து அதன்பின் ஆழ்ந்து தூங்கியும்விட்டான். தொலைதூரத்தில் இரண்டு திருடர்கள் இவனுடைய ஆட்டு மந்தையைப் பறித்துக்கொண்டு இவனையும் கொன்றுவிடத் திட்டமிட்டபடி காத்திருந்தனர். ஆனால் இவன் அவர்களைக் கடந்து செல்லாததால் வேறுவழியாகப் போய்விட்டதாக நினைத்து அகன்றுவிட்டார்கள். அதனையும் இவனுக்கு ஞாபகப் படுத்தியது.

"மனிதனுடைய இதயம் எப்பவுமே உதவி செய்யுமா?" என்று ரஸவாதியிடம் கேட்டான்.

"தம்முடைய இலக்கினை அடைய முயற்சி செய்பவர் களின் இதயங்கள் பெரும்பாலும் அப்படிச் செய்வதுண்டு . . . ஆனால் அவை குழந்தைகளுக்கும் குடிகாரர்களுக்கும் வயசாளி களுக்கும்கூட 'உதவுவதுண்டு."

"அப்படியென்றால், நான் ஒருபோதும் ஆபத்தில் மாட்டிக் கொள்ளமாட்டேன் என்று அர்த்தமா?"

"இதயம் தன்னால் ஆனதை மட்டுமே செய்யும் என்று அர்த்தம்."

ஒருநாள் மதியம்; ஆதிவாசிகளின் போர் முகாம் ஒன்றைக் கடந்து போய்க்கொண்டிருந்தார்கள். அந்த முகாமின் ஒவ்வொரு மூலையிலும், அழகிய வெள்ளை அங்கி தரித்த அரேபியர்கள் ஆயுதங்களை ஆயத்தமாக ஏந்தியபடி நின்றிருந்தனர். வீரர்கள் ஹூக்காவைப் புகைத்தபடி பழைய போர்க்களக் கதைகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்த இரு பயணிகளையும் கவனித்த தாகத் தெரியவில்லை.

முகாமைக் கடந்து சென்றபோது பையன் சொன்னான்: "ஆபத்து ஒன்றும் இல்லை."

ரஸவாதி கோபத்தில் கூறினார்: "உன்னுடைய இதயத்தின் மீது நம்பிக்கை வை; ஆனால், பாலைவனத்தில் இருக்கிறோம் என்பதையும் மறந்திடாதே; ஒருவரோடு ஒருவர் போரில் ஈடுபட்டிருக்கும் போது போரின் அவலக்குரலையே உலக ஆன்மா கேட்க முடியும். சூரியனுக்குக் கீழே நடக்கக் கூடியவை களின் விளைவுகளிலிருந்து தப்பிக்க யாராலும் முடியாது."

எல்லாமே ஒன்றுதான் என்று அவன் நினைத்தான். ரஸவாதி சொன்னது சரிதான் என்று நிரூபித்துக்காட்ட

விரும்பியதைப் போலப் பின்புறமிருந்து இரண்டு குதிரைவீரர்கள் தோன்றினார்கள்.

அவர்களில் ஒருவன் சொன்னான்: "இதற்குமேல் போகாதீர்கள். போர் நடந்துகொண்டிருக்கும் இடத்தில் இருக்கிறீர்கள்."

அவனுடைய கண்களை நேருக்கு நேராகத் துருவிப் பார்த்தபடி ரஸவாதி சொன்னார்: "நான் ரொம்ப தூரம் போகவில்லை." அவர்கள் ஒரு நொடி மௌனமாக இருந்தனர். பின்னர் பையனும் ரஸவாதியும் தொடர்ந்து மேலே செல்ல அனுமதித்தனர்.

அங்கு நிகழ்ந்த பார்வைப் பரிமாற்றத்தைப் பையன் வியந்து பார்த்தான். பிறகு சொன்னான்: "பார்க்கிற பார்வையிலேயே அந்தக் குதிரைக்காரர்களை வீழ்த்திவிட்டீர்களே!"

"ஆன்மாவின் வலிமையைக் கண்கள் காட்டும்."

அதுவும் உண்மைதான் என்று அவன் நினைத்தான். அந்த முகாமில் இருந்த ஏகப்பட்ட வீரர்களில் ஒருவன் மட்டும் இவர்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்ததை இவன் கவனித்தான். அவன் ரொம்ப தூரத்தில் இருந்ததால் அவனுடைய முகம்கூடத் தெரியவில்லை. ஆனாலும் அவன் இவர்களைத்தான் பார்த்துக்கொண்டிருந்தான் என இவனுக்குப் பட்டது.

கடைசியாக ஒரு மலைத்தொடரைக் கடந்து சென்றார்கள். தொடுவானம் நெடுகிலும் அந்த மலைத்தொடர் நீண்டு கிடந்தது. இன்னும் இரண்டு நாட்களில் பிரமிடுகளைச் சென்றடைந்து விடலாம் என்று ரஸவாதி சொன்னான்.

"விரைவிலேயே நாம் தனித்தனி வழிகளில் போகப் போகிறோம்" என்றார். "எனக்கு ரஸவாதம் சொல்லிக் கொடுங்கள்" என்று சொன்னான் பையன்.

"ரஸவாதத்தைப் பற்றி உனக்கு ஏற்கனவே தெரியும். அது உலக ஆன்மாவை ஊடுருவுவதும் உனக்கெனக் காத்திருக்கும் புதையலைக் கண்டுபிடிப்பதும்தான்."

"இல்லை, நான் அதைச் சொல்லவில்லை. ஈயத்தைத் தங்கமாக மாற்றுவது பற்றி."

பாலைவனத்தைப் போலவே ரஸவாதியும் மௌனத்தில் ஆழ்ந்துவிட்டார். சாப்பிடுவதற்காகத் தங்கிய போதுதான் பதில் சொன்னார்: "பிரபஞ்சத்தில் உள்ள எல்லாமே பரிணமித்தவை; ஞானிகளைப் பொறுத்தவரை, தங்கம் என்பது மிகவும்

காலங்கடந்து பரிணமித்ததோர் உலோகம். ஏன் என்று என்னைக் கேட்காதே, எனக்குத் தெரியாது. மரபு என்பது சரியானது என்பது மட்டுமே எனக்குத் தெரியும்.

"ஞானிகள் சொல்வதை மக்கள் ஒருபோதும் புரிந்துகொள்ள மாட்டார்கள். ஆகவே, தங்கம் பரிணாமத்தின் அடையாளமாக இருப்பதற்குப் பதிலாகப் போராட்டத்திற்கு அடிப்படையாக அமைந்துவிட்டது."

"விஷயங்கள் பல்வேறு தொனிகளில் அறிவிக்கப்படுகின்றன. என்னைப் பொறுத்தவரை ஒட்டகத்தின் கனைப்புச்சத்தம் வெறும் கனைப்பொலியாக மட்டுமே இருந்த காலம் ஒன்றுண்டு; பின்னர், அது ஆபத்தின் அறிகுறியாகப் பட்டது. கடைசியாக, மீண்டும் வெறும் கனைப்பொலியாகிப்போனது."

இவன் நிறுத்திக் கொண்டான். ரஸவாதிக்கு இந்த விஷய மெல்லாம் ஏற்கனவே தெரிந்திருக்கலாம்.

ரஸவாதி தொடர்ந்தார்: "உண்மையான ரஸவாதிகளை அறிவேன். சோதனைச் சாலைக்குள்ளேயே அடைந்துகிடப்பார் கள். தங்கத்தைப் போலவே தாங்களும் பரிணமித்தார்கள். ஞானக்கல்லைக் கண்டனர். ஒன்று பரிணமிக்கும் போது அதனைச் சுற்றியுள்ள எல்லாமே பரிணாமம் பெறும் என்பதைப் புரிந்துகொண்டார்கள்.

"வேறு சிலருக்கு எதேச்சையாக அந்தக் கல் அகப்பட்டது. அவர்கள் கொடுத்து வைத்தவர்கள். அது போன்ற விஷயங் களுக்கு மற்றவர்களுடையதைக் காட்டிலும் அவர்களுடைய ஆன்மா மிகவும் துரிதமாகத் தயாராகிவரும் பேறு பெற்றவர்கள். அபூர்வமானவர்கள்; அப்படிப்பட்டவர்கள் மிகச் சிலரே.

"வேறு சிலர் இருந்தார்கள். அவர்களுக்குத் தங்கத்தில் மட்டும்தான் ஆர்வம். அவர்களால் இந்த ரகசியத்தைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஈயம், தாமிரம், இரும்பு போன்ற வற்றிற்குத் தாம் அடைந்து தீரவேண்டிய தத்தமது இலக்குகள் உண்டு என்பதை மறந்தவர்கள்; மற்றவருடைய இலக்கினில் குறுக்கிடும் எவரும் தனது இலக்கினைக் கண்டுபிடிக்க முடியா மல் போய்விடும்."

ரஸவாதியின் வார்த்தைகள் சாபத்தைப் போல் ஒலித்தன. தரையில் குனிந்து ஒரு சோழியை எடுத்தார்.

"இந்தப் பாலைவனம் ஒரு காலத்தில் கடலாக இருந்தது."

"நானும் அதைக் கவனித்தேன்" என்று சொன்னான் பையன்.

அந்தச் சோழியைக் காதோரம் வைத்துக்கொள்ளும்படி ரஸவாதி இவனிடம் சொன்னார். குழந்தையாக இருந்த போது அதைப்போலப் பலமுறை செய்து கடலின் ஓசையைக் கேட்டிருக்கிறான்.

"இந்தச் சோழிக்குள் கடல் ஜீவித்திருந்தது; ஏனெனில் அதுதான் அதனுடைய இலக்கு. இந்தப் பாலைவனம் மீண்டும் நீரால் சூழப்படும் வரை அது தனது பணியைச் செய்வதை நிறுத்தப் போவதில்லை."

தங்கள் குதிரைகள் மீது ஏறி எகிப்தின் பிரமிடுகள் இருந்த திசையை நோக்கிப் பறந்தனர்.

✦

பையனுடைய இதயம் அபாய ஒலி எழுப்பியபோது பொழுது சாய்ந்துகொண்டிருந்தது. பூதாகரமான மணல் திட்டுகளுக்கு நடுவில் மாட்டிக்கொண்டார்கள். ரஸவாதிக்கு ஏதேனும் தென்பட்டதா என்பதை அறிய அவரைப் பார்த்தான். ஆபத்து எதையும் அறிந்தவராகத் தெரியவில்லை. ஐந்து நிமிடங்கள் கழித்து அவர்களுக்கு முன்னால் இரண்டு குதிரை வீரர்கள் காத்திருப்பது தெரிந்தது. ரஸவாதியின் பக்கம் திரும்பி ஏதோ சொல்வதற்குள் இரண்டு பேர் பத்துப்பேர் ஆயினர்; பிறகு நூறு பேர் தெரிந்தனர்; சற்று நேரத்தில் மணல்திட்டுக்கள் முழுக்க ஆட்கள்.

நீல நிற உடை அணிந்த ஆதிவாசிகள்; அவர்களுடைய தலைப்பாகையைக் கறுப்பு வளையங்கள் சுற்றியிருந்தன; நீல முகமூடிகள் முகங்களை மறைத்திருந்தன; கண்கள் மட்டுமே தெரிந்தன.

தூரத்திலிருந்து பார்க்கும் போதே, அவர்களுடைய ஆன்மா வின் வலிமையைக் கண்கள் அறிவித்தன. அவர்களுடைய கண்கள் சாவைப் பறை சாற்றின.

✦

அருகிலிருந்த இராணுவ முகாமிற்கு இவர்களை அள்ளிச் சென்றனர். தளபதி தன்னுடைய சகாக்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்திக்கொண்டிருந்த கூடாரத்திற்குள் ஒரு ராணுவ வீரன் இவர்கள் இருவரையும் நெட்டித் தள்ளினான்.

வீரர்களுள் ஒருவன் "இவர்கள் ஒற்றர்கள்" என்றான்

"நாங்கள் வெறும் பயணிகள்" என்று ரஸவாதி சொன்னார்.

“மூன்று நாட்களுக்கு முன்பு உங்களை எதிரி முகாமில் பார்த்தோம். அங்கிருந்த வீரர்களுள் ஒருவனிடம் நீங்கள் பேசிக்கொண்டிருந்தீர்கள்.”

ரஸவாதி பேசினார்: “இந்தப் பாலைவனத்தில் அலைந்து கொண்டிருக்கும் சாதாரண ஆள் நான். விண்மீன்களைப் பற்றி அறிவேன். துருப்புகளைப் பற்றியோ, ஆதிவாசிகளின் நடவடிக்கைகளைப் பற்றியோ எந்தச் செய்தியும் என்னிடம் இல்லை. இதோ என்னுடைய நண்பனுக்கு வழி காட்டியாக வந்தவன்.”

“உன்னுடைய நண்பன் யார்?” என்று தளபதி கேட்டான்.

“ஒரு ரஸவாதி; அவன் இயற்கையின் சக்திகளைப் புரிந்து கொண்டவன்; உங்களிடம் தன்னுடைய அசாத்தியமான ஆற்றலைக் காட்ட விரும்புகிறான்.”

பையன் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தான்; பயமாகவும் இருந்தது.

“அந்நியனுக்கு இங்கே என்ன வேலை?” என்று அவர்களுள் இன்னொருவன் கேட்டான்.

“உங்களுடைய கூட்டத்திற்குக் கொடுப்பதற்காகப் பணம் கொண்டு வந்திருக்கிறான்” என்று சொன்ன ரஸவாதி, பையன் எதையாவது உளறுவதற்குள் இவனுடைய பையைப் பறித்துத் தங்கக் காசுகளைத் தளபதியிடம் தந்தார்.

மறுவார்த்தை பேசாமல் அவற்றை அந்த அரேபியன் வாங்கிக்கொண்டான். ஏராளமான ஆயுதங்களை வாங்கும் அளவுக்குப் போதுமான பணம் இருந்தது.

கடைசியாக அவன் கேட்டான்: “ரஸவாதி என்றால் என்ன?”

“இயற்கையையும் உலகத்தையும் புரிந்துகொண்ட மனிதன். இவன் நினைத்தால் காற்றின் சக்தியைக் கொண்டு இந்த முகாமையே அழித்து விடுவான்.”

எல்லோருமே நகைத்தனர். அவர்கள் போரின் பேரழிவுகளுக்குப் பழக்கப்பட்டவர்கள்; காற்றினால் மரணஅடி கொடுக்க முடியாது என்பதை அறிந்தவர்கள். இருந்தபோதிலும், ஒவ்வொருவருடைய இதயமும் சற்று வேகமாகத்தான் அடித்துக்கொண்டது. பாலைவன மனிதர்களாகிய அவர்களுக்கு மந்திரவாதிகள் என்றால் பயம்.

“அவன் அப்படிச் செய்வதை நான் பார்க்கவேண்டும்” என்று தளபதி சொன்னான்.

ரஸவாதி பதிலுக்குச் சொன்னார்: "மூணு நாள் அவகாசம் வேணும். தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்த அவன் காற்றாகவே மாறவேண்டியிருக்கிறது. அவன் அப்படிச் செய்யாமல் போனால் மேன்மைதங்கிய உங்களுடைய கூட்டத்திற்கு எங்களுடைய உயிரையே காணிக்கையாக்குகிறோம்."

"ஏற்கனவே எனக்குச் சொந்தமாகிப் போனதை நீ காணிக்கையாக்க முடியாது" என்று தளபதி ஆணவத்துடன் சொன்னான். ஆனாலும் மூன்று நாள் அவகாசம் தந்தான்.

பயத்தால் பையனின் உடல் நடுங்கியது. ரஸவாதி அவனைத் தாங்கியபடி கூடாரத்தை விட்டு வெளியேறினார்.

ரஸவாதி கூறினார்: "பயத்தை வெளியில் காட்டிக்கொள்ளாதே. அவர்கள் துணிச்சல்காரர்கள்; கோழைகளைக் கொன்று விடுவார்கள்."

இவனுக்குப் பேச்சே எழவில்லை. முகாமின் மையப் பகுதி வரைக்கும் நடந்து வந்த பிறகுதான் இவனால் பேசவே முடிந்தது. இவர்களைச் சிறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இவர்களுடைய குதிரைகளை மட்டும் பறிமுதல் செய்தனர். ஆக, மீண்டும் ஒருமுறை இந்த உலகம் தன்னுடைய பலவிதமான மொழிகளைச் செயல்படுத்திக் காட்டியது. சற்று நேரத்திற்கு முன்புவரை அந்தப் பாலைவனம் எல்லையற்றதாகவும் சுதந்திரமானதாகவும் இருந்தது. இப்பொழுது துளைக்க முடியாத மதில்சுவராக மாறிவிட்டது.

பையன் சொன்னான்: "என்னிடம் இருந்த எல்லாவற்றையும் – என் வாழ்நாள் முழுவதும் சேமித்து வைத்திருந்த அனைத்தையும் – கொடுத்துட்டீகளே"

"ஆமாம், சாகப் போகிறாய் என்கிற போது அதனால் என்ன பயன்? உன்னுடைய பணம் நம்மை மூன்று நாளைக்குக் காப்பாற்றியிருக்கிறது; பணத்தாலே மனித உயிர் காப்பாற்றப் படுவது எப்போதாவதுதான்"

ஞான மொழிகளைக் கேட்கிற நிலையில் இந்தப் பையன் இல்லை; மிகவும் பயந்துபோய் இருந்தான். காற்றாகத் தன்னை மாற்றிக்கொள்வது பற்றி இவனுக்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை. இவன் ஒரு ரஸவாதியும் இல்லையே!

ராணுவ வீரர்களுள் ஒருவனிடம் தேநீர் கேட்டு வாங்கிப் பையனின் மணிக்கட்டில் சிறிது ஊற்றினார் ரஸவாதி. நிம்மதி அலை இவன் மீது பரவியது. இவனால் புரிந்துகொள்ள முடியாத சில மந்திர வார்த்தைகளை உச்சரித்தார்.

"பயத்துக்கு இடம் கொடுக்காதே. அப்படிச் செய்தால் உன்னால் உன்னுடைய இதயத்தோடு பேச முடியாமற் போய் விடும்" – மெல்லிய விநோதமான குரலில் ரஸவாதி சொன்னார்.

"ஆனாலும் காற்றாக என்னை மாற்றிக்கொள்வது பற்றி எந்த யோசனையும் தோன்றவில்லையே!"

"தன்னுடைய இலக்கிற்காகவே வாழ்கிற ஒருவனுக்குத் தேவையான அனைத்தும் தெரியும். கனவை அடையவியலாத படி செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான்: தோற்றுவிடுவோமோ என்கிற பயம்."

"தோற்றுவிடுவேன் என்கிற பயம் இல்லை; காற்றாக மாற்றிக்கொள்ளத்தான் தெரியவில்லை."

"சரி, அப்படியானால் கற்றுக்கொள்; அதிலேதானே உனது உயிரே இருக்கிறது."

"என்னால் முடியாமல் போனால் என்ன ஆகும்?"

"உனது இலக்கினை அடைகிற முயற்சியின் இடையிலேயே செத்துப்போவாய். இலக்கினைப் பற்றி எதுவுமே தெரியாமல் செத்துப்போகிற லட்சக்கணக்கான மக்களைக் காட்டிலும், அது எவ்வளவோ நல்ல சாவுதான்."

ரஸவாதி தொடர்ந்தார்: "ஆனாலும், கவலைப்படாதே! சாகப் போகிறோம் என்கிற பயமே வாழ்க்கையைப் பற்றி நிறையத் தெரிந்துகொள்ளச் செய்வது வழக்கம்."

✧

முதல் நாள் கழிந்தது. அருகாமையில் கடும் போர் நடந்தது. காயமடைந்த நிறைய வீரர்களை முகாமுக்குக் கொண்டு வந்தார்கள். இறந்துபோனவர்களுக்குப் பதிலாக மற்றவர்களை நிறுத்தினர். வாழ்க்கை தொடர்ந்தது. சாவினால் எந்த மாற்றமும் இல்லை என்று இவன் நினைத்தான்.

தனது சகாவின் உடலைப் பார்த்து ஒரு ராணுவ வீரன் சொன்னான்: "கொஞ்ச நாள் கழித்து நீ செத்திருக்கலாம்; அமைதி பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு நீ செத்திருக்கலாம்; பரவாயில்லை, என்றைக்கானாலும் சாகத்தானே போகிறாய்."

பாலைவனத்திற்குள் தனது வல்லூறுடன் சென்றிருந்த ரஸவாதியைத் தேடிப் பையன் பொழுது சாயும் நேரம் சென்றான்.

"காற்றாக மாறுவது பற்றி இன்னமும் எனக்கு எந்த யோசனையும் தோன்றவில்லை" என்று திரும்பவும் சொன்னான்.

"நான் சொன்னதை ஞாபகம் வைத்துக்கொள்: கண்ணுக்குப் புலப்படக் கூடிய கடவுளின் அம்சம்தான் இந்த உலகம். ஆன்மீகப் பரிசுத்தத்தைக் காட்சிப் பொருளோடு எப்படித் தொடர்புபடுத்துவது என்பதுதான் ரஸவாதி செய்கிற வேலை."

"என்ன செய்றீங்க?"

"வல்லூறுக்கு இரை போடுறேன்."

"காற்றாக மாற்றிக்கொள்ள முடியாமற் போனால் நாம் சாகப் போகிறோம்; அதற்குள் வல்லூறுக்கு என்ன இரை வேண்டியிருக்கு?"

"நீ மட்டும்தான் சாகப் போகிறாய்; காற்றாக மாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும்" என்றார் ரஸவாதி.

✦

இரண்டாவது நாள் முகாமிற்கு அருகில் இருந்த குன்றின் உச்சியில் ஏறினான்; காவலாளிகள் தடுக்கவில்லை. காற்றாக மாற்றிக்கொள்ளக் கூடிய மந்திரவாதிகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தார்கள். இவன் அருகில் செல்லப் பயந்தார்கள். எது எப்படி இருந்தாலும், அந்தப் பாலைவனம் எளிதில் கடக்க முடியாதது.

இரண்டாவது நாள் மதியம் முழுவதும் பாலைவனத்தை வெறித்துப் பார்ப்பதிலேயே கழித்தான். தன்னுடைய இதயத்தை யும் உற்றுக் கவனித்தான். இவனுடைய அச்சத்தை அந்தப் பாலைவனம் உணர்ந்தது போல் தெரிந்தது. அவர்கள் இருவரும் ஒரே மொழியைப் பேசினர்.

✦

மூன்றாவது நாள் தளபதி தனது சகாக்களை அழைத்தான். ரஸவாதியும் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டார். "காற்றாக மாற்றிக்கொள்ளப் போகிற பையனைப் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

"சரி" என்று ரஸவாதி பதிலளித்தார்.

முந்திய நாள் தான் இருந்த குன்றிற்கு அவர்களை இவன் அழைத்துச் சென்றான்; அனைவரையும் அமரச் சொன்னான்.

"கொஞ்சம் நேரம் ஆகும்" என்றான்.

"அவசரம் இல்லை; நாங்கள் எல்லோருமே பாலைவன ஆட்கள்தான்" என்று தளபதி சொன்னான்.

பையன் தொடுவானத்தைப் பார்த்தான்; தூரத்தில் மலைகள் இருந்தன. மணல் திட்டுக்கள்; பாறைகள்; வாழ்க்கை சாத்தியமற்ற இடத்தில்கூட வாழலாம் என்பதை வலியுறுத்தும் வகையில் தாவரங்கள்கூட இருந்தன. எத்தனையோ மாதங்களாக இவன் அந்தப் பாலைவனத்தில் அலைந்து திரிந்திருக்கின்றான்; அத்தனை காலமாகியும் அதனுடைய ஒரு சிறு பகுதியைத்தான் இவனால் தெரிந்துகொள்ள முடிந்தது. அந்தச் சிறு பகுதிக்குள்ளாகவே, ஓர் ஆங்கிலேயர், பாலைவனப் பயணியர் கூட்டங்கள், ஆதிவாசிகளுக்கிடையே போர்கள், ஐம்பதாயிரம் ஈச்சமரங்களையும் முந்நூறு கிணறுகளையும் கொண்ட ஒரு பாலைவனச் சோலை அனைத்தையும் பார்த்து விட்டான்.

"இன்றைக்கு இங்கே எதைப் பார்க்க விரும்புகிறாய்; நேற்று முழுவதும் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தது போதாதா?" என்று பாலைவனம் கேட்டது.

"நான் விரும்பக்கூடிய ஒரு நபரை நீ எங்கேயோ பிடித்து வைத்துக்கொண்டாய். உன்னுடைய மணற்பரப்பை நான் வெறித்துப் பார்க்கும் போதெல்லாம் அவளையும் பார்க்கிறேன். அவளிடம் திரும்பிப் போக வேண்டும். உன்னுடைய உதவி தேவை. நான் காற்றாக மாற வேண்டும்." என்று பையன் சொன்னான்.

"காதல் என்பது என்ன?" என்று பாலைவனம் கேட்டது.

"உனது மணற் பரப்பின் மேலே பாய்ந்து பறக்கிற கழுகின் பாய்ச்சல்தான் காதல் என்பது. ஏனென்றால், அதனைப் பொறுத்த வரை நீதான் பசும்வயல்; உன்னிடம்தான் இரையோடு திரும்புகிறது. உன்னுடைய பாறைகள், மணல் திட்டுகள், மலைகள் எல்லாமே அதற்குத் தெரியும். அதனிடம் நீ பெருந் தன்மையோடு இருக்கிறாய்."

"கழுகின் அலகு என்னுள்ளிருந்து சிறு துகள்களை மட்டுமே எடுத்துச் செல்கிறது. வருடக்கணக்கில் அதனுடைய வேட்டைக்கு அனுசரணையாக இருந்திருக்கிறேன்; என்னிடம் உள்ள சொற்ப நீரையும் ஊட்டுகிறேன்; அதனுடைய இரை இருக்கும் இடத்தையும் காட்டுகிறேன். அதனுடைய இரை என்னுடைய மேனியில் தான் செழிக்கிறது என்கிற உண்மையில் களிக்கிறேன். வானிலிருந்து கரணம் போடும் கழுகுகள் என்னுள் உருவானதை எடுத்துக்கொண்டு பறக்கிறது" என்றது பாலைவனம்.

பையன் பதில் சொன்னான்: "அதற்காகத்தானே வேட்டை என்பதையே முதலில் உருவாக்கினாய். கழுகை நீ பராமரிக்கிறாய்; கழுகு மனிதனைப் பராமரிக்கும்; கடைசியாக, மனிதன்

உனது மணற்பரப்பைப் பராமரிப்பான். அங்கே மீண்டும் வேட்டை தழைக்கும். அப்படியாகத்தானே உலகம் செயல் படுகிறது."

"ஆக, இதுதான் காதல் என்பதா?"

"ஆமாம், அதுதான் காதல். அதுதான் வேட்டையை வல்லூறாக்குகிறது; வல்லூறை மனிதனாக்குகின்றது; மனிதன் திரும்பவும் பாலைவனத்தை ஆக்குகிறான். அதுதான் ஈயத்தைத் தங்கமாக்குகிறது; தங்கத்தைப் பூமிக்குள் புதைக்கிறது."

"எதைப் பற்றிப் பேசுகிறாய் என்பது எனக்குப் புரிய வில்லை" என்று பாலைவனம் சொன்னது.

"ஆனாலும், உனது மணற்பரப்பில் எங்கோ ஓரிடத்தில் ஒரு பெண் எனக்காகக் காத்திருக்கிறாள் என்பதும் அதற்காகத் தான் நான் என்னைக் காற்றாக மாற்றிக்கொள்ள வேண்டிய தாக இருக்கிறது என்பதுமாவது உனக்குப் புரிந்திருக்கும்."

சற்று நேரம் பாலைவனம் பதிலேதும் சொல்லவில்லை; பிறகு சொன்னது: "காற்று வீசுவதற்கு ஏதுவாக எனது மணலை வேண்டுமானால் நான் கொடுக்கிறேன். ஆனால், தனியாக என்னால் எதுவும் செய்ய இயலாது. காற்றிடமிருந்து உதவியைக் கேட்டுப் பெற வேண்டும்."

தென்றல் வீசத் தொடங்கியது. ஆதிவாசிகள் தூரத்தில் இருந்தபடி இவனைக் கவனித்தார்கள். இவனால் புரிந்து கொள்ள முடியாத மொழியில் தமக்குள் பேசிக்கொண்டனர்.

ரஸவாதி புன்னகைத்தார்.

காற்று நெருங்கி இந்தப் பையனுடைய முகத்தை வருடியது. பாலைவனத்துடன் இவன் பேசியது காற்றுக்குத் தெரியும். ஏனென்றால் காற்றுக்கு எல்லாம் தெரியும். உலகம் முழுவதும் வீசும் காற்றுக்குப் பிறந்த இடம், சாகும் இடம் என்று எதுவும் கிடையாது.

"எனக்கு ஒத்தாசை செய். எனது அன்பிற்குரியவளுடைய குரலை ஒரு நாள் நீ சுமந்து வந்தாயே" என்று பையன் சொன்னான்.

"பாலைவன மொழியையும் காற்று மொழியையும் பேசுவதற்கு உனக்குக் கற்றுத் தந்தது யார்?"

"எனது இதயம்" என்று பதில் சொன்னான்.

காற்றுக்குப் பல பெயர்கள் உண்டு. அந்தப் பகுதியில் அதனை 'ஸிரோக்கோ' என்பார்கள். ஏனென்றால், அது

கடலிலிருந்து ஈரப்பதத்தைக் கிழக்கு நோக்கிக் கொண்டு வந்தது. இந்தப் பையனுடைய தொலைதூர நாட்டில் 'லாவன்டர்' என்பர். ஏனெனில், அது பாலைவன மணலையும் மூரிஷ் மக்களுடைய போர் அவலக்குரலையும் சுமந்து சென்றது. இவனுடைய ஆடுகள் வசித்த புல்வெளிகளுக்கும் அப்பால் இருந்த இடங்களில், மக்கள் ஒரு வேளை அந்தக் காற்று அந்தலூசியப் பகுதியிலிருந்து வந்ததாக நினைத்திருக்கலாம்; ஆனால், உண்மையில், காற்று எந்தவொரு குறிப்பிட்ட இடத்திலிருந்து வருவதுமில்லை; எந்தவொரு குறிப்பிட்ட இடத்திற்குப் போவதும் இல்லை. அதனால்தான் அது பாலைவனத்தை விடவும் வலிமையாக உள்ளது. யாரேனும் ஒருவர் என்றேனும் ஒரு நாள் அந்தப் பாலைவனத்தில் மரங்களை நடலாம்; ஆடுகளைக்கூட வளர்க்கலாம்; ஆனால், காற்றை ஒருபோதும் அடக்கி ஆள முடியாது.

"காற்றாக மாற உன்னால் முடியாது; நாம் இருவரும் இருவேறுபட்டவர்கள்" என்று காற்று சொன்னது.

பையன் சொன்னான்: "அது உண்மையல்ல; என்னுடைய பயணத்தின் போது ரஸவாதிகளின் ரகசியத்தைக் கற்க நேர்ந்தது. காற்று, பாலைவனம், கடல், விண்மீன் மற்றும் இந்தப் பிரபஞ்சத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ள எல்லாமே என்னுள் இருக்கின்றன. நாம் எல்லோருமே ஒரே கையால் செய்யப்பட்டவர்கள்; நாம் அனைவருக்கும் ஒரே ஆன்மாதான். நான் நீயாக விரும்புகிறேன்; உலகின் எல்லா மூலைகளிலும் உலவி வர வேண்டும்; கடல்களைக் கடக்க வேண்டும்; புதையலை மறைத்துள்ள மணற்பரப்பை ஊதித்தள்ள வேண்டும்; விரும்புகிற பெண்ணின் குரலைச் சுமந்து செல்ல வேண்டும்."

காற்று சொன்னது: "அன்றொரு நாள் அந்த ரஸவாதியோடு நீ பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். எல்லாவற்றிற்கும் அதனுடைய இலக்கு இருப்பதாகச் சொன்னார். ஆனாலும் மனிதர்கள் தங்களைக் காற்றாக மாற்றிக்கொள்ள ஏலாது."

"கொஞ்சம் நேரம் மட்டும் காற்றாக இருப்பதற்கு எனக்குக் கற்றுக்கொடு; மனிதர்களாலும் காற்றாலும் இயலக்கூடிய எல்லையற்ற விஷயங்களைப் பற்றி நீயும் நானும் பேசலாம்" என்றான் பையன்.

காற்றின் அறிவார்வம் தூண்டப்பட்டது. அதுவரை நடக்காத ஒன்று. அவற்றைப் பற்றியெல்லாம் பேச அதற்கும் விருப்பம்தான். ஆனால், ஒரு மனிதனை எப்படிக் காற்றாக மாற்றுவதென்பது அதற்குத் தெரியவில்லை. எத்தனை

விஷயங்களை அந்தக் காற்று ஏற்கனவே தெரிந்து வைத்திருந்தது தெரியுமா! பாலைவனங்களை உருவாக்கியது; கப்பல்களைக் கவிழ்த்தியது; காடுகளை முழுமையாகச் சாய்த்தது; நகரங் களுக்குள் புகுந்து இசையாலும், விதவிதமான ஓசைகளாலும் நிரப்பியது. தனது ஆற்றல் அளப்பரியது என்று இறுமாந்திருந் தது. ஆனால், ஒரு பையன் அது செய்யக் கூடிய வேறு சில விஷயங்களும் இருப்பதாகச் சொல்கிறான்.

தன்னுடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பது போலத் தோன்றவே பையன் காற்றிடம் சொன்னான்: “இதைத்தான் காதல் என்கிறார்கள்; காதல் வயப்பட்டுவிட்டால் எதையும் உருவாக்கலாம். காதல் வயப்பட்டுவிட்டால், என்ன நடக்கிறது என்பதைப் பற்றிப் புரிந்துகொள்ளக்கூடத் தேவையில்லை. ஏனென்றால், நடப்பது அத்தனையும் உன்னுள்ளேயே நடக்கிறது. காற்று உதவும் பட்சத்தில், மனிதர்கள் தம்மைக் காற்றாகக் கூட மாற்றிக்கொள்ளலாம்.”

காற்று ஆணவம் பிடித்த ஒன்று. இந்தப் பையன் பேசி யதைக் கேட்டு எரிச்சலடைந்துவிட்டது; கடுமையாக வீசத் தொடங்கிவிட்டது. பாலைவன மணலைக் கிளப்பிவிட்டது. ஆனால், கடைசியில் என்னதான் உலகம் முழுவதும் சுற்றி வந்தாலும்கூட ஒரு மனிதனைக் காற்றாக மாற்றத் தெரிய வில்லை என்பதையும் காதலைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்பதையும் அது உணர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று.

தன்னுடைய குறைபாடுகளை ஒத்துக்கொள்ள வேண்டிய தாகப் போயிற்றே என்ற கோபத்தில் இரைந்தது: “என்னுடைய உலகப் பயணத்தின் போது மக்கள் காதலைப் பற்றிப் பேசு வதையும், சொர்க்கத்தை நோக்கி அண்ணாந்து பார்ப்பதையும் அடிக்கடி கண்டிருக்கிறேன்; சொர்க்கத்தையும் கேட்பது நல்லது.”

பையன் சொன்னான்: “சரி, அப்படியானால், அதைச் செய்வதற்கு எனக்கு உதவு. வலுவானதொரு மணல் புயலைக் கிளப்பி சூரியனை முழுமையாக மறைத்து விடு. அப்போது தான் என்னால் கண் குருடாகாதபடி சொர்க்கத்தைப் பார்க்க முடியும்.”

முழு வலிமையோடு காற்று வீசியது; வானத்தை மணலால் நிரப்பியது. சூரியன் ஒரு தங்கத்தட்டாக மாறிவிட்டது.

முகாமில் எதனையும் பார்ப்பது கடினமாக இருந்தது. பாலைவன மனிதர்கள் ஏற்கனவே அத்தகைய காற்றுக்குப் பழக்கப்பட்டவர்கள். அவர்கள் அதனை ‘சைமம்’ (மணற்சூறை) என்பார்கள். அது கடற்புயலைக் காட்டிலும் மோசமானது.

குதிரைகள் வெருண்டு கனைத்தன; ஆயுதங்கள் மணலில் புதைந்தன.

குன்றிலிருந்த படைத்தலைவர்களில் ஒருவன் தளபதியைப் பார்த்து உரக்கக் கத்தினான்: "இதை முடித்துக்கொள்வது நல்லது."

அவர்களால் இந்தப் பையனைப் பார்க்க முடியவில்லை. அவர்களுடைய முகங்கள் நீலநிறத் துணியால் மூடப்பட்டிருந்தன; அவர்களுடைய கண்கள் மருண்டு தோன்றின.

"இதை நிறுத்துங்கள்" என்று இன்னொரு படைத் தலைவன் கத்தினான்.

தளபதி பயபக்தியோடு சொன்னான்: "அல்லாவின் பெருமையை அறிய விரும்புகிறேன். ஒரு மனிதன் காற்றாக மாறுவதை நான் பார்க்க வேண்டும்."

அதே சமயம் அச்சத்தை வெளிப்படுத்திய அந்த இரண்டு ஆட்களுடைய பெயர்களையும் மனதில் பதிய வைத்துக் கொண்டான். காற்று நின்றவுடன், அந்த இரண்டு பேரையும் படைத்தலைவர் பதவியிலிருந்து நீக்கிவிட நினைத்தான்; ஏனென்றால், பாலைவனத்தின் உண்மையான வீரர்கள் அஞ்சுவதாகாது.

பையன் சூரியனிடம் சொன்னான்: "காதலைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என்று காற்று என்னிடம் சொன்னது. காதலைப் பற்றி உங்களுக்குத் தெரியும் பட்சத்தில், உலக ஆன்மாவைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் அது காதலால் ஆனது."

சூரியன் பேசியது: "நான் இருக்கும் இடத்திலிருந்தே உலக ஆன்மாவைப் பார்க்க முடியும். அது என்னுடைய ஆன்மாவோடு தொடர்பு கொள்கிறது. நாங்கள் இருவரும் சேர்ந்து புல் பூண்டுகள் வளரவும் ஆடுகள் நிழல் தேடவும் காரணமாயிருக்கின்றோம். பூமியிலிருந்து வெகுதொலைவில் இருக்கின்ற நான் அங்கிருந்தபடியே காதலிக்கக் கற்றுக்கொண்டேன். பூமியை நோக்கி இன்னும் சற்று நெருங்கி வந்தேனென்றால், அங்குள்ள அனைத்துமே பொசுங்கிப் போகும். உலக ஆன்மா என்ற ஒன்று இல்லாமல் போய்விடும். எனவே நாங்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் சிந்திக்கிறோம்; ஒருவரை ஒருவர் விரும்புகிறோம். நான் அதற்கு ஜீவனையும் வெம்மையையும் வழங்குகிறேன். அது என்னுடைய வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குகின்றது."

"ஆக, உங்களுக்குக் காதலைப் பற்றித் தெரியும்."

“அத்துடன், உலக ஆன்மாவைப் பற்றியும் அறிவேன். ஏனென்றால் பிரபஞ்சத்தின் ஊடே எண்ணற்ற முறை சுற்றி வருகிற போதெல்லாம் ஒருவருடன் ஒருவர் நெடுநேரம் பேசியிருக்கிறோம். எல்லாப் பொருட்களும் ஒன்றே. இரும்பு தாமிரமாகவோ தாமிரம் தங்கமாகவோ ஆக வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொன்றும் தனித்துவமான வகையில் தத்தமது பணிகளைச் சரியாகவே நிறைவேற்றுகின்றன. படைப்புக் காலத்தின் ஐந்தாவது நாளே அனைத்தையும் படைத்த கை நின்று போயிருக்குமானால் படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் அமைதியெனும் இசை லயத்தில் ஒன்றிப் போயிருக்கக்கூடும். தாதுப்பொருட்களும் பயிர் பச்சைகளும் மட்டுமே அந்தநாள் வரை புரிந்துகொண்டிருந்தன என்பது தான் தனது மிகப் பெரிய சிக்கல் என்று அது என்னிடம் சொல்லியிருக்கிறது. ஆனால், ஆறாவது நாள் ஒன்று இருந்தது.”

“நீங்கள் புத்திசாலி, தூரத்திலிருந்தே அனைத்தையும் கவனித்திருக்கிறீர்கள்; ஆனாலும், உங்களுக்குக் காதலைப் பற்றித் தெரியவில்லை. ஆறாவது நாள் என்று ஒன்று இல்லாமல் போயிருந்தால் மனித குலமே இல்லாமல் போயிருக்கும். தாமிரம் எப்போதுமே தாமிரமாகத்தான் இருக்க வேண்டும். ஈயம் ஈயமாகத்தான் இருக்க வேண்டும். ஒவ்வொன்றுக்கும் அதனதன் இலக்கு உண்டு; என்றேனும் ஒருநாள் அந்த இலக்கு அடையப்படும் என்பதுதான் உண்மை. எனவே, ஒவ்வொன்றும் தன்னை மேலும் சிறந்த மற்றொன்றாக மாற்றிக்கொண்டு புதியதோர் இலக்கினை அடைகிறது; இறுதி யில் ஒருநாள் உலக ஆன்மா ஒரே ஒரு பொருளாக மாறிவிடும்.”

சூரியன் இதைப் பற்றி நினைத்தது; மேலும் பிரகாசமாக ஒளிர்ந்தது. அந்த உரையாடலை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த காற்று மேலும் அதிக விசையுடன் வீசத் தொடங்கியது. பையனுடைய கண் குருடாகாமல் பார்த்துக் கொண்டது.

அவன் சொன்னான்: “அதனால்தான் ரஸவாதம் இன்ன மும் இருக்கிறது. ஒவ்வொருவரும் புதையலைத் தேடுவார்கள்; கண்டுபிடிப்பார்கள். முன்பிருந்ததைக் காட்டிலும் நல்ல நிலையில் இருக்க விரும்புவார்கள். ஈயம் இந்த உலகத்திற்குத் தேவைப்படும் காலம் வரை தனது பணியைச் செய்யும்; பிறகு தங்கமாக மாறித்தான் போகும்.

“இதைத்தான் ரஸவாதிகள் செய்கிறார்கள்; இருக்கின்ற நிலையைக் காட்டிலும் உயர்ந்த நிலையை அடைய முயலுவோ

மேயானால் நம்மைச் சுற்றியுள்ள எல்லாமே உயர்நிலையை அடையும் என்பதைக் காட்டுகிறார்கள்."

"அது சரி, எனக்குக் காதலைப் பற்றித் தெரியாது என்று ஏன் சொன்னாய்?" என்று சூரியன் கேட்டது.

"ஏனென்றால், பாலைவனத்தைப் போல ஓரிடத்தில் நிலைத்திருப்பது காதலல்ல; காற்றைப்போல உலகமெங்கும் சுற்றி வருவது காதலல்ல; உங்களைப் போல தூரத்திலிருந்து கொண்டு ஒவ்வொன்றையும் கவனிப்பதும் காதலல்ல. உலக ஆன்மாவை மாற்றி உயர்வடையச் செய்கிற சக்திதான் காதல். நான் முதன் முதலாக அடைந்த போது உலக ஆன்மா பரிசுத்தமானது என்று நினைத்தேன். பிறகு அது மற்ற படைப்பு அம்சங்களைப் போன்றது என்று கண்டுகொண்டேன். அதற்கே உரிய ஆசாபாசங்களும் சண்டை சச்சரவுகளும் இருக்கத்தான் செய்கின்றன. உலக ஆன்மாவுக்கு நாம்தான் வலுவூட்டுகிறோம். நாம் நல்லவர்களாக இருக்கிறோமா கெட்டவர்களாக இருக்கிறோமா என்பதைப் பொறுத்து நாம் வசிக்கும் இந்த உலகமும் நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கும். அந்த இடத்தில்தான் காதலெனும் ஆற்றல் நுழைகிறது. ஏனென்றால், காதல் வயப்படும்போது முன்பிருந்ததைக் காட்டிலும் உயர் நிலையை அடையவே முயலுவோம்."

"சரி, என்னிடம் எதை விரும்புகிறாய்?" என்று சூரியன் கேட்டது.

"காற்றாக நான் மாறுவதற்கு நீங்கள் உதவ வேண்டும்."

சூரியன் சொன்னது: "படைப்பிலேயே அதிபுத்திசாலி நான்தான் என்பதை இயற்கை அறியும். ஆனாலும், உன்னைக் காற்றாக மாற்றுவது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை."

"பிறகு நான் யாரிடம் கேட்பது?"

சூரியன் ஒரு நிமிடம் யோசித்தது. மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த காற்று உலகின் ஒவ்வொரு மூலையிலும் சென்று சூரியனின் அறிவாற்றல் குறைபாடுகள் கொண்டது என்பதையும் உலக மொழியைப் பேசக் கூடிய ஒரு சிறுவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை என்றும் கூவ விரும்பியது.

"அனைத்தையும் எழுதிய கையிடம் பேசு" என்று சூரியன் சொன்னது.

காற்று ஆனந்தக் கூச்சலிட்டது. முன்னெப்போதைக் காட்டிலும், வலுவாக வீசியது. தரையோடு பிணைக்கப்

பட்டிருந்த கட்டுக்களை அவிழ்த்துக்கொண்டு கூடாரங்கள் பறந்தன; விலங்குகள் முளையிலிருந்து விடுபட்டன. குன்றின் மீது இருந்தவர்கள் தூக்கி எறியப்படாமல் இருப்பதற்காக ஒருவரை ஒருவர் இறுகக் கட்டிப்பிடித்துக்கொண்டனர்.

அனைத்தையும் எழுதிய கையை நோக்கி இந்தப் பையன் திரும்பினான். அப்படிச் செய்த போது பிரபஞ்சமே அமைதியில் ஆழ்ந்துவிட்டதை உணர்ந்தான்; பேச வேண்டாம் என்று முடிவு செய்தான்.

இதயத்திலிருந்து காதல் ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடியது. பையன் தொழுதான். அதுபோன்ற தொழுகையை இவன் அதற்கு முன் செய்ததில்லை. வார்த்தைகளோ, வேண்டுதல்களோ இல்லாத தொழுகை. ஆடுகள் புதிய மேய்ச்சல் நிலங்களைப் பெற்றமைக்கு நன்றி செலுத்துவதாகவோ, ஏகப்பட்ட பளிங்குச் சாமான்கள் விற்கப்பட வேண்டும் என்ற வேண்டுதலாகவோ, இவன் சந்தித்த பெண் இவனுடைய வருகைக்காகத் தொடர்ந்து காத்திருக்க வேண்டும் என்று முறையிடுவதாகவோ அந்தத் தொழுகை இல்லை. அந்த மௌனத்தில், பாலைவனமும், காற்றும், சூரியனும்கூட அந்தக் கையால் எழுதப்பட்ட அறிகுறிகளைப் புரிந்துகொண்டு அவை காட்டக் கூடிய பாதையினைப் பின்பற்றவும் ஓர் ஒற்றை மரகதப் பட்டையில் எழுதப்பட்டிருந்ததைப் புரிந்துகொள்ளவும் முயன்றன என்பதை இந்தப் பையன் அறிந்துகொண்டான். மண்ணிலும் விண்வெளியிலும் சகுனங்கள் இறைந்து கிடப்பதையும் அவைகளுடைய தோற்றத்திற்கு எவ்வித காரணமோ, முக்கியத்துவமோ தொடர்புறுத்தப்படவில்லை என்பதையும் கண்டான். பாலைவனமோ, காற்றோ, சூரியனோ, இல்லை மக்களோகூடத் தாம் படைக்கப்பட்டமைக்கான காரணத்தை அறிந்திருக்கவில்லை என்பதைக் காணமுடிந்தது. ஆனாலும், அந்தக் கை அவற்றையெல்லாம் படைப்பதற்குக் காரணம் ஒன்று இருந்தது என்பதையும் அந்த ஒரு கையால் மட்டுமே அற்புதங்களை நிகழ்த்த முடியும் – பாலைவனத்தைக் கடலாகவோ, மனிதனைக் காற்றாகவோ மாற்ற முடியும் – என்பதையும் கண்டுகொண்டான். ஆறு நாள் படைப்பு ஒரு பிரதான வேலையாகப் பரிணமிக்கும் கட்டம் வரை இந்தப் பிரபஞ்சத்தை இயக்கியது ஒரு மாபெரும் வடிவமைப்பு என்பதை அந்தக் கை மட்டும்தான் புரிந்துகொண்டது.

உலக ஆன்மாவினைச் சென்றடைந்த இந்தப் பையன் அது இறைவனுடைய ஆன்மாவின் ஒரு பகுதியாக இருப்பதைக் கண்டான். அத்துடன் இறைவனுடைய ஆன்மா இவனுடைய ஆன்மாவே என்பதையும் கண்டுகொண்டான். மேலும் இவனே

இந்தப் பையனே அற்புதங்களை நிகழ்த்த முடியும் என்பதையும் கண்டான்.

✧

அன்று சைமம் (மணற்சூறை) வீசியதைப் போல முன்னெப் பொழுதுமே வீசியதில்லை. பாலைவனத்தின் அதி பராக்கிரம தளபதியை எதிர்த்து ஒரு இராணுவ முகாமையே அழித்தொழிக் கும் வகையில் காற்றாக மாறிய பையனின் மகோன்னதத்தை அரேபியர்கள் தலைமுறை தலைமுறையாக நினைவு கூர்ந்தார்கள்.

சைமம் ஓய்ந்த போது அவன் இருந்த இடத்தை எல்லோரும் தேடினர். ஆனால் அவன் அங்கே இல்லை; முகாமுக்கு வெகு தொலைவில் மணலால் மூடப்பட்ட ஒரு காவலாளிக்கு அடுத்து நின்றிருந்தான்.

இவனுடைய மந்திர ஜாலத்தைக் கண்டு வீரர்கள் அரண்டு போனார்கள். ஆனால், இருவர் மட்டும் புன்னகைத்தனர்: ஒருவர் ரஸவாதி; ஏனென்றால் தன்னுடைய உண்மையான சிஷ்யனைக் கண்டுகொண்டார். அப்புறம், தளபதி; ஏனென் றால் அந்த சிஷ்யன் அல்லாவின் பெருமையைப் புரிந்து கொண்டவன்.

அடுத்த நாள் தளபதி ரஸவாதிக்கும் பையனுக்கும் விடை கொடுத்தான். அவர்கள் விரும்பிய தூரம் வரை பாதுகாப்பாகச் செல்லும்படி ஒரு பாதுகாப்புப் படையையும் அனுப்பி வைத்தான்.

✧

ஒருநாள் முழுவதும் சவாரி செய்தனர். மதியப்பொழுது முடியும் சமயம் ஒரு குப்த மடத்தை அடைந்தனர். ரஸவாதி குதிரையை விட்டு இறங்கினார். பாதுகாப்புப் படையினரை முகாமுக்குத் திரும்பும்படி சொல்லிவிட்டார்.

“இப்போதிலிருந்து நீ தனி ஆள், இன்னும் மூன்று மணி நேரப் பயணத்தில் நீ பிரமிடுகளை அடைந்துவிடலாம்” என்று ரஸவாதி சொன்னார்.

“நன்றி, நீங்கள்தான் எனக்கு உலகமொழியைக் கற்றுக் கொடுத்தீர்கள்.”

“உனக்கு ஏற்கனவே தெரிந்ததைத்தான் நான் தூண்டி விட்டேன்.”

ரஸவாதி மடாலயத்தின் வாயிலைத் தட்டினார். கறுப்பு உடை அணிந்த துறவி ஒருவர் வாசலுக்கு வந்தார். அவர்கள்

குப்த மொழியில் பேசிக்கொண்டனர். பின்னர் ரஸவாதி பையனை உள்ளே வரும்படி சொன்னார்.

"சமையற் கட்டினைச் சிறிது நேரம் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கும்படி அவரிடம் கேட்டேன்" என்றபடி ரஸவாதி சிரித்தார்.

மடாலயத்தின் பின்கட்டில் இருந்த சமையலறைக்கு அவர்கள் சென்றனர். ரஸவாதி நெருப்பை மூட்டினார். துறவி கொஞ்சம் ஈயத்தை கொண்டு வந்தார். அதனை ரஸவாதி இரும்பு வாணலியின் மீது வைத்தார். ஈயம் திரவமான பின்பு தனது பையிலிருந்த அந்த விநோதமான மஞ்சள் முட்டையை ரஸவாதி எடுத்தார். தலைமுடி அளவு மெல்லிய கீற்றை அதிலிருந்து சுரண்டி எடுத்து மெழுகில் சுருட்டி ஈயம் உருகிக் கிடந்த வாணலியில் போட்டுக் கலந்தார்.

அந்தக் கலவை ரத்தமாய்ச் சிவந்துவிட்டது. நெருப்பிலிருந்த வாணலியை எடுத்து ஒரு புறமாக வைத்துக் குளிர விட்டார். அப்படிச் செய்துகொண்டிருந்த போது அந்தத் துறவியிடம் ஆதிவாசிகள் போரைப் பற்றிப் பேசினார்.

"அது ரொம்ப நாளைக்கு நடக்கும் என்றுதான் நினைக் கிறேன்" என்று துறவியிடம் அவர் சொன்னார்.

அந்தத் துறவி எரிச்சலடைந்தார். சண்டை முடிவடை வதை எதிர்நோக்கி கிஸாவில் பாலைவனப் பயணியர் கூட்டம் சிறிது நாட்களாகத் தங்கி இருந்தது. "ஆனால், இறைவன் சித்தப்படி நடக்கும்" என்று துறவி சொன்னார்.

'ரொம்பச் சரியாகச் சொன்னீர்கள்" என்று ரஸவாதி பதிலுக்குச் சொன்னார்.

வாணலி குளிர்ந்தவுடன் பையனும் அந்தத் துறவியும் அதனைப் பார்த்தனர்; கண்களைப் பறித்தது. வாணலி வடிவத் தில் ஈயம் உலர்ந்திருந்தது. ஆனால், அதன்பிறகு அது ஈயம் அல்ல; தங்கம்.

"என்றைக்காவது ஒரு நாள் நானும் இதைக் கற்றுக் கொள்வேனா?" என்று பையன் கேட்டான்.

ரஸவாதி பதில் சொன்னார்: "அது எனது இலக்கு; உன்னுடையது அல்ல. ஆனாலும், அது இயலக்கூடியதுதான் என்பதை உனக்குக் காட்ட விரும்பினேன்."

மடத்தின் முன் வாசலுக்குச் சென்றார்கள்; அங்கே, அந்தக் கட்டியை நான்கு பாகங்களாக ரஸவாதி பிரித்தார்.

ஒரு பாகத்தைத் துறவியிடம் நீட்டி, "இது உனக்கு; யாத்ரீகர்களிடம் நீ காட்டும் பரிவுக்காக" என்றார்.

"என்னுடைய பரிவைக்காட்டிலும் இது கூடுதலான கட்டணமாக இருக்கிறதே" என்று துறவி பதில் சொன்னார்.

"மறுபடி அப்படிச் சொல்லாதீர். வாழ்க்கை கவனித்துக் கொண்டிருக்கும்; அடுத்த முறை குறைவாகக் கொடுத்து விடும்."

ரஸவாதி பையன் பக்கமாகத் திரும்பினார். "இது உனக்கு; அந்தத் தளபதியிடம் நீ கொடுத்ததற்கு ஈடாக."

தளபதியிடம் கொடுத்ததைக் காட்டிலும் மிகவும் அதிக மாக இருக்கிறது என்று சொல்ல வாயெடுத்தான்; ஆனால், அமைதியாகவே இருந்துவிட்டான். ஏனென்றால், துறவியிடம் ரஸவாதி சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

கட்டியின் ஒருபகுதியைத் தன்வசம் வைத்துக்கொண்டு, "இது எனக்கு" என்றார். "ஏனென்றால், நான் மீண்டும் பாலை வனத்திற்குள் திரும்பிப் போக வேண்டும். அங்கே சண்டை வேறு நடந்துகொண்டிருக்கிறது."

நான்காவது பாகத்தை எடுத்துத் துறவியிடம் நீட்டினார்.

"இது இவனுக்கு எப்பொழுதாவது தேவைப்பட்டால்."

"எனது புதையலைத் தேடிப் போய்க்கொண்டிருக்கிறேன். தற்பொழுது, ரொம்பவும் அருகாமையில் வந்துவிட்டேன்" என்று அவன் சொன்னான்.

"உறுதியாக நீ அதைக் கண்டுபிடிப்பாய்" என்றார் ரஸவாதி.

"பிறகு இது எதற்கு?"

"எதற்கென்றால், ஏற்கனவே ரெண்டு முறை உனது பணத்தையெல்லாம் இழந்துவிட்டாய்; ஒருமுறை திருடனிடம்; ஒருமுறை தளபதியிடம். நானொரு கிழட்டு மூட நம்பிக்கை யுள்ள அரேபியன். எங்களுடைய பழமொழிகள் மீது எனக்கு அலாதி நம்பிக்கை. ஒரு சொலவடை உண்டு: ஒருமுறை நிகழ்ந்தது மறுமுறை ஒருபோதும் நிகழாது; ஆனால், இருமுறை நிகழ்ந்ததோ மூன்றாவது முறையும் கண்டிப்பாக நிகழும்."

அவர்கள் தத்தம் குதிரைகளின் மீது ஏறி அமர்ந்தனர்.

✧

ரஸவாதி ஆரம்பித்தார்: "கனவுகளைப் பற்றிய கதை ஒன்றை உனக்குச் சொல்ல விரும்புகிறேன்."

அவன் தனது குதிரையை நெருக்கமாகக் கொண்டு வந்தான்.

“பழங்கால ரோமாபுரியில் தைபீரியஸ் சக்கரவர்த்தி காலத்தில் நல்லவன் ஒருவன் தனது இரண்டு மகன்களோடு வாழ்ந்து வந்தான். ஒருவன் ராணுவத்தில் இருந்தான். ராஜ்ஜியத்தின் தொலை தூரப் பகுதிகளுக்கு அவன் அனுப்பப்பட்டான். மற்றொருவன் கவிஞன்; அழகிய கவிதைகளால் ரோமாபுரி மக்களை அசத்திக்கொண்டிருந்தான்.

“ஓர் இரவு தகப்பன் ஒரு கனவு கண்டான்; ஒரு தேவதை தோன்றி அவனுடைய மகன்களுள் ஒருவனுடைய வார்த்தைகளை உலகம் முழுவதும் கற்றுத் தலைமுறை தலைமுறையாக ஒலித்துக்கொண்டே இருப்பார்கள் என்று சொன்னது. தகப்பனார் நன்றிப் பரவசத்தோடு கனவிலிருந்து விழித்தார். ஏனென்றால், வாழ்க்கை பரோபகாரத்தோடு எந்தவொரு தகப்பனும் பெருமைப்பட்டுக்கொள்ளக் கூடியதொரு விஷயத்தை அவருக்கு வெளிப்படுத்தியிருந்தது.

“சிறிது காலத்திற்குப் பிறகு ஒரு ரதத்தினுடைய சக்கரங்களில் சிக்கி நசுங்க இருந்த குழந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் அவர் இறந்து போனார். அவர் தனது வாழ்நாள் முழுவதும் நேர்மையாகவும் நியாயமாகவும் வாழ்ந்தவராகையால் நேரே சொர்க்கத்திற்குச் சென்றுவிட்டார். அங்கே தனது கனவில் தோன்றிய தேவதையைச் சந்தித்தார்.

‘நீங்கள் எப்போதுமே நல்லவராகவே இருந்திருக்கிறீர்கள்’ என்று தேவதை சொன்னது. ‘வாழ்க்கையை அன்பு நெறியில் வாழ்ந்த பெருமையுடன் இறந்தீர்கள். நீங்கள் விரும்பக்கூடிய எதையும் வழங்குவேன்.’

“வாழ்க்கை நன்றாகவே இருந்தது. நீங்கள் எனது கனவில் தோன்றிய போது நான் பட்டபாட்டுக்கெல்லாம் பரிசு கிடைத்துவிட்டதாக உணர்ந்தேன். ஏனென்றால், எனது மகனுடைய கவிதைகளை மனிதகுலம் தலைமுறை தலைமுறையாகப் படிக்கப் போகிறது. எனக்கென எதுவும் வேண்டாம். ஆனால் எந்தத் தகப்பனுமே குழந்தையில் பராமரித்து வளர்த்து, வளர்ந்ததும் படிக்க வைத்துத் தான் ஆளாக்கிய ஒருவன் புகழ் அடைவதைக் கேட்டுப் பெருமிதம் கொள்வான். அந்தக் காலக்கட்டத்தை அடைந்து எனது மகனுடைய வார்த்தைகளைக் கேட்க விரும்புகிறேன்.”

“அவருடைய தோளைத் தொட்டவுடனே இருவரும் எதிர்காலத்தை நோக்கி விரைந்தனர். அவர்கள் உன்னதமானதொரு கூடத்தில் இருந்தனர்; ஆயிரக்கணக்கானோர் சூழ்ந்து விநோதமானதொரு மொழியைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

“அவர் ஆனந்தக் கண்ணீரில் மிதந்தார்.

“கண்ணீர் வழிய வழியத் தேவதையிடம் சொன்னார்: ‘எனது மகனின் கவிதைகள் காலத்தால் அழியாதவை என்பது எனக்குத் தெரியும். எனது மகனுடைய கவிதைகளில் எதனை மக்கள் ஒலித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?’

“தேவதை அவருக்கு அருகில் வந்தது; அரவணைப்போடு பக்கத்தில் கிடந்த ஓர் இருக்கைக்கு அழைத்துச் சென்றது, அங்கே அவர்கள் அமர்ந்தனர்.

“கவிஞனாக இருந்த உனது மகனின் பாடல்கள் ரோமாபுரியில் பிரசித்தி பெற்றவை. அனைவரும் அவற்றை விரும்பி ரசித்தார்கள். தைபீரியஸின் அரசாட்சி முடிந்த பின்னர் அவனுடைய பாடல்கள் மறந்து போயின. இப்பொழுது நீங்கள் கேட்டவை இராணுவத்திலிருந்த உங்களது மகனுடைய வார்த்தைகள்.

“தேவதையை அவர் வியப்புடன் பார்த்தார்.

“உங்களுடைய மகன் தொலை தூரப் பகுதியில் பணி புரிந்து செஞ்சுரியன் (நூறு போர் வீரர்களுக்குத் தலைவன்) ஆகிவிட்டான். அவன் நல்லவனாகவும் நேர்மையாளனாகவும் இருந்தான். ஒருநாள் மதியம் அவனுடைய வேலைக்காரர்களுள் ஒருவன் நோய்வாய்பட்டான். அவன் இறந்துவிடுவான் போலத் தோன்றியது. உங்களுடைய மகன் நோய்களைக் குணப்படுத்தக் கூடிய யூத மத குருவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். அவரைத் தேடி நாட்கணக்கில் குதிரைமீது திரிந்தான். வழியில் அவன் தேடிய ஆள் கர்த்தரின் மகன் என்றும் தெரிந்துகொண்டான். அவரால் குணப்படுத்தப்பட்ட மக்களைச் சந்தித்தான். அவர்கள் உனது மகனுக்கு அவருடைய போதனைகளைக் கற்பித்தனர். ஆதலால் ரோமானிய செஞ்சுரியனாக இருந்த போதிலும், அவருடைய மதத்திற்கு இவன் மாறிவிட்டான். அதற்குப் பிறகு சிறிது காலத்தில் அவன் தேடிக்கொண்டிருந்தவர் வருகை புரிந்த இடத்தைச் சென்றடைந்தான்.

“தன்னுடைய வேலைக்காரர்களுள் ஒருவன் மரணப் படுக்கையில் கிடப்பதாக அவரிடம் கூறினான். அந்த மதகுருவும் அவனுடன் அவனுடைய வீட்டுக்குப் புறப்படத் தயாரானார். ஆனால் அந்தச் செஞ்சுரியனோ மதப்பற்று மிக்க ஆள். யூதமத குருவின் கண்களை உற்று நோக்கினான். தான் உண்மையாகவே கர்த்தரின் மைந்தர் முன்னிலையில் இருப்பதாக உணர்ந்தான்.

"'அப்பொழுது இதைத்தான் உனது மகன் சொன்னான்' என்று தேவதை தகப்பனாரிடம் சொன்னது. 'அந்தக் கட்டத்தில் யூத மதகுருவிடம் இந்த வார்த்தையைத்தான் அவன் சொன்னான். அவற்றை ஒருபோதும் யாரும் மறந்துவிடவில்லை. "பிரபுவே, நீர் எனது குடிசைக்கு வரும் அளவு நான் தகுதியுடையவன் அல்ல. நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் போதும் எனது வேலைக்காரன் பிழைத்துவிடுவான்."

ரஸவாதி சொன்னார்: "ஒருவன் என்ன தொழில் செய்கிறான் என்பது ஒரு பொருட்டல்ல. பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதனும் உலக வரலாற்றில் முக்கியப் பாத்திரம் வகிக்கிறான். சாதாரண நிலையில் அவனுக்கு அது புரிவதில்லை."

இந்தப் பையன் புன்னகைத்தான்; வாழ்க்கை பற்றிய அத்தகைய கேள்விகளெல்லாம் ஓர் இடையனுக்கு அந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று ஒருபோதும் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை.

"போய் வா" என்று ரஸவாதி சொன்னார்.

"போய் வருகிறேன்" என்று சொன்னான் பையன்.

✧

பாலைவனம் வழியே அவன் பல மணி நேரம் பயணம் செய்தான். தனது இதயம் சொல்லக் கூடியதை உன்னிப்பாகக் கவனித்தான். தான் தேடும் புதையல் புதைந்துள்ள இடத்தைத் தன்னுடைய இதயம்தான் சொல்ல வேண்டும்.

"எங்கே உனது புதையல் இருக்கிறதோ அங்கேதான் உனது இதயமும் இருக்கும்" என்று ரஸவாதி சொல்லியிருந்தார்.

ஆனால் இவனது இதயம் மற்ற மற்ற விஷயங்களைப் பற்றியே பேசியது. கர்வத்தோடு, இரு வேறு சந்தர்ப்பங்களில் கண்ட கனவைத் தொடர்ந்து தனது ஆட்டு மந்தையை விட்டு விட்டுச் சென்ற இடையன் ஒருவனுடைய கதையைச் சொன்னது. இலக்கினைப்பற்றியும், தொலை தூர நாடுகளையும் அழகிய பெண்களையும் தேடித் தம்முடைய அரை வேக்காட்டுக் கருத்துக்களோடு சமகால மக்களை எதிர்த்துக்கொண்டு அலைந்த மனிதர்களைப் பற்றியும் சொல்லியது. பயணங்கள், கண்டுபிடிப்புகள், புத்தகங்கள், மாற்றம் இவற்றைப் பற்றியெல்லாம் பேசியது.

மற்றுமொரு மணல் குன்றின் மீது இவன் ஏறும் தறுவாயில் இவனது இதயம் முணுமுணுத்தது: "கண்ணீர் அரும்புகிற இடத்தில் கவனமாயிரு; அங்கேதான் நான் இருக்கிறேன்; அங்கேதான் புதையல் இருக்கிறது."

மணல் குன்றின் மீது மெதுவாக ஏறினான். விண்மீன்கள் நிறைந்த வானத்தில் மீண்டும் முழுநிலவு. பாலைவனச் சோலையிலிருந்து இவன் புறப்பட்டு ஒரு மாத காலம் ஆகிவிட்டது. நிலவொளியால் மணல் குன்றுகளில் நிழல்கள் விழுந்தன. உருளும் கடலலையின் தோற்றத்தை உருவாக்கின. பாலைவனத்தில் குதிரை முன்னங்கால்களைத் தூக்கியபடி நிற்க ரஸவாதியை இவன் தெரிந்துகொண்ட அந்த நாள் ஞாபகம் வந்தது.

மணல் குன்றின் உச்சியை அடைந்த போது இவனது மனம் துள்ளியது. அங்கே நிலவொளியாலும், பாலைவனத்தின் பிரகாசத்தாலும் ஒளியூட்டப்பட்டு பெருமிதத்துடன் கம்பீரத்துடன் நின்றன –

எகிப்தியப் பிரமிடுகள்!

முழந்தாளிட்டுப் பையன் அழுதான். இலக்கின் மீது நம்பிக்கை ஏற்படுத்தியமைக்கும் ஒரு ராஜாவை, ஒரு வியாபாரியை, ஓர் ஆங்கிலேயரை, ஒரு ரஸவாதியைச் சந்திக்கும் விதமாக வழி நடத்தியமைக்காகவும் இறைவனுக்கு நன்றி சொன்னான். அதற்கும் மேலாகக் காதல் ஒருக்காலும் தனது இலக்கினை அடைவதிலிருந்து ஒரு மனிதனைப் பிரித்து வைக்காது என்று சொன்ன அந்தப் பாலைவனப் பெண்ணைச் சந்திக்கச் செய்தமைக்காக நன்றி சொன்னான்.

இவன் விரும்பினால் பாலைவனச் சோலைக்குத் திரும்பிப் பாத்திமாவிடம் சென்றுவிடலாம். ஓர் எளிய இடையனாகத் தனது வாழ்க்கையை வாழ்ந்து தீர்க்கலாம். சொல்லப் போனால் உலக மொழியைப் புரிந்துகொண்ட போதிலும், ஈயத்தைத் தங்கமாக்கத் தெரிந்துகொண்ட போதிலும், ரஸவாதி, அந்தப் பாலைவனத்தில்தான் தொடர்ந்து வாழ்ந்து வந்தார்.

தனது வித்தையையும், கலையையும் அவர் யாருக்கும் செய்து காட்ட வேண்டிய அவசியம் இருந்ததில்லை. தன்னுடைய இலக்கினை அடைகின்ற போக்கிலே தான் கற்க வேண்டிய அனைத்தையும் கற்றுக்கொண்டதாகவும் கனவு கண்ட அனைத்தையும் அனுபவித்துவிட்டதாகவும் பையன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

ஆனால், தன்னுடைய புதையலை அடையக் கூடிய தருணத்தில் அங்கே இருந்தான். எந்தவொரு திட்டமும், அதனுடைய நோக்கத்தில் வெற்றி பெறுவதற்கு முன்னர் நிறைவடைவதில்லை என்பதை நினைவுபடுத்திக்கொண்டான். தன்னைச் சுற்றிலும் பரவிக்கிடந்த மணலைப் பார்த்தான். கண்ணீர்த் துளிகள் விழுந்து கிடந்த இடத்தில் தேவ இன வண்டொன்று மணலில் விரைந்தோடுவதைக் கண்டான்.

பாலைவனத்தில் இவன் இருந்த காலத்தின் போது எகிப்தில் தேவ இனவண்டுகள் கர்த்தரின் சின்னங்கள் என்பதை அறிந்திருந்தான்.

ஆகா, மற்றுமொரு சகுனம்! மணல் குன்றைத் தோண்டத் தொடங்கினான். அப்படித் தோண்டியபோது பளிங்கு வியாபாரி ஒருமுறை சொன்னதை நினைவுபடுத்திக்கொண்டான்: ஒரு பிரமிடை யார் வேண்டுமானாலும் தனது கொல்லைப் புறத்தில் கட்டிக்கொள்ளக் கூடும். எஞ்சியுள்ள தனது வாழ்நாள் முழுவதும் ஒன்றின் மீது ஒன்றாகக் கற்களை அடுக்கினாலும் பிரமிடுவைக் கட்ட இயலாது என்பதை அப்பொழுது கண்டு கொண்டான்.

தான் தேர்ந்தெடுத்திருந்த இடத்தில் இரவு முழுவதும் தோண்டினான்; எதுவும் தென்படவில்லை. பிரமிடுகள் கட்டப் பட்ட காலத்திலிருந்து கடந்து போன பல நூற்றாண்டுகளின் ஒட்டு மொத்த பளுவும் தன்னை உள்நோக்கி இழுப்பதாக உணர்ந்தான். ஆனால், அவன் நிறுத்தவில்லை. தோண்டப்பட்ட பள்ளத்திற்குள் மணலை வீசியடித்து மூடிக்கொண்டிருந்த காற்றோடு போராடிக்கொண்டே தொடர்ந்து தோண்டுவதற்குக் கடுமையாகப் பாடுபட்டான். இவனுடைய கைகள் சிராய்ப் புண்டு சோர்ந்து போயின. ஆனாலும், இவன் தனது இதயம் சொன்னதையே கவனித்தான். கண்ணீர்த் துளிகள் விழுந்த இடத்தில் தோண்டுமாறு அது சொல்லியிருந்தது.

குறுக்கிட்ட பாறைகளை வெளியே இழுக்க இவன் முயன்று கொண்டிருந்த பொழுது காலடி ஓசைகேட்டது. பல உருவங்கள் அவனை நோக்கி நெருங்கின. அவர்களுடைய முதுகுகள் நிலாவொளியை நோக்கி இருந்தமையால், அவர்களுடைய முகங்களையோ, கண்களையோ, இந்தப் பையனால் பார்க்க முடியவில்லை.

"இங்கே என்ன செய்கிறாய்?" என்று உருவங்களில் ஒன்று அதட்டியது.

நடுநடுங்கிப் போனதால் இவனால் பதில் பேச முடியவில்லை. புதையல் இருக்கும் இடமோ தெரிந்து போய் விட்டது. அதற்குமேல் என்ன நடக்கப் போகிறதோ என்று அஞ்சினான்.

மற்றொரு உருவம் பேசியது: "நாங்கள் ஆதிவாசிகள். சண்டையிலிருந்து தப்பி வந்த அகதிகள்; எங்களுக்குப் பணம் தேவை. நீ எதை இங்கே ஒளித்து வைக்கிறாய்?"

"நான் எதையும் ஒளித்து வைக்கவில்லை" என்று பையன் சொன்னான்.

அவர்களுள் ஒருவன் இவனைப் பிடித்து இழுத்து பள்ளத் திலிருந்து வெளியே துக்கிப் போட்டான். இவனுடைய பைகளைத் துழாவிக்கொண்டிருந்த மற்றொருவன் தங்கத் துண்டைக் கண்டுவிட்டான்.

"இங்கே தங்கமிருக்கிறது" என்று கூச்சலிட்டான்.

அவனைப் பிடித்திருந்த அரேபியனின் முகத்தில் நிலவின் ஒளி வீசியது. அவனுடைய கண்களில் இவன் தனது சாவைக் கண்டான்.

"இன்னும் நிறையத் தங்கத்தை இவன் பூமிக்குள்ளே புதைத்துவைத்திருக்கலாம்."

இவனைத் தொடர்ந்து தோண்டவைத்தார்கள்; எதுவும் கிடைக்கவில்லை.

சூரியன் உதித்த போது, இவனை அடிக்கத் துவங்கினர். இவனுக்குக் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் ஒழுகியது; இவனது உடைகள் நார் நாராய்க் கிழிந்து போயின; சாவு நெருங்கி விட்டதாக உணர்ந்தான்.

"சாகப் போகிறாய் என்கிறபோது பணத்தால் என்ன பயன்? பணத்தால் மனித உயிரைக் காப்பாற்றுவதென்பது எல்லா நேரங்களிலும் சாத்தியப்படுவதில்லை' என்று ரஸவாதி சொல்லியிருந்தார். கடைசியாக, இவன் அழுதுகொண்டே கூச்சலிட்டான்: "புதையலுக்காகத் தோண்டிக்கொண்டிருக் கிறேன்!" வீங்கிப்போய் வாய் வழியே ரத்தம் கொட்டிக்கொண் டிருந்தது. இருந்தாலும், எகிப்தில் பிரமிடுகளுக்குப் பக்கத்தில் புதையல் புதைக்கப்பட்டிருப்பதாக இருமுறை கனவுகண்ட விஷயத்தைத் தன்னைத் தாக்கியவர்களிடம் சொன்னான்.

அந்தக் கூட்டத்திற்குத் தலைவனைப் போல் தெரிந்த ஒருவன் மற்றொருவனிடம் சொன்னான்: "அவனை விட்டுவிடு. அவனிடம் எதுவும் இல்லை. இந்தத் தங்கத் துண்டைக்கூட அவன் எங்கேயாவது திருடியிருப்பான்".

கிட்டத்தட்ட உணர்வற்ற நிலையில் பையன் கீழே சாய்ந் தான். இவனை உலுக்கித் தலைவன் சொன்னான்: "நாங்கள் போகிறோம்."

புறப்படுவதற்கு முன்னர் பையனிடம் திரும்பவும் வந்து பேசினான்: "நீ ஒன்னும் செத்துப்போக மாட்டாய்; உயிரோடு தான் இருப்பாய். உன்னைப்போல முட்டாள் வேறு யாரும் இல்லை என்பதைத் தெரிந்துகொள்வாய். இரண்டு வருடங் களுக்கு முன்பு இதே இடத்தில் நானும் திரும்பத் திரும்ப

வந்த கனவைக் கண்டேன். ஸ்பெயின் நாட்டு வயல்வெளிகளில் பயணம் செய்து இடையர்கள் தங்கள் ஆட்டுமந்தைகளோடு தூங்குகிற பாழடைந்த தேவாலயத்தைத் தேடுவதாகவும், அங்கே சிதிலமடைந்த புனித அறை இருந்த இடத்தில் அத்திமரம் வளர்ந்திருந்ததாகவும், அந்த மரத்தின் கீழ் தோண்டினால், புதைக்கப்பட்டிருக்கிற புதையலைக் காணலாம் என்று சொல்லியது போலவும் ஒரு கனவினைத் திரும்பத் திரும்பக் கண்டேன். ஆனால், அதன்பொருட்டுப் பாலைவனம் முழுவதையும் கடந்து செல்வதற்கு நான் ஒன்றும் அவ்வளவு முட்டாள் இல்லை."

பிறகு அவர்கள் மறைந்துவிட்டார்கள்.

நடுங்கிக்கொண்டே பையன் எழுந்து நின்றான். பிரமிடுகளை மீண்டும் ஒருமுறை பார்த்துக்கொண்டான். அவை இவனைப் பார்த்துச் சிரிப்பது போல் தோன்றின; இவனும் பதிலுக்குச் சிரித்தான். இவனது இதயம் மகிழ்ச்சியால் பூரித்தது.

ஏனென்றால், புதையல் எங்கே இருக்கிறது என்பது அப்போது இவனுக்குத் தெரிந்துவிட்டது.

✦

இரவு கவிழ்ந்துகொண்டிருந்த நேரத்தில் பையன் பாழடைந்த சிறிய தேவாலயத்தைச் சென்றடைந்தான். புனித அறைக்குள் அத்தி மரம் நின்றிருந்தது. பாதி சாய்ந்துபோன கூரை வழியே நட்சத்திரங்களைப் பார்க்க முடிந்தது. ஆட்டு மந்தைகளோடு இவன் அங்கு சென்ற அந்த நாட்களை நினைவுபடுத்திப் பார்த்தான். என்ன அமைதியானதொரு இரவு, கனவு மட்டும் காணாதிருந்திருந்தால் . . .!

இப்போது இவனிடம் ஆட்டு மந்தை இல்லை; மண்வெட்டி இருந்தது.

வானத்தைப் பார்த்தபடி நெடுநேரம் அமர்ந்திருந்தான். பிறகு கோணியிலிருந்து ஒரு ஒயின் புட்டியை எடுத்தான், கொஞ்சம் குடித்தான். பாலைவனத்தில் ரஸவாதியுடன் அமர்ந்து நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டே ஒயின் குடித்த அந்த இரவின் நினைவு வந்தது. பயணித்த பல்வேறு சாலைகளையும் புதையலைக் காண்பிப்பதற்காக இறைவன் தேர்ந்தெடுத்த நூதனமான வழியையும் நினைவுபடுத்திக்கொண்டான். மீண்டும் மீண்டும் கண்ட கனவுகளின் பலன்களை நம்பியிராத பட்சத்தில், நாடோடிக் கிழவியையோ, ராஜாவையோ, திருடனையோ சந்தித்திருக்க முடியாது.

சரி, அது ஒரு நீண்ட பட்டியல். ஆனால், சகுனங்களில்தான் பாதை வகுக்கப்பட்டிருந்தது. தவறிப் போகும்படி எந்த வழியும் இருந்ததில்லை என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அயர்ந்து தூங்கிவிட்டான். விழித்துப் பார்த்த போது சூரியன் ஏற்கனவே உச்சியை அடைந்திருந்தான். அந்த மரத்தின் கீழே தோண்ட ஆரம்பித்தான்.

"ஏ, கிழட்டுச் சூனியக்காரா" என்று வானத்தைப் பார்த்துக் கத்தினான். "கதை முழுவதும் உனக்குத் தெரியும்; மடாலயத்தில் தங்கத்துண்டு ஒன்றைக்கூட நீ விட்டு வைத்திருந்தாய். அதைக் கொண்டுதான் நான் மீண்டும் இந்தத் தேவாலயத்திற்குத் திரும்ப முடிந்தது. கந்தலோடு என்னைப் பார்த்தபோது அந்தத் துறவி நகைத்தார். அதிலிருந்து என்னைக் காப்பாற்ற முடியவில்லையா?"

காற்று வழியே ஒரு குரல் பேசுவது கேட்டது: "இல்லை, முன்கூட்டியே சொல்லியிருந்தால், நீ பிரமிடுகளைப் பார்த்திருக்க மாட்டாய். அவை அழகானவை இல்லையா?'

புன்னகைத்தான்; தோண்டுவதைத் தொடர்ந்தான். அரைமணி நேரத்திற்குப் பின் திடமான ஏதோ ஒன்றின் மீது மண்வெட்டி இடித்தது. ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ஸ்பானிய தங்க நாணயங்கள் நிறைந்த பெட்டி ஒன்று இவன் முன் இருந்தது. விலையுயர்ந்த கற்களும், சிவப்பு வெள்ளைச் சிறகுகள் செருகப்பட்ட தங்கக் கிரீடங்களும், வைரங்கள் பதிக்கப்பட்ட கற்சிலைகளும் அதில் இருந்தன. அந்த நாடு நீண்ட காலத்திற்கு முன்பே மறந்துபோன வெற்றியின் எச்சங்கள்; யாரோ ஒரு வெற்றியாளன் தனது சந்ததியினரிடம் சொல்லத் தவறிவிட்டவை.

யுரிம் – தும்மிம் கற்களைப் பையிலிருந்து எடுத்தான். ஒரு நாள் காலையில் சந்தைப் பகுதியில் இருந்த போது ஒரே ஒரு முறை அந்தக் கற்களைப் பயன்படுத்தினான். இவனுடைய வாழ்க்கையும் பாதையும் எப்பொழுதும் தேவையான சகுனங் களை நல்கியிருந்தன.

யுரிம் – தும்மிம் கற்களைப் பெட்டிக்குள் வைத்தான். புதிய புதையலில் அவையும் ஓர் அங்கம். ஏனென்றால், இவன் மீண்டும் ஒரு போதும் பார்க்க இயலாத கிழட்டு ராஜாவை நினைவுபடுத்தக் கூடியவை அவை.

உண்மைதான்; இலக்கினைத் தேடிச் செல்பவர்களுக்கு வாழ்க்கை மெய்யாகவே பெருந்தன்மையாகத்தான் இருக்கிறது என்று பையன் நினைத்துக்கொண்டான். பின்னர், தாரிபாவுக்குச் சென்று உறுதியளித்தபடி பத்தில் ஒரு பங்குப் புதையலை நாடோடிக் கிழவிக்குக் கொடுக்க வேண்டும் என்பது ஞாபகம் வந்தது. "நாடோடிகள் உண்மையிலேயே சமத்தர்கள்தான்" என்று நினைத்தான். "அவர்கள் நிறையப் பயணம் செய்தது அதற்குக் காரணமாக இருக்கலாம்."

காற்று மீண்டும் வீசத் தொடங்கியது. அது ஆப்ரிக்காவி லிருந்து வந்த காற்று; லாவன்டர்! அது பாலைவனத்தின் வாசனையையோ, மூரிஷ் படையெடுப்பின் அச்சத்தையோ சுமந்து வரவில்லை. பதிலாக, இவன் நன்கு அறிந்த ஒரு

வாசனைத் திரவியத்தின் நறுமணத்தைக் கொண்டு வந்து சேர்த்தது. முத்தத்தின் வருடல், வெகு தொலைவில் இருந்து வந்த ஒரு முத்தம்; மெதுவாக, மிக மெதுவாக இவனுடைய இதழ்களின் மீது அமர்ந்தது.

பையன் புன்னகைத்தான். அவள் முதன் முறையாகத் தந்திருக்கிறாள்.

"இதோ வருகிறேன் பாத்திமா!"

✦

THE ALCHEMIST
PAULO COELHO

வாசகர்களின் வாழ்க்கையையே மாற்றக்கூடிய புத்தகங்கள் நூற்றாண்டில் ஒருசிலவே தோன்றுவது உண்டு. அத்தகைய ஒன்றுதான் பௌலோ கொய்லோவின் 'ரஸவாதி'. உலகம் முழுவதும் நாற்பத்திரண்டு மொழிகளில் 20 கோடிப் புத்தகங்கள் விற்பனையாகி உள்ளன. நவீன கிளாசிக் என்ற பெயரையும் பெற்றுவிட்டது.

சந்தியாகோ என்ற சிறுவனைப் பற்றிய மாயாஜால நூல் இது. அந்தலூசியாவில் ஆடுகள் மேய்க்கும் அவன் இதுவரை யாருமே கண்டிராத பொக்கிஷம் ஒன்றைத் தேடிச் செல்கிறான். ஸ்பெயினில் உள்ள தன் வீட்டிலிருந்து கிளம்பி டான்ஜியர்ஸ் சந்தைகளிலும் எகிப்துப் பாலைவனங்களிலும் அலைந்து திரியும் அவனை விதி ஒரு ரஸவாதியைச் சந்திக்க வைக்கிறது.

நம் இதயம் கூறுவதை நாம் கவனமாகக் கேட்க வேண்டும். வாழ்க்கைப் பாதையில் விதி சுட்டிக்காட்டும் சகுனங்களையும் கவனிக்க வேண்டும், அனைத்துக்கும் மேலாக நம் கனவுகளை நாம் தொடர வேண்டும் என்று அறிவுறுத்தும் சில நூல்களில் இதுவும் ஒன்று.

கொய்லோவின் கவிதைநடை படிப்போர் முகத்தில் புன்னகையையும் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தக்கூடியது.

அட்டை வடிவமைப்பு: ஜெ. ராஜசேகர்

ISBN 978-81-89359-43-0
00002
9788189359430

காலச்சுவடு
பதிப்பகம்

விலை ரூ. 120